# TNPSC தேர்வுப் பெட்டகம்
# நடப்பு நிகழ்வுகள் - அக்டோபர் 2018

www.tnpscthervupettagam.com




SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

**TNPSC துளிகள் ........ 1**

**தமிழ்நாடு செய்திகள் ........ 11**

தேர்வுகளுக்கான புதிய முறை - சென்னைப் பல்கலைக்கழகம் ........ 11
மாநில வீட்டு வசதி நிதிக்கு செபி அங்கீகாரம் ........ 12
ஒற்றை முறை கடவுச்சொல் துவக்கம் ........ 12
ஆசிரியர்களுக்கான பயோ மெட்ரிக் வருகைப் பதிவேடு ........ 13
இந்தியாவின் முதல் திறந்தவெளி நூலகம் ........ 13
மூன்றாம் பாலினத்தைச் சார்ந்த முதல் செவிலியர் ........ 13
B. புகழேந்தி - மதராஸ் உயர்நீதிமன்றத்தின் புதிய நீதிபதி ........ 14
பாரம்பரிய மின் திரையரங்கம் அருங்காட்சியகமாக மாற்றம் ........ 14
கஜா புயலுக்கான மத்தியக் குழு ........ 15

**தேசியச் செய்திகள் ........ 15**

காந்திய சிந்தனை மற்றும் ஸ்வச்சதா கருத்தரங்கு ........ 15
13வது இந்திய-ஜப்பான் வருடாந்திர உச்சி மாநாடு ........ 15
இந்திய மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்கள் உருவான தினம் - நவம்பர் 01 ........ 16
ஒற்றுமைக்கான சிலை திறப்பு ........ 17
பல்பரிமாண வறுமைக் குறியீடு (MPI) ........ 17
இந்தியா-இத்தாலி ஆகிய நாடுகளுக்கிடையேயான அறிவியல் தொழில்நுட்ப மாநாடு ........ 18
வியாபாரத்தை எளிமையாக்கிய நாடுகள் - உலக வங்கி ........ 19
தூய காற்றுக்கானப் பிரச்சாரம் ........ 20
தர்மப் பாதுகாவலர் 2018 ........ 21
நிதி ஆயோக் - வளர்ச்சி ஆராய்ச்சி மையம் பேச்சுவார்த்தை ........ 21
உச்சநீதிமன்றம் - நான்கு புதிய நீதிபதிகள் ........ 22
ஐஎன்எஸ் அரிஹந்த் ........ 22
ஐசிஜிஎஸ் - வராஹா ........ 23
இந்தியாவின் முதலாவது கடல்சார் கண்காட்சியகம் மற்றும் கடல்சார் சாகச மையம் ........ 23
போக்குவரத்தை எளிமையாக்கல் அட்டவணை - 2018 ........ 23
பசுமை நடவடிக்கை ........ 24
உச்சநீதிமன்றத்தில் உள்ளக சிந்தனைக் களஞ்சியம் ........ 24
வெப்பக் காற்று பலூன் பயணம் ‘ஜெய் பாரத்’ ........ 25

**மகிளா-இ-ஹாத் இணைய வாயில்** ..... 26
**நீண்ட காலமாக திருமணம் ஆகாமல் சேர்ந்து வாழுதல் - யூக அடிப்படையில் திருமணமாகவே கருதப்படும் - உச்ச நீதிமன்றம்** ..... 26
**சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டணி - ஐ.நா. உறுப்பு நாடுகள்** ..... 26
**ஆந்திரப் பிரதேசம் - தனி உயர் நீதிமன்றம்** ..... 27
**இந்தியாவின் வெளிநாட்டுத் தூதர்கள்** ..... 27
**விசாரணை இல்லாவிடின் இரட்டை தண்டனைக்குத் தடையில்லை – உச்ச நீதிமன்றம்** ..... 27
**சிம்பெக்ஸ் (SIMBEX) 2018** ..... 28
**அரிய வகை நீரிழிவு பற்றி ஆய்வு செய்ய தேசிய அளவிலானஅமைப்பு** ..... 28
**INSPIRE 2018** ..... 29
**சர்வதேச குளிர்விப்பானுக்கான புத்தாக்க மாநாடு** ..... 29
**பொதுச் சேவை வாகனங்களில் VLT மற்றும் அவசரகால பொத்தான்கள்** ..... 29
**கடற்படைத் தளபதிகள் மாநாடு 2018** ..... 30
**சமுத்திர சக்தி** ..... 30
**WW I - நூற்றாண்டு** ..... 30
**இந்தியாவின் முதல் பல்முனை முனையம்** ..... 31
**RCEP யின் வர்த்தக அமைச்சர்கள் மாநாடு** ..... 31
**தேசிய தரவு களஞ்சியம்** ..... 31
**மிக நெருக்கடியான நகரம்** ..... 32
**LEAP மற்றும் ARPIT திட்டம்** ..... 32
**இந்திரா - 2018** ..... 33
**38வது சர்வதேச வர்த்தக கண்காட்சி - IITF** ..... 33
**மொஸாம்பிக் கடற்படை அதிகாரிகளுக்குப் பயிற்சி** ..... 34
**யுவ சஹாகர் கூட்டுறவு திட்டம்** ..... 34
**உலக சுங்க அமைப்பு - பிராந்தியக் கூட்டம்** ..... 34
**33வது ஆசியான் மற்றும் அது தொடர்புடைய மாநாடுகள்** ..... 35
**உலகளாவிய டிஜிட்டல் பொருளடக்க சந்தை (GDCM - Global Digital Content Market) மாநாடு 2018** ..... 36
**குரங்கினத்தின் உயிர்ப் படிமம் – கட்ச் படுகை** ..... 36
**இன்டெக்ஸ் தெற்காசியா** ..... 37
**நகர்ப்புற உள்கட்டமைப்பு குறித்த தெற்காசிய பிராந்திய மாநாடு** ..... 37
**ISPRL மற்றும் ADNOC-க்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்** ..... 37
**இந்திய சமூகப்பணி காங்கிரஸ்** ..... 38
**மாலத்தீவின் கடலோரக் காவல்படைக் கப்பல் - ஹுராவீ** ..... 38

**இந்தியாவின் யானைகளுக்கான முதல் மருத்துவமனை** ..... 38
**மத்திய மற்றும் மாநிலப் புள்ளியியல் அமைப்புகளின் 26-வது மாநாடு** ..... 39
**ஆடி மகோத்சவ திருவிழா** ..... 39
**திரிபுரா போராளிகள் அமைப்பை தடைசெய்ய தீர்ப்பாயம் முடிவு** ..... 39
**9 வது வருட இராணுவம் மற்றும் பாதுகாப்பு குறித்த பேச்சுவார்த்தை** ..... 40
**தொழில் தொடங்குவதற்கு உகந்த சூழலுக்கான அறைகூவல்** ..... 40
**பருவநிலை மாற்றம் மீதான பேசிக் (BASIC) நாடுகளின் அமைச்சர்களுக்கிடையேயான சந்திப்பு** ..... 41
**ஜஷ்னே பச்பான்** ..... 41
**தேசிய பெண்கள் ஆணையத்தின் 3 புதிய உறுப்பினர்கள்** ..... 41
**மூப்பியல் மற்றும் முதியோருக்கான மருத்துவம் மீதான 4-வது சர்வதேச கருத்தரங்கு** ..... 42
**தொழிற்சாலை பூங்கா தரமிடல் அமைப்பு** ..... 42
**அனைத்து இந்திய காவல்துறை தலைவர்களின் தகவல் தொடர்பு கருத்தரங்கு** ..... 42
**வஜ்ரா பிரகார்** ..... 43
**சர்வதேச சுற்றுலா வர்த்தக மையம் - 2018** ..... 43
**உடான் அங்கீகாரம் ரத்து - ஏர் ஒடிசா** ..... 43
**50-வது மனதின் குரல் (மான் கி பாத்) அத்தியாயம்** ..... 43
**பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா** ..... 44
**கர்தார்பூர் சாஹிப் நடைபாதை** ..... 45
**அமைச்சரவை ஒப்புதல்கள்** ..... 46
**சிபிஐ-க்கு தடை** ..... 46
**சர்வதேசச் செய்திகள் ..... 46**
**பிரேசிலின் புதிய அதிபர் - ஜெய்ர் போல்சனாரோ** ..... 46
**மண்டேலா பயிற்சித் திட்டம்** ..... 47
**வீடியோசிட்டா - 2018** ..... 48
**சிறிய இந்தியா வாயில் துவக்கம்** ..... 48
**மிகப்பெரும் யுத்தச் சிங்கங்களின் சிலைகள்** ..... 48
**கொரிய கடல் பயிற்சித் திட்டம்** ..... 49
**5வது உலக பௌத்த மன்றம்** ..... 49
**பசியை ஒழிப்பதற்கு யுக்தி சார்ந்த கூட்டாண்மை** ..... 50
**தடை விதிப்பிலிருந்து இந்தியாவிற்கு விலக்கு - அமெரிக்கா** ..... 50
**பாகிஸ்தான் - சீனா அதிநவீன பேருந்து சேவை** ..... 51
**உலகின் பாதுகாப்பான இடங்கள் அறிக்கை** ..... 51
**WEF உலகளாவிய எதிர்கால மன்றங்கள்** ..... 52

ரஷ்யாவின் தெருவிற்கு கூடங்குளம் பெயர் ..... 52
சர்வதேச பெண் விமானிகள் சங்க அறிக்கை ..... 52
எரித்ரியாவிற்கு எதிரான UNSC தடைகள் விலக்கம் ..... 53
ஆப்பிரிக்காவின் முதல் அதிவேக ரயில் பாதை ..... 54
மொராக்கோவின் 2-வது புவி கண்காணிப்பு செயற்கைக் கோள் ..... 55
ஆசியா பசிபிக் பொருளாதார கூட்டிணைவு (APEC) உச்சிமாநாடு 2018 ..... 55
உலகளாவிய திறமைக்கான வருடாந்திர தரவரிசை 2018 - IMD ..... 55
வோரேக் பயினிமராமா - பிஜி பிரதமராக மறுமுறை தேர்வு ..... 56
தொழில் செய்வதற்கு உகந்ததான வருடாந்திர இந்திய அறிக்கை ..... 56
**பொருளாதாரச் செய்திகள் ..... 57**
தேர்தல் நிதிப் பத்திரங்கள் வழங்குதல் மற்றும் அவற்றை ரொக்கமாக மாற்றுதல் ..... 57
அறிவுசார் சொத்துரிமை (IP – Intellecual Property) பற்றிய முதல் இந்திய அமெரிக்கப் பேச்சு வார்த்தை ..... 57
நிதியியல் நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் 19-வது சந்திப்பு ..... 58
சங்கிலித் தொடர் பரிமாற்றம் ..... 59
எண்ணியல் பொதுக் கடன் பதிவேடு ..... 59
நிறுவனங்கள் சட்டம், 2013-ஐ திருத்துவதற்கான அவசரச் சட்டம் ..... 59
31 NBFCன் பதிவுகள் ரத்து ..... 60
HSCC மாற்றம் ..... 60
இந்தியாவின் முதல் ஊடாடும் கடன் அட்டை ..... 60
“KBL SB - TASC” என்ற புதிய வங்கி சேமிப்புத் திட்டம் - கர்நாடக வங்கி துவக்கம் ..... 61
சஷாக்ட் இந்தியா AMC ..... 62
ACROSS திட்டம் ..... 62
பொருளாதார மூலதன கட்டமைப்பை ஆய்வு செய்ய குழு ..... 63
**அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 64**
போலியான செய்திகளை கண்காணிக்க வலைதளம் அடிப்படையிலான கருவி ..... 64
கெப்ளர் விண்வெளித் தொலைநோக்கி - நாசா ..... 64
அக்னி – 1 ..... 65
பெய்டோ ..... 66
உலகின் முதலாவது மடிக்கக்கூடிய ஸ்மார்ட் போன் மாதிரி ..... 66
‘சொர்க்கலோக அரண்மனை’ விண்வெளி நிலையம் ..... 67
உலகின் முதல் செயற்கை நுண்ணறிவு செய்தி தொகுப்பாளர் ..... 68
இந்தியாவின் முதலாவது உள்நாட்டுத் தொழில்நுட்பத்துடன் கூடிய நுண்செயலி ..... 68
எடுத்து செல்லக் கூடிய அளவிலான குளிர்பதன சேமிப்பு சாதனம் ..... 69

புற்றுநோய் செல்களை ஒரே நேரத்தில் கண்டறிந்து அழிக்கும் கார்பன் நானோ பொருட்கள் ..... 69
GSAT 29 செயற்கைக்கோள் வெற்றி ..... 70
வியாழனுக்கு செல்ல ரால்ப் ஆய்வுக் கருவி ..... 71
பயோனிக் காளானிலிருந்து தூய்மையான ஆற்றல் ..... 71
NIPUN மின்னணு தளம் மூலம் டெல்லி காவல்துறைக்குப் பயிற்சி ..... 72
KOOL ஆன்லைன் திறந்தநிலை கற்றல் பயிற்சி தளம் ..... 72
கிலோ கிராமிற்கு புதிய வரையறை ..... 72
செயற்கை சூரியன்- சீனா ..... 73
தீர்மானிக்க உதவும் அமைப்பு (DSS) ..... 74
NSE GoBID ..... 74
GROWTH - India தொலை நோக்கியின் முதலாவது அறிவியல் கண்காணிப்பு ..... 75
ஏர்சேவா 2.0 (Airsewa 2.0) இணைய தளம் ..... 75
GRP உதவி செயலி ..... 76
பைசா 'PAiSA' தரவுதளம் ..... 76
ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டம் ..... 77
முதலாவது அமைதியான விமானம் ..... 77
**சுற்றுச்சூழல் செய்திகள் ..... 78**
உலக மண் பல்லுயிர்ப் பெருக்க நிலப்பட ஏடு (ATLAS) ..... 78
குறைவாக மாசு ஏற்படுத்தக் கூடிய பட்டாசுகள் - CSIR ..... 79
உலக சுகாதார நிறுவனத்தின் காற்று மாசு மற்றும் சுகாதாரத்தின் மீதான உலகளாவிய மாநாடு ..... 80
சூரிய ஒளிக் கதிர்களிடமிருந்து பாதுகாப்பு அளிக்கும் பொருட்களுக்குத் தடை - பலாவு ..... 81
சூறாவளிப் புயல் - கஜா ..... 81
உலக மலேரியா அறிக்கை - WHO ..... 82
துத்வா புலிகள் காப்பகத்திற்கு SSB ரோந்து ..... 83
இந்திய விலங்கியல் ஆய்வு நிறுவனம் - அறிக்கை ..... 84
தாக்கம் அடிப்படையிலான முன்னறிவிப்பு அணுகுமுறை ..... 85
டிட்லி புயல் அரிதினும் அரிதானதாக வரையறுப்பு ..... 85
**மாநிலச் செய்திகள் ..... 86**
சாங்காய் திருவிழா 2018- மணிப்பூர் ..... 86
இந்தியாவின் முதல் ரோபோடிக் டைனோசர் காட்சிக் கூடம் ..... 86
டால் - நஹீன் ஏரியில் ஆழ அளவியல் ஆய்வு ..... 87
இந்தியாவின் முதலாவது நீதி நகரம் - ஆந்திரப் பிரதேசம் ..... 87

**ஒடிசாவின் கடலோர பேரிடர் எச்சரிக்கை அமைப்பு** ..... 88
**எழுத்தச்சன் புரஸ்காரம் - கேரளா** ..... 88
**புதிதாகப் பிறந்த குழந்தைகளின் இறப்பு விகிதம் - தமிழ்நாடு** ..... 89
**ஜெய்ப்பூர் காலணி - மலாவி** ..... 89
**அபிஜே கொல்கத்தா இலக்கியத் திருவிழா** ..... 90
**Signature பாலம் - டெல்லி** ..... 90
**முக்கிய மந்திரி தீர்த்த யாத்திரை திட்டம் - டெல்லி** ..... 91
**QR (Quick Response) குறியீடு செயல்படுத்தப்பட்ட குளிர்சாதன வசதிகொண்ட காந்தங்கள் - டெல்லி** ..... 91
**நடமாடும் தன்னார்வலர்கள் மருத்துவ சேவை** ..... 92
**கியான் கும்ப் - உத்தராகண்ட்** ..... 92
**ஹாக்கி உலகக் கோப்பைப் பாடல் - ஒடியா** ..... 92
**பைசாபாத் - பெயர் மாற்றம்** ..... 93
**சங்வாரி வாக்குச் சாவடிகள் - சத்தீஸ்கர்** ..... 93
**மோ பேருந்து சேவை - ஒடிசா** ..... 93
**மீன் வளர்ப்புத் திட்டம் 2.0 - மேகாலயா** ..... 94
**‘புவனேஸ்வர் மே வைபை’ திட்டம் - ஒடிசா** ..... 94
**சவுரா ஜல்நிதி திட்டம்** ..... 94
**அயோத்தியா தீப உத்சவ் - 2018** ..... 95
**CCTNS திட்டத்தின் கீழ் சிறந்த செயல்களுக்கான விருது - அசாம் காவல்துறை** ..... 95
**சம்ருத்தி திட்டம்** ..... 95
**டெல்லி இளஞ்சிவப்பு வரிசை (பிங்க் லைன்) பாதை நீட்டிப்பு** ..... 96
**வடகிழக்கு இந்தியாவின் முதலாவது “தண்ணீரில் மிதக்கும் கைத்தறி குடிசைகள்” - மணிப்பூர்** ..... 96
**ரசகுல்லா தினம் (மேற்கு வங்காளம்) - நவம்பர் 14** ..... 97
**அரசுப் பள்ளிகளுக்கான GPS வரைபடமிடல்** ..... 97
**நாமசூத்ரா மற்றும் மட்டுவா சமூக நல வாரியம்** ..... 97
**சுற்றுலா எளிதாக்கம் மற்றும் தகவல் மையம் துவக்கம்** ..... 97
**இமயமலைப் பகுதிக்கான பிராந்திய ஆணையம் - உருவாக்கம்** ..... 98
**கௌ சம்ரிதி பிளஸ் திட்டம்** ..... 98
**நாங்கிரேம் நடனத் திருவிழா** ..... 98
**மாநிலச் சின்னம் அறிமுகம் - ஆந்திரப் பிரதேசம்** ..... 99
**கொன்னிச்சி வா புனே** ..... 100
**மராத்தா இட ஒதுக்கீட்டு மசோதா** ..... 100

ஹுக்கா விடுதிகளைத் தடை செய்த 3வது மாநிலம் பஞ்சாப் ..... 101
சஷாக்ட் மகிளா திட்டம் ..... 101
புசேவா திட்டம் மற்றும் புதார் வலைப்பக்கம் துவக்கம் ..... 101
வடக்கு வங்காளத்தில் அந்நிய நிலப்பகுதியில் வசிப்பவர்களுக்கு நில உரிமை ..... 102
இந்தியாவின் இரண்டாவது உயரமான புத்தர் சிலை ..... 102
ஆயுஷ்மான் பாரத்தை அமல்படுத்துவதில் முதலிடம் ..... 103
ஜம்மு காஷ்மீர் சட்டசபை கலைப்பு ..... 104
**பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள் ..... 104**
க்ளெய்ட்ஸ்மேன் விருது 2018 ..... 104
ஹால் ஆப் பேம் (வாழ்த்தரங்கம்) ..... 105
100 - சிறந்த அயல்நாட்டு மொழித் திரைப்படங்கள் ..... 105
ராம்தாஸ் எம் பாய் ..... 106
நட்வர்யா பிரபாகர் பன்ஷீகர் வாழ்நாள் சாதனையாளர் விருது ..... 106
கனவுகளின் சிறு துணுக்குகள் : அங்கீகரிக்கப்பட்ட சுயசரிதை ..... 107
சர்வதேச கல்வி விருது ..... 107
லோக் ஆயுக்தாவின் முதல் தலைவர் - மேகாலயா ..... 107
AIBA - பெண்கள் உலக சாம்பியன்ஷிப் ..... 108
பன்னாட்டு தொலைத் தொடர்பு ஒன்றிய உறுப்பினர் - இந்தியா ..... 109
கிருஷ்ணா அய்யர் விருது ..... 109
அருணிமா சின்கா – முனைவர் (டாக்டர்) பட்டம் ..... 109
பத்திரிக்கைத் துறையில் நிபுணத்துவத்திற்கான IPI - இந்தியா விருது 2018 ..... 110
இந்தியப் போட்டி ஆணையம் - புதிய தலைவர் ..... 110
டெஸ்லா தலைவர் பதவி - எலான் மஸ்குக்குப் பதிலாக ராபின் டென்ஹோல்ம் பதவியேற்பு ..... 111
ராஜா ராம் மோகன் ராய் விருது ..... 111
கலாச்சார பாரம்பரியத்திற்கான யுனெஸ்கோவின் ஆசிய பசிபிக் விருது - 2018 ..... 112
கிலுவி மலையில் ஏறிய முதலாவது இந்தியர் ..... 113
முனின் பார்கோடோகி இலக்கிய விருது - 2018 ..... 113
கப்பற் படைத் துணைத் தலைவரான எம்பி அவாதி காலமானார் ..... 114
பிரான்சின் உயரிய குடிமகன் கௌரவிப்பு விருது ..... 115
2018 ஆம் ஆண்டின் துணிவிற்கான இலண்டன் பத்திரிக்கை சுதந்திர விருது ..... 115
இன்போசிஸ் பரிசு 2018 ..... 115
ஆண்டின் சிறந்த லா லிகா வீரர் விருது - மெஸ்ஸி ..... 116
யுனிசெப்பின் முதல் இளைஞர்களுக்கான தூதர் ..... 117

வாழ்நாள் சாதனையாளர் விருது - டாக்டர் மார்த்தா பார்ரெல் ... 117
ஆண்டின் உலகளாவிய சிறந்த இந்தியர் விருது ... 118
அலிக் பதம்சி ... 118
ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான புதிய தலைமைப் பிரதிநிதி - BIS ... 118
மத்திய அமைச்சர் அனந்த குமார் - மறைவு ... 119
படைத் தலைவரான குல்தீப் சிங் சந்த்புரி - மறைவு ... 119
இந்திய அறுவைச் சிகிச்சை நிபுணர் சங்கத்தின் தலைவர் - ரகுராம் ... 120
ஆசிய சுற்றுச்சூழல் அமலாக்க விருதுகள் ... 121
வாழ்நாள் சாதனையாளர் விருது - உஸ்தாத் அம்ஜாத் அலிகான் ... 121
உலகளவில் ஏற்புடைய சிந்தனைத் தலைவர் விருது ... 122
இண்டர்போல் அமைப்பின் புதிய தலைவர் ... 123
யுனிசெப்பின் நல்லெண்ணத் தூதர் ... 123
வடகிழக்குப் பிராந்தியத்திற்கான முதல் இளைஞர் பரப்புனர் ... 124
அணுசக்தி ஒழுங்குமுறை வாரியத்தின் தலைவர் ... 125
புதிய தலைமை தேர்தல் ஆணையர் (CEC - Chief Election Commissioner) ... 125
பணிக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் ... 125
CII – EXIM வங்கி வணிக விருது ... 126
மத்திய பணியாளர் தேர்வு ஆணையத்தின் தலைவர் ... 126
**விளையாட்டுச் செய்திகள் ... 127**
வடகிழக்கு ஒலிம்பிக் விளையாட்டுகள் 2018 ... 127
2018 எகிப்து இளையோர் & சிறுவர் ஓபன் ... 127
மெக்சிகன் கிராண்ட் பிரிக்ஸ் ... 127
பெண்கள் டென்னிஸ் கூட்டமைப்பு (WTA) கோப்பையின் இறுதிப் போட்டி ... 128
ஐல் ஆப் மேன் சர்வதேச சதுரங்க போட்டித் தொடர் 2018 ... 128
ஆசிய ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபி (ஆண்கள் ஹாக்கி) ... 128
ITTF (International Table Tennis Federation) பெல்ஜியம் ஓபன் 2018 ... 129
21 வயதிற்குட்பட்டோருக்கான பெல்ஜியம் ஓபன் ... 129
பார்முலா ஒன் பந்தயம் - 2020 ... 129
உலக பெருநிறுவன விளையாட்டுகள் ... 130
பாரிஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் ... 130
லுக்சிகா கும்கும் - WTA ... 130
சார்லொர்லக்ஸ் ஓபன் ... 131
சைமோன் பைல்ஸ் - 13வது தங்கம் ... 131
ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் ... 132

**சவ்ரப் நேத்ராவல்கர் - அமெரிக்க கிரிக்கெட் அணித்தலைவர்** ..... 133
**தெற்காசிய கால்பந்துக் கூட்டமைப்பு - 15 வயதிற்கு உட்பட்டோருக்கான சாம்பியன்ஷிப்** 133
**ஸ்கீட் போட்டியில் இந்தியாவின் முதலாவது தங்கப்பதக்கம்** ..... 133
**எகானா கிரிக்கெட் மைதான பெயர் மாற்றம்** ..... 134
**T20 - 4 சதம் அடித்த முதலாவது கிரிக்கெட் வீரர்** ..... 134
**ஆசிய ஸ்னூக்கர் பட்டம்** ..... 135
**பிரேசிலிய கிராண்ட்பிரிக்ஸ்** ..... 135
**புசௌ சீனா ஓபன் 2018** ..... 136
**11 வது ஆசிய காற்று துப்பாக்கி சாம்பியன்ஷிப்** ..... 136
**பெட் கோப்பை 2018** ..... 137
**உலக காலுதைச் சண்டை (Kick Boxing) சாம்பியன்ஷிப்** ..... 138
**உலக மேசைப் பந்தாட்ட சாம்பியன்ஷிப்** ..... 138
**உலக மாணவர்களுக்கான சதுரங்க சாம்பியன்ஷிப்** ..... 138
**இந்திய அதிரடி சதுரங்கப் பந்தயம்** ..... 139
**பெங்களூரு ஓபன் ATP சேலஞ்சர்** ..... 139
**அக்ரோபாட்டிக் ஜிம்னாஸ்டிக் உலகக் கோப்பை** ..... 139
**தைபை OEC ஓபன் டென்னிஸ்** ..... 140
**ஹாங்காங் ஓபன் 2018** ..... 140
**உலக இளையோர் பாட்மிண்டன் சாம்பியன்ஷிப்** ..... 141
**UIM FIH20 - இந்திய கிராண்ட் பிரிக்ஸ்** ..... 141
**ATP இறுதிப் போட்டி** ..... 142
**ஐரோப்பாவைச் சேர்ந்த மிக வயதான சர்வதேச கோல் கீப்பர் - கால்பந்து** ..... 143
**2018** ஆம் ஆண்டின் சர் ஹென்றி காட்டன் ரூக்கியை **(புதியவர்)** வென்ற முதலாவது இந்தியர் 143
**லாரஸ் உலக விளையாட்டு விருதுகள்** ..... 143
**காமன்வெல்த் வாள்சண்டை சாம்பியன்ஷிப்** ..... 144
**ஆர்டிஸ்டிக் ஜிம்னாஸ்டிக் உலகக் கோப்பை** ..... 144
**AIBA மகளிர் உலகக்குத்துச்சண்டை சாம்பின்ஷிப்** ..... 145
**சையது மோடி சர்வதேசப் போட்டி 2018** ..... 145
**ICC மகளிர் டி20 உலக கோப்பை** ..... 146
**அபுதாபி கிரான்ட் பிரிக்ஸ்** ..... 147
**முக்கிய தினங்கள்** ..... **147**
**ராஷ்ட்ரிய ஏக்தா திவாஸ் - அக்டோபர் 31** ..... 147
**உலக சைவ உணவுப்பழக்க தினம் - நவம்பர் 1** ..... 148

**பத்திரிக்கையாளர்களுக்கு எதிரான குற்றங்களில் வழங்கப்படும் தண்டனைகளில் இருந்து பெறப்படும் விலக்குகளைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் - நவம்பர் - 2** ............ 149
**உலக சுனாமி விழிப்புணர்வு தினம் - நவம்பர் 05** ............ 149
**தேசிய ஆயுர்வேத தினம் - நவம்பர் 05** ............ 150
**தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம் - நவம்பர் 7** ............ 150
**உலக தரத்திற்கான தினம் - நவம்பர் 08** ............ 150
**உலக கதிர் வரைபட தினம் - நவம்பர் 08** ............ 151
**தேசிய சட்ட சேவைகள் தினம் - நவம்பர் 09** ............ 151
**அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் தினம் - நவம்பர் 10** ............ 152
**தேசிய கல்வி தினம் - நவம்பர் 11** ............ 153
**பொதுச்சேவை ஒளிபரப்பு நாள் நவம்பர் - 12** ............ 153
**உலக நிமோனியா தினம் - நவம்பர் 12** ............ 154
**உலக கருணை நாள் - நவம்பர் 13** ............ 154
**உலக நீரிழிவு தினம் 2018 - நவம்பர் 14** ............ 155
**குழந்தைகள் தினம் - நவம்பர் 14** ............ 155
**உலக தத்துவ தினம் - நவம்பர் 15 (3வது வியாழக்கிழமை)** ............ 156
**தேசியப் பத்திரிக்கை தினம் - நவம்பர் 16** ............ 156
**சகிப்புத் தன்மைக்கான சர்வதேச நாள் - நவம்பர் 16** ............ 156
**சர்வதேச மாணவர்கள் தினம் - நவம்பர் 17** ............ 157
**தேசிய வலிப்பு தினம் - நவம்பர் 17** ............ 157
**உலக நுண்ணுயிர் எதிர்பொருள் விழிப்புணர்வு வாரம் - நவம்பர் 18** ............ 157
**இயற்கை மருத்துவ தினம் - நவம்பர் 18** ............ 158
**குவாமி ஏக்தா வாரம் (தேசிய ஒருமைப்பாட்டு வாரம்) நவம்பர் 19 முதல் 25 வரை** ............ 159
**சர்வதேச ஆண்கள் தினம் - நவம்பர் 19** ............ 159
**சர்வதேச சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டோருக்கான நினைவு தினம் – நவம்பர் 18** .. 160
உலக கழிப்பறை தினம் - நவம்பர் **19** ............ 160
**உலக குழந்தைகள் தினம் - நவம்பர் 20** ............ 161
**ஆப்பிரிக்கா தொழில்மயமாக்கல் தினம் (AID) - நவம்பர் 20** ............ 162
**உலக தொலைக்காட்சித் தினம் - நவம்பர் 21** ............ 162
**உலக மீன்பிடி தினம் - நவம்பர் 21** ............ 162
**உலக ஹலோ தினம் - நவம்பர் 21** ............ 163
**உலக COPD தினம் - நவம்பர் 21** ............ 163
**பெண்களுக்கெதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - நவம்பர் 25** ............ 164
**70-வது NCC உருவாக்க தினம்** ............ 164

**இந்திய நதிகள் வாரம் 2018** ........ 165
**தேசிய பால் தினம் - நவம்பர் 26** ........ 165
**அரசியலமைப்பு தினம் - நவம்பர் 26** ........ 165
**இந்திய உடலுறுப்பு தான தினம் - நவம்பர் 27** ........ 166
**இதரச் செய்திகள்** ........ **166**
**அனுபம் கெர் FTII இன் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமா** ........ 166
**உலக கடவுச்சீட்டு குறியீடு - 2018** ........ 167
**மேரே பயாரே பிரைம் மினிஸ்டர்** ........ 168
**ஆண்கள் ஹாக்கி உலகக் கோப்பை 2018 - டாடா ஸ்டீல் (அதிகாரப்பூர்வ பங்குதாரர்)** ........ 168
**டைட்டானிக் II** ........ 168
**சிறப்பு விருந்தினர் - 2019 ஆம் ஆண்டின் இந்திய குடியரசுத் தின அணிவகுப்பு** ........ 169
**தேசிய மத நல்லிணக்க ஆய்வு நிறுவனம்** ........ 170
**மும்பை பயங்கரவாத தாக்குதலின் (26/11) 10-ம் ஆண்டு நிறைவு** ........ 170
**ரூபிக் கன சதுரத்தில் கின்னஸ் உலக சாதனை** ........ 170

## TNPSC துளிகள்

- சத்தீஸ்கரின் ராய்ப்பூரில் இளைய தலைமுறையினர் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளில் கவனம் செலுத்துவதற்காக 8 முதல் 10-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இளம் புத்தாக்குநர் திட்டம் 2018 (Young Innovators Programme -YIP) எனும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப போட்டியை சமீபத்தில் IIT கரக்பூர் கல்வி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது.
- இந்தியா மற்றும் மொராக்கோ ஆகிய நாடுகளுக்கிடையேயான குற்றவியல் விஷயங்கள் தொடர்பான பரஸ்பர சட்ட உதவிகள் மீதான ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
    - இந்தியா மற்றும் மொராக்கோ ஆகிய நாடுகளுக்கிடையே குற்றம் தொடர்பான விசாரணை, வழக்குகள், தேடுதல், தடை செய்தல், பறிமுதல் செய்தல், வழக்கை நடத்துதல் மற்றும் குற்றம் சம்பந்தப்பட்டுள்ள பொருட்களைப் பறிமுதல் செய்தல் ஆகியவற்றில் ஒத்துழைப்பிற்கான ஒரு விரிவான செயல்திட்டத்தை இந்த ஒப்பந்தமானது அளிக்கும்.
- மூத்த இந்திய காவற் பணி அதிகாரியான எஸ்.எஸ். தேஸ்வால் இந்தோ-திபெத்திய எல்லைப் பாதுகாப்புப் படையின் (Indo-Tibetan Border Police - ITBP) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் தேதி வரை இப்பதவியில் இருப்பார். இப்பதவி வகித்த R.K. பச்நந்தா ஓய்வு பெற்றதையடுத்து இவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
- தமிழக முதலமைச்சர் இ-அடங்கல் என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இதன் நோக்கம் நிலத்தின் வளம் மற்றும் தண்ணீர் இருப்பு ஆகியவற்றை மதிப்பிடுவதற்காக அதிகாரிகளால் தயாரிக்கப்படும் அரசாங்கப் படிவங்களின் தயாரிப்பை எளிமைப்படுத்துவதாகும்.
- யூகோ வங்கியின் தலைமை செயல் அதிகாரி மற்றும் மேலாண்மை இயக்குநராக அதுல் குமார் கோயல் பதவியேற்றார்.
- 2018ம் ஆண்டு நவம்பர் 1ம் தேதியன்று இராணுவத்தின் விமானப் படை தனது 33வது நிறுவன தினத்தைக் கொண்டாடியது. இதனைக் குறிப்பிடும் விதமாக புதுதில்லியில் இந்தியா கேட் அருகே அமர் ஜவான் ஜோதி என்ற இடத்தில் மலர் வளையம் வைக்கும் விழா நடத்தப்பட்டது.
- சுற்றுலாத் துறையில் இந்தியா மற்றும் தென் கொரியாவிற்கு இடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட மத்திய அமைச்சரவை ஒப்புதலளித்திருக்கின்றது.
- மத்திய அமைச்சரவைக்கு ரஷ்யாவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஆகிய இரண்டு உடன்படிக்கைகள் பற்றியும் விளக்கப்பட்டது.
    - போக்குவரத்துப் பயிற்சிக்கான ஒத்துழைப்பை மேம்படுத்திட ரஷ்யக் கூட்டமைப்பின் போக்குவரத்துத் துறை அமைச்சகத்துடன் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை.
    - ரயில்வேத் துறையில் தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேம்படுத்திட கூட்டுப் பங்கு

நிறுவனமான ரஷ்யாவின் ரயில்வேத் துறையுடன் ஒரு ஒத்துழைப்பு ஒப்பந்தம்.

- இரஷ்யாவை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் இணைய வழிப் பாதுகாப்பு நிறுவனமான காஸ்பர்ஸ்கை லேப் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையின்படி, இணையத்தில் உலாவுதல் தொடர்பான பிரச்சனைகளை சந்திக்கும் நாடுகளில் இந்தியா 12வது இடத்தில் இருக்கின்றது.
- ஒடிசாவின் புவனேஸ்வரில் மாநில கண்காணிப்பு நிலையம் அமைக்கப்படும் என்று அம்மாநில முதல்வர் நவீன் பட்நாயக் அறிவித்துள்ளார்.
- மூத்த நடிகரான அனுபம் கேருக்கு கேம்பிரிட்ஜ் எம்ஐடி ஸ்லோன் மேலாண்மைப் பள்ளியில் "புகழ்பெற்ற மனிதர்" என்ற பட்டம் வழங்கப்பட்டது.
- சர்வதேச குத்துச்சண்டை மன்றத்தின் (AIBA - International Boxing Association) தலைவராக உஸ்பெகிஸ்தானைச் சேர்ந்த வணிகரான கஃபூர் ராக்கிமோவ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் நவம்பர் 8 அன்றிலிருந்து முதல் அமர்விற்கு தலைமை தாங்குவது மற்றும் அடுத்த மூன்று மாதங்களுக்கு நிர்வாக நீதிபதியாக இருக்கப் போவது நீதிபதி K.K. சசிதரன் ஆவார்.
- 96 வயதுடைய பெண்மணியான கார்த்தியாயினி அம்மா கேரளாவில் அக்சர லக்சம் என்ற எழுத்தறிவுத் தேர்வில் 100க்கு 98 மதிப்பெண்கள் பெற்றுள்ளார்.
- 33 வயதான பாகிஸ்தான் அணியின் மூத்த மட்டையாளர் அசார் அலி ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து தன்னுடைய ஓய்வை அறிவித்துள்ளார்.
- இந்திய இணையதள மற்றும் கைபேசி சங்கம் (Internet and Mobile Association of India - IAMAI) இந்தியாவில் மெய்நிகர் உண்மைத் தோற்றம்/ அதிகப்படுத்தப்பட்ட உண்மைத் தோற்றம் ஆகியவற்றுக்கான சூழலை மேம்படுத்தி உருவாக்கிட ஒரு புதிய தொழில் நிபுணர் குழுவை அமைத்திருக்கின்றது.
    - இந்த குழுவானது நாட்டில் வளர்ந்துவரும் அந்த தொழில்நுட்பத்தின் திறமைகளைப் பயன்படுத்தி பொருளாதார வளர்ச்சி, வேலை வாய்ப்பு, திறன் மேம்பாடு ஆகியவற்றைப் பிரபலப்படுத்திட இந்த சங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளின் ஒரு பகுதியாகும்.
- இந்திய ராணுவத்தின் ஈட்டிப் படைகளின் சார்பில் வடக்கு இம்பாலில் உள்ள மந்திரிபுகாரி ராணுவ தளத்தில் 13வது இந்திய-மியான்மர் பிராந்திய எல்லைக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டது.
- உத்தரகாண்ட் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நீதிபதி ரமேஷ் ரங்கநாதன் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார். டெக்ராடூனில் உள்ள ராஜ்பவனில் ஆளுநர் பேபி ராணி மௌரியாவால் அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.
- மேற்கு வங்க மாநிலத்தில் தொழிற்துறை வளர்ச்சிக்கும், வாழ்க்கைத் தரத்தின் மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் "துர்கா உந்து விசையளிக்கப்பட்ட சேமிப்புக் கிடங்கிற்கான கட்டுமானத் திட்டம்" என்பதற்கான கடன் ஒப்பந்தத்தில் இந்தியாவும் ஜப்பானும் கையெழுத்திட்டன.
- இம்பாலில் உள்ள உயிரியல் வளம் மற்றும் நீடித்த மேம்பாட்டிற்கான நிறுவனத்துடன் மேகாலயா அரசும் கலாச்சார உறவுகளுக்கான இந்தியக் குழுவும் இணைந்து நவம்பர் 8 முதல் 11-ம் தேதி வரை ஷில்லாங்கில் இந்திய சர்வதேச செர்ரி மலர் திருவிழாவை,

தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக நடத்துகின்றது.

- நாட்டில் மிக வயதான வில்லுப்பாட்டு கலைஞரான 84 வயதடைந்த பூங்கணி அம்மா காலமானார்.
- தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான் ஆகிய பகுதிகளுக்கான தேசிய மாணவர் படையின் (National Cadet Coprs - NCC) இயக்குநரகம் ஜோத்பூரில் நடைபெற்ற அகில இந்திய வாயு சேனைப் போட்டியில் சாம்பியன்ஸ் கோப்பையை வென்று தங்கப் பதக்கத்தை கைப்பற்றியிருக்கின்றது.
    - தொடர்ந்து இரண்டாவது முறையாக இந்த இயக்குநரகம் சாம்பியன்ஸ் கோப்பையை வென்று சாதனை படைத்திருக்கின்றது.
- ஒடிசா அரசு ஊழல் தடுப்பு அதிகாரிகளின் தொழிற்முறை அறிவைத் தக்க வைப்பதற்காக அவர்களது அறிவையும் திறன்களையும் தொடர்ச்சியாக மேம்படுத்தும் நோக்கில் மாநிலத் தலைநகரில் மாநில கண்காணிப்பு நிறுவனம் ஒன்றை ஏற்படுத்த இருக்கின்றது.
- ஊழியர்கள் குழுவின் தலைமைகளுக்கான தலைவருக்கு கீழான (Chairman of Chiefs of Staff Committee) ஒருங்கிணைந்த பாதுகாப்பு ஊழியர்களின் 12வது தலைவராக (Chief of Integrated Defence Staff) லெப்டினன்ட் ஜெனரல் P.S. ராஜஸ்வர் பதவியேற்றார்.
    - இவர் தற்சமயம் ராணுவ அமைச்சகத்தில் உள்ள ஒருங்கிணைந்த தலைமை அலுவலகத்தில் முன்னோக்கித் திட்டமிடுதல் (Perspective Planning) பிரிவின் பொது இயக்குநராக உள்ளார். இவர் அக்டோபர் 31ம் தேதியன்று ஓய்வு பெற்ற லெப்டினைட் ஜெனரல் சதீஸ் துவா என்பவருக்குப் பதிலாக பதவியேற்கிறார்.
- மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகம், கொரியக் குடியரசின் கலாச்சாரம், விளையாட்டு மற்றும் சுற்றுலாத் துறையில் ஒத்துழைப்பை பலப்படுத்துவதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டு இருக்கின்றது.
- மத்திய ஆயுஷ் துறை அமைச்சரும், மத்திய கலாச்சார துறை இணை அமைச்சரும் (தனிப் பொறுப்பு) இணைந்து இரண்டு நாள் நிகழ்வான "ஆயுர்வேதத்தில் வணிக வளர்ச்சி மற்றும் தொழில் முனைவோர் மீதான தேசியக் கருத்தரங்கு" என்ற மாநாட்டை புதுதில்லியில் துவக்கி வைத்தனர்.
    - இம்மாநாடு ஆயுர்வேதத் துறையில் தொழில்முனைவோர்களையும் ஆயுர்வேதத் துறையின் அனைத்து பங்குதாரர்களையும் வியாபார வாய்ப்புகளை நோக்கி ஊக்கப்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருக்கின்றது.
- தனது அண்டை நாட்டுடனான 61 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் அதிகமான வர்த்தகப் பற்றாக்குறையை குறைப்பதற்கான தனது முயற்சிகளின் ஒரு பகுதியாக ஷாங்காயில் நடைபெறும் சீனாவின் முதலாவது சர்வதேச இறக்குமதி கண்காட்சியில் இந்தியா பங்கேற்கும்.
- மத்திய அரசும் ஆந்திரப் பிரதேச அரசும் உலக வங்கியுடன் இணைந்து ஆந்திர பிரதேசத்தில் ஏழை மற்றும் பலவீனமான விவசாயிகளுக்கு அவர்களது விவசாய உற்பத்தி, லாபம் மற்றும் பருவநிலை தாங்குதிறன் ஆகியவற்றை அதிகப்படுத்த 172.20 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான கடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டு இருக்கின்றன.
- அமெரிக்காவில் ஜாரெட் போலிஸ் ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அமெரிக்காவில் ஆண் ஓரினச் சேர்க்கையாளர் வெளிப்படையாக ஆளுநராகத்

தேர்ந்தெடுக்கப்படுவது இதுவே முதல்முறையாகும்.

- ஜாரெட் போலிஸ் கொலரடோவில் வெற்றி பெற்றுள்ளார்.

❖ 18-வது இந்தியப் பெருங்கடல் கரையோர கூட்டிணைவு அமைப்பின் அமைச்சரவைக் குழுவினுடைய கூடுகை தென் ஆப்பிரிக்காவின் டர்பனில் நடைபெற்றது.

- இந்த கூடுகையானது மகாத்மா காந்தியின் 150வது பிறந்த நாள் மற்றும் நெல்சன் மண்டேலாவின் 100வது பிறந்த நாள் கொண்டாட்டங்களையொட்டி நடைபெற்றது.

❖ உத்திரப் பிரதேச முதல்வர் மற்றும் தென்கொரிய அதிபரின் மனைவி கிம் ஜிங்க்-சூக் ஆகியோர் இணைந்து அயோத்தியாவின் ஹுயு ராணி பூங்காவில் ஹுயு ராணியின் நினைவகத்தைத் திறந்து வைத்தனர்.

❖ பெங்களூருவை அடிப்படையாகக் கொண்ட வாடகைக் கார் நிறுவனமான ஓலா (OLA) தனது செயல்பாட்டினை நியூசிலாந்தில் அதிகாரப் பூர்வமாக தொடங்கி ஆக்லாந்து, வெல்லிங்டன் மற்றும் கிறிஸ்ட்சர்ச் ஆகிய பகுதிகளில் சவாரியை வழங்குகிறது.

- இது இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஆஸ்திரேலியா மற்றும் பிரிட்டனில் ஓலா தனது செயல்பாடுகளைத் தொடங்கிய பின்னர் ஆரம்பிக்கப்பட்டதாகும்.

❖ பிரிட்டிஷ் ஒளிபரப்பு நிறுவனமானது (BBC - British Broadcasting Corporation) இந்தியா போன்ற நாடுகளில் பயிற்சிப் பட்டறைகள் மற்றும் விவாதங்கள் உட்பட உலகளாவிய செய்தி ஊடகங்களில் முக்கிய கவனம் செலுத்துவதன் மூலம் தவறான செய்திகள் மற்றும் போலிச் செய்திகள் ஆகியவற்றுக்கு எதிராகப் போராடுவதை இலக்காகக் கொண்ட புதியப் பிரச்சாரத்தை உருவாக்கியுள்ளது.

❖ இந்திய இரயில்வேயானது மொத்தமுள்ள தனது 16 மண்டலங்களில், அகலவழி இரயில் பாதைகளில் (தண்டவாளத்திற்கு இடைப்பட்ட தூரம் 1676 மி.மீ. அல்லது 1.67 மீ) அமைந்துள்ள ஆளில்லா லெவல் கிராஸிங்கை (Unmanned Level Crossings - UMLCs) அல்லது ஆளில்லாத இருப்புப் பாதைக் கடப்பு நிலையை தனது 12 மண்டலங்களில் முழுவதுமாக நீக்கியுள்ளது.

❖ ஒடிசா மாநில அரசானது 2018 ஆம் ஆண்டின் விண்வெளி மற்றும் பாதுகாப்பு உற்பத்திக் கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளது. இக்கொள்கையின் நோக்கம் விண்வெளி மற்றும் பாதுகாப்பு உற்பத்தி நிறுவனங்களை ஊக்குவிப்பதன் மூலம் தொழில்மயமாக்கலின் செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதாகும்.

❖ இந்தியாவின் இந்துத் திருவிழாவான தீபாவளியை அனுசரிக்கும் விதமாக ஐக்கிய நாடுகள் தபால் நிர்வாகமானது (UNPA - United Nations Postal Administration) தியாஸ் விளக்குடன் கூடிய (சிறப்பு நிகழ்ச்சிக்கான அட்டை) சிறப்பு அஞ்சல் தலைகளை வெளியிட்டுள்ளது.

❖ இந்தியா மற்றும் மலாவி ஆகிய நாடுகள் குற்றவாளிகளை ஒப்படைக்கும் உடன்படிக்கை, அமைதிப் பணிகளுக்காக அணு ஆற்றல் துறையில் ஒத்துழைப்பு, இராஜதந்திர மற்றும் அலுவல் ரீதியான கடவுச் சீட்டுகளுக்கான விசா நடைமுறையில் தளர்வு ஆகிய 3 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.

- இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் வெங்கய்யா நாயுடுவின் மலாவி பயணத்தின் போது இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

❖ தீபாவளியைக் கொண்டாடுவதற்காக நியூயார்க்கின் நட்சத்திர சின்னமான பேரரசு

மாகாணக் கட்டிடமானது (Empire State Building) முதன்முறையாக ஆரஞ்சு நிறத்தில் ஒளிரச் செய்யப் பட்டது. இது பேரரசு மாகாண நில அறக்கட்டளையின் ஒத்துழைப்புடன் இந்திய மன்றங்களுக்கான கூட்டமைப்பினால் ஒருங்கிணைக்கப்பட்டது.

- ❖ சென்னையில் விடுதலைப் போராட்ட வீரர் மற்றும் இந்தியாவின் முதலாவது உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் படேலின் பிறந்த தினத்தை அனுசரிப்பதற்காக "ஒற்றுமை ஓட்டம்" என்ற நிகழ்ச்சியை பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் அக்டோபர் 31 அன்று தொடங்கி வைத்தார்.
- ❖ "நெருப்பு நீல நிறத்தில் எரிகின்றது : இந்தியப் பெண்கள் கிரிக்கெட்டின் வரலாறு" என்ற புத்தகத்தை விளையாட்டுப் பத்திரிக்கையாளர்களான காருண்யா கேசவ் மற்றும் சித்தாந்தா பதக் ஆகியோர் இணைந்து எழுதியுள்ளனர். இப்புத்தகம் நவம்பர் 30 ஆம் தேதியில் வெளியிடப்படவிருக்கிறது.
    - இது இந்தியப் பெண்கள் கிரிக்கெட்டின் வரலாற்றைப் பற்றிய புத்தகமாகும். இது வெஸ்ட்லேண்ட் ஸ்போர்ட்ஸின் புதிய பதிப்பகத்தின் ஒரு பகுதியாக வெளியிடப்பட விருக்கிறது.
- ❖ புது டெல்லியில் உள்ள குடியரசுத் துணைத் தலைவரின் இல்லத்தில் உள்ள சர்தார் வல்லபாய் படேல் ஆலோசனைக் கூடத்தில் யோகா பிரதிநிதியான M.S. மான்சி குலாட்டி எழுதிய 'யோகாவும் பொறுப்புணர்வுகளும்' என்ற புத்தகத்தை குடியரசுத் துணைத் தலைவர் வெளியிட்டார்.
- ❖ நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது (ACC – Appointment Committee of the Cabinet) மூன்று மூத்த இந்திய வருவாய்த் துறை அதிகாரிகளான
    - K.டாஸ்
    - அகிலேஷ் ரஞ்சன் மற்றும்
    - நீனாகுமார்

  ஆகியோரை நேர்முக வரிகளுக்கான மத்திய வாரியத்தின் (CBDT - Central Board of Direct Taxes) உறுப்பினர்களாக நியமித்துள்ளது.
- ❖ இந்த புதிய மூன்று உறுப்பினர்கள் சேர்க்கையுடன் சேர்த்து CBDT ஆனது 5 உறுப்பினர்கள் மற்றும் தலைவருடன் முழு எண்ணிக்கையைக் கொண்டுள்ளது.
- ❖ கோவா அரசாங்கம் 6 மாதங்களுக்கு தனது மாநிலத்தில் மீன்களை இறக்குமதி செய்ய தடை விதித்துள்ளது. இது 2018 நவம்பர் 12 முதல் அமலுக்கு வருகிறது. கோவாவில் இறக்குமதி செய்யப்படும் மீன்களில் ஃபார்மலின் இருப்பதைப் பற்றிய நிச்சயமற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- ❖ இராணுவப் பணியில் நாட்டிற்காக சேவை செய்யும் போது காயமடைந்து உடல் ஊனமுற்ற ராணுவ வீரர்களின் நலனுக்காக இராணுவமானது 2018 ஆம் ஆண்டு அர்ப்பணிக்கப் பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் பிபின் ராவத் அறிவித்தார்.
- ❖ மனித மூளையைப் போன்று பணியாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய மீக்கணினியான ஸ்பைக்கிங் நரம்பியல் வலையமைப்பு கட்டமைப்புக் கருவியின் செயல்பாடு (SpiNNaker - Spiking Neural Network Architecture) முதன்முறையாகத் தொடங்கப்பட்டது.

- ○ இந்த மீக்கணினி ஐக்கிய இராஜ்ஜியத்தின் மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் வடிவமைத்து கட்டமைக்கப்பட்டது.

❖ உருது கலாச்சாரம் மற்றும் அதன் பாரம்பரியத்தைக் கொண்டாடுவதற்காக "ஜசன் இ - விராசத் இ - உருது" என்ற திருவிழாவை டெல்லி அரசாங்கம் அறிவித்துள்ளது. இத்திருவிழாவின் நோக்கம் உருது மொழியின் வளர்ச்சியை ஊக்குவிப்பதாகும். இது ஆறு நாள் திருவிழாவாகும். இத்திருவிழா 2018 ஆண்டு நவம்பர் 15 அன்று நிறைவடைய இருக்கிறது.

❖ இந்திய அயல்நாட்டுப் பணி அதிகாரியான அபேய் குமார் மடகாஸ்கர் குடியரசிற்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். சுபிர் தத்தாவிற்கு மாற்றாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ ஆராய்ச்சி நிறுவனமான கனாலிஸ் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, திறன்பேசி (Smart Phone) சந்தையில் அமெரிக்காவைப் பின்னுக்குத் தள்ளி இந்தியா இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்த அறிக்கையின்படி சீனா முதலிடத்தில் உள்ளது.

❖ "விமானப் பொறியியல் மற்றும் தளவாடங்களின் வளர்ந்து வரும் போக்கு" என்ற கருத்தின் மீதான இரண்டு நாள் கருத்தரங்கம் (AVIAMAT-2018) புது டெல்லியில் நடைபெற்றது.

- ○ இது இந்திய விமானப் படை மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டது.

❖ 2019 பொதுத் தேர்தலுக்காக பொது விவாதங்கள் மற்றும் குடிமை நிர்வாகப் பணிகளில் பங்களிப்புகளை ஊக்குவித்து இளைஞர்களை உற்சாகப்படுத்தும் வகையில் #PowerOf18 என்ற பிரச்சாரத்தை டிவிட்டர் இந்தியா அறிமுகப்படுத்தியுள்ளது.

❖ வங்காள விரிகுடாவில் ஒரு காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகி பின்னர் அது தீவிரமடைந்து புயலாக மாறியுள்ளது. இதற்கு 'கஜா' என பெயரிடப்பட்டுள்ளது.

❖ லித்துவேனியாவின் தலைநகரான வில்னியஸில் கொச்சி மாநகராட்சி மற்றும் வில்னியஸ் நகரம் ஆகியவை இணைந்து ஒத்துழைப்பிற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளன. இது ஐரோப்பிய ஒன்றியத்தின் 'சர்வதேச நகர்ப்புற ஒத்துழைப்பு' (International Urban Cooperation) என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

❖ புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகமானது இந்திய காற்று சுழலி சான்றிதழ் திட்டம் (Indian Wind Turbine Certification Scheme- IWTCS) என்ற புதிய திட்டத்தின் வரைவைத் தயார் செய்துள்ளது.

- ○ இது சென்னையில் உள்ள தேசிய காற்று சக்திக்கான நிறுவனத்துடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு தயார் செய்யப்பட்டது.

❖ பாரத் மேட்ரிமோனி என்ற இணைய தளமானது இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மகேந்திர சிங் தோனியை தனது விளம்பரத் தூதுவராக அறிவித்துள்ளது.

❖ கேரள அரசானது 2017-ம் ஆண்டு 'ஓகி' புயலால் இறந்து போன அல்லது காணாமல் போன மீனவர்களின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி மற்றும் தொழில்சார் பயிற்சி அளிக்கக்கூடியதொரு திட்டத்தைத் துவங்கி இருக்கின்றது.

❖ 1943 டிசம்பர் 30 அன்று போர்ட் பிளேரில் உள்ள செல்லுலார் சிறையில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸால் மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டதன் 75வது ஆண்டு நிறைவையொட்டி 75 ரூபாய் நாணயத்தை வெளியிடப் போவதாக மத்திய நிதியமைச்சகம் அறிவித்து இருக்கின்றது.

  - இது தேவநாகரி எழுத்து மற்றும் ஆங்கில எழுத்து ஆகியவற்றால் 'முதல் கொடியேற்ற நாள்' என்று பொறிக்கப்பட்டட வாசகத்தைக் கொண்டிருக்கும்.

- இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகள் புற்றுநோய் ஆராய்ச்சியில் இணைந்து செயல்படுவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட்டுள்ளன.
- 2018 நவம்பர் 11 அன்று புகழ்பெற்ற இந்திய பொருளாதார நிபுணரும், அறிஞருமான பேராசிரியர் திருக்கோடி காவல் நீலகண்ட ஸ்ரீனிவாசன் (85) சென்னையில் காலமானார்.
  - இவர் தற்போதைய RBI ஆளுநர் உர்ஜித் படேலுக்கு பேரியல் பொருளியல் குறித்த அறிவுரையாளர் ஆவார்.
- பழம்பெரும் காமிக் புத்தக எழுத்தாளரும் மார்வெல் காமிக்ஸின் முன்னாள் தலைவருமான ஸ்டான் லீ (95) அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸில் காலமானார்.
  - இவர் 1961ல் மார்வெல் காமிக்ஸிற்காக ஃபெண்டாஸ்டிக் போர் என்பதை உருவாக்கினார். மேலும் ஸ்பைடர் மேன் (Spider Man) மற்றும் தி இன்கிரடியபில் ஹல்க் (Incredible Hulk) போன்ற தலைப்புகளையும் உருவாக்கியவர் ஆவார்.
- பொது சுகாதாரத்திற்கான யோகாவின் சர்வதேச மாநாடு கோவாவின் பஞ்ஜிமின் நகரில் உள்ள கலா அகாடமியில் துவங்கப்பட்டது. இரண்டு நாள் நடைபெறும் இம்மாநாட்டினை 'பொது சுகாதாரத்திற்கான யோகா' என்ற கருத்துருவுடன் ஆயுஷ் அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றது.
- தமிழ்நாட்டின் கார்த்திகேயன் பாண்டியன் இந்தியாவில் 57-வது கிராண்ட் மாஸ்டராக உருவெடுத்துள்ளார். செர்பியாவின் நோவி சாட் என்ற நகரில் நடைபெற்ற போட்டியில் கூட்டாக முதலிடத்தை வென்று இறுதிப் பட்டத்தை வென்றார்.
- இந்து காவியமான இராமாயணத்திற்கு சம்பந்தப்பட்ட முக்கிய இடங்களை உள்ளடக்கிய இராமாயண சுற்றுப்பாதையில் பயணிக்கும் சிறப்பு சுற்றுலா இரயிலானது, புதுடெல்லியின் சப்தர்ஜங் இரயில் நிலையத்திலிருந்து இந்தியன் இரயில்வேயால் துவங்கி வைக்கப்பட்டது.
  - இந்த இராமாயண பயணத்தின் பக்தர்கள் சுற்றுப் பாதையானது இந்தியாவில் ஒன்று, இலங்கையில் ஒன்று என இரண்டு பயண பாகங்களைக் கொண்டது.
- 15,000 ரூபாய்க்கும் அதிகமாக ஊதியம் பெறும் பெண்களுக்கு மகப்பேறு விடுப்பு காலங்களான 26 வாரங்களில் முதல் 7 வாரங்களுக்கான ஊதியத்தினை அவர்களுக்கு வேலை அளித்த நிறுவனங்களுக்கு அரசாங்கம் வழங்கும் என மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் அறிவித்துள்ளது.
- மகாராஷ்டிராவின் அவுரங்காபாத் மாவட்டத்தில் பைத்தான் தாலுகாவில் உள்ள வாஹிகாவொன் மற்றும் தனகாவொன் கிராமங்களில் 2-வது மெகா உணவுப் பூங்காவை மத்திய உணவு பதப்படுத்துதல் தொழிற்துறை அமைச்சர் ஹர்சிம்ரத் கவுர் பாதல் திறந்து வைத்தார்.
- ஆசியாவின் முதல் மற்றும் உலகின் மூன்றாவது நரம்பியல் மருத்துவரான T.S கனகா நீண்டகால உடல் நலக் குறைவுக்குப் பின் காலமானார். இவர் உலகின் முதல் மிகச்சில நரம்பியல் வல்லுநர்களில் ஒருவராவார்.
- நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது அஜய் பூஷன் பாண்டேவை வருவாய்த் துறையின் புதிய செயலாளராக நியமித்துள்ளது. இவர் நவம்பர் 30-ம் தேதி பணி ஓய்வு

பெறும் ஹஸ்முக் அதியாவுக்குப் பதிலாக நியமிக்கப்படுகிறார்.

❖ ஓய்வு பெற்ற கல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதியான அசிம் குமார் ராய் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு மேற்கு வங்காளத்தின் லோக் ஆயுக்தாவாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 2006 முதல் 2009 வரையிலான காலத்தில் பணியாற்றிய சமரேஷ் பானர்ஜிக்கு அடுத்ததாக அம்மாநிலத்தின் 2வது லோக் ஆயுக்தாவாக பதவியேற்கிறார்.

❖ விருந்தோம்பல் சேவை நிறுவனமான ஓயோ இவ்வாண்டு டிசம்பர் 01-ம் தேதி முதல் தனது நிறுவனத்தின் இந்திய மற்றும் தெற்காசியப் பிரிவிற்கான தலைமை செயல் அதிகாரியாக இண்டிகோ நிறுவனத்தின் முன்னாள் தலைவர் ஆதித்யா கோஷை நியமித்து இருப்பதாக அறிவித்து இருக்கின்றது.

❖ 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து கூகுள் மேக சேமிப்பு நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாக ஆரக்கிள் நிறுவனத்தின் பொருள் வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பப் பிரிவின் முன்னாள் தலைவரான தாமஸ் குரியன் என்ற இந்திய அமெரிக்கர் பதவியேற்பார்.

  ○ தாமஸ் குரியன் டயானி கிரீனி என்பவருக்குப் பதிலாக பதவியேற்பார்.

❖ 2016 ஆம் ஆண்டு நடந்த வாக்கெடுப்பின் போது ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு விலகுவதற்கு ஆதரவளித்த இளையோர் சுகாதாரத் துறை அமைச்சர் ஸ்டீபன் பார்க்லே, பிரெக்ஸிட் (BREXIT) அமைப்பின் புதிய செயலாளராக பிரிட்டன் பிரதமர் தெரசா மேவால் நியமிக்கப்பட்டு இருக்கின்றார்.

  ○ ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு விலகுவதற்கான தெரசா மேவின் வரைவு அறிக்கை தொடர்பாக பதவி விலகிய டொமினிக் ராப் என்பவருக்குப் பதிலாக ஸ்டீபன் பார்க்லே பதவியேற்பார்.

❖ தைவானின் தைபேய் நகரத்தில் இந்தியா-தைவான் சிறு, குறு நிறுவனங்களுக்கான வளர்ச்சி மன்றக் கூட்டம் நடத்தப்பட்டது.

❖ 2018 ஆம் ஆண்டிற்கான வார்த்தையாக 'Toxic' எனும் அடைமொழிச் சொல்லை ஆக்ஸ்போர்டு அகராதி அறிவித்துள்ளது. இந்த அடைமொழிச் சொல்லானது 'நச்சுத்தன்மை' என்ற பொருளில் வரையறை செய்யப் பட்டிருக்கின்றது. இந்த சொல்லின் அதிகபட்ச பயன்பாடானது அதன் தேர்ந்தெடுப்பிற்கு வழி வகுத்துள்ளது.

  ○ 2017-ல் 'Youthquake' என்ற சொல்லும் 2016-ல் 'Post-truth' என்ற சொல்லும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தன.

❖ வர்த்தகம், பொருளாதாரம், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கூட்டிணைவு குறித்த 2 நாள் நடைபெறும் இந்திய-கிர்கிஸ்தான் அரசுகளுக்கிடையேயான ஆணையத்தின் 9வது அமர்வு புதுடெல்லியில் நடைபெற்று முடிந்தது.

  ○ 10-வது அமர்வானது கிர்கிஸ்தான் குடியரசின் பிஷ்கெக் நகரில் நடைபெறும்.

❖ நிர்பயா நிதியின் கீழ் மத்திய அரசானது கீழ்க்காணும் 3 முன்மொழிதல்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

  ○ சட்ட அமைச்சகத்தின் முன்மொழிதலான 1023 விரைவு சிறப்பு நீதிமன்றங்களை அமைத்தல்.

  ○ உள்துறை அமைச்சகத்தின் முன்மொழிதலான பாலியல் தாக்குதல் வழக்குகளுக்கான தடயவியல் கருவிகள் கொள்முதல்.

- கொங்கன் ரயில்வே கழகத்தின் முன்மொழிதலான 50 இரயில்வே நிலையங்களில் வீடியோ கண்காணிப்பு அமைப்புகளை அமைத்தல்.

❖ மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் புத்தாக்கப் பிரிவின் புத்தாக்க நிறுவன ஆணையமானது புது தில்லியில் தொடங்கப்பட்டது. நாடெங்கிலும் உள்ள அனைத்து உயர்கல்வி நிலையங்களிலும் புத்தாக்க கலாச்சாரத்தை முறையாக வளர்ப்பதற்காக அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுவில் இந்த ஆணையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (AICTE - All India Council for Technical Education)

❖ ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் (UNEP - United Nations Environment Programme) நிர்வாக இயக்குநராக இருந்த எரிக் சொல்ஹெய்ம் பதவி விலகியதையடுத்து, UNEP-ன் தற்காலிக நிர்வாக இயக்குநராக தான்சானியா நாட்டைச் சேர்ந்த ஜாய்சி முசியா நியமிக்கப்பட்டுள்ளார்.

- உள் தணிக்கை அறிக்கையின்படி UNEP-ல் இவர் விதிமுறை மீறியுள்ளது குறித்து எழுந்த குற்றச்சாட்டை அடுத்து சொல்ஹெய்ம் பதவி விலகியுள்ளார்.

❖ புகழ்பெற்ற முதல் தர கிரிக்கெட் வீரரான வாசிம் ஜாபர் ரஞ்சி கோப்பையில் 11,000 ரன்களை அடைந்த முதலாவது இந்திய வீரராக உருவெடுத்துள்ளார். இவர் நாக்பூரில் பரோடாவுக்கு எதிராக நடைபெற்ற 3-வது சுற்று ஆட்டத்தில் இச்சாதனையை நிகழ்த்தினார்.

❖ இந்திய குடிமைப்பணி அதிகாரியான ஜலால் ஸ்ரீவஸ்தவா இந்தியாவின் உள்நாட்டு நீர்வழி ஆணையத்தின் (Inland Waterways Authority of India -IWAI) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். IWAI ஆனது மத்திய கப்பல், சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

- ஸ்ரீவஸ்தவா பெண்களுக்கான ‘ஷக்தி கேப்’ மற்றும் ‘உர்ஜா’ போன்ற திட்டங்களை அறிமுகப் படுத்தியமைக்காக புகழ் பெற்றவர் ஆவார்.

❖ இஸ்ரேல் நாட்டின் இஸ்ரேல் வங்கியின் (இஸ்ரேலின் மத்திய வங்கி) ஆளுநராக அமீர் யாரோனை அடுத்த 5 ஆண்டுகளுக்கு நியமிக்க அந்நாட்டின் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இவர் 2013-ல் முதல் பெண் ஆளுநராக பதவியேற்ற கர்னட் ஃபிளாக்கையடுத்து பதவியேற்கவுள்ளார்.

❖ நியமனத்திற்கான அமைச்சரவைக் குழுவானது மேற்கு வங்காளப் பணிநிலைப் பிரிவில் உள்ள இந்திய குடிமைப் பணி அதிகாரியான சுமந்தா சவுத்ரியை நிலக்கரித் துறையின் புதிய செயலாளராக நியமித்துள்ளது. இவர் இந்தர் ஜித் சிங்கிற்குப் பதிலாக நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது லால் பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாக பயிற்சி நிறுவன இயக்குநரான உப்மா சவுத்ரியை இளைஞர் விவகாரத் துறையின் செயலாளராக நியமித்துள்ளது.

❖ இந்தியாவின் முதலாவது திறன் மேம்பாட்டு பல்கலைக் கழகமான ஸ்ரீ விஸ்வகர்மா திறன் மேம்பாட்டு பல்கலைக் கழகத்திற்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார். இப்பல்கலைக் கழகம் ஹரியானாவின் பால்வால் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

❖ புது தில்லியில் டாக்டர் இராஜேஷ் பட்டால் எழுதப்பட்ட “காஷ்மீர் வானொலி - அமைதி மற்றும் போர்க் காலங்களில்” என்ற புத்தகத்தை மத்திய அமைச்சர் டாக்டர் ஜித்தேந்திர சிங் வெளியிட்டார்.

- இப்புத்தகம் ஸ்டெல்லர் வெளியீட்டாளரால் வெளியிடப்படுகிறது.

❖ மாலத் தீவின் அமைச்சரவையானது 53 நாடுகள் உறுப்பினராக உள்ள காமன்வெல்த் அமைப்பில் மீண்டும் உறுப்பினராக இணைவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மாலத் தீவு காமன்வெல்த் அமைப்பிலிருந்து வெளியேறியது. இப்பரிந்துரையானது மாலத் தீவு நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்காக தற்போது அனுப்பப்படவிருக்கிறது.

- 2016 ஆம் ஆண்டு அக்டோபரில் மாலத்தீவின் அப்போதைய அதிபரான அப்துல்லா யாமீனின் ஆட்சியின் போது மாலத் தீவு காமன்வெல்த் அமைப்பிலிருந்து வெளியேறியது.

❖ கொல்கத்தா சர்வதேச திரைப்பட விழாவின் 24-வது பதிப்பு (Kolkata International Film Festival-KIFF 2018) மேற்கு வங்காளத்தின் கொல்கத்தாவில் நடைபெற்றது. வங்காள மொழி சினிமாவின் 100-வது வருடம் இத்திருவிழாவின் சிறப்பம்சம் ஆகும். KIFF 2018-ன் முக்கிய கவன மையம் ஆஸ்திரேலியா ஆகும்.

❖ ஜார்க்கண்ட் மாநில தலைநகரான ராஞ்சியில், காவல்துறை ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பானது (Bureau of Police Research & Development) ஜார்க்கண்ட் மாநில காவல்துறையுடன் இணைந்து இரண்டு நாள் மகளிர் காவல்துறைக்கான தேசிய மாநாட்டை (National Conference of Women in Police - NCWP) நடத்தியது.

❖ ஊபர் ஈட்ஸ் (Uber Eats) நிறுவனமானது நடிகை அலியா பட்டை தனது நிறுவனத்தின் விளம்பரத் தூதராக நியமனம் செய்யப் பட்டுள்ளதை அறிவித்துள்ளது. ஊபர் ஈட்ஸ் நிறுவனம் தனக்கென ஒரு நியமிக்கப்பட்ட விளம்பரத் தூதுவரைக் கொண்டுள்ள முதல் நாடு இந்தியாவாகும்.

❖ பிரபல கன்னட நடிகரும் அரசியல்வாதியுமான M.H. அம்பரீஷ் துரையீரல் மற்றும் சிறுநீரக தொற்று காரணமாக தனது 66வது வயதில் பெங்களூருவில் 24 நவம்பர் 2018 அன்று காலமானார். இவர் 'புரட்சி நடிகர்' என பிரபலமாக அறியப்பட்டவராவார்.

❖ ஈஸிஃபோன் பிராண்ட் கைபேசி தயாரிப்பு நிறுவனமான இநோவுஸ் (eNovus) என்ற நிறுவனமானது குழந்தைகள் பாதுகாப்பாகவும் பெற்றோருடன் இணைப்பில் இருக்கவும் உதவும் வகையில் இந்தியாவின் குழந்தைகளுக்கான முதல் கைபேசியான ஈஸிஃபோன் ஸ்டார் என்ற கைபேசியை வெளியிட்டுள்ளது.

- கட்டுப்படுத்தப்பட்ட முன் உள்ளீடு செய்யப்பட்ட எண்களை மட்டுமே அழைக்கும் வசதி, GPS & SOS உள்ளிட்ட பல சிறப்பம்சங்களை இந்த கைபேசி கொண்டுள்ளது.

❖ புனேயின் ஆயுதப்படை மருத்துவக் கல்லூரியில் ஒரே நேரத்தில் 60 விநாடிகளுக்கு 2353 பேர் அடிவயிற்றைப் பலகை நிலையில் வைத்து இருந்ததன் மூலம் (abdominal plank position) பாலிவுட் நடிகையான ஷில்பா ஷெட்டி குந்த்ரா இந்தியாவை புதிய கின்னஸ் உலக சாதனை படைக்க வைத்துள்ளார்.

- இந்த சாதனையானது பஜாஜ் அலையன்ஸ் லைப் இன்ஸ்யூரன்ஸ் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 'பஜாஜ் அலையன்ஸ் லைப் ப்ளாங்கத்தான்' என்ற நிகழ்வின் கீழ் நடத்தப்பட்டது.

❖ ஐசிசி மகளிர் உலக டி20 XI அணியின் தலைவராக ஐசிசி தேர்வுக் குழுவினரால் இந்தியாவின் ஹர்மன்ப்ரீத் கவுர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரரான ஸ்மிரித் மந்தனா மற்றும் இடது கை சுழற்பந்து வீச்சாளரான பூனம் யாதவ் ஆகியோர் இந்தப் பட்டியலில் இடம் பிடித்துள்ள மற்ற வீரர்களாவர்.

- உலகின் முதலாவது நிலத்தடி மட்டத்திற்கு கீழ் அமைந்த ஆடம்பர தங்கும் விடுதியான இண்டர்கான்டினென்டல் ஷாங்காய் வொண்டர்லேண்ட் விடுதி ஆனது சீனாவின் ஷாங்காய் மாகாணத்தின் தென்மேற்கு பகுதியில் உள்ள சாங்கியாங் மாவட்டத்தில் திறக்கப்பட்டுள்ளது.
- இந்தியா-ரஷ்யா இடையேயான முதலாவது யுக்தி முறையிலான பொருளாதாரப் பேச்சுவார்த்தை ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் நடைபெற்றது. இந்தியக் குழு நிதி ஆயோக்கின் துணைத் தலைவர் ராஜீவ் குமாராலும் ரஷ்யக் குழு ரஷ்யாவின் பொருளாதார மேம்பாட்டு அமைச்சர் மாக்ஸிம் ஒரேஷ்கின் என்பவராலும் தலைமை தாங்கப்பட்டன.
- ரசாயனம் மற்றும் உரங்கள் துறை அமைச்சகத்தின் கூடுதல் பொறுப்பை மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சரான டி. வி. சதானந்த கவுடா ஏற்றுள்ளார்.
  - அதன் அமைச்சராக இருந்த அனந்த குமாரின் இறப்புக்குப் பிறகு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- சென்னை உயர்நீதிமன்றத்தின் புதிய நீதிபதியாக நீதிபதி வினீத் கோத்தாரி பதவியேற்றார், இதன் மூலம் சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளின் எண்ணிக்கை அனுமதிக்கப்பட்ட அளவில் உள்ள 75 என்ற எண்ணிக்கைக்கு எதிராக 61 என்று உயர்ந்துள்ளது.
- கல்வெட்டு ஆராய்ச்சி அறிஞரான பத்ம ஸ்ரீ ஐராவதம் மகாதேவன் தனது 88-வது வயதில் நவம்பர் 26 அன்று சென்னையில் காலமானார்.

# தமிழ்நாடு செய்திகள்


## நிரந்தர நீதிபதிகள் - சென்னை உயர்நீதிமன்றம்

- மத்திய அரசு சென்னை உயர்நீதிமன்றத்தின் மூன்று கூடுதல் நீதிபதிகளை நிரந்தர நீதிபதிகளாக நியமனம் செய்ததை அறிவித்துள்ளது.
- இந்த அறிவிப்பு பின்வரும் நீதிபதிகளை நிரந்தர நீதிபதிகளாக அறிவித்திருக்கின்றது. அவர்களாவன
  - RMT. தீகா ராமன்
  - N. சதீஷ் குமார்
  - N. சேஷசாயி

## தேர்வுகளுக்கான புதிய முறை - சென்னைப் பல்கலைக்கழகம்

- சென்னைப் பல்கலைக்கழகம் வழக்கமான நடைமுறைக்குப் பதிலாக 15-20 நாட்கள் முன்பாகவே தேர்வு முடிவுகளை வெளியிடும் வகையில் புதிய அமைப்பு ஒன்றை நிறைவேற்றிட இருக்கின்றது.

❖ இந்த அமைப்பு ஜூலையில் நடைபெற்ற உடனடித் தேர்வுகளுக்கான 1500 விடைத் தாள்களில் சோதனை முறைக்கு உட்படுத்தப்பட்டது.




❖ இந்த புதிய அமைப்பின் ஒட்டுமொத்த செயல்பாடும் 27 நாட்களை மட்டுமே எடுத்துக் கொள்ளும்.

❖ இம்முறை நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்திலிருந்து படிப்படியாக அமல்படுத்தப்படும்.

## மாநில வீட்டு வசதி நிதிக்கு செபி அங்கீகாரம்

❖ இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியமானது (செபி / Securities and Exchange Board of India - SEBI) தமிழ்நாட்டில் மலிவான வீடுகள் பிரிவில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான நிதியத்தை துவங்குவதற்கு தமிழ்நாடு அரசிற்கு அனுமதி அளித்துள்ளது.

❖ இது தொடர்பாக, தமிழ்நாடு அரசானது, 'தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியம்' என்ற மாற்று முதலீட்டு நிதியத்தின் கீழ் பிரிவு 1 என்பதை ஏற்படுத்தியுள்ளது.

❖ இது 'இந்தியாவில் வர்த்தகம் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான புதுமையான மற்றும் மாற்று நிதி' என்ற நிகழ்வில் அறிவிக்கப்பட்டது.

❖ இது ஐக்கியப் பொருளாதார மன்றம் (UEF - United Economic Forum), வர்த்தக மன்றம், உலக இஸ்லாமியப் பொருளாதார மன்ற கட்டமைப்பு ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டது.

## ஒற்றை முறை கடவுச்சொல் துவக்கம்

❖ சென்னை மாநகர குடிநீர் வாரியமானது, குடியிருப்புப் பகுதிகளுக்கு வழங்கப்படும் குடிநீரை வணிகப் பயன்பாடுகளுக்கு திசை திருப்பப்படுவதைத் தவிர்ப்பதற்காக 'ஒற்றை முறை கடவுச் சொல்' (OTP – One Time Password) முறைமையை அறிமுகப்படுத்தியுள்ளது.


❖ 'குடிதண்ணீருக்கு அழைக்க' என்றும் 'கழிவுநீர் சேமிக்கும் தொட்டி சுத்தம் செய்ய அழைக்க' என்றும் இந்த ஒற்றை முறை கடவுச் சொல் முறைமையை அது வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

## ஆசிரியர்களுக்கான பயோ மெட்ரிக் வருகைப் பதிவேடு

- தமிழ்நாடு அரசு, விரைவில் அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு பயோ மெட்ரிக் வருகைப் பதிவு முறையை மாநிலம் முழுவதும் நடைமுறைப் படுத்த உள்ளது.
- இது தொடர்பாக மாநில அரசானது அரசாணை ஒன்றைப் பிறப்பித்துள்ளது.
- இதன் சோதனைத் திட்டமானது போரூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் பெரம்பலூர் அரசு பள்ளி ஆகியவற்றில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் திறந்தவெளி நூலகம்

- திருச்சி மாநகராட்சியானது விரைவில் இந்தியாவின் முதல் திறந்தவெளி நூலகமான 'லிட்டில் ஃப்ரீ லைப்ரரியை' புத்தூர் அலுவலர்கள் குடியிருப்பில் துவங்க இருக்கின்றது.




- இது வாசிப்புப் பழக்கத்தை வளர்க்கவும் உள்ளூர் மக்களிடையே புத்தகங்களைப் பரிமாறிக் கொள்ளவும் எடுக்கப்பட்ட முயற்சியாகும்.
- திருச்சி மாநகராட்சியானது ஏற்கனவே 'மகிழ்ச்சியின் சுவர்' என்ற திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம் போன்ற முன்னெடுப்புகளை செயல்படுத்தி இருக்கின்றது.

## மூன்றாம் பாலினத்தைச் சார்ந்த முதல் செவிலியர்

- வேலூரைச் சேர்ந்த 22 வயதுடைய திருநங்கையான S. தமிழ்ச்செல்வி நாட்டில் செவிலியர் பட்டயப் பயிற்சியில் சேரும் மூன்றாம் பாலினத்தைச் சேர்ந்த முதலாவது மாணவராகியுள்ளார்.



- இவர் வேலூர் அரசு மருத்துவக் கல்லூரியில் சேர உள்ளார்.
- இந்த முடிவானது மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர் D. ஜெயச்சந்திரனின் பரிந்துரையின் அடிப்படையில் அமைந்துள்ளது.

## B. புகழேந்தி - மதராஸ் உயர்நீதிமன்றத்தின் புதிய நீதிபதி

- மதராஸ் உயர் நீதிமன்றத்தின் புதிய நீதிபதியாக தமிழ்நாட்டின் கூடுதல் அட்வகேட் ஜெனரலான பி. புகழேந்தி நியமிக்கப்பட்டு இருக்கின்றார்.
- அனுமதி அளிக்கப்பட்ட மொத்த அளவான 75 என்ற எண்ணிக்கையில் இவரது நியமனத்தையும் சேர்த்து தற்போது உள்ள மொத்த நீதிபதிகளின் எண்ணிக்கை 60 ஆக உயர்ந்துள்ளது.

## பாரம்பரிய மின் திரையரங்கம் அருங்காட்சியகமாக மாற்றம்

- அண்ணா சாலை தலைமை தபால் அலுவலக வளாகத்தில் உள்ள பாரம்பரிய மின் திரையரங்கானது விரைவில் தபால் தலை சேகரிப்பு அருங்காட்சியகமாக மாறவுள்ளது.
- புது டெல்லியிலும் ஆக்ராவிலும் இதைப் போன்ற அருங்காட்சியகங்களை இயக்கும் இந்திய அஞ்சல் துறையால் முதல்முறையாக இந்த அருங்காட்சியகம் திறக்கப்படவிருக்கிறது.
- இது நாட்டின் பழமையான தபால் தலைகள் மற்றும் நாட்டின் சில தலைசிறந்த நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் தபால் தலைகளைக் கொண்டிருக்கும்.
- 1913-ல் மவுண்ட் ரோடு எனப்படும் அண்ணா சாலையில் நிறுவப்பட்ட இந்த மின் திரையரங்கானது மௌன மொழிப் படங்களை திரையிட்ட முதல் திரையரங்கு ஆகும்.
- தற்போது இந்த திரையரங்கானது ஒவ்வொரு மாதமும் வெவ்வேறு கருப்பொருளுடன் நிரந்தரமான தபால்தலை கண்காட்சியை நடத்துகின்றது.

### கஜா புயலுக்கான மத்தியக் குழு

- டேனியல் E. ரிச்சர்ட் தலைமையிலான அமைச்சகங்களுக்கு இடையேயான குழுவானது சமீபத்தில் கஜா புயலினால் ஏற்பட்ட அழிவுகளை மதிப்பிட்டு இருக்கின்றது.
- ஏழு உறுப்பினர்களைக் கொண்ட இந்த மத்தியக் குழுவானது தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி ஆகிய பகுதிகளில் தனது மூன்று நாள் மதிப்பீட்டை நிறைவு செய்தது.
- டேனியல் ரிச்சர்ட் தற்போது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கூடுதல் செயலாளராக உள்ளார்.
- இவரின் அறிக்கையானது அரசில் உள்ள தகுந்த குழுக்களின் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்படும்.

## தேசியச் செய்திகள்

### காந்திய சிந்தனை மற்றும் ஸ்வச்சதா கருத்தரங்கு

- மகாராஷ்டிராவின் வார்தா மாவட்டத்தில் குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகம் ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது.
- இந்த கருத்தரங்கானது, ‘காந்திய சிந்தனைகள் மற்றும் சுகாதாரம்’ என தலைப்பிடப்பட்டிருந்தது.
- இந்த கருத்தரங்கில், சுகாதாரத்தில் காந்திய சித்தாந்தத்தையும் ஸ்வச் பாரத் திட்டத்தின் மூலமாக அதனை நடைமுறையில் செயல்படுத்துவதையும் மையப்படுத்தப்பட்டது.

### 13வது இந்திய-ஜப்பான் வருடாந்திர உச்சி மாநாடு

- வருடாந்திர இந்திய-ஜப்பானிய இருதரப்பு உச்சிமாநாடானது அக்டோபர் 2018-ல் 28-29 தேதிகளில் ஜப்பானில் நடைபெற்றது.
- இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியப் பிரதமர் ஜப்பான் சென்றார்.

*முக்கிய முடிவுகள்*

- இரு நாடுகளும் 75 மில்லியன் டாலர் மதிப்புள்ள நாணய மாற்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- இரு நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மற்றும் பாதுகாப்பு அமைச்சர்கள் இடையே 2 + 2 பேச்சுவார்த்தை மேற்கொள்ள இரு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.
- இரு நாடுகளும் யோகா மற்றும் ஆயுர்வேதா போன்ற பாரம்பரிய மருத்துவ முறைமைகளில் முதன்முறையாக ஒத்துழைக்க ஒப்புக் கொண்டிருக்கின்றன.
- ஜப்பான் சர்வதேச சூரிய ஒளிசக்தி கூட்டிணைவில் (ISA – International Solar Alliance)

இணைவதாக அறிவித்துள்ளது. இதன் மூலம் ISA கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் 71வது நாடாகவும் 48வது உறுதிப்படுத்தும் நாடாகவும் ஜப்பான் இருக்கும்.

## இந்திய மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்கள் உருவான தினம் - நவம்பர் 01

- கர்நாடகா, கேரளா, சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகிய 7 இந்திய மாநிலங்கள் நவம்பர் 1 ஆம் தேதியன்று தமது மாநில தினத்தைக் கொண்டாடுகின்றன.
- லட்சத் தீவுகள், புதுச்சேரி, அந்தமான் & நிக்கோபர் ஆகிய யூனியன் பிரதேசங்களும் இதே நாளில் தமது உருவான தினத்தைக் கொண்டாடுகின்றன.

***கர்நாடகா***

- இது கர்நாடகாவின் 63-வது வருட மாநில தினமாகும். இத்தினத்தை கர்நாடகாவின் மஞ்சள் மற்றும் சிவப்பு நிறக் கொடிகளை ஏற்றி ராஜ்யோத்சவா என்ற விழாவை கர்நாடகா நடத்தியது.



- மைசூர் என முதலில் அழைக்கப்பட்ட கர்நாடகாவானது, 1973-ல் கர்நாடகா எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

***கேரளா***

- கேரள மாநிலம் உருவாக்கப்பட்டு 62வது வருடங்கள் நிறைவு பெறுகிறது.
- இது மொழியியல் கோட்பாடுகளுக்குட்பட்டு பிரிக்கப்பட்டது. தற்போதைய கேரளத்தின் எல்லைப்பகுதிகள் 1956ல் நடைமுறைக்கு வந்தன.

***ஹரியானா***

- ஹரியானாவானது நவம்பர் 1, 2018ல் தனது 52வது வருட மாநில தினத்தை கொண்டாடுகிறது. இது முன்னாள் கிழக்கு பஞ்சாப் மாநிலத்திலிருந்து 1966 ஆம் ஆண்டு பிரிக்கப்பட்டு உருவாக்கப்பட்டது.

### *மத்தியப் பிரதேசம்*

- மத்தியப் பிரதேசம் ஆனது நவம்பர் 1 அன்று தனது 63வது மாநில தினத்தைக் கொண்டாடியது.

## ஒற்றுமைக்கான சிலை திறப்பு

- இந்தியாவின் முதல் துணைப் பிரதமரும் முதல் உள்துறை அமைச்சருமுமான சர்தார் வல்லபாய் படேலின் 143வது பிறந்த நாளான அக்டோபர் 31 அன்று அவரின் 182 மீட்டர் உயர சிலையான "ஒற்றுமைக்கான சிலையை" பிரதமர் திறந்து வைத்தார்.
- இந்தச் சிலையானது சுதந்திர தேவி சிலையின் அளவில் இருமடங்கு உயரமுடையதும் உலகின் மிக உயரமான சிலையுமாகும்.
- இது 2989 கோடி ரூபாயில் குஜராத்தின் நர்மதா மாவட்டத்தில் நர்மதா அணையின் 3.2 கி.மீ. கீழ்நிலையில் கட்டப்பட்டுள்ளது.
- இந்தச் சிலையானது, பத்மபூஷன் விருது பெற்ற சிற்பியான ராம் வி சுதரால் வடிவமைக்கப்பட்டு லார்சன் & ட்யூப்ரோ மற்றும் மாநில அரசின் நிறுவனமான சர்தார் சரோவர் நர்மதா நிகாம் லிமிடேட் ஆகியவற்றால் கட்டப்பட்டது.
- இது சீனாவின் மத்திய ஹெனான் மாகாணத்தில் உள்ள தற்போதைய உலகின் மிக உயரமான வசந்த கால புத்தர் கோவிலை விட 177 அடிகள் அதிக உயரமுடையதாகும்.





## பல்பரிமாண வறுமைக் குறியீடு (MPI)

- 2018 ஆம் ஆண்டில் இந்தியாவின் பல்பரிமாண வறுமைக் குறியீடானது 0.121 ஆக இருக்கிறது (Multidimensional Poverty Index-MPI). 2006 ஆம் ஆண்டில் இருந்ததைக் காட்டிலும்

இது பாதியாகக் குறைந்துள்ளது.

- 105 வளரும் நாடுகளில் இந்தியா 53வது இடத்தில் உள்ளது.
- இந்தியாவின் பல்பரிமாண வறுமைக் குறியீடானது உலக சராசரியான 0.159-என்ற அளவை விடக் குறைவாக இருக்கிறது. மேலும் இந்தியாவின் இக்குறியீடானது தெற்காசிய நாடுகளை விடக் குறைவாகவும் பிரிக்ஸ் நாடுகளை விட அதிகமாகவும் (ரஷ்யாவைத் தவிர்த்து) இருக்கிறது.
- பல்பரிமாண வறுமைக் குறியீட்டின் மதிப்பானது 0க்கும் 1க்கும் இடையே இருக்கும். இதில் 1 ஆனது அதிக இழப்பு நிலையையும் 0 ஆனது குறைவான இழப்பு நிலையையும் குறிக்கிறது.
- 10 மோசமான மாவட்டங்கள் மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களில் உள்ளன (பீமாறு/BIMARU மாநிலங்கள்).




- கேரளா, பஞ்சாப், கோவா மற்றும் டெல்லி ஆகிய மாநிலங்கள் குறைவான பல்பரிமாண வறுமைக் குறியீட்டு மதிப்பைப் பெற்று முன்னிலையில் உள்ளன.
- பல்பரிமாண வறுமைக் குறியீடானது வறுமை நிகழ்வுகள் மற்றும் அதிகப்படியான இழப்புகள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு கணக்கிடுவதாகும்.
- இது ஆக்ஸ்போர்டின் வறுமை மற்றும் மனிதவள மேம்பாட்டு முன்னெடுப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் (United Nations Development Programme - UNDP) ஆகியவற்றால் கணக்கிடப்படுகிறது.


## இந்தியா-இத்தாலி ஆகிய நாடுகளுக்கிடையேயான அறிவியல் தொழில்நுட்ப மாநாடு

- அக்டோபர் 30 அன்று புது தில்லியில் இந்தியா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளுக்கிடையேயான இரண்டு நாள் தொழில்நுட்ப மாநாடு நடைபெற்றது. இது உயர் தரம் மற்றும் உயர்ந்த தாக்கம் ஏற்படுத்தக்கூடிய கூட்டு ஆராய்ச்சித் திட்டங்களை ஊக்கப்படுத்த அழைப்பு விடுக்கிறது.

- இம்மாநாடு புதுப்பிக்கக்கூடிய ஆற்றல், தூய்மையான தொழில் நுட்பம், தகவல் தொடர்பு தொழில்நுட்பம், சுகாதாரம், விண்வெளி, கல்வி மற்றும் கலாச்சார பாரம்பரியப் பாதுகாப்பு ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தியது.
- இக்கருத்தரங்கை இத்தாலி அரசாங்கத்துடன் இணைந்து அறிவியல் தொழில்நுட்பத் துறை (DST - Department of Science and Technology - DST) மற்றும் இந்தியத் தொழிற்துறை கூட்டமைப்பு (CII - Confederation of Indian Industry - CII) ஆகியவை இணைந்து நடத்தின.

## வியாபாரத்தை எளிமையாக்கிய நாடுகள் - உலக வங்கி

- உலக வங்கியின் வியாபாரத்தை எளிமையாக்கிய நாடுகள் (ease of doing business) பட்டியலில் இந்தியா 23 இடங்கள் முன்னேறி 77-வது இடத்தில் உள்ளது. மொத்தம் உள்ள 10 மதிப்பீடுகளில் 6 மதிப்பீடுகளில் முன்னேறியதன் மூலம் இந்தியா இந்த இடத்தைப் பிடித்துள்ளது.
- திவால், வரி விதிப்புகள் மற்றும் பிற விஷயங்கள் தொடர்பான சீர்திருத்தங்களை ஏற்படுத்தியதன் காரணமாக இரண்டாவது வருடமாக இந்தியா இந்த தரவரிசைப் பட்டியலில் முன்னேறியுள்ளது.
- கடந்த ஆண்டு உலக வங்கியின் வியாபாரத்தை எளிமையாக்கிய நாடுகள் பட்டியலில் இந்தியா 100வது இடத்தில் இருந்தது. இந்தியா 2016 ஆம் ஆண்டில் 131-வது இடத்தில் இருந்தது.




- மொத்தம் 190 நாடுகள் கொண்ட இந்தப் பட்டியலில் நியூசிலாந்து முதலிடத்தில் உள்ளது. அதற்கு அடுத்து சிங்கப்பூர், டென்மார்க் மற்றும் ஹாங்காங் ஆகிய நாடுகள் உள்ளன.
- இந்த பட்டியலில் அமெரிக்கா 8-வது இடத்திலும் சீனா 46-வது இடத்திலும் உள்ளன. அண்டை நாடான பாகிஸ்தான் 136-வது இடத்தில் உள்ளது. பொருளாதாரத்தில் வளர்ந்து

வரும் முதல் 10 நாடுகள் கொண்ட பட்டியலில் உலக வங்கியானது இந்தியாவை இணைத்துள்ளது.

## தூய காற்றுக்கானப் பிரச்சாரம்

- மாசுபடுத்தும் நடவடிக்கைகள் பற்றி கண்காணித்து, அறிக்கை தயார் செய்து அதன் மீது துரிதமான நடவடிக்கை எடுக்கும் நோக்கில் டெல்லியில் 2018ம் ஆண்டு நவம்பர் 1 முதல் 10 வரை 10 நாட்கள் கால அளவு கொண்ட ஒரு தீவிரமான தூய காற்றுக்கானப் பிரச்சாரம் மத்திய சுற்றுச் சூழல் துறை அமைச்சரால் ஆரம்பிக்கப்பட்டது.
- அமைச்சரால் 52 அணிகள் ஒரே சமயத்தில் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டன. இந்த அணிகள் டெல்லியின் வெவ்வேறு பகுதிகளுக்கும் அதனைச் சுற்றியுள்ள பரிதாபாத், குருகிராம், காஜியாபாத் மற்றும் நொய்டா போன்ற நகரங்களுக்கும் வருகை புரியும்.
- இந்த அணி பின்வருவோரை உள்ளடக்கியதாகும்.
    - அணித் தலைவராக உள்ளூர் துணைக் கோட்ட அலுவலர்
    - மத்திய சுற்றுச்சூழல், வனத் துறை மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள்
    - மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள்
    - டெல்லி மாநகராட்சி
    - டெல்லி மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்.
- டெல்லி இதைப் போல 44 அணிகளைக் கொண்டதாகும்.




- தேசிய தலைநகரப் பகுதியில் உள்ள குருகிராம், நொய்டா, பரிதாபாத் மற்றும் காஜியாபாத் போன்ற நகரங்கள் தலா இரண்டு அணிகளைக் கொண்டிருக்கும்.

## தர்மப் பாதுகாவலர் 2018

- இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் ராணுவங்கள் இந்தியாவின் வையிரங்டியில் உள்ள தீவிரவாத எதிர்ப்புப் போர்ப் பள்ளியில் தங்களது முதலாவதான கூட்டு ராணுவப் பயிற்சியை ஆரம்பித்திருக்கின்றன.
- வையிரங்டி மிசோரமில் உள்ளது.



- இந்த 14 நாட்கள் பயிற்சியானது தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் ஒத்துழைப்பை மேம்படுத்த கவனம் செலுத்துகின்றது.
- ஜப்பானியப் படைப் பிரிவானது அவர்களின் 32வது தரைப்படைப் பிரிவாலும் இந்தியப் பிரிவானது தனது கூர்க்கா துப்பாக்கிப் பிரிவின் 6/1 அணியாலும் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றது.

## நிதி ஆயோக் - வளர்ச்சி ஆராய்ச்சி மையம் பேச்சுவார்த்தை


- நிதி ஆயோக்கும், சீன மக்கள் குடியரசினைச் சேர்ந்த அரசு சபையின் வளர்ச்சி ஆராய்ச்சி மையத்திற்கும் இடையேயான நான்காவது கட்ட பேச்சுவார்த்தை மும்பையில் நடத்தப்பட்டது.
- ஜோகன்னஸ்பர்க்கில் நடந்த பிரிக்ஸ் மாநாட்டின் போது சீன அதிபர் ஜீ ஜின்பிங்கிற்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் நடந்த பேச்சுவார்த்தைக்குப் பிறகு இது இந்தியா மற்றும் சீனாவிற்கு இடையே அமைச்சர்கள் மட்டத்திலான இரண்டாவது பேச்சுவார்த்தை ஆகும்.
- நிதி ஆயோக் மற்றும் வளர்ச்சி ஆராய்ச்சி மையம் ஆகியவற்றுக்கு இடையேயான ஐந்தாம் கட்ட பேச்சுவார்த்தை அடுத்த வருடம் நவம்பர் மாதம் சீனாவின் வூஹான் மாகாணத்தில் நடைபெறும்.

## உச்சநீதிமன்றம் - நான்கு புதிய நீதிபதிகள்

- நீதிபதிகள் ஹேமந்த் குப்தா, R.சுபாஷ் ரெட்டி, M.R. ஷா மற்றும் அஜய் ரஸ்தோனி ஆகியோர் உச்சநீதிமன்றத்தின் நீதிபதிகளாக பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டனர்.
- இந்த நான்கு புதிய நீதிபதிகளின் நியமனத்திற்குப் பிறகு, உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையானது 24லிருந்து 28ஆக உயர்ந்திருக்கின்றது.
- உச்சநீதிமன்றம் 31 நீதிபதிகள் என்ற எண்ணிக்கை வரையில் கொண்டிருக்க அனுமதி பெற்றிருக்கின்றது.
- இவ்வருடம் நீதிபதிகள் மதன் பி லோகூர் மற்றும் குரியன் ஜோஸ் என்ற இரண்டு உச்சநீதிமன்ற நீதிபதிகள் பதவி ஓய்வு பெற உள்ளனர். 2019ம் ஆண்டு மார்ச் மாதம் நீதிபதி A.K. சிகிரி பதவியிலிருந்து ஓய்வு பெற உள்ளார்.

## ஐஎன்எஸ் அரிஹந்த்

- 2018 ஆம் ஆண்டு நவம்பர் 5 அன்றுடன் இந்தியாவில் முதலாவது உள்நாட்டுத் தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட அணு ஆயுதத்தில் இயங்கும் “ஐஎன்எஸ் அரிஹந்த்” அல்லது “எதிரிகளை அழிப்பது” என்ற நீர்மூழ்கிக் கப்பல் தனது முதலாவது குற்றங்களைத் தடுப்பதற்கான சோதனை ஓட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.
- இந்தியாவின் முப்படைகளிலும் அணு ஆயுதங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளதை நவம்பர் 05 ஆம் தேதி குறிக்கிறது.




- இந்திய முப்படைகளின் அணு ஆயுதங்களானது உலக அமைதி மற்றும் நிலைப்புத் தன்மைக்கு முக்கியத் தூணாக விளங்கும்.

## ஐசிஜிஎஸ் - வராஹா


- 2018 ஆம் அண்டு நவம்பர் 02 அன்று எல் & டி-யின் காட்டுப்பள்ளி கப்பல் கட்டும் தளத்தில் வராஹா அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்தியக் கடலோரக் காவற்படையின் 98 M கடலோர ரோந்துக் கப்பல் வரிசையில் இது நான்காவதாகும்.
- ஒருங்கிணைந்த பால அமைப்பு (IBS - Integrated Bridge System), ஒருங்கிணைந்த பணித்தள மேலாண்மை அமைப்பு (IPMS - Integrated Platform Management System), தானியங்கி மின்சார மேலாண்மை அமைப்பு (APMS - Automated Power Management System) மற்றும் உயர் ஆற்றல் கொண்ட வெளிப்புற தீயணைப்பான் அமைப்பு ஆகிய கருவிகளுடன் இந்தக் கப்பல் வடிவமைக்கப்படவிருக்கிறது.

## இந்தியாவின் முதலாவது கடல்சார் கண்காட்சியகம் மற்றும் கடல்சார் சாகச மையம்

- மகாராஷ்டிர அமைச்சரவை கடற்படையிலிருந்து விலக்கப்பட்ட கப்பலான ஐஎன்எஸ் விராட்டை இந்தியாவின் முதலாவது நங்கூரமிடப்பட்ட கடல்சார் அருங்காட்சியகம் மற்றும் கடல்சார் சாகச மையமாக மாற்றுவதற்கு ஒப்புதலளித்துள்ளது.
- இந்தியக் கடற்படையைப் பொறுத்த வரையில் இந்தக் கப்பல் உலகின் பழமையான விமானந் தாங்கிக் கப்பலாகும். இது 1986-ல் வாங்கப்பட்டு ஒரு வருடம் கழித்து புனரமைப்பு செய்யப்பட்டு கடற்படையில் சேர்க்கப்பட்டது.
- பாய்மரக் கப்பல் பயணம் மற்றும் ஆழ்கடல் நீச்சல் அனுபவங்களைத் தரும் வகையில் பல்லுயிர்ப் பெருக்க கண்காட்சி மையங்களையும் கடல்சார் சாகச மையத்தையும் விராட் கொண்டிருக்கும்.

## போக்குவரத்தை எளிமையாக்கல் அட்டவணை - 2018

- ஓலா போக்குவரத்து நிறுவனம் இந்தியாவின் முதலாவது போக்குவரத்தை எளிமையாக்கல் அட்டவணையை (2018) வெளியிட்டு இருக்கின்றது.
- இதன் கணிப்புகளின்படி, கொல்கத்தா நகரம் பொதுப் போக்குவரத்திற்கான வசதி வாய்ப்புகளில் முதலிடத்தில் இருக்கின்றது.
- நகரப் போக்குவரத்தின் முக்கிய கூறுகளை அளவிடும் பரிமாணங்கள் மீதான ஆய்வில் 20 நகரங்களைச் சார்ந்த 43000க்கும் மேற்பட்ட மக்களிடமிருந்து இந்த போக்குவரத்தை எளிமையாக்கல் அட்டவணை (2018) தகவல்களை சேகரித்தது.




- இக்கூறின் அடிப்படையில் பொதுப் போக்குவரத்துப் பயன்படுத்துபவர்களில் மாநகரங்களின் மத்தியில் சென்னையில் உள்ள மக்கள் அதிகப்படியாகவும், மும்பையில் உள்ள மக்கள் குறைவாகவும் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துகின்றனர்.

## பசுமை நடவடிக்கை

- மத்திய உணவுப் பதப்படுத்தும் தொழில்துறை அமைச்சர் “வெள்ள நடவடிக்கை” (Operation Flood) என்பதையொட்டி அமையும் வகையில் பசுமை நடவடிக்கையை (Operation Greens) செயல்படுத்துவதற்கான யுக்திசார் நடவடிக்கையை அங்கீகரித்திருக்கின்றது.
- 2018-19ம் ஆண்டிற்கான பட்ஜெட் உரையில் தக்காளி, வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு (Tomato, Onion and Potato - TOP) ஆகியவற்றின் உற்பத்தியை சீராக்க ரூபாய் 500 கோடிகள் மதிப்பீட்டில் “பசுமை நடவடிக்கை” என்ற திட்டம் அறிவிக்கப்பட்டது.
- இத்திட்டம் அறுவடைக்குப் பிறகான இழப்புகளைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் விவசாயப் பண்ணைத் தொழிற்சாலை, விவசாய தளவாடங்கள் மற்றும் சேமிப்புத் திறன் ஆகியவற்றை உருவாக்கிட எண்ணுகின்றது.
- இத்திட்டம் பதப்படுத்தும் திறன்களையும், மதிப்பு கூட்டும் சேவைகளையும் அதிகப்படுத்த உதவும்.
- மேலும் இது தக்காளி, வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு ஆகிய பயிர்களின் வரத்தை வருடம் முழுவதும் நாடு முழுவதும் விலை ஏற்ற இறக்கம் இல்லாமல் கிடைப்பதை உறுதி செய்யவும் எண்ணுகின்றது.

## உச்சநீதிமன்றத்தில் உள்ளக சிந்தனைக் களஞ்சியம்

- இந்தியாவின் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் இந்திய உச்சநீதிமன்றத்தின் தகவல் உள்கட்டமைப்பை பலப்படுத்த உள்ளக சிந்தனைக் களஞ்சியம் ஒன்றை ஏற்படுத்தியிருக்கின்றார்.
- மிக வேகமாக விரிவடைந்து வரும் நீதித்துறையின் அறிவுத் தேவைகளை பூர்த்தி

செய்வதற்காக இந்தியாவின் தலைமை நீதிபதி ஆராய்ச்சி மற்றும் திட்டமிடுதலுக்கான மையத்தின் (Centre for Research and Planning) பணியை மறு வரையறை செய்திருக்கின்றார்.

- புதிய ஆராய்ச்சி மற்றும் திட்டமிடுதலுக்கான மையம் பின்வருவனவற்றை மேற்கொள்ளும்.
    - தனிச் சுதந்திரமுடைய முன்னணி அறிஞர்களைக் கொண்ட அமைப்பை உருவாக்குதல்
    - செயல் ஆணைகள், ஆய்வுசார்ந்த விளக்கங்கள் மற்றும் வழக்கு விபரங்கள் மூலமாக நிலையான மற்றும் எளிதில் அணுகக் கூடிய தகுந்த தகவல் களஞ்சியத்தை உருவாக்குதல்.
    - தொழில்நுட்பமற்ற சாதாரண மொழியில் பொது மக்களுக்கு உச்ச நீதிமன்றத்தின் முக்கிய தீர்ப்புகளின் சுருக்கத்தை தயார் செய்தல்.
    - கொள்கை விளங்கங்கள் மீது குறிப்பிட்ட கால இடைவெளியில் விளக்கக் கூட்டங்கள் நடத்துவது மற்றும் பார் கவுன்சிலின் உறுப்பினர்களை கல்வித் துறையில் உள்ள இளைய உறுப்பினர்களோடு இணையச் செய்வது.
- இது எவ்வித சார்புமற்ற, அனைத்து முக்கிய கண்ணோட்டங்களையும் அளிக்கக்கூடிய தனிச் சுதந்திரமானதாக இருக்கும். மேலும் இது வெளிப்படைத் தன்மையாக பொது இணைய தளத்தில் பதிவேற்றப்படும்.

## வெப்பக் காற்று பலூன் பயணம் ‘ஜெய் பாரத்’

- நாட்டின் இளைஞர்களுக்கு இந்திய ராணுவத்தின் சாகச உணர்வை எடுத்துக் காட்டுவதற்காக தரைப் படையின் சாகசப் பிரிவு ஜம்மு காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலான பரந்த இந்தியா முழுவதுமான வடக்கு தெற்கு வெப்பக் காற்று பலூன் பயணத்தை துவக்கி வைத்திருக்கின்றது.



- தேசிய ஒற்றுமைக்காகவும் நாட்டிற்காகவும் மேம்பட்ட தியாகங்கள் புரிந்த ராணுவ வீரர்களுக்காக இந்த ஜெய் பாரத் பயணத்தை ராணுவம் அர்ப்பணித்திருக்கின்றது.
- இந்தப் பயணத்தின் ஒரு பகுதியாக ராணுவம் நாடு முழுவதும் 31 நிலையங்களையும் சென்றடையும்படியாக இரண்டு பலூன்களை பறக்க விடும்.

## மகிளா-இ-ஹாத் இணைய வாயில்

- மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் அமைச்சகமானது நாடு முழுவதும் உள்ள பெண் விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர்களின் புதுமையான இயற்கை விவசாயப் பொருட்களுக்காக ஒரு நேரடியான சந்தைப்படுத்தும் இணைய தளமான மகிளா-இ-ஹாத் என்ற இணைய தளத்தை ஆரம்பித்திருக்கின்றது.
- இது அவர்களின் சாதனைகளை ஒருங்கிணைந்து மேம்படுத்தி கொண்டாடச் செய்வதற்கான ஒரு மின்னணு நடைமுறையாகவும் செயல்படுகின்றது.
- இத்தளம் 2018-ம் ஆண்டின் "இந்தியப் பெண்களின் தேசிய இயற்கைத் திருவிழா" என்பதை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்டது.
- 10 நாள் திருவிழாவான "இந்தியப் பெண்கள் தேசிய இயற்கைத் திருவிழா 2018" என்ற விழாவின் 5வது பதிப்பு டெல்லியில் இந்திரா காந்தி கலைகளுக்கான தேசிய மையத்தில் மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சகத்தால் நடத்தப்பட்டது.

## நீண்ட காலமாக திருமணம் ஆகாமல் சேர்ந்து வாழுதல் - யூக அடிப்படையில் திருமணமாகவே கருதப்படும் - உச்ச நீதிமன்றம்

- இந்திய உச்ச நீதிமன்றமானது யூகத்தின் அடிப்படையில்
    - இருவர் கணவன் மனைவியாக இணைந்து வாழுதல் சட்டபூர்வமான திருமணமாகும்
    - பெண்கள் தங்களது பராமரிப்பிற்கு குற்றவியல் நடைமுறை தொகுப்புச் சட்டத்தின் 125 பிரிவின் கீழ் உரிமை கோர முடியும்

  என்று தீர்ப்பு அளித்தது.
- இந்த உத்தரவு உச்ச நீதிமன்ற நீதிபதிகளான R. பானுமதி மற்றும் இந்திரா பானர்ஜி ஆகியோர் அடங்கிய அமர்வால் வழங்கப்பட்டது.
- இந்த உத்தரவானது 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கர்நாடக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து ஒரு பெண் மேல்முறையீடு செய்ததன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

## சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டணி - ஐ.நா. உறுப்பு நாடுகள்

- ஐ.நா.வில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளும் சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டணியில் (ISA - International Solar Alliance) உறுப்பினராக இணைவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இது தொடர்பாக சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டணியின் செயல்திட்ட ஒப்பந்தத்தை திருத்துவதற்காக ISA-ன் முதலாவது கூட்டத் தொடரில் தீர்மானத்தை நிறைவேற்ற மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் அளித்துள்ளது.

## ஆந்திரப் பிரதேசம் - தனி உயர் நீதிமன்றம்

- ஆந்திரப் பிரதேசத்திற்கு என்று தனியாக ஒரு உயர் நீதிமன்றம் செயல்படுவதற்கு இந்திய உச்ச நீதிமன்றம் இசைவு தெரிவித்துள்ளது. இந்த உயர் நீதிமன்றம் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல் செயல்படவிருக்கிறது.
- நாட்டின் 25வது உயர்நீதிமன்றமாக இந்த உயர் நீதிமன்றம் விளங்கும்.
- ஆந்திரப் பிரதேச மாநிலத் தலைநகரான அமராவதியில் உயர்நீதிமன்றத்தின் நிரந்தரத் தலைமையிடம் அமைக்கும் வரை தற்காலிக கட்டிடத்தில் இந்த உயர் நீதிமன்றம் செயல்படும்.
- 2014 ஆம் ஆண்டு ஜூன் 02 ஆம் தேதி இரு மாநிலங்களும் பிரிக்கப்பட்ட பிறகு, ஆந்திரப் பிரதேசமும் தெலுங்கானாவும் பொதுவான ஹைதராபாத்தில் அமைந்திருந்த உயர் நீதிமன்றம் ஒன்றை கொண்டு இருந்தது.
- தற்பொழுது செயல்பட்டு வரும் உயர் நீதிமன்றம் அடுத்த ஆண்டு முதல் தெலுங்கானா உயர் நீதிமன்றம் என்று அழைக்கப்படும்.

## இந்தியாவின் வெளிநாட்டுத் தூதர்கள்

- மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தில் தற்பொழுது கூடுதல் செயலாளராக பணியாற்றி வரும் தின்கர் அஸ்தானா (IFS : 1990) லாவோஸ் மக்கள் குடியரசிற்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தில் தற்பொழுது கூடுதல் செயலாளராக பணியாற்றி வரும் கடாம் தர்மேந்திரா (IFS: 1990) ஈரான் இசுலாமியக் குடியரசிற்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஹனோயின் துணைத் திட்டத் தலைவரான திருமதி நினா ஷெரிங் காங்கோ மக்களாட்சிக் குடியரசிற்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- புது தில்லியில் கூடுதல் செயலாளராக பணியாற்றி வரும் சஞ்சய் குமார் வர்மா ஜப்பானில் இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## விசாரணை இல்லாவிடின் இரட்டை தண்டனைக்குத் தடையில்லை – உச்ச நீதிமன்றம்

- ஒரு குற்ற விசாரணைக்கு தவறான அல்லது முறையற்ற அனுமதியின் அடிப்படையில் விசாரணை தொடங்கப்படுவதற்கு முன்பாகவே, குற்றம் சாட்டப்பட்டவர் அவ்வழக்கிலிருந்து விடுவிக்கப்படும்போது இரட்டை தண்டனை முறைக்கான தடை அவ்வழக்கிற்குப் பொருந்தாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சரத்து 20 (2) ஒருவர் மீது ஒரே குற்றத்திற்காக இரண்டு முறை வழக்குத் தொடரவோ அல்லது தண்டனை அளிக்கப்படவோ கூடாது என அறிவுறுத்துகிறது.
- இந்த தீர்ப்பானது நீதிபதி R. பானுமதி மற்றும் இந்திரா பானர்ஜி ஆகியோர் அடங்கிய

அமர்வால் வழங்கப்பட்டது.

- குற்றம் சாட்டப்பட்டவர் விசாரணை செய்யப்படாமலேயே அல்லது தண்டனை வழங்கப்படாமலேயே விடுவிக்கப்படும் போது இரட்டை தண்டனை முறை கோட்பாட்டை செயல்முறைப்படுத்த முடியாது எனவும் கூறியுள்ளது.
- இதன்படி, முந்தைய அனுமதி உத்தரவு செல்லுபடியாகாததாக காணப்பட்டால் தகுதி வாய்ந்த அதிகாரிகள் விசாரணையைத் தொடர்வதற்கு முறையான அனுமதி உத்தரவை வழங்குவதற்கு எந்தத் தடையுமில்லை.

## சிம்பெக்ஸ் (SIMBEX) 2018

- இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 25-வது கடற்படை கூட்டுப் பயிற்சியான சிம்பெக்ஸ் இந்தியாவின் வங்காள விரிகுடா மற்றும் அந்தமான் கடல் பகுதிகளில் நவம்பர் 10 முதல் 21 வரை நடைபெறவுள்ளது.
- சிம்பெக்ஸ் என்பது சிங்கப்பூர் - இந்தியா கடல்சார் இருதரப்பு பயிற்சி (Singapore-India Maritime Bilateral Exercise) என்பதன் சுருக்கமாகும்.
- சிம்பெக்ஸ் 2018 ஆனது வெள்ளி விழா ஆண்டைக் குறிக்கிறது. மேலும் 1994 முதல் நடந்து வரும் இப்பயிற்சியில் இவ்வருடப் பயிற்சியானது அளவிலும் தன்மையிலும் மிகப்பெரிய பதிப்பாக இருக்கும்.
- இந்த பயிற்சிக்காக பயன்படுத்தப்படும் ஏவுகணை மற்றும் துப்பாக்கிகளின் எண்ணிக்கையானது இந்தியக் கடற்படையால் இதுவரை எந்தவொரு வெளிநாட்டுக் கடற்படையுடனும் மேற்கொள்ளப்படாத அளவில் அதிக எண்ணிக்கையில் இருக்கும்.

## அரிய வகை நீரிழிவு பற்றி ஆய்வு செய்ய தேசிய அளவிலானஅமைப்பு

- நாடெங்கிலும் மோனோஜெனிக் நீரிழிவு நோயாளிகளைக் கண்டறிய தேசிய மோனோஜெனிக் நீரிழிவு ஆய்வுக் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.
- மோனோஜெனிக் நீரிழிவானது மரபணு சீர்குலைவுகளின் குழுமமாகும். இதில் ஒற்றை மரபணுவில் ஏற்படும் பிறழ்வு நீரிழிவை உண்டாக்குகிறது.
- இவ்வமைப்பானது
    - இந்திய மருத்துவ ஆய்வு குழுமம் (ICMR - Indian Council of Medical Research),
    - மெட்ராஸ் நீரிழிவு ஆராய்ச்சி அறக்கட்டளை (MDRF - Madras Diabetes Research Foundation) மற்றும்,
    - டாக்டர் மோகனின் நீரிழிவு சிறப்பு மையம் (DMDSC - Dr. Mohan's Diabetes Specialities Centre) ஆகியவற்றால் ஆதரிக்கப்படுகிறது.
- இதில் DMDSC ஆய்வுக் குழு தேசிய ஒருங்கிணைப்பு மையமாகவும் MDRF ஆய்வுக் குழுவின் முதன்மை மையமாகவும் இருக்கும்.

## INSPIRE 2018

- புது தில்லியில் மூன்று நாள் நடைபெறும் நிகழ்ச்சியான இன்ஸ்பயர் (Inspire) என்ற நிகழ்ச்சியின் இரண்டாவது பதிப்பினை மத்திய மின்சக்தி, மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகத்திற்கான மத்திய இணை அமைச்சர் (தனிப் பொறுப்பு) R.K.சிங் தொடங்கி வைத்தார்.
- இன்ஸ்பயர் என்பதன் விரிவாக்கம் (Inspire - International Symposium to Promote Innovation & Research in Energy Efficiency) - ஆற்றல் செயல்திறனில் புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சியை ஊக்கப்படுத்துவதற்கான சர்வதேசக் கருத்தரங்கு என்பதாகும்.
- 2018 ஆம் ஆண்டின் பதிப்பானது ஆற்றல் செயல்திறன் சேவைகள் நிறுவனம் (EESL - Energy Efficiency Service Limited) மற்றும் உலக வங்கி ஆகியவற்றால் ஒருங்கிணைக்கப்பட்டது.
- இந்தத் துறையில் முதன்முறையாக ஆற்றல் புத்தாக்க சவால் என்று முன்மொழியப்பட்ட #InnovateToINSPIRE என்ற சவால் ஆனது EESL மற்றும் உலக வளங்கள் நிறுவனம் ஆகியவற்றால் ஒருங்கிணைக்கப்பட்டது.

## சர்வதேச குளிர்விப்பானுக்கான புத்தாக்க மாநாடு

- புது தில்லியில் இரண்டு நாள் நிகழ்ச்சியான சர்வதேச குளிர்விப்பானுக்கான புத்தாக்க மாநாடு மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தால் தொடங்கி வைக்கப்பட்டது.
- இந்தத் துறையில் முதன்முறையாக தீர்வுகளின் மீது கவனம் செலுத்தும் இப்படிப்பட்ட நிகழ்ச்சியானது காற்றுப் பதனாக்கிகளின் தேவைகள் வளர்ந்து வருவதன் மூலம் ஏற்படும் பருவநிலை பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டு நடைபெற்றது.
- மேலும் இது புத்தாக்க சவால்களுக்கான திட்டத்திற்கான சர்வதேச குளிர்வித்தல் விருது என்பதையும் உருவாக்கியுள்ளது.
- இந்த விருதானது இந்திய அரசாங்கத்தின் புத்தாக்கத் திட்டத்தினால் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை மற்றும் அதன் பங்காளர் நிறுவனங்களின் மூலம் ஆதரிக்கப்படுகிறது.

## பொதுச் சேவை வாகனங்களில் VLT மற்றும் அவசரகால பொத்தான்கள்

- 2019 ஆம் ஆண்டு ஜனவரி 1ம் தேதிக்கு பின்னர் பதிவு செய்யப்படும் அனைத்து பொதுச் சேவை வாகனங்களிலும் அவசரகால பொத்தான்கள் மற்றும் வாகன இருப்பிட கண்காணிப்பு வசதிகள் (VLT- Vehicle Location Tracking) பொருத்தப்படுவது கட்டாயமாகும் என மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சகம் கூறியுள்ளது.

- இது பொதுச் சேவை வாகனங்களின் பட்டியல்களில் இருந்து ஆட்டோ ரிக்சா மற்றும் கைவண்டிகளுக்கு விலக்கு அளிக்கிறது.
- இது பெண் பயணிகளுக்கு பாதுகாப்பு அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒவ்வொரு VLT சாதனத்தின் தகவல்களும் VAHAN தரவு தளத்தில் அந்தந்த VLT சாதனத்தின் தயாரிப்பாளரால் பதிவேற்றம் செய்யப்படும்.

## கடற்படைத் தளபதிகள் மாநாடு 2018

- ஆண்டிற்கு இரண்டு முறை நடைபெறும் கடற்படைத் தளபதிகள் மாநாட்டின் 2018ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பதிப்பு புதுடெல்லியில் நடைபெற்றது.
- இம்மாநாட்டின் கருத்துரு "உகப்பு நிலைப்படுத்துதல் மற்றும் வளர்ந்து வரும் தொழில் நுட்பங்கள்" என்பதாகும்.
- இந்த மாநாடானது பிரதமரின் "பிராந்தியத்தில் அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி" (SAGAR/ Security and Growth for All in the Region) என்ற முன்முயற்சியின் ஒரு பகுதியாகும்.

## சமுத்திர சக்தி

- இந்தோனேசியாவின் சூரபயா துறைமுகத்தில் இந்தியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கு இடையேயான இருதரப்பு கடற்படைப் பயிற்சியான சமுத்திர சக்தியின் தொடக்கப் பதிப்பு நடைபெற்றது.
- இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தவும், கடல்சார் ஒத்துழைப்பை விரிவுபடுத்தவும், இயங்குதிறனை மேம்படுத்தவும் சிறந்த நடைமுறைகளை பரிமாறுவதும் இதன் நோக்கங்களாகும்.
- இந்தியக் கடற்படை சார்பாக கிழக்குக் கடற்படையின் கட்டுப்பாட்டின் கீழ் விசாகப்பட்டினத்தில் உள்ள கிழக்குக் கடற்படையின் INS ராணா என்ற கப்பல் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது.

## WW I - நூற்றாண்டு

- 2018ம் ஆண்டு நவம்பர் 11ம் தேதியானது முதலாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக போர் நிறுத்தம் கையொப்பமிடப்பட்ட 100வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- பிரெஞ்சுத் தலைநகரான பாரிசில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஆர்க் டே திரியோம்பி என்ற இடத்தில் நடைபெற்ற போர் நிறுத்த நூற்றாண்டு நிறைவு விழாவில் இந்தியாவின் சார்பில் குடியரசுத் துணைத் தலைவர் கலந்து கொண்டார்.
- மேலும் முதலாம் உலகப் போரில் இறந்த ஆயிரக்கணக்கான இந்திய வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக வடக்கு பிரான்சில் இந்தியாவால் கட்டப்பட்டுள்ள முதல் போர் நினைவகத்தை இவர் திறந்து வைத்தார்.

- 1914 ஆம் ஆண்டின் குளிர்காலத்தில் இந்தியப் படைகள் மேற்கு போர் முனையில் முதல் யேப்ரஸ் போரில் பங்கேற்றன.

## இந்தியாவின் முதல் பல்முனை முனையம்

- பிரதமர் வாரணாசியில் கங்கை ஆற்றில் நாட்டின் முதல் பல்முனை முனையத்தை திறந்து வைத்தார்.
- இது நான்கு பல்முனை முனையங்களில் முதலாவதாகும்.
- கங்கை ஆற்றின் முதல் பல்முனை நீர்வழி முனையமானது மத்திய அரசின் ஜல் மார்க் விகாஸ் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இது வாரணாசிக்கும் ஹால்தியாவிற்கும் இடையிலான தூரத்தை பெரிய கப்பல்கள் செல்லும் அளவிற்கு மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகும்.
- தேசிய நீர்வழிப்பாதை - 1 (ஹால்தியா - வாரணாசி) ஆனது உலக வங்கியின் தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு உதவியுடன் மேம்படுத்தப்பட்டு வருகிறது.
- இந்த திட்டத்தின் மொத்த மதிப்பீட்டு செலவு (5369.18 கோடி) இந்திய அரசு மற்றும் உலக வங்கியால் சமமாக பகிர்ந்து செலவழிக்கப்பட உள்ளது.

## RCEP யின் வர்த்தக அமைச்சர்கள் மாநாடு

- சிங்கப்பூரில் விரிவான பிராந்தியப் பொருளாதாரக் கூட்டுறவின் (RCEP - Regional Comprehensive Economic Partnership) வர்த்தக அமைச்சர்களின் 2 நாள் மாநாடு நவம்பர் 12 மற்றும் 13 ஆகிய தேதிகளில் நடத்தப் பட்டது.
- இந்தியக் குழுவானது மத்திய வணிக மற்றும் தொழில்துறை அமைச்சரான சுரேஷ் பிரபுவால் தலைமை தாங்கப்பட்டது.
- தற்போதைய ஆசியானின் (ASEAN) தலைமையாக சிங்கப்பூர் உள்ளதால் அது இந்த உச்சி மாநாட்டை நடத்தியது.
- இந்த அமைச்சர்கள் மாநாட்டைத் தொடர்ந்து நவம்பர் 14, 2018 அன்று RCEP தலைவர்கள் உச்சி மாநாடானது நடைபெற்றது.

## தேசிய தரவு களஞ்சியம்

- மத்திய அரசானது சிறப்பு வாய்ந்த தேசிய தரவு களஞ்சியம் ஒன்றை அமைத்துள்ளது.
- இந்தக் களஞ்சியமானது நாட்டின் ஹைட்ரோகார்பன் வளங்கள் பற்றிய அனைத்து புவி - அறிவியல் தகவல்களையும் கொண்டுள்ள தரவு தளமாகும்.
- இது முழுவதும் இந்திய அரசால் நிதியளிக்கப்பட்டு ஹைட்ரோ கார்பன்களின் பொது இயக்குநரகத்துடன் (Directorate General of Hydrocarbons-DGH) இணைத்து வைக்கப்பட்டுள்ளது.
- DGH ஆனது பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் (Mo PNG / Ministry of Petroleum and Natural Gas) ஒரு தொழில்நுட்பப் பிரிவு ஆகும்.

- இதன் மூலம் பெட்ரோலியத் துறையில் தேசிய தரவு களஞ்சியம் கொண்டுள்ள இங்கிலாந்து மற்றும் நார்வே போன்ற நாடுகளின் குழுவில் இந்தியாவும் இணைந்துள்ளது.

## மிக நெருக்கடியான நகரம்

- அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்ட நிறுவனமான தேசியப் பொருளாதார ஆய்வு அமைப்பினால் (National bureau of economic research - NBER) வெளியிடப்பட்ட சமீபத்திய ஆய்வின் படி புனே நகரம் இந்தியாவின் 7-வது நெருக்கடியான நகரமாகும்.
- இந்த ஆய்வு நகர்ப்புற இந்தியாவின் தற்போதைய போக்குவரத்து நிலையை கூகுள் வரைபடத்தை பயன்படுத்தித் தயாரித்துள்ளது.
- இந்த ஆய்வின்படி பெங்களூருவானது மிக நெருக்கடியான முதல் நகரமாகவும் அதனைத் தொடர்ந்து மும்பை 2-வது இடத்திலும் உள்ளன.
- டெல்லி 3-வது இடத்தினையும் அதனைத் தொடர்ந்து சென்னை மற்றும் கொல்கத்தா ஆகியவையும் உள்ளன.



| 20 most congested cities | 20 slowest cities (traffic speed) | 10 Fastest cities (traffic speed) |
|---|---|---|
| 1 Bangalore | 1 Kolkata | 1 Ranipet |
| 2 Mumbai | 2 Bangalore | 2 Srinagar |
| 3 Delhi | 3 Hyderabad | 3 Kayamkulam |
| 4 Chennai | 4 Mumbai | 4 Jammu |
| 5 Kolkata | 5 Varanasi | 5 Thrissur |
| 6 Hyderabad | 6 Patna | 6 Palakkad |
| 7 Pune | 7 Delhi | 7 Chandigarh |
| 8 Jaipur | 8 Bhagalpur | 8 Alwar |
| 9 Coimbatore | 9 Bihar Sharif | 9 Thoothukkudi |
| 10 Ahmedabad | 10 Chennai | 10 Panipat |
| 11 Patna | 11 Muzaffarpur | |
| 12 Chandigarh | 12 Aligarh | |
| 13 Kochi | 13 Darbhanga | |
| 14 Thiruvananthapuram | 14 English Bazar (West Bengal) | |
| 15 Begusarai | 15 Gaya | |
| 16 Kozhikode | 16 Allahabad | |
| 17 Nagpur | 17 Ranchi | |
| 18 Ranchi | 18 Dhanbad | |
| 19 Vijayawada | 19 Akola | |
| 20 Bhopal | 20 Pune | |

- 20 நகரங்களைக் கொண்ட இந்த பட்டியலில் போபால் 20-வது இடத்தில் உள்ளது.
- போக்குவரத்து வேகம் குறித்த மற்றொரு குறியீட்டில் கொல்கத்தா மிக மெதுவான நகரமாகவும் புனே 20-வது இடத்திலும் உள்ளன.
- வேகமான நகரங்களை அளவிடும் மற்றொரு குறியீட்டில் 10 நகரங்களில் ராணிப் பேட்டை நகரம் முதலிடத்திலும் பானிபட் நகரம் பட்டியலின் இறுதியிடமான 10-வது இடத்திலும் உள்ளன.

## LEAP மற்றும் ARPIT திட்டம்

- மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகமானது இரண்டு புதிய முன்முயற்சிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

- கல்வியாளர்களுக்கான தலைமைத்துவத் திட்டம் (Leadership for Academicians Programme -LEAP)
- உயர்கல்வி ஆசிரியர்களுக்கு கற்பித்தலில் வருடாந்திரப் புத்துணர்ச்சியூட்டல் (Annual Refresher Programme In Teaching-ARPIT)

❖ APRIT ஆனது SWAYAM என்ற இணையதளம் மூலமாக மிகப்பெரிய அளவில் திறந்த நிலையிலான நேரடி அல்லது ஆன்லைன் படிப்புகள் உதவியுடன் 1.5 லட்சம் உயர்கல்வி ஆசிரியர்களுக்கு இணையதளத்தில் அல்லது ஆன்லைனில் தொழில்சார் மேம்பாட்டை அளிக்கும் முக்கியமான மற்றும் தனித்தன்மை வாய்ந்த முன்முயற்சியாகும்.

❖ LEAP என்பது பொது நிதியளிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களில் 2 வது நிலையிலுள்ள கல்வியாளர்களுக்கான 3 வாரகால தலைமைத்துவ மேம்பாட்டு பயிற்சித் திட்டமாகும்.

❖ இதன் முக்கிய கோளானது எதிர்காலத்தில் தலைமை பொறுப்புகளை வகிக்க வாய்ப்புள்ள இரண்டாம் நிலை கல்வியியல் தலைவர்களை உருவாக்குவது ஆகும்.

## இந்திரா - 2018

❖ இந்தியா மற்றும் ரஷ்யாவிற்கு இடையேயான கூட்டுப் பயிற்சியான இந்திரா - 2018 உத்திரப் பிரதேசத்தில் நடைபெற்றது.

❖ இது இந்திய மற்றும் ரஷ்ய இராணுவங்களுக்கிடையேயான இயங்குத்தன்மையை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட பயிற்சியான இந்திராவின் 10-வது பயிற்சியாகும்.

❖ ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவின் கீழ் அமைதி காத்தல் / அமைதி அமலாக்க சூழ்நிலையில் இரண்டு இராணுவத்திற்கிடையேயான இயங்குத்தன்மைகளை மேம்படுத்துவதற்காக கூட்டாகத் திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதலைப் பயிற்சி செய்வதே இதன் நோக்கமாகும்.

## 38வது சர்வதேச வர்த்தக கண்காட்சி - IITF

❖ இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியின் (India International Trade Fair- IITF ) 38வது பதிப்பு புது டெல்லியின் பிரகதி மைதானத்தில் மத்திய கலாச்சாரத் துறை இணை அமைச்சரால் துவங்கி வைக்கப்பட்டது.

❖ இந்த 38வது IITF-ன் கருத்துரு “இந்தியாவில் கிராமப்புற தொழில் நிறுவனங்கள்” என்பதாகும். இது நவம்பர் 27, 2018 அன்று நிறைவு பெறுகிறது.

❖ 38வது IITF-ன் பங்காளராக ஆப்கானிஸ்தான் உள்ளது. இக்கண்காட்சிக்கு நேபாளம் முக்கிய கவன மையமாகவும் ஜார்க்கண்ட் பங்காளர் மாநிலமாகவும் உள்ளது.

❖ IITF ஆனது அனைத்து வகையான தொழில்களும் தங்களது சிறப்புகளையும் சேவைகளையும் வர்த்தகம், தொழில் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு வெளிப்படுத்த ஒரு தளமாக செயல்படுகிறது.

## மொஸாம்பிக் கடற்படை அதிகாரிகளுக்குப் பயிற்சி

- மொஸாம்பிக்கின் கடற்படை அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்காக கடலோரக் காவல்படையின் பிராந்தியத் தலைமையகம் (கிழக்கு) மூலமாக நடத்தப்படும் இரண்டு வார கால பயிற்சி சென்னையில் துவங்கி இருக்கின்றது.
- இந்தியாவின் சென்னையில் மொஸாம்பிக் கடற்படை அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்கும் இந்தியாவின் மிக பல்திறன் வாய்ந்த, உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இடைமறிப்பு படகுகள் கொண்டு பயிற்சிகள் நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- இந்தப் பயிற்சியானது 2 நாடுகளுக்கிடையேயான சர்வதேச ஒத்துழைப்பு உடன்படிக்கையின் ஒரு பகுதியாகும். இதில் இந்திய அரசானது மொஸாம்பிக் கடற்படைக்கு 2 இடைமறிப்பு படகுகளை நன்கொடையாக வழங்க ஒப்புக் கொண்டது.

## யுவ சஹாகர் கூட்டுறவு திட்டம்

- தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் (NCDC - National Cooperative Development Corporation) 'யுவ சஹாகர்' என்ற கூட்டுறவு தொழில் நிறுவன ஆதரவு மற்றும் புத்தாக்கத் திட்டத்தை மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகம் துவங்கியுள்ளது.
- இளைஞர்களுக்கு உகந்த திட்டமான இது இளைஞர்களை கூட்டுறவு வணிக முயற்சிகளுக்கு ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது NCDC-ஆல் உருவாக்கப்பட்ட 1000 கோடி ரூபாய் கூட்டுறவு தொடக்க நிறுவனம் மற்றும் புத்தாக்க நிதியம் (CSIF - Cooperative Start-up and Innovation Fund) என்பதுடன் இணைக்கப்பட்டது ஆகும்.
- இது வடகிழக்குப் பிராந்தியங்களின் கூட்டுறவு நிறுவனங்கள், உயர் இலட்சிய மாவட்டங்கள் மற்றும் பெண்கள் அல்லது SC/ST அல்லது மாற்றுத் திறனாளிகளுடன் கூடிய கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு கூடுதல் ஊக்குவிப்பை வழங்குகின்றது.
- இந்த திட்டங்களுக்கான செலவினங்களில் மேற்கண்ட சிறப்புப் பிரிவுகளில் உள்ளோருக்கு 80% நிதியும் மற்றவர்களுக்கு 70% நிதியும் அளிக்கப்படும்.

## உலக சுங்க அமைப்பு - பிராந்தியக் கூட்டம்

- ராஜஸ்தானின் தலைநகரான ஜெய்ப்பூரில் உலக சுங்க அமைப்பின் (World Customs Organization-WCO) 4 நாள் பிராந்தியக் கூட்டம் நடைபெற்றது.
- இந்த கூடுகையானது WCO-வின் துணைப் பொதுச் செயலாளர் ரிகார்டோ டிராவினே மற்றும் மத்திய மறைமுக வரி மற்றும் சுங்கத் துறை வாரியத்தின் தலைவரான S.ரமேஷ் ஆகியோரால் தலைமை தாங்கப்பட்டது.
- இது ஆசியாவின் 33 உறுப்பினர் நாடுகளின் பிரதிநிதிகளால் கலந்து கொள்ளப்பட்டது.

***உலக சுங்க அமைப்பு***

- WCO ஆனது சுங்க நிர்வாகங்களின் செயல்திறன் மற்றும் ஆற்றலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட அரசுகளுக்குகிடையேயான ஒரு சுயாதீனமான அமைப்பு ஆகும்.
- இது 1952 ஆம் ஆண்டு சுங்கத் துறை கூட்டுறவு சங்கம் (CCC - Customs Co-operation Council) என்ற பெயரில் உருவாக்கப்பட்டது. இதன் தலைமையகம் பெல்ஜியத்தின் பிரசல்ஸில் உள்ளது.
- இது சுங்கத் துறை சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கான தகுதியுடைய ஒரே சர்வதேச அமைப்பு ஆகும். இது சர்வதேச சுங்கத் துறை சமுதாயத்தின் குரல் எனவும் கருதப்படுகிறது.
- இது உலக வர்த்தகத்தில் ஒட்டு மொத்தமாக சுமார் 98 சதவிகிதத்தை செயல்படுத்துகின்ற, உலகமெங்கிலும் உள்ள 182 சுங்கத் துறை நிர்வாகங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது.

## 33வது ஆசியான் மற்றும் அது தொடர்புடைய மாநாடுகள்

- ஆசியான் உச்சி மாநாட்டின் 33வது பதிப்பானது சிங்கப்பூரின் சன்டெக் சிங்கப்பூர் சமூதாய மையத்தில் நவம்பர் 15 அன்று முடிவடைந்தது.
- இந்த உச்சி மாநாட்டின் முடிவுடன் இதனுடன் தொடர்புடைய கீழ்க்காணும் மற்ற மாநாடுகளும் முடிவடைந்தன.
    - 13 வது கிழக்கு ஆசிய உச்சி மாநாடு (EAS – East Asia Summit),
    - 2 வது விரிவான பிராந்திய பொருளாதார உச்சி மாநாடு (RCEP – Regional Comprehensive Economic Summit) மற்றும்
    - 21 வது ஆசியான் மற்றும் மூன்று நாடுகள் உச்சி மாநாடு
- சிங்கப்பூரின் பிரதமர் லீ சியான் லூங் இந்த வருட உச்சி மாநாட்டின் தலைவராவார்.
- லீ ஆசியானின் தலைமையை தாய்லாந்தின் பிரதமர் பிரயுத் சான்-ஓ-சாவிடம் ஒப்படைத்தார்.
- இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சிங்கப்பூரில் 13-வது கிழக்காசிய மாநாடு, 2-வது RCEP மாநாடு மற்றும் ஆசியான்-இந்தியா ஆகிய மாநாடுகளில் கலந்து கொண்டார்.
- இது பிரதமர் மோடியின் 5வது கிழக்காசிய மாநாடாகும். இந்தியாவானது 2005ஆம் ஆண்டு முதல் கிழக்காசிய மாநாட்டின் துவக்கத்திலிருந்தே பங்கேற்று வருகின்கிறது.
- மேலும் பிரதமர் மோடி பின்டெக் (Fintech) மாநாட்டிலும் பார்வையாளர்களிடையே உரையாற்றினார்.
- இதன் மூலம் சிங்கப்பூர் பின்டெக் விழாவில் பிரதான உரையை வழங்கிய முதல் அரசாங்கத் தலைவராக மோடி உருவெடுத்துள்ளார்.
- வங்கிக் கணக்குகள் இல்லாமலேயே உலகளாவிய அளவில் இரண்டு பில்லியன் மக்களை சென்றடையக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட APIX என்ற வங்கி தொழில்நுட்பத்தை அவர் துவங்கி வைத்தார்.

## உலகளாவிய டிஜிட்டல் பொருளடக்க சந்தை (GDCM - Global Digital Content Market) மாநாடு 2018

- உலகளாவிய டிஜிட்டல் பொருளடக்க சந்தை (Global Digital Content Market-GDCM) மாநாடு 2018 ஆனது 'ஆசியா பசிபிக் பிராந்தியத்தில்' கவனம் கொண்டுள்ள வகையில் புது டெல்லியில் நடைபெற்றது.
- தொழில்துறை பங்குதாரர்கள் ஒன்றிணையவும், திரைப்படம், இசை, விளையாட்டு மற்றும் படைப்பாற்றல் துறைகளில் புதிய அணுகுமுறைகளில் விவாதிக்கவும் ஒரு மேடையை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் தொழில்துறை கொள்கை மற்றும் ஊக்குவிப்புத் துறையால் (DIPP – Department of Industrial Policy and Promotion) ஏற்பாடு செய்யப்பட்டது.
- திரைப்படங்கள், இசை மற்றும் ஊடகங்களில் மிகவும் வலுவான ஆக்கப் பூர்வமான தொழில்துறையைக் கொண்டிருப்பதன் காரணமாக இம்மாநாட்டினை நடத்தும் நாடாக இந்தியாவானது உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பினால் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## குரங்கினத்தின் உயிர்ப் படிமம் – கட்ச் படுகை

- குஜராத் மாநிலத்தின் கட்ச் படுகையில் ஒரு மேல்தாடை உயிர்ப் படிமத்தை தொல்லியல் துறை ஆய்வாளர்கள் கண்டெடுத்துள்ளனர்.
- இது தீபகற்ப இந்தியாவில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஒரே பழமையான மற்றும் குரங்கினத்தினுடையதாக அறியப்பட்ட ஒரே உயிர்ப் படிமம் ஆகும்.



- இந்த மேல்தாடையானது 11-10.8 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த (மியோசின்) சிவாபித்தேகஸ் என்ற விலங்கினத்தின் வயது முதிர்ந்த (மனிதக் குரங்கு குடும்பம்) குரங்கினுடையதாகும்.

## இன்டெக்ஸ் தெற்காசியா

- இன்டெக்ஸ் தெற்காசியாவின் நான்காவது பதிப்பு இலங்கையின் கொழும்புவில் தொடங்கி வைக்கப்பட்டது.
- இது தெற்காசியாவின் மிகப்பெரிய சர்வதேச அளவிலான ஜவுளி கொள்முதல் கண்காட்சி ஆகும்.
- இந்த நிகழ்வானது வேர்ல்டெக்ஸ் (Worldex) இந்திய நிறுவனத்தால்
    - பருத்தி ஆடை ஏற்றுமதி ஊக்குவிப்பு மன்றம் (TEXPROCIL - Cotton Textiles Export Promotion Council)
    - இந்திய சில்லறை விற்பனையாளர் சங்கம்
    - இந்திய ஆடைகள் உற்பத்தியாளர்கள் சங்கம்
    - இந்திய ஜவுளித் தொழில் கூட்டமைப்பு

  ஆகியவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## நகர்ப்புற உள்கட்டமைப்பு குறித்த தெற்காசிய பிராந்திய மாநாடு

- "நகர்ப்புற உள்கட்டமைப்பு: அரசு மற்றும் தனியார் கூட்டு மற்றும் நகராட்சிக் கழகத்தின் நிதியியல் புத்தாக்கங்கள்" குறித்த தெற்காசிய மண்டல மாநாடு புதுடெல்லியில் நடைபெற்றது.
- இது நிதி ஆயோக் அமைப்பால்
    - ஆசிய மற்றும் பசிபிக்கிற்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணையம் (UNESCAP - United Nations Economic and Social Commission for Asia and the Pacific) மற்றும்
    - ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB - Asian Development Bank)

  ஆகியவற்றுடன் கூட்டிணைந்து நடத்தப்பட்டது.
- இந்த மாநாடானது நகர்ப்புற உள்கட்டமைப்பின் கண்ணோட்டங்கள் மற்றும் அடுத்த கட்டங்கள் குறித்த முக்கிய பிரச்சினைகளைப் பற்றி விவாதித்தது.
- தெற்காசிய பிராந்தியங்களின் பங்கேற்புகளுடன் தெற்காசிய பிராந்திய மாநாடு நடைபெறுவது இதுவே முதன்முறையாகும்.

## ISPRL மற்றும் ADNOC-க்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

- அபுதாபி தேசிய எண்ணெய் நிறுவனமானது (Abu Dhabi National Oil Company -ADNOC) சமீபத்தில் இந்திய யுக்திசார் பெட்ரோலிய இருப்பு நிறுவனங்களுடன் (Indian Strategic Petroleum Reserves Ltd- ISPRL) புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் அபுதாபியில் கையொப்பமிட்டுள்ளது.
- இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது கர்நாடகாவின் உடுப்பி மாவட்டத்தில் உள்ள படூர் நிலத்தடி சேமிப்பு வசதியில் ADNOC-ன் கச்சா எண்ணெயை சேமிப்பதற்கான சாத்தியக்

கூறுகளை ஆய்வு செய்வது குறித்ததாகும்.

- இந்தியாவின் யுக்திசார் பெட்ரோலிய இருப்புத் திட்டத்தில் கச்சா எண்ணெய் மூலம் முதலீடு செய்யும் ஒரே வெளிநாட்டு எண்ணெய் & எரிவாயு நிறுவனம் ADNOC ஆகும்.
- ISPRL ஆனது இந்திய அரசிற்குச் சொந்தமான நிறுவனமாகும். நொய்டாவைத் தலைமையகமாகக் கொண்ட இந்நிறுவனமானது அவசரகாலத் தேவைகளுக்காக கச்சா எண்ணெயினை சேமிப்பதற்காக உத்தரவிடப்பட்டு இருக்கின்றது.

## இந்திய சமூகப்பணி காங்கிரஸ்

- ஆறாவது இந்திய சமூகப் பணி காங்கிரஸ் புது டெல்லியில் நடைபெற்றது.
- இது கீழ்க்காண்பவற்றால் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
    - இந்தியாவின் தொழிற்சார் சமூகப் பணியாளர்கள் தேசிய சங்கம் (NAPSWI - National Association of Professional Social Workers in India) மற்றும்
    - டெல்லி பல்கலைக் கழகத்தின் சமூகப் பணித் துறை (Delhi School of Social Work)
- 2018 காங்கிரஸின் கருத்துரு "மனித மேம்பாடு மற்றும் சமூக உள்ளடக்கம்: சமூகப் பணிக்கான கல்வி மற்றும் நடைமுறைக்கு தவிர்க்க இயலாதவை" என்பதாகும்.
- இந்தியாவில் சமூகப் பணி, கல்வி மற்றும் ஆராய்ச்சி பற்றிய விவகாரங்களை கலந்துரையாடுவதற்காக சமூக அளவில் சகோதரத்துவத்தைக் கொண்டு வருவதே இந்த முன்முயற்சியின் நோக்கமாகும்.
- இந்த மாநாடு முதன்முதலில் 2013ல் நடத்தப் பட்டது.

## மாலத்தீவின் கடலோரக் காவல்படைக் கப்பல் - ஹுராவீ

- விசாகப்பட்டினத்தில் உள்ள கடற்படையின் கப்பல் சீரமைப்புத் தளத்தில் மாலத்தீவின் கடலோரக் காவல் படையின் (MCGS - Maldivian Coast Guard Ship) கப்பலான ஹுராவீயின் மறுசீரமைப்பு வெற்றிகரமாக முடிக்கப்பட்டு இந்திய கடற்படையால் முறையாக அவர்களிடம் அது ஒப்படைக்கப் பட்டது.
- இது இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் (IOR - Indian Ocean Region) உள்ள நட்பு நாடுகளின் கடற்படைகளோடு இராஜ்ஜிய ரீதியிலான உறவுகளை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் முன்முயற்சியாக எடுக்கப் பட்டது.
- இந்த கப்பலானது முதலில் மார்ச் 2001ல் கொல்கத்தாவின் கார்டன் ரீச் ஷிப் பில்டர் மற்றும் இஞ்சினியர்ஸ் என்ற நிறுவனத்தால் டிரிங்கட் வகுப்பு ரோந்து கப்பலாக கட்டப்பட்டு INS திலன்சங்க் என்ற பெயரில் முதல்முறையாக செயல்முறைப் படுத்தப்பட்டது.
- பின்னர் ஏப்ரல் 2006-ல் இந்திய அரசால் அது மாலத்தீவிற்குப் பரிசாக அளிக்கப்பட்டது.

## இந்தியாவின் யானைகளுக்கான முதல் மருத்துவமனை

- உத்தரப் பிரதேசத்தில் மதுராவில் உள்ள சுர்முரா கிராமத்தில் இந்தியாவின்

யானைகளுக்கான முதல் பல்நோக்கு மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டது.

- இது வைல்ட்லைப் SOS (Wildlife SOS) என்ற நிறுவனத்தால் மேம்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்நிறுவனம் 2010-ம் ஆண்டில் முதல் யானை பாதுகாப்பு மற்றும் நல மையத்தை ஏற்படுத்தி இருந்தது.
- இந்த மருத்துவமனை அந்த யானை பாதுகாப்பு மற்றும் நல மையத்திற்கு அருகே அமைக்கப்பட்டிருக்கின்றது.
- வேர்ல்ட்லைப் SOS என்பது இயற்கைப் பாதுகாப்புத் துறையில் உள்ள ஒரு இலாப நோக்கம் சாராத அமைப்பாகும்.
- இது 1995 ஆம் ஆண்டு இந்தியாவின் இயற்கையான பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்காகவும் நாட்டில் இடர்பாடுகளில் உள்ள வனவுயிர்களை மீட்டு அவற்றுக்கு மறுவாழ்வு அளிக்கும் முதன்மையான நோக்கத்திற்காகவும் ஆரம்பிக்கப்பட்டது.

## மத்திய மற்றும் மாநிலப் புள்ளியியல் அமைப்புகளின் 26-வது மாநாடு

- இமாச்சலப் பிரதேசத்தின் தர்மசாலாவில் மத்திய மற்றும் மாநில புள்ளியியல் அமைப்புகளின் 26-வது மாநாடு நடத்தப்பட்டது.
- இந்த இரண்டு நாள் மாநாடு மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- இவ்வருட மாநாட்டின் கருத்துருவானது "அலுவல் பூர்வமான புள்ளியியல் தரவுகளில் தர நிர்ணயம்" என்பதாகும்.

## ஆடி மகோத்சவ திருவிழா

- 2018 ஆம் ஆண்டு நவம்பர் 16-ம் தேதியன்று, தேசியத் தலைநகரான தில்லியில் 15 நாள் ஆடி மகோத்சவ திருவிழா துவங்கியது.
- இவ்வருடத்தின் விழாவிற்கான கருத்துரு "பழங்குடியினர் கலாச்சாரம், கைவினைப் பொருட்கள், சமையற்கலை மற்றும் வர்த்தகம் ஆகிய உணர்வுகளைக் கொண்டாடுதல்" என்பதாகும்.
- டெல்லி ஹாத் மற்றும் மத்தியப் பூங்கா என இத்திருவிழாவிற்கு என்று புதுதில்லியில் மொத்தம் இரண்டு இடங்கள் இருக்கின்றன.
- பழங்குடியினரின் கைவினைப் பொருட்கள், கலை, ஓவியங்கள், துணி, நகை ஆகிய பொருட்களின் விற்பனைக் கூடமாகவும் கண்காட்சிக் கூடமாகவும் ஏறக்குறைய நூற்றுக்கும் மேற்பட்ட அளவில் இத்திருவிழா காட்சிக் கூடங்களைக் கொண்டிருக்கும்.

## திரிபுரா போராளிகள் அமைப்பை தடைசெய்ய தீர்ப்பாயம் முடிவு

- திரிபுராவில் உள்ள 2 போராளிகள் அமைப்பைத் தடை செய்வது குறித்து முடிவு செய்வதற்காக டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதி சுரேஷ் கைட்-இன் தலைமையில் ஒரு

தீர்ப்பாயத்தினை மத்திய உள்துறை அமைச்சகம் அமைத்துள்ளது.

- இது சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.
- பின்வரும் 2 அமைப்புகள் அந்த தீவிரவாதக் குழுக்கள் ஆகும்
    - திரிபுராவின் தேசிய விடுதலை முன்னணி (NLFT)
    - அனைத்து திரிபுரா புலி படை (ATTF)
- திரிபுராவின் அந்த 2 போராளிகள் அமைப்புகளுக்கு அக்டோபர் 2018-ல் அவர்களின் வன்முறை மற்றும் அரசுக்கெதிரான நடவடிக்கைகள் காரணமாக 5 ஆண்டுகளுக்கு மத்திய அரசால் புதிய தடை விதிக்கப்பட்டது.
- இந்தக் கிளர்ச்சியாளர்கள் குழுவானது '1956 ஆம் ஆண்டுக்குப் பிறகு மாநிலத்திற்குள் வந்த வெளிநாட்டவர்களை வெளியேற்ற வேண்டும்' என்ற குறிக்கோளுடன் உருவாக்கப்பட்டன. இவை முதன்முதலில் 1997-ல் தடை செய்யப்பட்டன.

## 9 வது வருட இராணுவம் மற்றும் பாதுகாப்பு குறித்த பேச்சுவார்த்தை

- இந்தியா மற்றும் சீனா ஆகியவற்றிற்கிடையேயான 9-வது ஆண்டு இராணுவம் மற்றும் பாதுகாப்பு குறித்த பேச்சுவார்த்தை பீஜிங்கில் நடைபெற்றது.
- இருநாட்டு பாதுகாப்பு பிரதிநிதிகளுக்குமிடையே நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையானது
    - பாதுகாப்புத் துறை செயலாளர் சஞ்சய் மித்ரா மற்றும்
    - சீனாவின் மத்திய இராணுவ ஆணைய கூட்டு அலுவலர் துறையின் துணைத் தலைவர்

    ஆகியோரால் தலைமை தாங்கப்பட்டது.
- இந்த 9வது வருடாந்திர இராணுவம் மற்றும் பாதுகாப்பு பேச்சு வார்த்தையானது டோக்லாம் சச்சரவையடுத்து ஒரு வருட இடைவெளிக்குப் பின்னர் நடைபெற்றது.
- இந்த பாதுகாப்பு பேச்சுவார்த்தையானது இரு நாடுகளின் சிறப்பு பிரதிநிதிகளுக்கிடையேயான 21-வது எல்லை சம்பந்தப்பட்ட பேச்சு வார்த்தைகளுக்கு முன்னதாக சீனாவின் துஜியாங்யான் நகரத்தில் நடைபெற்றது.

## தொழில் தொடங்குவதற்கு உகந்த சூழலுக்கான அறைகூவல்

- புது தில்லியில் தொழில் தொடங்குவதற்கு உகந்த சூழலை மேம்படுத்துவதற்காக பெரும் அறைகூவலை ஸ்டார்ட் அப் இந்தியா தளத்தில் பிரதமர் தொடங்கினார்.
- இந்த முன்முயற்சியானது அரசின் நடைமுறைகளில் சீர்திருத்தம் கொண்டு வருவதற்காகவும் தொழில் தொடங்குவதற்கு உகந்த நாடுகளின் பட்டியலில் இந்தியாவின் தரத்தை உயர்த்துவதற்காகவும் புதிய தொழில்நுட்பம் மீதான புத்தாக்க கருத்துகளை வரவேற்கும்.
- இது தொழில் தொடங்குவதற்கு உகந்த நாடுகளின் பட்டியலில் இந்தியா 50-வது இடத்தை

அடைவதற்கான பிரதம அமைச்சரின் தொலைநோக்கு இலக்கின் ஒரு பகுதியாகும்.

## பருவநிலை மாற்றம் மீதான பேசிக் (BASIC) நாடுகளின் அமைச்சர்களுக்கிடையேயான சந்திப்பு

- பருவநிலை மாற்றம் மீதான பேசிக் (BASIC) நாடுகளின் அமைச்சர்களுக்கிடையேயான 27-வது சந்திப்பு புது தில்லியில் நடைபெற்றது.
- இது பருவநிலை மாற்றத்தை எதிர் கொள்வதற்கான பாரீஸ் ஒப்பந்தத்தை திறம்பட செயல்படுத்துவதற்கு வளரும் நாடுகளுக்கு வளர்ச்சி அடைந்த நாடுகள் ஆதரவு அளிப்பதை வலியுறுத்துகிறது.
- 2018 ஆம் ஆண்டின் டிசம்பரில் போலந்தின் கோட்டாவைசில் ஐ.நா. உறுப்பினர்கள் மாநாடு (COP - Conference of Parties) நடைபெறவிருக்கும் நிலையில் இச்சந்திப்பு நடைபெற்றது.
- 2019 ஆம் ஆண்டில் பேசிக் நாடுகளின் அமைச்சர்களுக்கிடையேயான சந்திப்பை பிரேசில் நடத்தவிருக்கிறது.
- பேசிக் நாடுகளானது பிரேசில், தென் ஆப்பிரிக்கா, இந்தியா மற்றும் சீனா ஆகிய 4 பெரிய புதிதாக தொழில்மயமான நாடுகளின் கூட்டணியாகும்.
- இது 2009 ஆம் ஆண்டு நவம்பரில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தினால் உருவாக்கப்பட்டது.

## ஜஷ்னே பச்பான்

- புது டெல்லியில் உள்ள சம்முக், அபிமஞ்ச், ஆப்கி கல்ப் மற்றும் லிட்டில் தியேட்டர் குரூப் அரங்குகளில் குழந்தைகளுக்கான நாடகத் திருவிழாவான ஜஷ்னே பச்பான் என்ற நிகழ்ச்சியின் 14வது பதிப்பு நடைபெற்றது.
- இது தேசிய நாடகப் பள்ளியின் (NSD – National School of Drama) கல்வியில் நாடகம் (Theatre in Education-TIE) என்ற நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.
- டிஜிட்டல் ஊடகங்களின் காரணமாக நவீன சகாப்தத்தில் நாடகங்கள் அதன் முக்கியத்துவத்தை இழந்ததையடுத்து அதன் மேன்மையை மீண்டும் பெறச் செய்வதே இதன் நோக்கமாகும்.
- இந்நிகழ்ச்சி இந்தியாவிலிருந்து 21 நாடகத் தயாரிப்புகளையும் இலங்கை (வார்த்தைகளற்றது ) சுவிட்சர்லாந்து (ஆங்கிலம்) மற்றும் இந்தோனேஷியா (ஜாவானிஸ்) உள்ளிட்ட 3 வெளிநாட்டு குழுக்கள் இதில் பங்கேற்பதையும் உறுதி படுத்தும்.

## தேசிய பெண்கள் ஆணையத்தின் 3 புதிய உறுப்பினர்கள்

- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது 1990 ஆண்டு தேசிய பெண்கள் ஆணையச் சட்டத்தின் (NCW – National Commission of Women) பிரிவு 3-ன் படி தேசிய பெண்கள் ஆணையத்திற்கு 3 புதிய உறுப்பினர்களைப் பரிந்துரை செய்துள்ளது.

- சந்திரமுகி தேவி, சோசோ ஷைசா மற்றும் கமலேஷ் கௌதம் ஆகியோர் பரிந்துரை செய்யப்பட்ட அந்த மூன்று உறுப்பினர்கள் ஆவார்.
- இந்த மூன்று புதிய நியமனங்கள் தற்போது NCW அமைப்பில் இரண்டு காலியிடங்களை ஏற்படுத்தும்.
- தற்போதைய NCW-ன் தலைவராக ரேகா ஷர்மா உள்ளார்.

## மூப்பியல் மற்றும் முதியோருக்கான மருத்துவம் மீதான 4-வது சர்வதேச கருத்தரங்கு

- மூப்பியல் மற்றும் முதியோருக்கான மருத்துவம் மீதான 4-வது சர்வதேசக் கருத்தரங்கை டாக்டர் ஜித்தேந்திர சிங் தொடங்கி வைத்தார்.
- புது தில்லியின் அனைத்து இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தில் (All India Institute of Medical Science - AIIMS) நடைபெற்ற ஆசிய பசிபிக் முதியோருக்கான மருத்துவ அமைப்பு கருத்தரங்குடன் இணைத்து இக்கருத்தரங்கும் நடத்தப் பட்டது.
- இக்கருத்தரங்கின் தொலைநோக்குப் பார்வையானது உலகம் முழுவதும் உள்ள முதியோர்கள் நலனை மேம்படுத்துவதாகும்.
- இக்கருத்தரங்கானது, "எதிர்காலத்தில் முதியோருக்கான மருத்துவ நடைமுறைகள் - தயாராக உள்ளீர்களா?" என்ற கருத்துருவுடன் நடைபெற்றது.
- இக்கருத்தரங்கானது சுகாதார நலத்துறை நிபுணர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் அவர்களுக்கு மீண்டும் பயிற்சியளித்தல் ஆகியவற்றின் மீது கவனத்தை செலுத்துகிறது.

## தொழிற்சாலை பூங்கா தரமிடல் அமைப்பு

- தொழிற்சாலைப் பூங்கா தரமிடல் அமைப்பு மீதான அறிக்கையை மத்திய வணிகத் துறை அமைச்சர் சுரேஷ் பிரபு வெளியிட்டார்.
- இந்த அறிக்கையானது மத்திய வணிக மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தொழில் கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையால் (DIPP - the Department of Industrial Policy & Promotion) தயாரிக்கப்பட்டது.
- இது உலகளாவிய தரநிலைகளுடன் பூங்காக்களை ஒப்பிட்டு மதிப்பீடு செய்வதால் தொழிற்துறையின் போட்டித் தன்மையை அதிகரிக்கவும் உற்பத்தித் துறையை மேம்படுத்தவும் இது உதவிடும்.
- இந்த அமைப்பானது கழிவு நீர் நீக்கம் மற்றும் சுத்திகரிப்பு, நீர் சுத்திகரிப்பு போன்ற பல்வேறு அளவுருக்களைக் கொண்டு 200 பூங்காக்களை ஆய்வு செய்யவிருக்கிறது.

## அனைத்து இந்திய காவல்துறை தலைவர்களின் தகவல் தொடர்பு கருத்தரங்கு

- இரண்டு நாட்கள் நடைபெற்ற இக்கருத்தரங்கானது தகவல் தொடர்பு மற்றும் இரயில்வே ஆகியவற்றிற்கான மத்திய இணையமைச்சரான மனோஜ் சின்ஹாவால் புது தில்லியில் தொடங்கி வைக்கப்பட்டது.

- இக்கருத்தரங்கின் கருத்துருவானது, “காவல் துறை தகவல் தொடர்புகளை நவீனப்படுத்துதல் மற்றும் சவால்களைக் களைதல்” என்பதாகும்.

## வஜ்ரா பிரகார்

- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையேயான 2018 ஆம் ஆண்டின் சிறப்புப் படைப் பயிற்சியான “வஜ்ரா பிரகார்” என்று பெயரிடப்பட்ட பயிற்சியானது இராஜஸ்தானின் பிகானிரில் உள்ள மகாஜன் ஆயுதப் படைப் பிரிவு தளத்தில் தொடங்கியது.
- தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளின் சிறப்புப் படைகளுக்கு இடையே இப்பயிற்சி நடத்தப்பட்டது.

## சர்வதேச சுற்றுலா வர்த்தக மையம் - 2018

- திரிபுராவின் தலைநகரான அகர்தலாவில் சர்வதேச சுற்றுலா வர்த்தக மையத்தின் 7-வது பதிப்பு நடைபெற்றது.
- இது வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் திரிபுரா மாநில அரசின் சுற்றுலாத் துறைகளுடன் இணைந்து மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- இந்த ஆண்டின் கருத்துரு ”சாகச சுற்றுலா” (Adventure Tourism) என்பதாகும்.
- இது உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் வடகிழக்குப் பிராந்தியத்தின் சுற்றுலாத் திறனை சிறப்பித்துக் காட்டும் நோக்குடன் வடகிழக்குப் பிராந்தியத்தில் ஏற்பாடு செய்யப்படும் ஒரு வருடாந்திர நிகழ்வாகும்.

## உடான் அங்கீகாரம் ரத்து - ஏர் ஒடிசா

- இந்திய விமான நிலைய ஆணையமானது (AAI - Airports Authority of India) குறைந்த கட்டணமுடைய விமான சேவை நிறுவனமான ஏர் ஒடிசாவின் உடான் (UDAN - Ude Desh ka Aam Nagrik) உரிமத்தை அதன் ஒழுங்கற்ற விமான சேவையின் காரணமாக 7 விமான நிலையங்களுக்கு ரத்து செய்துள்ளது.
- ரத்து செய்யப்பட்ட 7 விமான நிலையங்களாவன : ஜார்சுகுடா, ராய்ப்பூர், ராய்கர், பிலாஸ்பூர், அம்பிகாபூர், ஜகதல்பூர் மற்றும் விசாகப்பட்டினம்.
- ஒடிசாவில் சமீபத்தில் திறக்கப்பட்ட ஜார்சுகுடா விமான நிலையத்தின் சேவை வழங்கும் ஒரே விமான இயக்கு நிறுவனமாக இது இருந்தது.

## 50-வது மனதின் குரல் (மான் கி பாத்) அத்தியாயம்

- பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று (25 நவம்பர் 2018 ) தனது பிரபல வானொலி நிகழ்ச்சியான மான் கி பாத் எனப்படும் மனதின் குரல் என்ற நிகழ்ச்சியின் 50வது அத்தியாயத்தில் உரையாற்றினார்.
- இந்த நிகழ்ச்சியானது 3, அக்டோபர் 2014-ல் தொடங்கப்பட்டது.

- இந்நிகழ்வானது ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக் கிழமைகளில் ஒளிபரப்பப்படுகின்றது.

## பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா

- எண்முறை பொருளாதார உள்ளடக்கத்திற்கான மையத்தின்படி (Centre for Digital Financial Inclusion- CDFI) அரசானது பிரதம மந்திரி மாத்ரு வந்தனா திட்டத்தின் (Pradhan Mantri Matru Vandana Yojana PMMVY) கீழ் 48.5 லட்சம் தாய்மார்களுக்கு 1600 கோடி ரூபாயை வழங்கி இருக்கின்றது.
- இந்த செயல்முறையானது CDFI மையத்தால் பிரதம மந்திரி மாத்ரு வந்தனா திட்டத்தின் பொதுப் பயன்பாட்டு மென்பொருள் அமைப்பு (PMMVY – Common Application Software/CAS) வழியாக கருத்தாக்கம் செய்யப்பட்டு வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

### *பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா*

- 1 ஜனவரி 2017லிருந்து செயல்படத் தொடங்கிய இத்திட்டத்தின்படி,
  - கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு அவர்களின் முதல் குழந்தைக்கு 3 தவணையாக நேரடி பயன் பரிமாற்ற (DBT - Direct Benefits Transfer) முறையில் ரூ. 5000 வழங்கப்படும்.
- இத்திட்டமானது மத்திய மற்றும் மாநில அரசு அல்லது பொதுத் துறை நிறுவனங்களில் முறைசார் முறையில் பணிபுரிவோர்களுக்குப் பொருந்தாது.

**Status check**

A look at the Pradhan Mantri Matru Vandana Yojana

- Under the scheme, monetary benefits are extended to all pregnant women and lactating mothers, except those in government service, for the safe delivery of the first child
- On average, eligible beneficiaries get ₹6,000 each in three instalments
- The cash incentive is provided as compensation for wage loss, so that the beneficiary can take adequate rest before and after the delivery and immunisation of her first child




- இத்திட்டமானது மத்திய அரசால் நிதியுதவி அளிக்கப்படும் திட்டமாகும். இதன் செலவு பகிர்வு வீதமானது
  - மத்திய அரசிற்கும் மாநிலங்கள் மற்றும் சட்டசபையுடன் கூடிய யூனியன் பிரதேசங்களுக்கும் இடையே 60 : 40 என்றும்

- வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் 3 இமாலய மாநிலங்களுக்காக 90 : 10 என்றும்
- சட்டசபையைக் கொண்டிராத யூனியன் பிரதேசங்களுக்கு 100% என்றும் இருக்கும்.

## கர்தார்பூர் சாஹிப் நடைபாதை

- பஞ்சாப் மாவட்டத்தின் குருதாஸ்பூரில் உள்ள மான் கிராமத்தின் இந்தியப் பகுதியில் கர்தார்பூர் நடைபாதையின் கட்டுமான பணிக்கு இந்தியக் குடியரசு துணைத் தலைவர் அடிக்கல் நாட்டினார்.
- இந்த நடைபாதையானது பாகிஸ்தானின் கர்தார்பூரில் உள்ள குருத்வாரா தர்பார் சாஹிப்பின் புனித தலத்திற்கு இந்திய சீக்கிய யாத்ரீகர்கள் நுழைவு இசைவுச் சீட்டு (visa) இன்றி செல்லக்கூடியப் பாதையை வழங்கும்.
- இந்த நடைபாதையானது இந்தியாவின் எல்லை மாவட்டமான குருதாஸ்பூரை பாகிஸ்தானின் குருத்வாரா தர்பார் சாஹிப் உடன் இணைக்கிறது.
- குருத்வாரா தர்பார் சாஹிப் என்பது பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள நரோவால் மாவட்டத்தின் ஷகர்கார் பகுதியில் உள்ள ராவி ஆற்றுப் படுகையில் அமைந்துள்ள 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குருத்வாரா ஆகும்.




- இந்த திட்டமானது இந்திய அரசால் நிதியளிக்கப்பட்டு இந்திய நெடுஞ்சாலைத்துறை ஆணையத்தால் (NHAI - National Highways Authority of India) உருவாக்கப்படும்.
- இந்த நடைபாதையினை கட்டுவதற்கான முடிவானது அடுத்த ஆண்டு (2019ல்) வரும் குருநானக் தேவின் 550-வது பிறந்தநாளை முன்னிட்டு மத்திய அமைச்சரவையால் எடுக்கப்பட்டுள்ளது.

### அமைச்சரவை ஒப்புதல்கள்

- இளைஞர்கள் விவகாரங்களில் ஒத்துழைப்பு நல்குவதற்காக இந்தியா மற்றும் தஜிகிஸ்தான் ஆகியவற்றிற்கிடையே 5 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியா மற்றும் உஸ்பெக்கிஸ்தானுக்கு இடையே அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகிய துறைகளில் கூட்டிணைந்து பணியாற்றுவதற்கான ஒரு ஒத்துழைப்பு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக இந்தியாவின் அடல் புத்தாக்க திட்டம் மற்றும் ரஷ்யாவின் நிதி "செயல்திறன் மற்றும் வெற்றி" (Fund "Talent and Success") ஆகியவற்றிற்கிடையேயான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவைக் குழுவானது ஒப்புதல் அளித்துள்ளது.
- நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சட்ட அளவீட்டியல் மீதான இந்தியா மற்றும் மொரீஷியஸ் ஆகியவற்றிற்கிடையேயான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் அளித்துள்ளது.

### சிபிஐ-க்கு தடை

- ஆந்திரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காள மாநில அரசுகள் தங்கள் மாநிலங்களில் சிபிஐ-யானது அதன் நடவடிக்கைகளை நடத்த வழங்கியிருந்த பொது அனுமதியை திரும்பப் பெற்றுள்ளன.
- NIA, 2008 (National Investigation Agency) என்ற தனது பிரத்தியேக சட்டத்தின் மூலம் நிர்வகிக்கப்பட்டு நாடு முழுவதும் தனது அதிகார வரம்பைக் கொண்டுள்ள தேசிய புலனாய்வு அமைப்பு போலல்லாது,
    - சிபிஐ-யானது டெல்லி சிறப்பு காவல்துறை நிறுவுதல் சட்டம், 1946 மூலமாக நிர்வகிக்கப்படுகிறது.
- இது சம்பந்தப்பட்ட மாநிலங்களில் விசாரணையை நடத்த அந்தந்த மாநில அரசின் ஒப்புதலைப் பெறுவதை கட்டாயமாக்குகிறது.

## சர்வதேசச் செய்திகள்

### பிரேசிலின் புதிய அதிபர் - ஜெய்ர் போல்சனாரோ

- முன்னாள் இராணுவத் தளபதியான ஜெய்ர் போல்சனாரோ பிரேசிலின் புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- அதிபர் தேர்தலில் 44.8% வாக்குகளைப் பெற்றிருந்த எதிரணியின் போட்டியாளரான தொழிலாளர் கட்சியின் பெர்னான்டோ ஹட்டாட்டை முந்தி 55.2% வாக்குகளைப் பெற்று

ஜெய்ர் வெற்றி பெற்றுள்ளார்.

- இவர் மைக்கேல் டெமரையடுத்து பதவியேற்கவுள்ளார்.



- பிரேசிலில் 1964-1985 ஆண்டுகளில் இராணுவ சர்வாதிகார ஆட்சி முடிவடைந்த பின்னர் இராணுவப் பின்னணியுடைய முதல் அதிபராக பதவியேற்பவர் இவரேயாவார்.

## மண்டேலா பயிற்சித் திட்டம்

- முன்னாள் தென்னாப்பிரிக்க குடியரசுத் தலைவர் நெல்சன் மண்டேலாவை கௌரவப்படுத்தும் விதமாக இந்தியா உறுப்பினராக உள்ள, இந்தியப் பெருங்கடல் கரையோர அமைப்பு (Indian Ocean Rim Association - IORA) ஒரு பயிற்சித் திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றது.
- இந்த IORA அமைப்பிற்கான மூல காரண கர்த்தாவாக மண்டேலா பெரிதும் மதிக்கப்படுகின்றார்.
- டர்பனில் நடந்த 18வது இந்தியப் பெருங்கடல் கரையோர அமைப்பின் கூட்டத்தின் இறுதியில் "IORA நெல்சன் மண்டேலா Be the Legacy" என்ற பயிற்சித் திட்டம் அறிவிக்கப்பட்டது.
- இந்த திட்டம், IORA உறுப்பினர் நாடுகளிலிருந்து 30 வயதிற்குட்பட்ட இளைஞர்களை அவர்கள் தேர்ந்தெடுத்த கல்வித் துறையில் வேலை அனுபவத்துடன் அவர்களை மேம்படுத்திட எண்ணுகின்றது.

### *இந்தியப் பெருங்கடல் கரையோர அமைப்பு*

- IORA என்பது இந்தியப் பெருங்கடலைச் சுற்றியுள்ள கரையோர நாடுகளைக் கொண்டுள்ள சர்வதேச அமைப்பாகும். இதன் ஒருங்கிணைப்புச் செயலகம் மொரீசியஸின் எபேனேவில் அமைந்திருக்கின்றது.
- இந்த அமைப்பு நெல்சன் மண்டேலாவின் தீர்க்க தரிசனத்தால், 1997 ஆம் ஆண்டு மார்ச் மாதம், 14 உறுப்பு நாடுகள் கொண்ட பிராந்திய ஒத்துழைப்பிற்கான இந்தியப் பெருங்கடல் கரையோர சங்கமாக ஏற்படுத்தப்பட்டது.
- தற்சமயம் இது 21 உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்றது.

## வீடியோசிட்டா - 2018

- மெய்நிகர் உண்மைத் தோற்றம், அனிமேஷன், திரைப்படக் காட்சியமைப்பு மற்றும் காணொளி விளையாட்டுகள் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தும் நிகழ்வான வீடியோசிட்டா 2018 (Videocittà 2018) என்பதில் இந்தியாவும் ஒரு பங்குதாரர் நாடாகும்.
- இது ரோம் திரைப்பட விழாவாலும், மெர்கதோ இண்டர்நேஷனலே டெல் ஆடியோவிசிவோ (Mercato Internazionale dell'Audiovisivo/ MIA - the International Audio-Visual Market) என்ற அமைப்பாலும் இணைந்து நடத்தப்பட்டது.
- ரோமில் நடந்த 2018 வீடியோசிட்டாவில் இந்தியாவின் பங்கேற்பானது மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு அந்த அமைச்சகத்தின் சார்பாக பிக்கி (FICCI - Federation of Indian Chambers of Commerce and Industry) என்ற அமைப்பால் ஒருங்கிணைக்கப்பட்டது.

## சிறிய இந்தியா வாயில் துவக்கம்

- இந்தோனேஷியாவில் சமீபத்தில் அதன் நான்காவது மிகப்பெரிய நகரமான மேதான் நகரத்தில் கம்புங் மதராஸ் அல்லது மதராஸ் கிராமப் பகுதியில், இம்மாதிரியான அமைப்பில் முதல்முறையாக, சிறிய இந்தியா வாயில் (Little India Gate) என்பது துவக்கி வைக்கப் பட்டிருக்கின்றது.
- இந்த வாயில் மேதான் நகரத்தின் முன்னேற்றத்தில் இந்தியச் சமூகத்தின் பங்களிப்பை அங்கீகரிக்கின்றது.
- கம்புங் மதராஸ் பகுதியானது நகரத்தின் முக்கியப் பழங்குடியின மக்களைக் கொண்டிருக்கும் பகுதிகளில் ஒன்றாகும்.
- 19வது நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் மேதான் நகரத்தில் குடியமர்ந்த மூதாதையர்களின் வழித்தோன்றல்களான இந்திய வம்சாவளி மக்களின் மிகப்பெரும் எண்ணிக்கையை இது கொண்டிருக்கின்றது.
- தைப்பூசம், தமிழ்ப்புத்தாண்டு, பொங்கல் மற்றும் தீபாவளி ஆகிய இந்து மற்றும் தமிழ் பண்டிகைகளுக்கான ஒரு சங்கமிக்கும் களமாக கம்புங் மதராஸ் உருவெடுத்திருக்கின்றது.

## மிகப்பெரும் யுத்தச் சிங்கங்களின் சிலைகள்

- இங்கிலாந்தின் மேற்கு நிலப் பகுதியில் உள்ள ஸ்மெத்விக் நகரத்தில் முதல் உலகப் போரில் பங்கேற்ற இந்திய சிப்பாய்களை கௌரவப் படுத்துவதற்காக மிகப்பெரும் யுத்தச் சிங்கங்களின் சிலைகள் திறந்து வைக்கப்பட்டன.
- ஸ்மெத்விக் குருத்வாராவின் குருநானக் இந்த நினைவுச் சின்னத்தை திறந்து வைத்தார்.



- பிரிட்டிஷ் இந்திய ராணுவத்தின் ஒரு பகுதியாக உலகப் போர்களிலும் பிற யுத்தங்களிலும் பிரிட்டனுக்காக போரிட்ட அனைத்து சமயங்களையும் சார்ந்த லட்சக்கணக்கான தெற்காசிய ராணுவ வீரர்களால் செய்யப்பட்ட தியாகங்களை கௌரவப்படுத்தும் நோக்கில் இச்சிலைகள் டர்பன் அல்லது தலைப்பாகை அணிந்த சீக்கிய வீரரை உருவகப் படுத்துகின்றன.
- இந்த 10 அடி உயரமுடைய வெண்கலச் சிலை, 1918ம் ஆண்டு நவம்பர் மாதம் நிறைவுற்ற முதல் உலகப் போரின் 100வது தினத்தை அனுசரிக்கின்ற வகையில் திறந்து வைக்கப்பட்டது.

## கொரிய கடல் பயிற்சித் திட்டம்

- தென் கொரியாவும் அமெரிக்காவும் படைப்பிரிவுகள் மட்டத்திலான கடல் பயிற்சியை ஆரம்பிக்க இருக்கின்றன.
- 2018ம் ஆண்டு மே மாதத்திலிருந்து வடகொரியாவுடனான சமரச முயற்சிகளை மேம்படுத்தும் நோக்கின் ஒரு பகுதியாக இப்பயிற்சி தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டு இருக்கின்றது.
- இந்த கூட்டாளிகள் 2018ம் நிதியாண்டில் கொரிய கடல் பயிற்சித் திட்டத்தின் 19 சுற்றுக்களை மேற்கொள்ள திட்டமிட்டு இருந்தனர். ஆனால் 11 சுற்றுகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன.
- இப்பயிற்சி அமெரிக்காவின் மூன்றாவது கடல் அதிரடிப் படையிலிருந்தும் தென் கொரிய கடற் படையிலிருந்தும் 500 வீரர்களைக் கொண்டிருக்கும்.

## 5வது உலக பௌத்த மன்றம்

- புத்த மதத்தினருக்கான கலந்துரையாடல் மற்றும் கலாச்சார பீடங்களின் பாதுகாப்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் முன்மொழிதல்களோடு கிழக்கு சீனாவின் பியூஜியான் மாகாணத்தில் புத்தியான் நகரத்தில் 5வது உலக பௌத்த மன்றம் நிறைவு பெற்றது.
- 55 நாடுகளிலிருந்து 1000க்கும் மேற்பட்ட புத்த மதத்தினர்கள், அறிஞர்கள் மற்றும் பிரதிநிதிகள் இம்மன்றத்தில் பங்கு பெற்றனர்.

- இது சீனாவின் புத்தமத சங்கத்தாலும் சீனாவின் சமயக் கலாச்சார தொடர்பு சங்கத்தாலும் இணைந்து நடத்தப்பட்டது.




- உலக புத்த மன்றம் 2005 ஆம் ஆண்டு சீன நிலப்பகுதி, தைவான், ஹாங்காங் மற்றும் மக்கவோ ஆகிய இடங்களில் உள்ள புத்த வட்டாரங்களால் ஆரம்பிக்கப்பட்டது.

## பசியை ஒழிப்பதற்கு யுக்தி சார்ந்த கூட்டாண்மை

- உலகம் முழுவதும் 2030 ஆம் ஆண்டில் பசியை ஒழிப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு உதவுவதற்காக ஐ.நா.வின் உலக உணவுத் திட்டம் (UN's World Food Programme - WFP) மற்றும் சீனாவின் இணைய வழி வணிக நிறுவனமான அலிபாபா குழுமம் ஆகியவை இணைந்து யுக்தி சார்ந்த கூட்டாண்மையை உருவாக்கியுள்ளது.
- இந்த ஒப்பந்தத்தின்படி, அலிபாபா குழுமத்தின் க்ளவுட் கம்பியூட்டிங் (அ) மேகக் கணினிப் பிரிவான அலிபாபா க்ளவுடானது டிஜிட்டல் முறையிலான "உலக பசி வரைபடத்தை" உருவாக்க உலக உணவுத் திட்டத்துடன் இணைந்து பணியாற்றவிருக்கிறது.
- உலகத்தில் பசியால் வாடுபவர்கள் மற்றும் அதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஆகியவற்றை கண்காணிக்க இந்த வரைபடம் உதவும். 2030 ஆம் ஆண்டில் உலகெங்கிலும் பசியை ஒழிப்பது ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் ஒன்றாகும்.
- மேலும் அவசர காலங்களில் எதிர்வினையாற்றுவதற்கான நேரத்தை குறைப்பதையும் பணியின் செயல்திறனை அதிகரிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது

## தடை விதிப்பிலிருந்து இந்தியாவிற்கு விலக்கு - அமெரிக்கா

- அமெரிக்க அரசானது
  - ஈரானின் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ள சாபஹார் துறைமுகத்தின் வளர்ச்சி மற்றும்
  - நில எல்லையால் சூழப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானிற்கு இரயில்வே இணைப்பை

ஏற்படுத்துவதற்கான கட்டமைப்பு

ஆகியவற்றிற்காக சில தடை விதிப்புகளிலிருந்து இந்தியாவிற்கு விலக்கு அளித்துள்ளது.

- ஈரான் சுதந்திரம் மற்றும் பல்பெருக்க எதிர்ப்புச் சட்டம், 2012-ன் கீழ் ஈரான் மீது அமெரிக்கா எப்போதும் இல்லாத அளவு கடுமையான தடைகளை விதித்துள்ளதையடுத்து இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- ஆப்கானிஸ்தானிற்கு மறுகட்டமைப்பிற்கான உதவிகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை அளிப்பது தொடர்பாக இந்தியாவிற்கு தடை விதிப்புகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## பாகிஸ்தான் - சீனா அதிநவீன பேருந்து சேவை

- லாகூரிலிருந்து சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்தின் காஸ்கர் நகரத்திற்கு பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் வழியாக செல்லும் அதிநவீன பேருந்து சேவை ஒன்றை பாகிஸ்தானும் சீனாவும் ஆரம்பித்திருக்கின்றன.
- காஷ்மீரை நோக்கிய பேருந்து தனது முதல் பயணத்தை 2018 ஆம் ஆண்டு நவம்பர் 5-ம் தேதியன்று லாகூரில் உள்ள குல்பெர்க் என்ற இடத்திலிருந்து ஆரம்பித்தது.
- இது 60 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்புடைய சீனா-பாகிஸ்தான் பொருளாதார பெருவழிப் பாதையின் கீழ் இரு நாடுகளையும் சாலை வழியாக இணைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

## உலகின் பாதுகாப்பான இடங்கள் அறிக்கை

- "Which? Traval" என்ற நிறுவனத்தின் அறிக்கையின்படி ஐஸ்லாந்து ஆனது பயணம் செய்வதற்கான மிகவும் பாதுகாப்பான நாடாகும்.
- ஐஸ்லாந்து ஆனது குறைந்த இயற்கைப் பேரழிவு அபாயம் மற்றும் குறைந்த குற்ற விகிதங்கள் ஆகியவற்றுடன் அறிக்கையில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இது உலகெங்கிலும் உள்ள 20 பிரபலமான பயண இடங்களை பாதுகாப்பின் அடிப்படையில் தரவரிசைப் படுத்தியுள்ளது.
- ஐஸ்லாந்தையடுத்து ஐக்கிய அரபு அமீரகம், சிங்கப்பூர், ஸ்பெயின் மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவை முதல் 5 இடங்களைப் பிடித்துள்ளன.
- தென் ஆப்பிரிக்காவானது அதிக குற்ற விகிதம், சுகாதாரம் மற்றும் பயங்கரவாத அபாயங்களுடன் கடைசி இடத்தைப் பிடித்துள்ளது.
- துருக்கி இரண்டாவது மிக ஆபத்தான நாடாக தாய்லாந்திற்கு முன்னதாக உள்ளது.
- பட்டியலிடப்பட்ட 20 நாடுகளில் இந்தியா 17-வது இடத்தில் வைக்கப்பட்டு உள்ளது.
- குற்ற விகிதங்கள், பயங்கரவாத தாக்குதல்கள், இயற்கைப் பேரிடர்கள், மற்றும் சுகாதாரம் தொடர்புடைய காரணிகளைப் பரிசீலித்த பின்னர் இந்த தரவு தொகுக்கப்பட்டுள்ளது.
- இந்த தகவல்களானது

- குற்றவியல் விகிதங்கள் மீதான உலக பொருளாதார நிதியம்
- இயற்கைப் பேரிடர்கள் மீதான உலக அபாய அறிக்கை
- சுகாதாரம் மீதான “NHS fit for Travel” வலைதளம் மற்றும்
- பயங்கரவாத அபாயங்கள் குறித்த வெளியுறவுத்துறை அலுவலகங்களின் மதிப்பீடு

ஆகிய நிறுவனங்களின் அறிக்கைகளில் இருந்து பெறப்பட்டுள்ளன.

## WEF உலகளாவிய எதிர்கால மன்றங்கள்

- 2 நாள்கள் நடைபெறும் 3வது வருடாந்திர உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF – World Economic Forum) உலகளாவிய எதிர்கால மன்றங்களின் கூடுகை ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில் நடைபெற்றது.
- அதன் குறிக்கோளானது சிக்கலான உலகளாவிய சவால்களுக்கு பயன்படக் கூடிய புதிய யோசனைகள் மற்றும் மாதிரிகளை அடையாளம் காண்பதாகும்.
- இவ்வருட கூடுகையின் கருத்துரு “உலக மயமாக்கம் 4.0: நான்காம் தொழில்துறைப் புரட்சியின் காலத்தில் உலகளாவிய கட்டமைப்பை உருவாக்குதல்” என்பதாகும்.
- இந்தக் கூட்டத்தில் உருவாக்கப்பட்ட சிந்தனைகள் ஆனது 2019 ஆம் ஆண்டு ஜனவரியில் ஸ்விட்சர்லாந்தின் டாவோஸ்-க்ளோஸ்டர்ஸில் நடைபெறவுள்ள உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்திர கூடுகை மாநாடு 2019ல் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்படும்.

## ரஷ்யாவின் தெருவிற்கு கூடங்குளம் பெயர்

- ரஷ்யாவின் வோல்கோடான்ஸ்க் நகரத்தின் ஒரு வீதிக்கு கூடங்குளம் தெரு என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இந்தப் பாதையானது கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கான உபகரணங்களைத் தயார் செய்யும் அட்டாமஷ் ஆலைக்கு அடுத்ததாக அமைந்துள்ளது.
- தமிழ்நாட்டில் உள்ள கூடங்குளம் அணுமின் நிலையமானது
  - ரஷ்யாவின் ரோசாட்டம் அரசு அணுசக்திக் கழகம் மற்றும்
  - இந்திய அணுசக்திக் கழக நிறுவனம் (NPCIL - Nuclear Power Corporation of India Limited) ஆகியவற்றால் இணைந்து கட்டப்பட்டது.
- இது ரோசாட்டம் அரசு அணுசக்தி நிறுவனத்தின் இயந்திர தயாரிப்புப் பிரிவான அடோமெனிகோமஷ் என்பதின் துணை நிறுவனம் ஆகும்.

## சர்வதேச பெண் விமானிகள் சங்க அறிக்கை

- சர்வதேச பெண் விமானிகள் சங்கம் (ISA+21 - International Society of Women Airline Pilots)

வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின் படி உலகின் அதிக அளவிலான பெண் விமானிகளின் சதவிகிதத்தை இந்தியா கொண்டுள்ளது.

- மேலும் இந்தியாவின் பெண் விமானிகளின் சதவிகிதமானது உலக சராசரியை விட இரு மடங்கு அதிகமாகும்.
- உலக பெண் விமானிகளின் சதவிகிதம் 5.4 ஆகும்.




- இந்தியாவின் தற்போதைய பெண் விமானிகளின் சதவிகிதம் 12.4 ஆகும்.
- சமீபத்திய தரவுகளின் படி டெல்லியை அடிப்படையாகக் கொண்ட பிராந்திய விமான நிறுவனமான ஜீம் (Zoom) ஆனது உலகிலேயே அதிகபட்சமான பெண் விமானிகளை 30% என்ற அளவில் பணியில் அமர்த்தியுள்ளது.
- அமெரிக்காவின் யுனைடெட் ஏர்லைன்ஸ் உலகின் அதிகப்படியான பெண் தளபதிகளை பணியமர்த்தியுள்ளது.

## எரித்ரியாவிற்கு எதிரான UNSC தடைகள் விலக்கம்

- எரித்ரியா மீது சுமத்தப்பட்ட தடைகளை விலக்கிக் கொள்வதற்கு ஒன்பது வருடங்களுக்குப் பிறகு 2018 நவம்பர் 14 அன்று ஐ.நா. பாதுகாப்பு குழு (UNSC – United Nations Security COuncil) ஒருமனதாக வாக்களித்துள்ளது.
- பாதுகாப்பு குழுவானது எரித்ரியா மீது ஆயுதத் தடை, சொத்து முடக்கம் மற்றும் பயணத் தடை ஆகியவற்றை விதித்திருந்தது.

***பின்னணி***

- ஆயுதமேந்திய தீவிரவாத குழுவினருக்கு ஆதரவளிப்பதாகக் குற்றம் சாட்டப்பட்ட பின்னர் 2009-ல் ஐ.நா. சபை சோமாலியாவின் அல்-ஷபாப் உட்பட முதன்முதலில் எரித்ரியா மீது கட்டுப்பாடுகளை விதித்தது.
- பிரிட்டனால் கொண்டு வரப்பட்டு அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகளால் இந்த தீர்மானம் ஆதரிக்கப்பட்டாலும் எரித்ரியா எப்போதும் இந்த குற்றச்சாட்டுகளை மறுத்தே வந்தது.
- எரித்ரியா மற்றும் அதன் அண்டை நாடுகளுக்கிடையேயான உறவுகளில் பல ஆண்டுகள்

மோதல்களுக்குப் பிறகு சற்று சுமூக நிலையை அந்நாடு எட்டியுள்ள நிலையில் இந்த ஐ.நா. வாக்கொடுப்பு நடைபெற்றது.

- இரண்டு தசாப்த காலமாக உள்ள பகைமைகளை அடுத்து ஜூன் 2018-ல் எரித்ரியா, எத்தியோப்பியாவுடன் ஒரு சமாதான ஒப்பந்தத்தை ஒப்புக் கொண்டது.
- மேலும் சமீபத்தில் எரித்ரியாவின் தலைவரும் சோமாலியாவின் ஐ.நா. ஆதரவு பெற்ற அரசாங்கமும் கூட்டு ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- 1990-களின் முற்பகுதிகளில் எத்தியோப்பியாவிடமிருந்து எரித்ரியா சுதந்திரம் பெற்றது. மேலும் அதே தசாப்தத்தின் பிற்பகுதியில் எல்லைப் பிரச்சினை காரணமாக போர் உருவானது.
- எரித்ரியாவானது மேற்கில் சூடான், தெற்கில் எத்தியோப்பியா மற்றும் தென் கிழக்கில் டிஜிபுட்டி ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்ட ஆப்பிரிக்க நாடாகும்.

## ஆப்பிரிக்காவின் முதல் அதிவேக ரயில் பாதை

- ஆப்பிரிக்க கண்டத்தின் முதலாவது மற்றும் மொராக்கோவின் முதல் அதிவேக ரயில் பாதை டேன்ஜியரில் துவங்கப்பட்டது.



- இப்பாதையானது பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் மற்றும் மொராக்கோவின் மன்னர் ஆறாம் முகமது ஆகியோரால் துவங்கி வைக்கப்பட்டது.
- இந்த நிகழ்வின்போது மன்னர் அந்த ரயில்பாதைக்குப் புராணத்தில் நபி அவர்களை சுமந்து சென்ற இறகுடைய பிராணியின் பெயரான அல் போராக் என்று கூறப்படுகின்ற பெயரை அதிகாரப்பூர்வமாக பெயரிட்டார்.
- பிரெஞ்ச் மொழியில் LGV என அறியப்படும் இந்த அதிவேக இரயில் பாதையானது 2 மணி நேரம் 10 நிமிடங்களில் டேன்ஜியர் மற்றும் காஸாபிளான்கா ஆகிய நகரங்களின் பொருளாதார மையங்களை இணைக்கின்றது.

## மொராக்கோவின் 2-வது புவி கண்காணிப்பு செயற்கைக் கோள்

- மொராக்கோ நாடானது தனது முகமது VI-B என பெயரிடப்பட்ட இரண்டாவது புவி கண்காணிப்பு செயற்கைக் கோளை வெற்றிகரமாக செலுத்தியுள்ளது.
- இது தென் அமெரிக்காவின் பிரெஞ்சு கயானாவில் உள்ள கவுரோ என்ற நகரத்தில் உள்ள கயானா விண்வெளி மையத்தின் ஏவுதளத்திலிருந்து ஏரியன் ஸ்பேஸ் வேகா ராக்கெட் மூலம் செலுத்தப்பட்டது.
- இது நவம்பர் 2017-ல் வேகா ராக்கெட் மூலம் செலுத்தப்பட்ட மொராக்கோவின் முதல் செயற்கைக் கோளான முகமது VI-A வின் இரட்டையாக ஒரே சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தப்படும்.
- புவி கண்காணிப்பிற்கான மொராக்கோவின் இரண்டு செயற்கைக் கோள்கள் தொகுப்பின் ஏவுதலை இது பூர்த்தி செய்துள்ளது.
- இந்த செயற்கைக் கோளானது தாலேஸ் அலெனியா விண்வெளி (Thales Alenia Space) மற்றும் வானூர்தி பாதுகாப்பு & விண்வெளி (Airbus Defence & Space) ஆகியோரால் உருவாக்கப்பட்டது.
- ஏரியன் ஸ்பேஸ் 1980-ல் துவங்கப்பட்ட பன்னாட்டு நிறுவனமாகும். இது விண்வெளித் துறையில் உலகின் முதல் வணிக ரீதியிலான சேவை வழங்குநர் நிறுவனம் ஆகும்.

## ஆசியா பசிபிக் பொருளாதார கூட்டிணைவு (APEC) உச்சிமாநாடு 2018

- இரண்டு நாள்கள் நடைபெறும் ஆசியா பசிபிக் பொருளாதாரக் கூட்டிணைவின் (APEC - Asia-Pacific Economic Cooperation) 2018 ஆம் ஆண்டிற்கான உச்சிமாநாடானது சமீபத்தில் பப்புவா நியூகினியாவின் போர்ட் மோர்ஸ்பியில் நடத்தப் பட்டது.
- இது பப்புவா நியூ கினியாவின் பிரதமர் பீட்டர் ஓ நெய்ல் என்பவரால் நடத்தப் பட்டது.
- APEC-ன் அனைத்து 21 உறுப்பினர் நாடுகளும் இதில் பங்கேற்றனர்.
- இதன் 23 ஆண்டு கால வரலாற்றில் முதன்முறையாக ஒரு முறையான கூட்டு அறிக்கையில் உடன்பாடு ஏற்படுத்துவதில் இம்மாநாடு தவறி விட்டது.

## உலகளாவிய திறமைக்கான வருடாந்திர தரவரிசை 2018 - IMD

- சுவிட்சர்லாந்தின் IMD வணிகப் பள்ளியால் வெளியிடப்பட்ட 2018 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய திறமைக்கான வருடாந்திர தரவரிசையில் (Global Annual talent ranking) இந்தியா 2 இடங்கள் பின்தங்கி 53-வது இடத்தில் உள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தரவரிசையில் இந்தியா 51-வது இடத்தில் இருந்தது.
- இந்த தரவரிசையில் சுவிட்சர்லாந்து தொடர்ந்து ஐந்தாவது முறையாக முதலிடத்தைத் தக்க வைத்துள்ளது. இந்த தரவரிசையில் டென்மார்க் இரண்டாவது இடத்தில் உள்ளது. டென்மார்க்கிற்கு அடுத்து நார்வே, ஆஸ்திரியா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன.

- இந்த தரவரிசையின் 6-வது இடத்தில் உள்ள கனடாவே முதல் 10 இடங்களில் ஐரோப்பிய நாடுகள் அல்லாத ஒரே நாடாகும்.
- 13-வது இடத்தில் உள்ள சிங்கப்பூர் ஆசியப் பிராந்தியத்தில் முதலிடத்தில் உள்ளது. இந்த தரவரிசையில் சீனா 39-வது இடத்தில் உள்ளது.
- இந்த தரவரிசையானது முதலீடு மற்றும் வளர்ச்சி, முறையீடு மற்றும் தயாராக இருத்தல் ஆகிய மூன்று அளவுருக்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

## வோரேக் பயினிமராமா - பிஜி பிரதமராக மறுமுறை தேர்வு

- பிஜியில் நடைபெற்ற 2018 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஆளும் கட்சியான பிஜி முதல் கட்சி வெற்றி பெற்றுள்ளது. அக்கட்சியின் தலைவரான தற்பொழுது பிரதமராக உள்ள வோரெக் பயினிமராமா இரண்டாவது முறையாக பிரதமராக மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- பிஜி அரசு மாளிகையில் அந்நாட்டு அதிபரான ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜியோஜி கொன்ரோடி புதிய பிரதமருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- 2006 ஆம் ஆண்டில் இராணுவத்தால் ஆட்சிக் கலைப்பு செய்யப்பட்ட பின்பு பிஜியில் நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தல் இதுவாகும். இதற்கு முன்பு அந்நாட்டில் 2014-ல் பொதுத் தேர்தல் நடைபெற்றது.

## தொழில் செய்வதற்கு உகந்ததான வருடாந்திர இந்திய அறிக்கை

- ஐக்கிய இராச்சிய இந்திய வர்த்தக மன்றமானது (UKIBC - UK India Business Council) சமீபத்தில் தனது 4-வது "ஐக்கிய ராச்சியத்தின் கண்ணோட்டத்தில் தொழில் செய்வதற்கு உகந்ததான வருடாந்திர இந்திய அறிக்கை" என்பதை வெளியிட்டுள்ளது.
- இது இந்தியாவில் ஐக்கிய இராச்சியத்தின் தொழிலகங்கள் செயல்படுவதற்கு ஊழல் ஒரு தடையாக உள்ளது என்ற பார்வை 2015-லிருந்து தற்போது பாதியாகக் குறைந்துள்ளது என்பதை சுட்டிக் காட்டியுள்ளது.
- தற்போது 25% ஐக்கிய இராச்சியத்தின் தொழிலகங்கள் ஊழலை ஒரு தடையாக பாவிக்கின்றன. இது 2015-ல் 51% ஆக இருந்தது.
- 46% ஐக்கிய இராச்சியத்தின் வர்த்தக நிறுவனங்கள் அடுத்த 12 மாதங்களுக்கு தங்களது முதலீடுகளை விரிவுபடுத்துவதற்கான திட்டங்களைக் கொண்டுள்ளன.
- மேலும் அவற்றுள் 25 சதவிகிதத்தினர் இந்தியாவின் கிழக்குப் பகுதியை நோக்கி இந்த புதிய முதலீடுகளை செய்வதில் திட்டமிட்டு இருக்கின்றனர்.
    - அவர்கள் மேற்கு வங்காளம், அஸ்ஸாம், மேகாலயா மற்றும் மணிப்பூர் போன்ற மாநிலங்களில் புதிய வாய்ப்புகளை தேடுகின்றனர்.


# பொருளாதாரச் செய்திகள்

## தேர்தல் நிதிப் பத்திரங்கள் வழங்குதல் மற்றும் அவற்றை ரொக்கமாக மாற்றுதல்

- ❖ தேர்தல் நிதிப் பத்திரங்களை வழங்குவதற்கும் அப்பத்திரங்களை ரொக்கமாக மாற்றுவதற்கும் பாரத ஸ்டேட் வங்கிக்கு அங்கீகாரம் அளித்து அறிவிப்பொன்றை மத்திய அரசு அறிவித்துள்ளது.
- ❖ SBI ஆனது 2018 நவம்பர் 1 முதல் 10 வரை தனது 29 அங்கீகரிக்கப்பட்ட கிளைகள் மூலம் தேர்தல் நிதிப் பத்திரங்களை வழங்கவும், ரொக்கமாக மாற்றவும் உள்ளது.
- ❖ தேர்தல் நிதிப் பத்திர திட்டம் 2018-ன் விதிமுறைகளின்படி
    - ○ இந்தியாவின் குடிமகன் அல்லது இந்தியாவில் இணைக்கப்பட்ட அல்லது நிறுவப்பட்ட எந்த ஒரு நிறுவனத்தாலும் தேர்தல் நிதிப் பத்திரங்கள் வாங்கப்படலாம்.
- ❖ இந்த தேர்தல் நிதிப் பத்திரங்களானது வழங்கப்பட்ட தேதியிலிருந்து 15 நாள்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும்.

*குறிப்பு*

- ❖ 1951ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் (1951-ன் 43வது சட்டம்) பிரிவு 29-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் கடந்த தேர்தலில் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்குகளில் 1 சதவிகிதத்திற்கும் அதிகமான வாக்குகள் பெற்ற கட்சிகள் மட்டுமே இப்பத்திரத்தைப் பெற இயலும்.




## அறிவுசார் சொத்துரிமை (IP – Intellecual Property) பற்றிய முதல் இந்திய அமெரிக்கப் பேச்சு வார்த்தை

- ❖ அறிவுசார் சொத்துரிமைக் கொள்கைகளில் இருதரப்பு மூலோபாய ஒத்துழைப்பை அதிகப்படுத்துவதற்காக முதலாவது இந்திய-அமெரிக்கப் பேச்சுவார்த்தை புதுடெல்லியில் தொடங்கப்பட்டது.
- ❖ இந்த பேச்சுவார்த்தையானது அறிவுசார் சொத்துமை களத்தில் இரண்டு

நாடுகளுக்குமிடையே தீர்வுகளை அடையாளம் காண்பதையும், தொழில்நுட்ப அறிவையும் நிபுணத்துவத்தையும் பகிர்ந்து கொள்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்நிகழ்ச்சியானது
  - அமெரிக்க வர்த்தக மன்றத்தின் (American Chmber of Commerce) உலகளாவிய புத்தாக்க கொள்கை மையம்
  - தொழில்துறை அமைப்பான இந்திய வர்த்தக மற்றும் தொழில் துறைக் கூட்டமைப்பு (FICCI - Federation of Indian Chambers of Commerce & Industry) மற்றும் இந்திய-அமெரிக்க வர்த்தக மன்றம்

  ஆகியவற்றுடன் இணைந்து நடத்தப்படுகிறது.
- இது வாஷிங்டன் டிசி மற்றும் புது டெல்லியில் மாறிமாறி ஆண்டுதோறும் நடத்தப்படும்.

## நிதியியல் நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் 19-வது சந்திப்பு

- புது தில்லியில் மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்களுக்கான மத்திய அமைச்சர் அருண் ஜெட்லி தலைமையில் நிதியியல் நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் (Financial Stability and Development Council - FSDC) 19வது சந்திப்பு நடைபெற்றது.
- இந்த ஆணையமானது தற்போதைய உலக மற்றும் உள்நாட்டுப் பொருளாதார நிலைமை மற்றும் நிதித்துறை செயல்பாடு ஆகியவை குறித்து ஆய்வு செய்தது. மேலும் இந்த ஆணையமானது வங்கி அல்லாத நிதி நிறுவனங்களின் நிதி நிலைமை மற்றும் பரஸ்பர நிதிகள் உள்ளிட்ட உண்மை வட்டி விகிதம் மற்றும் தற்போதைய நிதி நிலைமை தொடர்பான பிரச்சனைகள் குறித்தும் விவாதித்தது.

### *நிதியியல் நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டு ஆணையம்*

- நிதியியல் நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது நாட்டின் பொருளாதாரத்தின் நிதியியல் அமைப்பை ஆரோக்கியமாகவும் சிறந்ததாகவும் ஏற்படுத்தும் ஒழுங்குமுறை நிதியியல் துறையாகும்.
- இந்த ஆணையத்திற்கு மத்திய நிதி அமைச்சர் தலைமை வகிப்பார். மேலும்
  - நிதித்துறை ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர்கள் (i.e. ஆர்பிஐ, செபி, ஐஆர்டிஏஐ மற்றும் பிஎப்ஆர்டிஏ அல்லது RBI, SEBI, IRDAI, PFRDA)
  - நிதித்துறை செயலாளர்
  - பொருளாதார விவகாரத் துறைச் செயலாளர் (மத்திய நிதித் துறை)
  - நிதிச் சேவைகள் துறை செயலாளர் (மத்திய நிதித் துறை )
  - தலைமைப் பொருளாதார ஆலோசகர்

  ஆகியோர் இந்த ஆணையத்தின் உறுப்பினர்கள் ஆவர்.
- நிதியியல் நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டு ஆணையம் தனது சந்திப்பின்போது தேவை ஏற்பட்டால் வல்லுநர்களையும் அழைக்கும்.

## சங்கிலித் தொடர் பரிமாற்றம்

- இந்தியாவில் முதன்முறையாக, எச்எஸ்பிசி ஹோல்டிங்ஸ் பிஎல்சி என்ற வங்கியானது ரிலையன்ஸ் தொழிற்துறை நிறுவனம், அமெரிக்காவை மையமாகக் கொண்டு இயங்கும் டிரிகான் எனர்ஜி என்ற நிறுவனத்திற்கு ஏற்றுமதி செய்வதற்காக சங்கிலித் தொடர் தொழில்நுட்ப முறையின் மூலம் செயல்படும் வர்த்தக நிதிப் பரிமாற்றத்தை செயல்படுத்தியுள்ளது.
- சங்கிலித் தொடர் செயல்படுத்தப்பட்ட கடன் உறுதிக் கடிதப் பரிமாற்றமானது இந்த வகையான ஒப்பந்தங்களினால் கணிசமான நேர விரயத்தை மிச்சப்படுத்துகிறது.
- இந்தக் கடன் உறுதிக் கடிதமானது அமெரிக்காவைச் சேர்ந்த டிரிகான் என்ர்ஜி என்ற நிறுவனத்திற்காக ஐஎன்ஜி வங்கியால் ரிலையன்ஸ் தொழிற்துறை நிறுவனத்திற்காக ஆலோசனை வழங்கும் வங்கியான எச்எஸ்பிசி இந்தியா என்ற வங்கிக்கு வழங்கப் பட்டுள்ளது.

## எண்ணியல் பொதுக் கடன் பதிவேடு

- இந்திய ரிசர்வ் வங்கி அனைத்துக் கடனாளிகளின் தகவல்களையும் பதிவு செய்ய ஒரு பரந்த எண்ணியல் பொதுக் கடன் பதிவேட்டை (digital Public Credit Registry) ஏற்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கின்றது.
- இப்பதிவேடு தன்னிச்சையாக தவறிழைத்தவர்களையும், நிலுவையிலிருக்கும் சட்ட வழக்குகளையும் கொண்டிருக்கும்.
- இந்த நடவடிக்கைக்கான நோக்கம் நிதியியல் ரீதியான தவறிழைப்புகளை தடுப்பதாகும்.
- இப்பதிவேடு கீழ்க்கண்டவற்றில் இருந்து தகவல்களைக் கொண்டிருக்கும்.
    - செபி போன்ற சந்தை கட்டுப்பாட்டாளர்கள்
    - மத்திய பெருநிறுவன விவகாரத்துறை அமைச்சகம்
    - சரக்கு மற்றும் சேவை வரி வலையமைப்பு
    - இந்திய திவால் மற்றும் கடனாளி மன்றம்
- இப்பதிவேடு நிகழ்நேர அடிப்படையில் ஏற்கெனவே கடன் வாங்கியுள்ள மற்றும் வருங்கால கடன் வாங்குபவர்களின் முழுமையான சுய விவரங்களைப் பெறுவதற்கு வங்கிகளுக்கும் நிதி நிறுவனங்களுக்கும் உதவிடும்.

## நிறுவனங்கள் சட்டம், 2013-ஐ திருத்துவதற்கான அவசரச் சட்டம்

- நிறுவனங்கள் சட்டம் 2013-ஐ திருத்துவதற்காக அவசரச் சட்டம் பிறப்பித்தலுக்கான முன்மொழிதலை மத்திய அமைச்சரவை அங்கீகரித்திருக்கின்றது.
- இதன்படி, குடியரசுத் தலைவர் ஷரத்து 123-ன் கீழ் ஒப்புதலை தந்திருக்கின்றார். இது பிரகடனப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

- இந்த சட்டத்தின் திருத்தங்கள் வியாபாரம் செய்வதை எளிமையாக்குவதை மேம்படுத்திடவும் சிறந்த இணக்க நிலைகளை உறுதி செய்திடவும் வேண்டி திட்டமிடப்பட்டு இருக்கின்றது.
- நிறுவனச் சட்டத்தைத் திருத்துவதற்கான அவசரநிலைச் சட்டம் தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயங்களின் மீதான தடைகளை விலக்கவும் நிறுவனங்களின் சிறிய குற்றங்களை குற்றப் பார்வையிலிருந்து நீக்கிடவும் எண்ணுகிறது.
- இந்த அவசரச் சட்டம் 90 சதவிகித வழக்குகளை தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயங்களிடமிருந்து பெருநிறுவன அமைச்சகத்தின் கீழ் உள்ள பிராந்திய இயக்குநர்களிடம் பரிமாற்றம் செய்யும்.

## 31 NBFCன் பதிவுகள் ரத்து

- குறிப்பிடப்படாத காரணங்களுக்காக 31 வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் (NBFCs/ Non-Banking Finance Companies) பதிவுச் சான்றிதழை இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI – Reserve Bank of India) ரத்து செய்துள்ளது.
- உரிமங்களை இழந்த இந்த 31 நிறுவனங்களில் பெரும்பான்மையாக 27 நிறுவனங்கள் மேற்கு வங்காளத்திலிருந்தும் அதனைத் தொடர்ந்து 4 உரிமங்களை இழந்த நிறுவனங்கள் உத்திரப் பிரதேசத்தையும் சேர்ந்தவையாகும்.
- இவ்வருடத்தின் ஆகஸ்ட் மாதத்திலிருந்து சிக்கல் வாய்ந்த கடன் வழங்குநரான IL&FS என்ற நிறுவனத்தால் கடன் திரும்ப செலுத்தப்படாததை அடுத்து NBFC துறையானது பணப்புழக்கச் சிக்கல்களை எதிர்கொண்டு வருகிறது.

## HSCC மாற்றம்

- அரசுக்குச் சொந்தமான தேசியக் கட்டிட கட்டுமான சங்க நிறுவனமானது (National Buildings Construction Corporation Limited- NBCC) HSCC என்ற நிறுவனத்தைப் பெற மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்துடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- மருத்துவமனை சேவையின் ஆலோசனை சங்க நிறுவனமானது (Hospital Services Consultancy Corporation Limited- HSCC) ஆனது இந்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் கீழ் உள்ள “மினி ரத்னா” அந்தஸ்து பெற்ற அரசு நிறுவனமாகும்.
- இது இந்தியா மற்றும் பிற நாடுகளில் சுகாதாரம் மற்றும் சமூகநலத் துறைகளில் ஆலோசனைகளை வழங்குகிறது.

## இந்தியாவின் முதல் ஊடாடும் கடன் அட்டை

- இண்டஸ்இண்ட் வங்கியானது இண்டஸ்இண்ட் பேங்க் நெக்ஸ்ட் (IndusInd Bank Nexxt) என்றழைக்கப்படும் இந்தியாவின் முதல் பொத்தான்களுடன் கூடிய ஊடாடும் கடன் அட்டையை அறிமுகப்படுத்தியுள்ளது.




- இது வாடிக்கையாளர்களுக்கு அவர்களுடைய கடன் அட்டையைப் பயன்படுத்தி எப்படி பணம் செலுத்துவது என்பதில் பல விருப்பத் தேர்வுகளை அளிக்கிறது.
- இந்த அட்டையானது அமெரிக்காவின் பிட்ஸ்பர்க்கை தலைமையகமாகக் கொண்ட டைனமிக் இன்க் என்ற நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.
- இது விற்பனை செய்யும் இடத்தின் (POS - Point of Sale) முனையத்தில் மூன்று பணவழங்கீட்டு விருப்பத் தேர்வுகளை நெகிழ்வுத் தன்மையுடன் வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது.
  - கடன்
  - பரிவர்த்தனைகளை 4 கால அளவில் எளிய மாதத் தவணைகளாக மாற்றும் வசதி (6,12, 18, 24 மாதங்கள்)
  - வெகுமதி புள்ளிகளை ஒருங்கிணைத்துப் பயன்படுத்துதல்


போன்றவற்றை வெறுமனே அட்டையில் உள்ள பொத்தானை அழுத்துவதன் மூலம் தேர்வு செய்ய முடியும்.

## "KBL SB - TASC" என்ற புதிய வங்கி சேமிப்புத் திட்டம் - கர்நாடக வங்கி துவக்கம்

- 2018 ஆம் ஆண்டு நவம்பர் 15 முதல் 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 28 வரை 2018-19 ஆம் ஆண்டிற்கான நடப்புக் கணக்கு மற்றும் சேமிப்புக் கணக்கு திட்டங்களுக்கான பரப்புரையை கர்நாடக வங்கி ஆரம்பித்திருக்கின்றது.
- மேலும் இவ்வங்கி அறக்கட்டளைகள் / நிறுவனங்கள் / சங்கங்கள் / கழகங்கள் ஆகியவற்றுக்கான பிரத்தியேகத் தயாரிப்பாக "KBL SB - TASC" என்ற புதிய வங்கி சேமிப்புத் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியது.
- நாடு முழுவதுமான இந்த பரப்புரையின் கீழ் இவ்வங்கியானது, இந்தியா முழுவதும் உள்ள அனைத்து 823 கிளைகளிலும் உள்ள 8000க்கும் மேற்பட்ட பணியாளர்களின் சுறுசுறுப்பான பங்களிப்பு மூலம் 4.18 லட்சத்திற்கும் மேல் நடப்பு மற்றும் சேமிப்புக் கணக்குகளைத் துவங்கத் திட்டமிட்டு இருக்கின்றது.

## சஷாக்ட் இந்தியா AMC

- மிகப்பெரிய அளவில் உள்ள வாராக் கடன்களை சரி செய்வதற்காக ஒரு சொத்து மேலாண்மை நிறுவனத்தை (Asset management company -AMC) உருவாக்குவதாக சுனில் மேத்தா குழு அறிவித்துள்ளது.
- இந்த AMC நிறுவனத்தின் பெயர் இந்திய சஷாக்ட் சொத்து மேலாண்மை நிறுவனமாகும்.
- பொதுத்துறை வங்கிகளில் பாதிக்கப்பட்ட சொத்துக்களின் மீதான விரைவான தீர்வுகள் குறித்த பணிகளுக்காக இந்த குழுவானது செயல்பட்டு வருகின்றது.
- மும்பையில் நடைபெற்ற CII-CFO மாநாட்டில் பங்கேற்ற வங்கியாளர்கள் குழுவின் தலைவர் சுனில் மேத்தா இதனை அறிவித்தார்.
- இந்த நிறுவனங்களானது வங்கியல் துறையில் உள்ள பாதிப்பை சமாளிக்க சஷாக்ட் திட்டத்தின் கீழ் 5 அம்ச உத்திகளைப் பின்பற்ற வேண்டும்.
- இந்த திட்டத்தின் கீழ்
    - 500 கோடிக்கு மேல் வாராக் கடன்களை (Non-Performing Assets - NPA) தீர்க்க AMC-யானது ஒரு மாற்று முதலீட்டு நிதியைக் (Alternate Investment Fund-AIF) கொண்டிருக்கும்.
    - இந்த AIF ஆனது தனியார் துறை வங்கிகள் உட்பட பல்வேறு சாத்தியமான முதலீட்டாளர்களை ஈடுபடுத்தி உருவாக்கப்பட இருக்கிறது.




## ACROSS திட்டம்

- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது 2017 - 2020 கால கட்டங்களில் ‘வளிமண்டலம் மற்றும் காலநிலை குறித்த ஆராய்ச்சி - மாதிரியாக்க கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் சேவைகள்’ (Atmosphere & Climate Research-Modelling Observing Systems & Services-ACROSS) என்ற முதன்மைத் திட்டத்தின் கீழ் உள்ள 9 துணைத்

திட்டங்களைத் தொடர்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

- ❖ நீடித்த கண்காணிப்பு, தீவிர ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றின் மூலம் வானிலை மற்றும் காலநிலை முன்னறிவிப்பு திறன்களை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- ❖ இந்த திட்டமானது புவி அறிவியல் அமைச்சகத்தின் வளிமண்டல அறிவியல் திட்டங்களைச் சார்ந்ததாகும்.

## பொருளாதார மூலதன கட்டமைப்பை ஆய்வு செய்ய குழு

- ❖ மத்திய வங்கியின் பொருளாதார மூலதனக் கட்டமைப்பை (Economic Capital Framework-ECF) ஆய்வு செய்ய நிபுணர் குழுவொன்றை அமைக்க RBI (Reserve Bank of India) ஆனது அதன் மன்றக்குழுக் கூட்டத்தில் முடிவு செய்துள்ளது.




- ❖ இந்த குழுவானது ரிசர்வ் வங்கியிடம் உள்ள கையிருப்புத் தொகையை அரசாங்கத்திற்கு வழங்குவது மற்றும் மீதத் தொகையை வைத்துக் கொள்வது ஆகியவை குறித்து முடிவு செய்யும்.
- ❖ இந்த குழுவானது இந்திய அரசுக்கு 3.6 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள கையிருப்பை மாற்றுவதற்கு அனுமதிப்பது குறித்து ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்த குழுவின் உறுப்பினர்கள் மற்றும் குறிப்பு விதிமுறைகளை அரசு மற்றும் RBI ஆகியவை கூட்டாக தீர்மானிக்கும்.
- ❖ மிகையாக உள்ள 3.6 லட்சம் கோடி ரூபாயைப் பரிமாற்றம் செய்வதற்கான அரசாங்கத்தின் முக்கிய கோரிக்கைக்குப் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்த தொகையானது மத்திய வங்கியின் மொத்த கையிருப்பான 9.6 லட்சம் கோடி ரூபாயில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமான தொகையாகும்.
- ❖ சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுடைய (MSME – Micro, Small and Medium Enterprise) கடனாளிகளின் நிலையான பாதிக்கப்பட்ட சொத்துக்களை 250 மில்லியன் ரூபாய் வரை மொத்த கடன் வசதிகளுடன் மறுசீரமைப்பதற்கான திட்டத்தை ஆலோசிப்பதாகவும் RBI ஒப்புக் கொண்டுள்ளது.

*பின்னணி*

- மேற்குறிப்பிட்ட விவகாரத்தில் ரிசர்வ் வங்கி ஆளுநர் மற்றும் மத்திய நிதி அமைச்சகம் ஆகியவற்றுக்கு இடையே இருந்த மாறுபட்ட கருத்துகளின் காரணமாக பொதுவெளியில் ஏற்பட்ட வெளிப்படையான சச்சரவினால் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

| What the Centre wants | Possible stand of RBI | Possible outcome, if any |
|---|---|---|
| Provide more support to MSMEs | Several steps already taken to ease credit availability | Consensus likely. RBI may relax risk weightage norms |
| Relax lending curbs on 11 PSU banks by dropping at least one criterion that triggers prompt corrective action (PCA). Banks so classified face lending curbs and cannot pay dividends | The curbs are needed to bring the banks back to good health. It takes 8-12 quarters to improve performance and come out of the PCA framework | RBI may indicate the curbs can be lifted in the case of lenders that are close to meeting the threshold |
| Provide more liquidity to NBFCs and others | Liquidity in the system is adequate. Situation has improved and various NBFCs are rolling over their credit | RBI may not be averse to more open market operations to provide liquidity, if needed |
| Bring down capital requirement of banks to 8 per cent from 9 per cent, which is higher than Basel standards | The higher level should be seen in the context of the high cumulative default rate. Some countries have higher thresholds | Difficult to say if a middle ground will be found |
| Set the RBI's economic capital framework. This will determine how much money the RBI needs to give the government | Likely to defend the current framework | A committee possible on the issue |


# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## போலியான செய்திகளை கண்காணிக்க வலைதளம் அடிப்படையிலான கருவி

- அமெரிக்காவின் மிக்சிகன் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் டிவிட்டர் மற்றும் முகநூல் போன்ற சமூக வலை தளங்களில் உலவும் போலியான தகவல்களை கண்காணிக்க வலைதளம் அடிப்படையிலான கருவி ஒன்றை உருவாக்கியுள்ளனர்.
- இப்பி குவாஷண்ட் (Iffy Quotient) என்றழைக்கப்படும் ஹெல்த் மெட்ரிக் தளத்தை பயன்படுத்தும் இந்த கருவியானது கீழ்க்காணும் இரண்டு நிறுவனங்களில் இருந்து தரவுகளைப் பெறுகிறது.
  - நியூஸ் விப்
  - மீடியா பையாஸ் / ஃபேக்ட் செக்கர்

## கெப்ளர் விண்வெளித் தொலைநோக்கி - நாசா

- நாசாவானது (NASA - National Aeronautics and Space Administration) கெப்ளர் விண்வெளித் தொலைநோக்கிக்கு ஓய்வு அளிக்க முடிவு செய்துள்ளது.



- இந்த தொலைநோக்கியானது ஒன்பதரை ஆண்டுகள் பணிக்குப் பின்பு எரிபொருள் இன்றி செயலிழந்தது. இந்த ஒன்பதரை ஆண்டுகள் காலகட்டத்தில் நமது சூரியக் குடும்பத்திற்கு வெளியில் உயிர் வாழ்வதற்கு உகந்த ஏறத்தாழ 2600 கோள்களை இந்த தொலைநோக்கி கண்டறிந்துள்ளது.

### கெப்ளர் விண்வெளித் தொலைநோக்கி

- இது ஆளில்லா விண்வெளிக் கண்காணிப்பு தொலைநோக்கியாகும். இது நாசாவின் கண்டுபிடிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக 2009 ஆம் ஆண்டில் விண்ணில் செலுத்தப்பட்டது.
- ஒரு நட்சத்திரத்தின் உயிர் வாழத் தகுந்த பகுதிகளில் பூமியைப் போன்ற அளவுடைய கோளை (கெப்ளர் - 69C) முதன்முறையாகக் கண்டறிந்த தொலைநோக்கி கெப்ளர் ஆகும்.
- 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மற்றும் 2017 ஆம் ஆண்டு மார்ச் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட காலகட்டத்தில் பூமியைப் போன்ற அளவுடைய கோள்களைக் கொண்ட டிராப்பிஸ்ட்-1 என்ற அமைப்பை இது ஆராய்ந்தது.

## அக்னி – 1

- 2018 ஆம் ஆண்டு அக்டோபர் 30 அன்று ஒடிசா கடற்பகுதியில் உள்நாட்டுத் தொழில் நுட்பத்தில் வடிவமைக்கப்பட்ட, அணு ஆயுதத் திறன் கொண்ட, கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி - 1 ஏவுகணையின் இரவுச் நேரச் சோதனையை இந்தியா வெற்றிகரமாக நிகழ்த்தியுள்ளது.
- தரையிலிருந்து தரையை நோக்கி இலக்குகளைத் தாக்கி அழிக்கும் இந்த ஏவுகணைச் சோதனையானது ஒடிசா கடற்கரையில் அமைந்துள்ள அப்துல் கலாம் தீவிலிருந்து பயன்பாட்டாளர் சோதனையின் ஒரு பகுதியாக சோதனை செய்யப்பட்டது.
- 700 கிலோ மீட்டர் வரை சென்று இலக்கைத் தாக்கக்கூடிய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையின் இரவு நேரச் சோதனையானது முதன்முறையாக 2014ஆம் ஆண்டு ஏப்ரலில் நடத்தப்பட்டது.
- 700 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள இலக்கைத் தாக்கும் இந்த ஏவுகணையானது சிறப்பு

ஊடுருவல் அமைப்பைக் கொண்டிருக்கிறது.

- ❖ இந்த ஏவுகணையானது 12 டன்கள் எடையுடன் 15 மீட்டர் உயரத்தையும் 1000 கிலோ எடையுடைய ஆயுதத்தை எடுத்துச் செல்லும் திறனையும் கொண்டுள்ளது.
- ❖ இந்த ஏவுகணையானது ஏற்கெனவே இந்திய இராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

## பெய்டோ

- ❖ சீனா தனது சொந்த புவிக்கோள இருப்பறியும் அமைப்பை கட்டமைப்பதன் ஒரு படியாக இரண்டு கள இயக்க செயற்கைக் கோள்களை வெற்றிகரமாக செலுத்தியுள்ளது. சீனாவுக்குப் போட்டியாக அமெரிக்காவுக்குச் சொந்தமான புவிக்கோள இருப்பறியும் அமைப்பு (Global Positioning System - GPS) 30 செயற்கைக் கோள்களுடன் செயல்பட்டு வருகிறது.
- ❖ இந்த அமைப்பானது பட்டை மற்றும் பாதை வழித்தட திட்டத்தில் பங்கு பெற்றுள்ள நாடுகளுக்கு சேவைகளை அளிக்கும். மேலும் இது 2020 ஆம் ஆண்டில் ஒரு முழுமையான புவிக்கோள இருப்பறியும் அமைப்பாக உருவெடுக்கும்.
- ❖ தனக்கென்று சொந்தமாக புவிக்கோள இருப்பறியும் அமைப்பைக் கொண்டுள்ள அமெரிக்கா மற்றும் இரஷ்யா ஆகிய நாடுகளுக்கு அடுத்து மூன்றாவது நாடாக சீனா உருவெடுத்துள்ளது.
- ❖ பெய்டோ திட்டம் முதன்முறையாக 1994 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

## உலகின் முதலாவது மடிக்கக்கூடிய ஸ்மார்ட் போன் மாதிரி

- ❖ சாம்சங் நிறுவனமானது உலகின் முதலாவது மடிக்கக் கூடிய ஸ்மார்ட் போனின் முன்மாதிரியை அறிமுகப்படுத்தியுள்ளது. இதனை திறக்கும்போது சட்டைப்பை அளவுடைய வரைபட்டிகை (Tablet) ஆக மாறுகிறது.



- ❖ சாம்சங் நிறுவனமானது இந்த மடக்கக் கூடிய தொலைபேசி தொழில்நுட்பத்தை ‘Infinity flex display’ அல்லது முடிவற்ற தன்மையை உடைய சாதகமான காட்சிப் படுத்துதலைக் கொண்டது எனக் கூறுகின்றது.

- இந்தச் சாதனம் மூடிய நிலையில் சாதாரணமான கைபேசி போன்று காட்சியளிக்கும். திறந்த நிலையிலிருக்கும்போது இது 7.3 அங்குல அளவிலான புத்தகம் போன்று திறக்கிறது.
- இது இதுவரையில் வெளிவந்துள்ள கைபேசி திரைகளில் மிகப்பெரிய அளவைக் கொண்ட கைபேசிகளில் ஒன்றாகும்.

## 'சொர்க்கலோக அரண்மணை' விண்வெளி நிலையம்

- சீனாவானது தனது நிரந்தர விண்வெளி நிலையத்தின் முதல் பிரதி ஒன்றை வெளியிட்டுள்ளது.
- இது சர்வதேச சமூகத்தின் விண்வெளியில் சுற்றுகின்ற விண்வெளி ஆய்வகத்திற்குப் பதிலாக மாற்றியமைக்கப்படும். மேலும் இது பூமிக்கு அப்பாலானவற்றில் உள்ளதன் மீதான சீனாவின் பேராவலையும் குறிக்கின்றது.



- 17 மீட்டர் (55 அடி) நீளமுடைய இந்த மையப்பகுதி அமைப்பானது சீனாவின் தெற்கு கடற்கரை நகரமான ஜூஹையில் சமீபத்தில் நடைபெற்ற இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் வான்வெளிக் கண்காட்சியில் (Air Show) முக்கிய கவனத்தினைப் பெற்றது.
- சர்வதேச விண்வெளி ஆய்வு மையமானது (ISS – International Space Station) 1998ம் ஆண்டிலிருந்து அமெரிக்கா, ரஷ்யா, கனடா மற்றும் ஐரோப்பா, ஜப்பான் ஆகிய நாடுகளால் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது வரும் 2024ம் ஆண்டில் ஓய்வு பெற வேண்டியுள்ளது.
- இது 400 டன்கள் எடை கொண்ட ISS-ஐ விட மிகச்சிறியதாக இருப்பினும் கால்பந்து மைதானம் அளவிற்கு பெரியதாக உள்ளது. ISSக்குப் பிறகு விண்வெளி சுற்றுப்பாதையில் சீனா மட்டுமே விண்வெளி நிலையத்தைக் கொண்டிருக்கும்.

## உலகின் முதல் செயற்கை நுண்ணறிவு செய்தி தொகுப்பாளர்

- ❖ சீனாவின் உலக இணையதள மாநாட்டில், சீன அரசால் நடத்தப்படும் செய்தி நிறுவனமானது செயற்கை நுண்ணறிவால் இயங்கும் செய்தி வாசிப்பாளரை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இந்தச் செய்தி வாசிப்பாளரானது உண்மையான செய்தி அறிவிப்பாளரான ஜாங் ஸோவோவை மாதிரியாகக் கொண்டது.



- ❖ இந்தச் செய்தி வாசிப்பாளரால் நேரலை ஒளிபரப்பு படக்காட்சிகளிலிருந்து கற்றுக் கொண்டு ஒரு நாளின் 24 மணி நேரங்களுக்கு செய்தி வாசிப்பை வழங்க முடியும்.
- ❖ இந்த செயற்கை நுண்ணறிவு செய்தி வாசிப்பாளரானது உயிரற்ற ரோபோக்களை போன்ற உருவ அமைப்பில் அல்லாமல் உயிர் உள்ளது போன்றே இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு உண்மையான செய்தி தொகுப்பாளர்களைப் போன்றே உருவாக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதலாவது உள்நாட்டுத் தொழில்நுட்பத்துடன் கூடிய நுண்செயலி

- ❖ ஐஐடி மதராசைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இந்தியாவின் முதலாவது உள்நாட்டுத் தொழில்நுட்பத்துடன் கூடிய “சக்தி” என்ற நுண்செயலியை வடிவமைத்துள்ளனர்.
- ❖ இது
    - ○ தொழிலகம் சார்ந்த நுண்செயலிகள் மற்றும் நுண்செயலி சார்ந்த இதர பொருட்களின் வளர்ச்சி
    - ○ இறக்குமதியாகும் நுண்சில்லுகள் சார்ந்திருத்தலைக் குறைத்தல் மற்றும் இணைய வழிக் குற்றங்களைக் குறைத்தல்

  ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டது.
- ❖ இது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தால் (Ministry of Electronics and Information Technology - MeitY) பாதியளவு நிதி அளிக்கும் திட்டத்தின் கீழ் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- இதன் வடிவமைப்பு RISC-V (Reduced Instruction Set Computer/ குறைக்கப்பட்ட அறிவுரைகளைக் கொண்ட கணினி) என்றழைக்கப்படும் அடிப்படை அறிவுரைகளின் தொகுப்பான திறந்தவெளி அறிவுரைகள் ஒருங்கு அமைப்பிலிருந்து உருவானது. RISC-V என்பது எந்தவொரு சாதனத்திற்கும் அதன் தனிப் பயனாக்கத்திற்கு உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- IIT மதராஸ் ஆராய்ச்சியாளர்கள் தற்பொழுது மீத்திறன் கணினிக்கான மேம்படுத்தப்பட்ட நுண்செயலியான "பராசக்தி" குறித்து ஆராய்ச்சி மேற்கொண்டு இருக்கின்றனர்.

## எடுத்து செல்லக் கூடிய அளவிலான குளிர்பதன சேமிப்பு சாதனம்

- இந்திய தொழில்நுட்பக் கழகம் - மதராஸ் (IIT- Madras) ஆனது காய்கறி, பழங்கள் மற்றும் இதரப் பொருட்களை சேமித்து வைக்கக் கூடிய சூரிய மின் சக்தியால் இயங்கும் சிறிய அளவிலான குளிர்பதன சேமிப்பு சாதனத்தை உருவாக்கியுள்ளது.
- இது 500 கிலோ கொள்ளளவு உடையது. இது போதுமான காலத்திற்கு தங்கள் விளைபொருட்களை சேமித்து வைக்க விவசாயிகளுக்கு உதவும்.
- இதன் முதல் சாதனம் சென்னைக்கு அருகில் உள்ள காஞ்சிபுரம் மாவட்டத்தின் மதுராந்தகத்தில் உள்ள பண்ணையில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- இது 4°C முதல் 10°C வரையிலான வெப்பநிலை வரம்பில் சேமிப்பு வசதியைக் கொண்டுள்ளது.
- இந்த திட்டமானது அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அமைச்சகத்தின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை & IIT-M ஆகியவற்றால் நிதியளிக்கப்பட்டது.

## புற்றுநோய் செல்களை ஒரே நேரத்தில் கண்டறிந்து அழிக்கும் கார்பன் நானோ பொருட்கள்

- IIT-ரூர்க்கியின் அறிவியலாளர்கள் புற்றுநோய் செல்களை ஒரே நேரத்தில் கண்டறியவும் அழிக்கவும் கூடிய ஒளிரும் கார்பன் பொருளை உருவாக்கியுள்ளனர்.
- இந்த நானோ அளவிலான ($10^{-9}$ மீட்டர்) கார்பன் பொருட்கள் புற்றுநோய் செல்களை கண்டறியும் தன்மை மற்றும் சிகிச்சையளிக்கும் தன்மை ஆகியவற்றுக்கான முகவர்களாக செயல்படும்.
- இவை ரோஸ் பெரிவிங்கிள் தாவர இலையிலிருந்து பிரித்தெடுக்கப் பட்டுள்ளது.
- இந்த ஆய்வானது, அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியம் (SERB - Science and Engineering Research Board) மற்றும் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயிரி தொழில்நுட்பத் துறையால் (DBT - Department of Biotechnology) ஆதரிக்கப்பட்டது.

## GSAT 29 செயற்கைக்கோள் வெற்றி


- இஸ்ரோ தனது சமீபத்திய தகவல் தொடர்பு செயற்கைக் கோளான GSAT 29 ஐ வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. இது GSLV - மார்க் III D2 (GSLV - MK III D2) செலுத்து வாகனத்தால் புவியிணக்க சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டது.




- இது ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து ஏவப்பட்டது.
- GSLV MK III D2 ஆனது இந்தியாவின் 5ம் தலைமுறை கனரக உந்து வாகனமாகும். இதன்வாயிலாக 3423 கிலோ எடை கொண்ட GSAT 29 செயற்கைக் கோளை செலுத்தியதன் மூலம் மிக அதிக எடை கொண்ட செயற்கைக் கோளை சுமந்து சென்ற முதல் இந்திய செலுத்து வாகனமாக இது உருவெடுத்துள்ளது.
- இந்த GSLV MK III ஆனது 2022 ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்டுள்ள இந்தியாவின் முதல் மனித விண்வெளித் திட்டம் மற்றும் 2019ம் ஆண்டு ஜனவரியில் செலுத்தப்பட உள்ள சந்திரயான் – 2 ஆகியவற்றுக்கான ஏவு வாகனமாக வடிவமைக்கப்பட்டது ஆகும்.
- இது ஜம்மு & காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் உள்ள தொலை தூர இடங்களுக்கு தகவல் தொடர்பு சேவைகளை வழங்கக் கூடிய KA மற்றும் KU பேண்ட் டிரான்ஸ்பாண்டர்களை சுமந்து சென்று இருக்கின்றது .

## வியாழனுக்கு செல்ல ரால்ப் ஆய்வுக் கருவி

- நாசாவின் ரால்ப் ஆய்வுக் கருவியானது லூசி திட்டத்தின் மூலம் வியாழனின் ட்ரோஜன் என்ற குறுங்கோளுக்கு 2021ம் ஆண்டில் பயணத்தை மேற்கொள்கிறது.
- புளூட்டோ வரை பயணத்தை மேற்கொண்ட ரால்ப் ஆய்வுக் கருவியானது முதன் முதலில் நியூஹாரிசன் விண்கலத்தில் 2006ல் செலுத்தப்பட்டது.




- லூசி விண்கலமானது சற்றேறக்குறைய Ralph-ன் ஒத்த மாதிரியான 'L' ரால்ப் என்ற ஆய்வுக் கருவியை சுமந்து செல்ல உள்ளது. இது வியாழனின் குறுங்கோள்களில் ஆய்வுகளை மேற்கொள்ளும்.
- லூசியானது முன்னர் செலுத்தப்பட்டதை விட அதிகமாக இதுவரையல்லாத அளவில் 6 குறுங்கோள்கள் மற்றும் 1 முக்கிய குறுங்கோள் பட்டைத் தொகுதி மூலம் பயணம் மேற்கொள்ள உள்ளது.
- 'L' ரால்ப் ஆனது ட்ரோஜன் குறுங்கோள்களின் வேதியியல் தடங்களை கண்டறியும்.

## பயோனிக் காளானிலிருந்து தூய்மையான ஆற்றல்

- அமெரிக்க விஞ்ஞானிகள் பாக்டீரியாவால் சூழப்பட்ட காளானிலிருந்து மின்சாரம் உருவாக்கும் கருத்தை சோதித்துள்ளனர்.
- இவர்கள் சிறியரக காளானின் முகப்பில் ஆற்றலை உற்பத்தி செய்யும் சிறு கருவியின் தொகுதிகளைப் (bug) பொருத்துவதற்கு 3D அச்சு பொறியைப் பயன்படுத்தியுள்ளனர்.
- இந்த பூஞ்சையானது நீல நுண்ணுயிர்களுக்கு (cyanobacteria) சிறிய அளவிலான ஆற்றலை உருவாக்குவதற்கு ஏற்ற சிறந்த சூழலை அளிக்கிறது.
- மேலும் தங்களது உயிர் படிமமற்ற பயோனிக் காளான்கள் சிறந்த சாத்தியக் கூறுகளைக் கொண்டிருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## NIPUN மின்னணு தளம் மூலம் டெல்லி காவல்துறைக்குப் பயிற்சி

- காவல்துறையினருக்குப் பயிற்சியளிப்பதற்கும் உடனுக்குடனான தகவல்களை வழங்குவதற்கும் என்று டெல்லி காவல்துறையானது “நிபுண்” என்ற மின்னணு கற்றல் தளத்தை தொடங்கியுள்ளது.
- ஆன்லைனில் கிடைக்கும் சிறப்பு படிப்புகள் மூலமாக காவல்துறைப் பணியாளர்களுக்கு பணி சம்பந்தப்பட்ட ஆன்லைன் பயிற்சிகள் மற்றும் தகவல்களை அளிப்பதை இந்த முன்முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆன்லைன் தளத்தின் படிப்புகளானது, கூட்டுமுயற்சி கற்றல் மற்றும் கூட்டுப் பங்காண்மைத் திட்டத்தின் (The Collaborative Learning and Partnership - CLAP) கீழ் பல்கலைக்கழக மானியக் குழு (UGC), FICCI, தேசிய மனித உரிமைகள் ஆணையம், தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் மற்றும் டெல்லி பல்கலைக் கழகத்தின் ஜானகி தேவி நினைவுக் கல்லூரி ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- டெல்லி காவல்துறைக்காக குறிப்பிட்ட படிப்புகளை உருவாக்க டெல்லி சட்ட சேவை ஆணையமும் ஒப்புக் கொண்டுள்ளது.

## KOOL ஆன்லைன் திறந்தநிலை கற்றல் பயிற்சி தளம்

- கேரள கல்வியியல் உள்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப (Kerala Infrastructure and Technology for Education - KITE) நிறுவனமானது KOOL எனும் திறந்த நிலை கற்றல் பயிற்சி தளத்தை வெளியிட்டு இருக்கின்றது.
- இது ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோருக்குப் பயிற்சியளிக்க உதவும்.
- KOOL ஆனது MOOC (மிகப்பெரிய திறந்தநிலை ஆன்லைன் படிப்புகள்) என்ற மாதிரியைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது கல்வியில் முழு அளவில் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட முதல் இந்திய மாநிலமாக கேரளாவை மாற்றுவதற்கு உதவும்.
- கல்வித் துறையின் ஆதார தளமான Samagra என்ற தளத்தின் விரிவாக்கமாக இந்த KOOL தளம் உருவாக்கப்பட்டுள்ளது.
- ஆசிரியர்கள் தங்களது தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்ய 45 மணி நேர கணினி படிப்பை வெற்றிகரமாக முடிப்பது கட்டாயமாக்கப்படும்.

## கிலோ கிராமிற்கு புதிய வரையறை

- தற்போதுள்ள எடை, மின்னோட்டம், வெப்பநிலை மற்றும் சில வேதியியல் பொருட்களின் சர்வதேச அமைப்பின் அலகுகளை (SI - International System of Units) மீளமைப்பதற்காக 60 நாடுகளின் பிரதிநிதிகள் வாக்களித்துள்ளனர்.
- அனைத்து SI அலகுகளும் இயற்கையான உலகத்தை விவரிக்கும் நிலையான மாறிலிகளின் அடிப்படையில் தற்போது வரையறுக்கப்படும்.

- இது அளவீட்டு அலகுகளை வரையறுக்க திடப் பொருட்களை பயன்படுத்தும் முறையை முடிவுக்கு கொண்டு வரும்.
- இந்த புதிய வரையறைகள் SI அமைப்பின் 7 அடிப்படை அலகுகளில் கீழ்க்காணும் 4 அலகுகளில் மாற்றத்தைக் கொண்டு வரும்.
  - கிலோகிராம், ஆம்பியர், கெல்வின் மற்றும் மோல்.
  - SI அமைப்பில் இருந்து பெறப்படும் வோல்ட் (V), ஓம் (Ω) மற்றும் ஜூல் (J) போன்ற அனைத்து அலகுகள்.
- கிலோகிராம் வரையறையானது தற்போது குவாண்டம் இயற்பியலின் அடிப்படை மாறிலியான பிளாங்க் மாறிலி மூலம் மாற்றியமைக்கப்படும்.
- இதுவரை கிலோகிராமானது பாரிஸின் புறநகரில் பாதுகாக்கப்பட்ட பெட்டகத்தில் வைக்கப்பட்டுள்ள கிராண்ட் கே (Grand K) என்றழைக்கப்படும் பிளாட்டினம் - இரிடியம் கட்டியின் நிறையால் வரையறுக்கப்பட்டு வருகிறது.

THE SEVEN FUNDAMENTAL UNITS

| UNIT | QUANTITY | HOW IT IS/WILL BE DEFINED |
|---|---|---|
| Meter* | Distance | Based on speed of light |
| Kilogram** | Mass | To be based on Planck constant |
| Second* | Time | Based on radiation of caesium-133 atom |
| Ampere** | Current | To be based on an electron's charge |
| Kelvin** | Temperature | To be based on Boltzmann constant |
| Mole** | Amount of substance | To be based on Avogadro constant |
| Candela* | Luminous intensity | From efficacy of light of specific frequency |


*Current definition stands **Being redefined

- 1889 ஆம் ஆண்டு முதல் உலகின் உண்மையான ஒரு கிலோ என இதனை அடிப்படையாகக் கொண்டே மற்ற அனைத்தும் அளவிடப்பட்டு வருகின்றன.
- இந்த முடிவானது பிரான்சின் வெர்சைல்ஸ் நகரில் எடைகள் மற்றும் அளவீடுகள் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட எடைகள் மற்றும் அளவீடுகள் குறித்த பொது மாநாட்டில் எடுக்கப்பட்டது.

## செயற்கை சூரியன்- சீனா

- சீனாவானது சூரியனின் மையப்பகுதியின் வெப்பநிலையான 15 மில்லியன் டிகிரி செல்சியஸ்-ஐ விட ஆறு மடங்கு அதிகமான அளவில் 100 மில்லியன் டிகிரி செல்சியஸ் வெப்பநிலையை எட்டக்கூடிய செயற்கை சூரியனை உருவாக்கியுள்ளது.
- சீனாவின் பிளாஸ்மா இயற்பியல் கல்வி நிறுவனத்தின் அறிவியலாளர்கள், செயற்கை சூரியன் என்றழைக்கப்படக்கூடிய சோதனைக்குட்படுத்தப்பட்ட மேம்பட்ட மீக்கடத்தியான டோகாமாக்கில் (Experimental Advanced Superconducting Tokamak-EAST) உள்ள பிளாஸ்மா ஆனது 100 மில்லியன் டிகிரி செல்சியஸை அடைந்து விட்டதாகக் கூறியுள்ளனர்.
- இது பூமியில் அணுக்கரு இணைவு செய்யத் தேவையான அளவு வெப்பநிலையாகும்.

- இந்த EAST உலையானது சூரியனில் ஹைட்ரஜன் ஆனது செலவு குறைந்த பசுமை ஆற்றலாக மாற்றப்படுவதில் உள்ள அதே செயல்பாடுகளை பிரதிபலிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது.



- ஆனால் அவர்களால் அந்த நிலையை 10 வினாடிகளுக்கு மட்டுமே பராமரிக்க / நீட்டிக்க முடிந்தது.

## தீர்மானிக்க உதவும் அமைப்பு (DSS)

- பிரதம மந்திரி உஜ்வாலா திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழ் (BPL – Below Poverty Line) உள்ள குடும்பங்களில் LPG இணைப்புகளை அதிகரிக்க உதவுவதற்காக IIT கரக்பூரின் ஆராய்ச்சியாளர்கள் "தீர்மானிக்க உதவும் அமைப்பு" (Decision support system-DSS) என்பதை உருவாக்கியுள்ளனர்.
- தேசிய அளவில் ஆற்றல் கொள்கை பகுப்பாய்வு செய்வதற்கென ஏற்படுத்தப்பட்ட முதல் அமைப்பு இதுவேயாகும்.
- இது ஒரு கணித நிரலாக்கம் மற்றும் செயல்பாட்டு ஆராய்ச்சி நுட்பங்களைப் பயன்படுத்தி சிறந்த, அறிவார்ந்த முடிவுகளை எடுக்க உதவும் கணினி நிரல் ஆகும்.
- இந்த கணித மாதிரியானது ஒரு பிராந்தியத்தில் ஒரு குறிப்பிட்ட கொள்கைக்கான காலக் கெடுவில்
    - ஒரு பிராந்தியத்திற்குத் தேவையான மொத்த (BPL) இணைப்புகளின் எண்ணிக்கை
    - நியமிக்கப்பட வேண்டிய முகவர்களின் எண்ணிக்கை

  ஆகியவற்றைக் கண்டறிந்து இருக்கின்றது.

## NSE GoBID

- சில்லறை முதலீட்டாளர்கள் (Retail Investors) அரசாங்கப் பங்குகளை வாங்குவதற்காக தேசியப் பங்குச் சந்தையானது (NSE - National Stock Exchange of India) "NSE GoBID" என்ற அலைபேசி

செயலியையும் இணைய தளத்தையும் தொடங்கியுள்ளது.

- இந்த தளமானது முதலீட்டாளர்கள் 91 நாட்கள், 182 நாட்கள் மற்றும் 364 நாட்கள் கொண்ட கருவூலப் பத்திரங்களில் முதலீடு செய்ய (Treasury Bills) அனுமதி அளிக்கிறது. மேலும் முதலீட்டாளர்கள் 1 வருடம் முதல் கிட்டத்தட்ட 40 வருடங்கள் வரை அரசாங்கப் பத்திரங்களில் முதலீடு செய்யவும் அனுமதிக்கிறது.
- NSE GoBID செயலியானது பதிவு செய்யப்பட்ட அனைத்து சில்லறை முதலீட்டாளர்களுக்கும் கிடைக்கும்.

## GROWTH - India தொலை நோக்கியின் முதலாவது அறிவியல் கண்காணிப்பு

- லடாக்கின் ஹென்லியில் உள்ள இந்திய வானியல் ஆய்வு மையத்தில் அமைந்துள்ள நோவா வெடிப்பை ஆய்வு செய்யும் திட்டத்தின் தொடர்ச்சியான, 0.7 மீட்டர் அளவுடைய GROWTH - India தொலை நோக்கியானது முதன்முறையாக தனது கண்டுபிடிப்பைப் பதிவு செய்து இருக்கின்றது.
- GROWTH - India என்பது பேரண்டத்தில் மாறுநிலை நிகழ்வுகளை கண்காணிப்பதற்காக பல நாடுகள் இணைந்து செயல்படுத்தும் முன்முயற்சியான மாறுநிலை நிகழ்வுகள் நிகழ்வதை கண்காணிக்கும் உலக நிலை உணர்த்தி (GROWTH - Global Relay of Observatories Watching Transients Happen) என்ற அமைப்பின் ஒரு பகுதியாகும்.



- அமெரிக்கா, ஜப்பான், இந்தியா, ஜெர்மனி, தைவான், ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் இந்த முன்முயற்சியில் பங்கு பெற்றுள்ள நிறுவனங்களாகும்.
- GROWTH - India என்பது அண்ட நிகழ்ச்சிகளை கண்காணிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது முற்றிலும் முழுவதுமான எந்திரவியல் (Robotics) தொலைநோக்கியாகும்.

## ஏர்சேவா 2.0 (Airsewa 2.0) இணைய தளம்

- புது தில்லியில் Airsewa 2.0 என்பதின் மேம்படுத்தப்பட்ட இணைய தளம் மற்றும் அலைபேசி செயலி தொடங்கப்பட்டது.


- Airsewa 2.0 ஆனது விமானங்களின் தாமதம், பணம் திருப்பி செலுத்துதலில் உள்ள பிரச்சனை, நீண்ட வரிசை மற்றும் பயண உடைமைகள் காணாமல் போவது குறித்த புகார்கள் போன்ற விமானப் பயணிகளின் புகார்களுக்கு தீர்வு காணும்.
- 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகமானது ஏர்சேவா இணைய தளம் மற்றும் செயலியைத் தொடங்கியது.
- ஒரு ஆண்டில் பெறப்பட்ட புகார்களுக்கு குறித்த காலத்திற்குள் 100 சதவீத தீர்வுகளை எட்டியதற்காக சென்னை விமான நிலையத்திற்கு சுரேஷ் பிரபு மற்றும் ஜெயந்த் சின்ஹா ஆகியோர் சாம்பியன் விருது அளித்தனர்.

## GRP உதவி செயலி

- கோயம்புத்தூர் இரயில்வே சந்திப்பில் இரயில்வே துறை ADGP யான சைலேந்திரபாபு “GRP (Government Railway Police) உதவி செயலியை” அறிமுகப்படுத்தினார்.
- இதன் மூலம் இரயில் பயணிகள் அரசு இரயில்வே காவல்துறை (Government Railway Police), ரயில்வே பாதுகாப்புப் படை (Railway Protection Force) ஆகியோரின் உதவியைப் பெறலாம்.
- ரயில்வே பயணிகள் எந்தவொரு சந்தேகத்திற்கிடமான பொருட்களின் புகைப்படத்தினையும் இந்த செயலி மூலம் பகிர்ந்து கொள்ள முடியும்.

## பைசா ‘PAiSA’ தரவுதளம்

- வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான மத்திய அமைச்சகமானது மலிவான கடன் வசதி மற்றும் வட்டி உதவித் தொகை அணுகலுக்காக (PAiSA) பைசா என்ற தளத்தைத் தொடங்கியுள்ளது.
- இது புதுடெல்லியில் நடைபெற்ற மாநகராட்சி நிதி மற்றும் நகர்ப்புற திட்டமிடல் மீதான தேசிய பயிற்சிப் பட்டறையின் போது தொடங்கப்பட்டது.




- பைசா என்பது மலிவான கடன் வசதி மற்றும் வட்டி உதவித் தொகைக்கான அணுகலுக்கான தளம் (Portal for Affordable Credit and Interest Subvention Access - PAiSA) என்பதன் சுருக்கமாகும்.
- இது தீனதயாள் அந்த்யோதயா திட்டம் - தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் (DAY

– NULM/ Deendayal Antyodaya Yojana – National Urban Livelihoods Mission) கடன்களை விரைவாக செயலாக்கம் செய்வதற்காக அமைக்கப்பட்ட மையப்படுத்தப்பட்ட மின்னணு தளமாகும்.

- இது பயனாளிகளை நேரடியாக இணைப்பதையும் சேவைகளை வழங்குவதில் அதிக அளவிலான செயல்திறன் கொண்டிருப்பதை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இந்த திட்டத்தின் முதன்மை வங்கியான அலகாபாத் வங்கியால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டடது.


## ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டம்

- 7 மாநிலங்களின் பொது சுகாதார மேற்பார்வையை கண்காணிப்பதற்காக மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகமானது புதிய தகவல் தளத்தை புதுடெல்லியில் தொடங்கியுள்ளது.
- ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டம் (IDSP - Integrated Disease Surveillance Programme) என அழைக்கப்படும் இந்த திட்டமானது ஒருங்கிணைந்த சுகாதார தகவல் தளத்தின் (IHIP - Integrated Health Information Platform) ஒரு பிரிவாகும்.
- பொது சுகாதார மேற்பார்வை கண்காணிப்புக்கென மத்திய அரசால் தொடங்கப்பட்ட முதல் முயற்சி இதுவேயாகும்.
- இது நிகழ் நேரத்தில் புவியியல் தகவல் முறைமை (GIS – Geographical Information System) குறியிடலுடன் கிராம வாரியாக நோய் சார்ந்த மின்னணு சுகாதார தகவல்களை வழங்கும் அமைப்பாகும். இது உடனடி நோய்த் தடுப்பு முறைகளை வழங்குவதற்கும் தொற்றுத் தன்மையுடைய நோய்களை கட்டுப்படுத்துவதற்கும் உதவும்.
- இது திடீர் நோய்ப் பெருக்கத்தை கண்டறியவும் நோயுற்ற பாதிப்பு மற்றும் அதன் மூலம் ஏற்படும் இறப்பைத் தடுக்கவும் மக்களிடத்தில் நோய் பாதிப்பு மற்றும் அதன் சுமைகளை குறைக்கவும் குறித்து கொள்கை வகுப்பாளர்களுக்கு அண்மை நிகழ்நேர தரவுகளை அளிக்கும்.

## முதலாவது அமைதியான விமானம்

- மாசசூட்ஸ் தொழில்நுட்ப நிறுவன அறிவியலாளர்கள் முதலாவது சுழல் விசிறி அல்லது விசைப்பொறி உருளைகளற்ற அமைதியான விமானத்தை உருவாக்கியுள்ளனர்.
- உந்து விசை அமைப்பில் எந்த நகரும் பாகங்களும் அற்ற முதல் விமானம் இதுவேயாகும். பறப்பதற்கு புதைபடிவ எரிபொருள்களைச் சார்ந்திராத இந்த விமானமானது சுழல்விசிறி (propellers) அல்லது விசைப்பொறி உருளைகளைக் (turbine blades) கொண்டிருக்காது.
- தற்போதுள்ள அனைத்து விமானங்களும் சுழல் விசிறிகள், விசைப் பொறி உருளை அலகுகள் போன்ற நகரும் பாகங்களைக் கொண்டு புதைபடிம எரிபொருள் எரிவதன் மூலம் அவை இயங்கும். இவை அதிக அளவில் நீண்ட ரீங்கார ஒலிகளை உருவாக்குகின்றன.
- இது திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொடரான 'ஸ்டார் ட்ரெக்' என்பதன் மூலம்

ஈர்க்கப்பட்டு உருவாக்கப்பட்டது.





- இது விமானத்திலேயே அமைதியான ஆனால் அயனிகளின் பலமான ஓட்டம் மூலம் அயனியாக்கம் செய்யப்பட்ட காற்று அல்லது மின்னியக்க உந்துவிசை மூலம் இயக்கப்படுகிறது.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### உலக மண் பல்லுயிர்ப் பெருக்க நிலப்பட ஏடு (ATLAS)

- ஐரோப்பிய ஆணையத்தின் இணை ஆராய்ச்சி மையத்தினால் (European Commission Joint Research Centre) தயாரிக்கப்பட்ட உலக மண் பல்லுயிர்ப் பெருக்க நிலப்பட ஏட்டின்படி, இந்தியாவின் மண் பல்லுயிர்ப் பெருக்கம் அபாய கட்டத்தில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.
- இது பாகிஸ்தான், சீனா, ஆப்பிரிக்காவில் உள்ள பல நாடுகள், ஐரோப்பிய நாடுகள், பெரும்பாலான வட அமெரிக்க நாடுகள், இந்தியா ஆகிய நாடுகளில் மண் பல்லுயிர்ப் பெருக்கம் மிக அதிக அளவில் அபாயக் கட்டத்தில் உள்ளதைக் காட்டுகிறது.




- இயற்கை வளம் மற்றும் விவசாயம் ஆகியவற்றை மிக அதிக அளவில் சுரண்டுதல் பல்லுயிர்ப் பெருக்க அழிவிற்கான முக்கியக் காரணிகள் ஆகும்.
- மேலும் இது இந்தியாவின் தனிநபர் சூழலியல் தடமானது 1.75 ஹெக்டேர்கள் / தனிநபர் என்பதை விட குறைவாக, அதாவது ஆராயப்பட்ட நாடுகளில் இதுவே மோசமான அளவாக உள்ளது எனவும் இந்தியாவின் அதிக மக்கட்தொகையானது சுற்றுச்சூழல் பிரச்சனையால் அதிக பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்பதையும் காட்டுகிறது.
- உலகத்திற்கான அபாயக் குறியீடானது நிலத்தில் உள்ள பன்முகத் தன்மையின் இழப்பு, மாசுபாடுகள், அதிகப்படியான ஊட்டச்சத்து, மிகை மேய்ச்சல், தீவிர விவசாயம், தீ, மண் அரிப்பு, பாலைவனமாக்கல் மற்றும் பருவநிலை மாற்றம் ஆகியவற்றின் மூலம் பிரச்சினைகள் ஏற்படுவதைக் குறிக்கிறது.
- இது ஆண்டுக்கு இருமுறை வெளியிடப்படும் 2018 ஆம் ஆண்டிற்கான வாழும் கிரகத்திற்கான அறிக்கையின் (Living Planet Report 2018) ஒரு பகுதியாகும்.

## குறைவாக மாசு ஏற்படுத்தக் கூடிய பட்டாசுகள் - CSIR

- அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்ற (Council of Scientific & Industrial Research - CSIR) ஆராய்ச்சியாளர்கள் குறைவாக மாசு ஏற்படுத்தக்கூடிய பட்டாசுகளை உருவாக்கியுள்ளனர். மேலும் இந்த பட்டாசுகள் சுற்றுச்சூழலுக்கு உகந்தது மட்டுமல்லாமல் வழக்கமான பட்டாசுகளை விட 15-20% விலை குறைவாகவும் உள்ளன.
- இப்பட்டாசுகள் பாதுகாப்பான நீர் வெளியேற்றிகள், பாதுகாப்பான குறைந்தபட்ச அலுமினியம், பாதுகாப்பான தெர்மைட் பட்டாசுகள் என்று பெயரிடப்பட்டுள்ளன.
- இந்த செயல்பாட்டு முன்மாதிரிகளை சிவகாசியில் உள்ள பட்டாசு தயாரிப்பாளர்கள் வெற்றிகரமாக சோதனை செய்துள்ளனர்.

## உலக சுகாதார நிறுவனத்தின் காற்று மாசு மற்றும் சுகாதாரத்தின் மீதான உலகளாவிய மாநாடு

- 2018 ஆம் ஆண்டு அக்டோபர் 30 முதல் நவம்பர் 1 வரை உலக சுகாதார அமைப்பின் முதலாவது காற்று மாசு மற்றும் சுகாதாரத்தின் மீதான உலகளாவிய மாநாடு ஜெனிவாவில் நடைபெற்றது.
- இம்மாநாட்டின் கருத்துரு : "காற்றின் தரத்தை உயர்த்துதல், பருவ மாற்றத்தை தடுத்தல் - உயிர்களைக் காத்தல்" என்பதாகும்.




- இம்மாநாட்டின் நோக்கம் உலகம் முழுவதும் உள்ள உலகளாவிய, தேசிய மற்றும் உள்ளூர் பங்குதாரர்களை தூய காற்றிற்காகவும், சிறந்த சுகாதாரத்திற்காகவும் தங்கள் அறிவுத் தகவல்களைப் பகிர்ந்து அவர்களது நடவடிக்கைகளை ஒருங்கிணைத்திட ஒன்றுபடுத்திடச் செய்வதாகும்.
- இந்த மாநாடு
    - ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் அமைப்பு
    - உலக வானிலை அமைப்பு
    - குறைந்த ஆயுட்காலமுடைய பருவநிலை மாசுபடுத்திகளைக் குறைப்பதற்கான பருவநிலை மற்றும் தூய காற்றுக்கான கூட்டணி
    - ஐரோப்பாவிற்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார ஆணையம்
    - உலக வங்கி
    - பருவ நிலை மாற்றத்திற்கான ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பு ஒப்பந்தத்தின் செயலகம்

ஆகியவற்றால் இணைந்து நடத்தப்பட்டது.

## சூரிய ஒளிக் கதிர்களிடமிருந்து பாதுகாப்பு அளிக்கும் பொருட்களுக்குத் தடை - பலாவு

- சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய கூறுகளைக் கொண்ட சூரிய ஒளிக் கதிர்களிடமிருந்து பாதுகாப்பு அளிக்கும் பொருட்களுக்குத் தடை விதித்த (sunscreen products) உலகின் முதலாவது நாடாக தென் பசிபிக் தீவில் உள்ள நாடான பலாவு உருவெடுத்துள்ளது.
- நெகேவின் பென்-குரியன் பல்கலைக் கழகத்தால் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- இந்த ஆய்வானது நீந்துபவர்களின் தோல், நகராட்சி கழிவுநீர் வெளியேற்றம் மற்றும் கடலோர கழிவுநீர் அமைப்புகள் ஆகியவற்றிலிருந்து வெளிப்படும் ஆக்ஸிபென்சோன் பவளப் பாறைகளை மாசுபடுத்துகிறது எனக் கண்டறிந்துள்ளது.
- இந்த தடை செய்யப்பட்ட பொருட்கள் சூரிய ஒளியின் புற ஊதாக் கதிர்களிலிருந்து நம்மைப் பாதுகாக்கும் கூறுகளை உடைய திரவம் அல்லது நறுமணப் பொருட்கள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் சூரிய ஒளிப் பாதுகாப்புக் காரணிகள் (SPF - Sun Protection Factor) ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளன.
- மேலும் ஆக்ஸிபென்சோன், ஆக்டினோக்ஸ்ஸேட், ஆக்டோக்ரைலீன், 4-மெத்தில் பென்சிலைடின் கேம்ப்போர் மற்றும் பாரபென்ஸ் ஆகியவையும் இதில் அடங்கியுள்ளன.
- நான்கு பாரபென்கள், ட்ரைக்ளோசான் மற்றும் பீனாக்ஸி எத்தனால் ஆகியவை நுண்ணுயிரி எதிர் பதனப் பொருள்களாகும். மேலும் இவை தலையை சுத்தம் செய்யும் நீர்மங்கள், ஈரப்பத பொருட்கள், திரவ சோப்புகள் மற்றும் தலைமுடி உலர்த்திகள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படுகின்றன.
- முன்னதாக மே 4 அன்று, ஹவாய் சட்டமன்றமானது பவளப் பாறைகள் வெளிறலைத் தடுப்பதற்காக 2021 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து ஆக்ஸிபென்சோனைத் தடை செய்வதாக அறிவித்துள்ளது.

## சூறாவளிப் புயல் - கஜா

- 2018 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் தேதியன்று “கஜா” என்ற சூறாவளிப் புயலானது தமிழக கடற்கரையைக் கடந்தது. இந்தப் புயலானது சென்னையிலிருந்து 300 கிலோ மீட்டருக்கு அப்பால் நாகப்பட்டினம் மற்றும் வேதாரண்யம் ஆகியவற்றிற்கு இடையே கரையைக் கடந்தது.
- இந்தப் புயலானது 120 கிலோ மீட்டர் காற்றின் வேகத்துடன் நாகப்பட்டினம் மற்றும் வேதாரண்யத்திற்கு இடையே கரையைக் கடந்தது.




- இந்தப் புயலானது கேரளா நோக்கி மேற்கு திசையில் நகர்ந்து அரபிக் கடலை அடைந்து குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக மாறியது.
- ஒடிசா மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களைத் தாக்கிய டிட்லி புயலுக்குப் பின் ஒரு மாதம் கழித்து கிழக்கு கடற்கரைப் பகுதியைத் தாக்கும் இரண்டாவது புயல் கஜா ஆகும்.
- வானிலை முன்னறிவிப்பாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு இடையே தகவல் பரிமாற்றத்தை எளிமைப்படுத்துவதற்காக பல்வேறு முன்னெச்சரிக்கை மையங்களால் புயல்கள் பெயரிடப்படுகின்றன.
- தென் கிழக்கு ஆசியாவில் புயல்கள் வெவ்வேறு நாடுகளால் பெயரிடப்படுகின்றன. டிட்லி புயலானது பாகிஸ்தானால் பெயரிடப்பட்டது. கஜா புயலானது இலங்கையால் பெயரிடப்பட்டது.

## உலக மலேரியா அறிக்கை - WHO


- உலக சுகாதார அமைப்பான (WHO – World health Organization) சமீபத்தில் உலக மலேரியா அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- உலகம் முழுவதும் அதிக பாதிப்புகளைக் கொண்ட 11 நாடுகளில் 2017 ஆம் ஆண்டில் இந்தியா மட்டுமே மலேரிய நோய் பாதிப்புகளை கணிசமான அளவில் குறைத்துள்ளதாக இந்த அறிக்கை தெரிவிக்கின்றது.
- இந்த அறிக்கையின்படி 2017 ஆம் ஆண்டில் உலக மலேரியா நோயாளிகளில் 4%

நோயாளிகளை இந்தியா மட்டுமே கொண்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் அப்போதிலிருந்தே மலேரியாவைக் குறைப்பதில் இந்தியா குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது.

- இந்தியாவானது 2016 ஆம் ஆண்டு மட்டும் 24% என்ற அளவில் மலேரியா பாதிப்பைக் குறைத்துள்ளது. இது குறிப்பாக அதிக மலேரியா பாதிப்புக்குள்ளான ஒடிசா மாநிலத்தில் ஏற்பட்ட குறைப்பால் நிகழ்ந்தது.
- இந்தியாவில் உள்ள மொத்த மலேரியா நோய் பாதிப்புகளில் கிட்டத்தட்ட 40% என்ற அளவை ஒடிசா பங்களிக்கின்றது.

*குறிப்பு*

- 2017 ஆம் ஆண்டில், இந்தியாவானது மலேரியா நோய்த் தடுப்பிற்கான 5 ஆண்டு தேசிய யுக்திமுறைச் சார்ந்த திட்டத்தின் குறிக்கோளை மலேரியாவை 'கட்டுப்படுத்துதல்' என்பதிலிருந்து 'அகற்றுதல்' என மாற்றிக் கொண்டது.
- இது 2022 ஆம் ஆண்டில் இந்தியாவில் உள்ள 628 மாவட்டங்களில் 571 மாவட்டங்களில் இருந்து மலேரியாவை ஒழிக்கும் இலக்குகளைக் கொண்ட செயல்முறைகளை வழங்கியது.
- 2018 ஆம் ஆண்டில் மலேரியா அற்ற நாடாக பராகுவேயை WHO அறிவித்துள்ளது. கடந்த 45 ஆண்டுகளில் இந்த நிலையைப் பெற்ற அமெரிக்க கண்டத்தின் முதல் நாடாக பராகுவே ஆகியுள்ளது.




## துத்வா புலிகள் காப்பகத்திற்கு SSB ரோந்து

- துத்வா புலிகள் காப்பகம் மற்றும் சசஸ்திரா சீமா பால் (Sashastra Seema Bal - SSB) ஆகியவை துத்வா வனப் பகுதி மற்றும் அதன் வளமான வன உயிர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கென கை கோர்த்துள்ளன.
- வனப் பகுதிகள் மற்றும் வனவிலங்கு குற்றங்களைத் தடுப்பதற்காக துத்வா மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ரோந்துப் பணியை வலுப்படுத்துவதற்காக எல்லைப்

பாதுகாப்பில் உள்ள SSB உள்ளிட்ட அனைத்து பாதுகாப்புப் படைகள் மற்றும் துத்வா களப் பணியாளர்கள் ஆகியோரிடையே ஒரு உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

- துத்வா புலிகள் காப்பகமானது உத்தரப் பிரதேசத்தில் உள்ள லக்கிம்பூர் கேரி மற்றும் பஹ்ராய்ச் மாவட்டங்களின் குறுக்காக அமைந்துள்ள ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதி ஆகும்.
- இது துத்வா தேசியப் பூங்கா, கிஷன்பூர் வனவிலங்கு சரணாலயம் மற்றும் காடர்நியாகாட் வனவிலங்கு சரணாலயம் ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும்.

## இந்திய விலங்கியல் ஆய்வு நிறுவனம் - அறிக்கை

- இந்திய விலங்கியல் ஆய்வு நிறுவனமானது (ZSI - Zoological Survey of India) சமீபத்தில் "உயிரின வாழ்வியல் மண்டலங்களில் விலங்குகளின் பன்முகத்தன்மை : இந்திய தீவுகள்" என்ற அறிக்கையை வெளியிட்டது.
- இது முதன்முறையாக அந்தமான் நிகோபார் தீவுகளில் காணப்படும் அனைத்து விலங்கின வகை உயிரினங்களையும் உள்ளடக்கிய தரவு தளத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்திய புவியியல் பகுதிகளில் 0.25 சதவிகிதத்தை மட்டுமே கொண்ட தீவுகள், நாட்டின் ஒட்டுமொத்த விலங்கின உயிர் வகைகளில் 10 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட உயிரினங்களைக் கொண்டுள்ளது என இவ்வறிக்கை நிரூபித்துள்ளது
- ஒட்டுமொத்தமாக தீவுகளில் காணப்படும் 10 கடல் விலங்கினங்களில் கீழ்க்காணும் 2 உயிரினங்கள் IUCN-வின் (International Union for Conservation of Nature) அச்சுறு நிலையில் உள்ள உயிரிகளுக்கான சிவப்பு அட்டவணையில் மறையத்தகு (Vulnerable) நிலையில் உள்ள உயிரினமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவையாவன
    - அவில்லியா/கடல்பசு மற்றும்
    - இந்தோ-பசிபிக் ஹம்பேக் டால்பின்
- ஒட்டுமொத்தமாக 46 நிலவாழ் பாலூட்டிகள் அங்கு கண்டறியப்பட்டுள்ளன. அவை IUCN-இன் பட்டியலின்படி கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- கீழ்க்காணும் 3 இனங்கள் உயர் அச்சுறு நிலையில் உள்ளனவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன
        - அந்தமான் மூஞ்சூறு (குரோசிடூரா அந்தமானென்சிஸ்)
        - ஜென்கின்னின் மூஞ்சூறு (குரோசிடூரா ஜென்சின்ஸி
        - நிக்கோபார் மூஞ்சூறு (குரோசிடூரா நிகோபாரிகா)
    - **5** உயிரினங்கள் அழிவு நிலையில் (Endangered) உள்ளனவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
    - **9** உயிரினங்கள் மறையத்தகு நிலையில் (Vulnerable) உள்ளனவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
    - **1** உயிரினம் அண்மை அச்சுறு நிலையில் (Near Threatened) உள்ளனவாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.


- ❖ தீவுகளின் சுற்றுச்சூழலியலின் மற்றொரு தனித்துவமான அம்சம் 555 கற்கோரை பவளப்பாறைகள் (scleractinian corals) அங்கு காணப்படுவதாகும்.

## தாக்கம் அடிப்படையிலான முன்னறிவிப்பு அணுகுமுறை

- ❖ இந்திய வானிலை ஆய்வுத் துறையானது மழைக் காலத்தில் ஆறுகள் மற்றும் நீர்த் தேக்கங்களில் உயரும் நீரின் அளவை மதிப்பீடு செய்வதற்காக தாக்கம் அடிப்படையிலான முன்னறிவிப்பு அணுகுமுறை எனப்படும் புதிய தொழில்நுட்பத்தினை உருவாக்கியுள்ளது.
- ❖ இது மாநில அரசு ஆணையாளர்களுக்கு மழைப் பொழிவின் தாக்கத்தை நுண்ணிய அளவில் கண்காணிக்கவும் நிகழ்நேர முடிவுகளை எடுக்கவும் வேண்டி முந்தைய நிகழ்வுகளின் சூழ்நிலைக் காட்சிகளை காட்டும்.
- ❖ இது கேரள வெள்ளம் போன்ற பேரழிவு நிலைமைகளைத் தவிர்க்க உதவும்.

## டிட்லி புயல் அரிதினும் அரிதானதாக வரையறுப்பு

- ❖ ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவிற்கான ஒருங்கிணைந்த பிராந்திய பல்வகை - அபாய முன்னெச்சரிக்கை அமைப்பானது (RIMES - Regional Integrated Multi-Hazard Early Warning System) டிட்லி புயலை அரிதினும் அரிதான புயல் என வரையறை செய்துள்ளது.




- ❖ புயல் காற்றுகள் பொதுவாக நிலப்பரப்பினை அடைந்தவுடன் தனது வலிமையை இழந்து விடும். ஆனால் டிட்லியின் பாதையானது கடந்த 200 வருட புயல்களின் பதிவுகளில் இதற்கு முன் இல்லாதவாறு அமைந்தது.
- ❖ இதுவரை கடந்த 200 வருட வரலாற்றுப் பதிவுகளில் கீழ்க்காணும் 2 புயல்கள் மட்டுமே நிலச்சரிவை ஏற்படுத்திய பின்னர் அவை ஒடிசாவின் கடற்பகுதியில் வலுப் பெற்றுள்ளன.
    - ○ 1994-ல் சூப்பர் புயல்
    - ○ டிட்லி

- அக்டோபர் 11 அன்று டிட்லி புயலானது ஆந்திரப் பிரதேசத்தின் கடற்கரையோரப் பகுதிகளில் நிலச்சரிவை ஏற்படுத்திய பின்னர் ஒடிசாவின் கஜபதி மாவட்டத்தில் நுழைந்தது.
- அதற்குப் பின்னர், அதற்கு அருகிலுள்ள மாவட்டங்களை நோக்கி திடீர் திரும்புதலை ஏற்படுத்தியதுடன் 48 மணி நேரத்திற்கும் மேலாக கடுமையான புயல் காற்றாகவும் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையாகவும் அது தொடர்ந்தது.

## மாநிலச் செய்திகள்

### சாங்காய் திருவிழா 2018- மணிப்பூர்

- மணிப்பூர் அரசாங்கமானது 2018 சாங்காய் திருவிழாவை மணிப்பூரின் கெய்புல் லம்ஜாவோ, இம்பால் மற்றும் மாவோ ஆகிய 3 இடங்களில் நவம்பர் 21 முதல் 30 வரை கொண்டாடவிருக்கிறது.
- இது மாநிலத்தை உலகளாவிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்த ஆண்டுதோறும் மணிப்பூர் சுற்றுலாத் துறையால் கொண்டாடப்படும் கலாச்சார விழாவாகும்.
- மணிப்பூரின் வரலாற்றில் முதல்முறையாக இவ்விழாவில் இந்தியாவிற்கான அமெரிக்க தூதர் கலந்து கொள்கிறார்.
- மணிப்பூரில் மட்டுமே காணப்படும் அம்மாநில விலங்கான சாங்காய் எனப்படும் முன்தலை கொம்பு மானின் பெயரால் இத்திருவிழா இப்பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது.



### இந்தியாவின் முதல் ரோபோடிக் டைனோசர் காட்சிக் கூடம்

- பஞ்சாபின் கபூர்தலாவில் உள்ள புஷ்பா குஜ்ரால் அறிவியல் நகரத்தில் இந்தியாவின் முதல் ரோபோட்டிக் டைனோசர் காட்சிக் கூடம் பொது மக்களின் பார்வைக்காக

திறக்கப்பட்டுள்ளது.

- இந்த காட்சிக் கூடமானது மத்திய மற்றும் மாநில அரசின் கூட்டு முயற்சியாகும்.
- இந்த புஷ்பா குஜ்ரால் அறிவியல் நகரமானது வட இந்தியாவில் இத்துறையில் ஏற்படுத்தப்பட்ட மிகப்பெரிய முதல் திட்டமாகும்.



## டால் - நஹீன் ஏரியில் ஆழ அளவியல் ஆய்வு

- ஜம்மு & காஷ்மீர் நிர்வாகமானது முன்னாள் கடற்படை அதிகாரியான S.K. ஜா என்பவரை டால்-நஹீன் ஏரியில் விரிவான ஆழ அளவியல் ஆய்வு மேற்கொள்வதற்கான ஆலோசகராக நியமித்துள்ளது.
- ஆழ அளவியல் ஆய்வு என்பது பெருங்கடல் அல்லது ஏரியின் நீருக்கடியிலான ஆழத்தைப் பற்றி மேற்கொள்ளப்படும் ஆய்வாகும்.
- ஸ்ரீநகரிலுள்ள நஹீன் ஏரியானது டால் ஏரியிலிருந்து பிரியும் ஆழமான நீல ஏரியாகும்.
- இந்த நஹீன் ஏரியானது அதிக அளவிலான வில்லோ மற்றும் போப்லர் மரங்களால் சூழப்பட்டுள்ளது. எனவே இது “The jewel in the ring” அல்லது வளையத்தில் உள்ள அணிகலன் என பொருள்படும் விதத்தில் நஹீனா என்றழைக்கப்படுகிறது.

## இந்தியாவின் முதலாவது நீதி நகரம் - ஆந்திரப் பிரதேசம்

- ஆந்திரப் பிரதேசம் மாநிலமானது நீதித்துறை அமைப்பிற்கு உதவுவதற்காக மாநிலத் தலைநகரான அமராவதியில் உலகத் தரம் வாய்ந்த, இந்தியாவின் முதலாவது ‘நீதி நகரை’ கட்டமைத்து வருகிறது.
- ஒருங்கிணைந்த நீதி மையத்தைக் கொண்டதாக அமராவதியில் ‘நீதி நகரத்தை’ APCRDA (ஆந்திரப் பிரதேச தலைநகர வளர்ச்சி ஆணையம்/ Andhra Pradesh Capital Region Development Authority) கட்டமைத்து வருகிறது. இந்த நகரமானது தோராயமாக 2.5 லட்சம் மக்கள் தொகையுடன் 3,309 ஏக்கர் அளவில் பரவியுள்ளது.
- இந்த நீதி நகரமானது 1.3 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பை

உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஒடிசாவின் கடலோர பேரிடர் எச்சரிக்கை அமைப்பு

- இந்தியாவில் முதன்முறையாக முன்னெச்சரிக்கை தகவல் பரப்பு மையத்தை ஒடிசா மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது அபாயச் சங்கு கோபுரத்தின் மூலம் புயல் மற்றும் சுனாமி குறித்து ஒரே நேரத்தில் கடற்கரையோரத்தில் வசிப்பவர்களுக்கும் மீனவர்களுக்கும் எச்சரிக்கை விடுக்கும்.
- 480 கி.மீ. கடல் எல்லை கொண்ட ஒடிசா மாநிலத்தில் 122 கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புவனேஸ்வரில் உள்ள மாநில அவசர மையத்தில் பொத்தானை அழுத்தியவுடன் இந்த 122 கோபுரங்களிலும் அபாயச் சங்கு ஒலிக்கும்.
- இது மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களின் கூட்டு முயற்சியாகும். இது உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

## எழுத்தச்சன் புரஸ்காரம் - கேரளா

- கேரள மாநில அரசின் முதன்மை இலக்கியப் பரிசான எழுத்தச்சன் புரஸ்காரம் என்ற விருதின் 2018ம் ஆண்டுக்கான எழுத்தாளராக M. முகுந்தன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



- மலையாள மொழி இயக்கத்தின் தந்தை என்று அறிப்படும் துஞ்சத்து ராமானுஜன் எழுத்தச்சன் என்ற கவிஞரின் பெயர் கொண்டு இந்த விருதிற்குப் பெயரிடப்பட்டது.
- இப்பரிசு 5 லட்ச ரூபாய் பரிசுத் தொகையையும், பாராட்டுச் சான்றிதழையும் கொண்டிருக்கும்.
- விருதுக் குழுவானது கேரளா சாகித்ய அகாடமியின் தலைவரை இதன் தலைவராகவும், கலாச்சாரத் துறை செயலாளர், கவிஞர் K.சச்சிதானந்தன், எழுத்தாளர்கள் பாலமோகன் தம்பி மற்றும் சுனில் பி. இலாயிடோம் ஆகியோரை இதன் உறுப்பினர்களாகவும் கொண்டிருக்கும்.

## புதிதாகப் பிறந்த குழந்தைகளின் இறப்பு விகிதம் - தமிழ்நாடு

- 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் புதிதாகப் பிறந்த குழந்தைகளின் இறப்பு விகிதத்தை (Nenatal Mortality Rate - NMR) வருட சராசரியில் அதிக அளவில் குறைத்த சாதனைக்காக மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்திடம் இருந்து ஒரு விருதினை தமிழ்நாடு பெற்று இருக்கின்றது.
- மத்திய அமைச்சகமானது அசாமின் காசிரங்காவில் நடந்த "இந்தியாவில் பொது மருத்துவத் துறையில் சிறந்த மற்றும் பின்பற்றக் கூடிய நடைமுறைகள் மற்றும் புதுமைகள்" என்பதன் மீதான 5வது தேசிய மாநாட்டில் சிறப்பாக பணியாற்றிய மாநிலங்களுக்கு விருதுகளை வழங்கியது.
- 2015ஆம் ஆண்டை விட 2016ஆம் ஆண்டில் புதிதாகப் பிறந்த குழந்தைகளின் இறப்பு விகிதத்தை வருடாந்திர அளவில் அதிகப்படியாக குறைத்தமைக்கான தரவரிசைப் பட்டியலில் தமிழ்நாடு மாநிலம் இரண்டாவது இடத்தைப் பிடித்தது. இமாச்சலப் பிரதேசம் முதலிடத்தைப் பிடித்தது.
- 2030ம் ஆண்டிற்குள் அடைய வேண்டிய நீடித்த வளர்ச்சி இலக்குகளில் ஒன்றான புதிதாகப் பிறந்த குழந்தைகளின் இறப்பு விகிதத்தை 1000 பிறப்புகளுக்கு 12 என்ற விகிதத்தில் குறைக்கும் இலக்கை தமிழ்நாடு ஏற்கெனவே அடைந்திருக்கின்றது.
- 2015ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் புதிதாகப் பிறந்த குழந்தைகளின் இறப்பு விகிதம் 1000 பிறப்புகளுக்கு 14 என்ற விகிதத்தில் இருந்தது. இந்த விகிதம் 2016ஆம் ஆண்டில் மாதிரிப் பதிவீட்டு முறையின் படி 1000 பிறப்புகளுக்கு 12 என்ற அளவிற்கு சரிந்தது.

## ஜெய்ப்பூர் காலணி - மலாவி

- ஆப்பிரிக்காவின் மலாவியில் "ஜெய்ப்பூர் காலணி" முகாமை இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் தொடங்கி வைத்தார். மேலும் அங்குள்ள பயனாளிகளுக்கு இந்தியத் தயாரிப்பான இலவச செயற்கை கால் உறுப்புகளை வழங்கினார்.
- மகாத்மா காந்தியின் மனிதநேயப் பணியை கௌரவிக்கும் "மனித நேயத்திற்கான இந்தியா" என்ற திட்டத்தின்கீழ் இந்த முகாம் தொடங்கப்பட்டது.



- ஒரு சிறந்த ஆன்மா மற்றும் பின்வரும் பல தலைமுறைகளுக்கு உத்வேகம் அளிக்கக்கூடிய

வகையில் மகாத்மா ஆவதற்கான முதற்படியை காந்திஜி ஆப்பிரிக்காவின் மலாவியில் எடுத்ததால் முதலாவது ஜெய்ப்பூர் காலணி முகாம் மலாவியில் நடைபெற்றது.

- “மனித நேயத்திற்கான இந்தியா” என்ற திட்டமானது அக்டோபர் 2 அன்று தொடங்கப்பட்டது. இது மகாத்மா காந்தியின் 150வது பிறந்த தினத்துடன் ஒன்றிப் பொருந்துகிறது. அடுத்த ஓராண்டு காலத்தில் மகாத்மா காந்தியின் செய்திகளை இது உலகம் முழுவதும் எடுத்துச் செல்லவிருக்கிறது.

## அபிஜே கொல்கத்தா இலக்கியத் திருவிழா

- 10-வது அபிஜே கொல்கத்தா இலக்கியத் திருவிழா 2019-ம் ஆண்டு ஜனவரி 18 முதல் 20 வரை நடத்தப்பட இருக்கின்றது.
- இத்திருவிழா வளரும் எழுத்தாளர்களை அடையாளப்படுத்தி ஊக்குவிப்பதற்கான புதிய எழுத்தாளர்களுக்கான போட்டி, பெண்கள் இலக்கியம், குழந்தை எழுத்தாளர்கள், இலக்கியத்திற்கான வினாவிடைகள், கலந்துரையாடல்கள், கதை சொல்லும் நிகழ்ச்சி மற்றும் பாரம்பரியமான புதிய கவிதைத் தொகுப்புகள், கவிஞர்கள் மற்றும் உரைநடை எழுத்தாளர்களை அடையாளப்படுத்திட கவிதை கண்காட்சி போன்ற பகுதிகளைக் கொண்டிருக்கும்.
- இத்திருவிழா சுகாதாரம், நடப்பு நிகழ்வுகள், பெண்கள் பிரச்சினை மற்றும் குழந்தைகள் இலக்கியம் போன்ற இதர விஷயங்கள் மீதும் கவனம் செலுத்தும்.
- 2010 ஆம் ஆண்டிலிருந்து, இத்திருவிழாவானது நிகழ்நேர நாடகக் காட்சிகள், பாரம்பரிய உரையாடல்கள், தெரு நாடகம், நேரலை பன்முக இசை நிகழ்ச்சிகள், திரைக் காட்சிகள் மற்றும் இலக்கிய கருத்தரங்குகள் ஆகியவற்றைக் கொண்டிருக்கின்றது.

## Signature பாலம் - டெல்லி

- நவம்பர் 4-ம் தேதியன்று, டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் Signature பாலத்தைத் திறந்து வைத்தார்.



- 165 மீட்டர் உயரத்தில் அமைந்திருக்கும் இப்பாலம் குதுப் மினாரின் உயரத்தைவிட இரு மடங்காகும். மேலும் இது இந்தியாவின் முதல் சமச்சீரற்ற கம்பிகளால் தாங்கப்பட்ட பாலமாகும்.
- இந்தப் பாலம் யமுனை நதியின் குறுக்காக அமைக்கப்பட்டு வாசிராபாத்தை டெல்லியின் உட்புறத்தோடு இணைக்கின்றது.
- இது வடகிழக்கு டெல்லியில் தற்பொழுது உள்ள பயண நேரத்தை 45 நிமிடங்களிலிருந்து 10 நிமிடங்களாக குறைக்கும்.

## முக்கிய மந்திரி தீர்த்த யாத்திரை திட்டம் - டெல்லி

- டெல்லி அரசு, டெல்லியின் மூத்த குடிமக்களுக்கு ஐந்து முக்கிய மத வழிபாட்டுத் தலங்களுக்கு இலவசமாக பயணத் திட்டங்களை அளித்திடும் முக்கிய மந்திரி தீர்த்த யாத்திரைத் திட்டம் என்பதனை அறிவித்திருக்கின்றது.
- இத்திட்டத்திற்கென தடைகளற்ற ஒருங்கிணைப்பை ஏற்படுத்திட, டெல்லி சுற்றுலாத் துறை மற்றும் போக்குவரத்து மேம்பாட்டுக் கழகமானது இந்திய ரயில்வே மற்றும் சுற்றுலாத் துறைக் கழகத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு இருக்கின்றது.
- பின்வரும் 5 மத வழிபாட்டுப் பகுதிகள் தீர்த்த யாத்திரை திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றன. அவையாவன
    - வைஷ்ணவ தேவி - ஜம்மு
    - விருந்தாவன் - மதுரா - பர்சானா - ஆக்ரா - பதேபூர் சிக்ரி
    - ஹரித்துவார் - ரிஷிகேஷ்- நீலகண்ட்
    - அஜ்மீர் – புஸ்கர் மற்றும்
    - பொற்கோவில் - வாகா எல்லை - அனந்தப்பூர் சாகிப்

## QR (Quick Response) குறியீடு செயல்படுத்தப்பட்ட குளிர்சாதன வசதிகொண்ட காந்தங்கள் - டெல்லி

- புதுதில்லி மாநகராட்சி கழகம் நுகர்வோர்கள் தங்கள் பயன்பாட்டு கட்டண ரசீதுகளின் எண்ணியல் செலுத்து வசதியை எளிதாக்கிட உடனடி பதில் குறியீடு பொருத்தப்பட்ட ஸ்மைலி குளிர்சாதன வசதி கொண்ட காந்தங்களை விநியோகம் செய்ய இருக்கின்றது.
- பொலிவுறுத் திட்டத்தின் கீழ், இந்த காந்தங்கள் தனிப் பயனாக்கப்படும். மேலும் ஒவ்வொரு நுகர்வோரும் ஒரு தனித்த உடனடி பதில் குறியீட்டை தங்கள் நுகர்வோர் கணக்கு எண்ணுடன் வரைபடமாக்கப்பட்ட வில்லையை கொண்டிருப்பர்.
- மின்சார மற்றும் குடிநீர் கட்டணங்களுக்காக தனிப்பட்ட காந்தங்கள் புது தில்லி மாநகராட்சிக் கழகத்தால் வழங்கப்படும்.
- நுகர்வோர்களால் இந்த காந்தங்களை தங்கள் குளிர்சாதனப் பெட்டியில் ஒட்டிக் கொள்ள இயலும். மேலும் நுகர்வோர்கள் தங்கள் கட்டணங்களை உடனடியாக செலுத்திட, காந்தங்கள் மீதுள்ள உடனடி பதில் குறியீட்டை தங்கள் ஸ்மார்ட் போன் அல்லது கைபேசி

மூலம் ஸ்கேன் செய்ய அல்லது அளவிட முடியும்.

## நடமாடும் தன்னார்வலர்கள் மருத்துவ சேவை

- டெல்லி முதலமைச்சர் நடமாடும் மருத்துவ வாகனத்தை கொடியசைத்து வைத்து தன்னார்வலர்களின் நடமாடும் மருத்துவ சேவையை ஆரம்பித்து வைத்தார்.
- இத்திட்டத்தின் முக்கிய பங்காக நடமாடும் மருத்துவ வாகனம் இருக்கும். இந்த வாகனம் ஓக்லாவில் வசிக்கும் சமூகத்தினரை இலக்காகக் கொண்டுள்ள மருத்துவ முகாம்களோடு ஒருங்கிணைக்கப்படும்.
- இந்த வாகனம் ஆய்ந்தறிதல், சோதனைச் சாலை, மருத்துவப் பரிசோதனை, ஆலோசனை மற்றும் முதலுதவி சிகிச்சை ஆகிய அனைத்து வசதிகளையும் தரும் வகையில் மேம்படுத்தப் பட்டிருக்கும்.




- இந்த திட்டம் வாழ்வியல் நோய்களான நீரிழவு மற்றும் ரத்த அழுத்தம் ஆகியவற்றை முன்கூட்டியே கணிப்பதற்கு உதவுவதோடு, தாய்மார்களுக்கும். குழந்தைகளுக்கும் சிறப்புக் கவனத்தோடு பொது மக்களுக்கு சுகாதாரத்தின் முக்கியத்துவம் பற்றி விழிப்பூட்ட உதவும்.

## கியான் கும்ப் - உத்தராகண்ட்

- 18 மாநிலங்களைச் சேர்ந்த உயர் கல்வித்துறை அமைச்சர்கள், மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் மற்றும் நாடெங்கிலும் உள்ள 200 கல்வியாளர்கள் ஆகியோர் நாட்டின் முதலாவது 'கியான் கும்ப்' என்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.
- இது நவம்பர் 3 மற்றும் 4 ஆம் தேதிகளில் ஹரித்துவாரில் நடைபெற்றது.
- இரண்டு நாள் நிகழ்ச்சியான இந்த "கியான் கும்ப்" ஹரித்துவாரில் உள்ள பதஞ்சலி பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்டது.

## ஹாக்கி உலகக் கோப்பைப் பாடல் - ஒடியா

- ஆண்கள் ஹாக்கி உலகக் கோப்பைக்கான ஊக்குவிப்புப் பாடல் வெளியிடப்பட்டது.

- இந்தப் பாடல் பாலிவுட் பாடகரான மைக்கா சிங்கால் ஒடியா மொழியில் பாடப்பட்டது.
- இந்தப் பாடலுக்கு "ஆஸா கரீபா போபால், ஒடிசா நா ஹீபா குளோபல்" என்று தலைப்பிடப்பட்டுள்ளது. மேலும் புகழ்பெற்ற சம்பல்புரி நடனத்துடன் ஒடிசி நடன அசைவுகள் ஆகிய சிறப்பம்சங்களும் இப்பாடலில் பொதிந்துள்ளன.
- மேலும் இந்தப் பாடலில் ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் மற்றும் ஒடிசா மாநிலத்தை பூர்வீகமாகக் கொண்ட இந்திய ஹாக்கி அணியின் முன்னாள் தலைவரான திலிப் திரிகே ஆகியோரும் சிறப்பிக்கப்பட்டுள்ளனர்.
- ஹாக்கி உலகக் கோப்பைப் போட்டிக்கான அதிகாரப்பூர்வ பாடலுக்கு இசையமைப்பதற்காக இசையமைப்பாளர் ஏ. ஆர். ரஹ்மானை அம்மாநில அரசு தேர்வு செய்துள்ளது. பாலிவுட் கவிஞரான குல்சார் "ஜெய் ஹிந்த், ஜெய் இந்தியா" என்ற பாடலை எழுதியுள்ளார்.
- ஹாக்கி உலகக் கோப்பைப் போட்டியின் துவக்க விழா நவம்பர் 27-ல் நடைபெறவிருக்கிறது.

## பைசாபாத் - பெயர் மாற்றம்

- 2018 ஆம் ஆண்டு நவம்பர் 06 அன்று பைசாபாத் மாவட்டத்தின் பெயர் அயோத்யா என மாற்றப்படும் என்று உத்தரப் பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் அறிவித்துள்ளார்.
- உத்தரப் பிரதேசத்தின் பைசாபாத் மாவட்டத்தில் அயோத்யா நகரம் அமைந்துள்ளது.
- மேலும் இராமரின் தந்தையான தசரத அரசரின் பெயரில் ஒரு மருத்துவக் கல்லூரியும் ராஜாராம் என்ற பெயரில் ஒரு விமான நிலையமும் அம்மாவட்டத்தில் அமைக்கப்படும் என்று யோகி ஆதித்யநாத் அறிவித்துள்ளார்.

## சங்வாரி வாக்குச் சாவடிகள் - சத்தீஸ்கர்

- சட்டமன்றத் தேர்தல்களில் பெண் வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை செலுத்துவதற்காக சத்தீஸ்கரின் பல்வேறு தொகுதிகளில் தேர்தல் ஆணையம் சங்வாரி வாக்குச் சாவடிகளை அமைத்திருக்கின்றது.
- சத்தீஸ்கர் மொழியில் சங்வாரி என்றால் நண்பன் என்று பொருள் ஆகும்.
- இந்தப் பெண்களுக்குச் சாதகமான வாக்குச் சாவடிகள் அனைத்தும் பெண் அதிகாரிகளால் அதாவது தேர்தல் அதிகாரிகள், மேற்பார்வையாளர்கள் மற்றும் பாதுகாப்பு வீரர்கள் உள்ளிட்ட அனைவரையும் பெண்களால் ஆன அதிகாரிகளால் பணியமர்த்தப்படும்.

## மோ பேருந்து சேவை - ஒடிசா

- ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் குடிமகன்களுக்கு தோழமையான மற்றும் தொழில்நுட்பத்தால் உந்தப்பட்ட மோ பேருந்து சேவையை ஆரம்பித்து வைத்தார்.

- இப்பேருந்து சேவையானது நகரத்தில் இலவச வை-பை, ரகசிய கண்காணிப்பு கேமரா வசதி, பொதுத் தகவல் வெளியீட்டு அமைப்பு மற்றும் பயணத்தின் மீதான அறிவிப்புகள் ஆகிய வசதிகளைக் கொண்டிருக்கும்.
- இச்சேவை முதல் கட்டமாக மாநிலத் தலைநகரத்தில் 9 வழித்தடங்களைக் கொண்டிருக்கும்.
- மேலும் இச்சேவை மோ பேருந்து என்ற கைபேசி செயலியையும் வெளியிடும். இதன் மூலம் பயணிகள் தங்கள் பயணச் சீட்டுகளை பதிவு செய்வதற்கும், வாகனத்தின் இருப்பிடத்தைத் தெரிந்து கொள்வதற்கும் முடியும்.

## மீன் வளர்ப்புத் திட்டம் 2.0 - மேகாலயா

- மேகாலயா அரசானது மாநிலத்தின் முக்கியத் திட்டமான மீன்வளர்ப்புத் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில் 378 கோடி ரூபாய் முதலீட்டை அறிவித்திருக்கின்றது.
- இத்திட்டம் மீன் இறக்குமதியை மலை மாநிலத்திற்கு உள்ளே (மேகாலயா) குறைப்பதற்காக வேண்டி திட்டமிடப்பட்டிருக்கின்றது.
- மேகாலயா மாநில மீன்வளர்ப்புத் திட்டம் 2.0 என்ற திட்டம் 5-வது மாநில மீன்வளர்ப்புத் திருவிழாவில் மாநில மீன்வளத்துறை அமைச்சரால் அறிவிக்கப்பட்டது.
- இத்திட்டத்தின்கீழ், விருப்பமுள்ள கூட்டாளிகள் 15 சதவிகிதம் மட்டும் பங்களித்தால் போதுமானது. மீதம் 25 சதவிகிதம் கடன் வசதிகளாலும் எஞ்சியுள்ள 60 சதவிகிதம் அரசு உதவியாலும் வழங்கப்படும்.

## ‘புவனேஸ்வர் மே வைபை’ திட்டம் - ஒடிசா

- ஒடிசாவின் முதல்வர் நவீன் பட்நாயக் உலகக் கோப்பை ஹாக்கியை முன்னிட்டு தலைநகரத்தை முழுவதும் வை-பை பொருத்தப்பட்டுள்ள நகரமாக மாற்றுவதற்கு வேண்டி “புவனேஸ்வர் மே வைபை” என்ற திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றார்.
- இது ஆரம்பத்தில் 275 அணுகும் மையங்களுடன் செயல்படுத்தப்பட்ட 100 ஹாட் ஸ்பாட் (Hot Spots/ தகவல் பரப்பு தளங்கள்) மையங்களைக் கொண்டிருக்கும்.
- படிப்படியாக 1800 அணுகும் மையங்களுடன் 518 என்ற எண்ணிக்கைக்கு இந்த ஹாட் ஸ்பாட் மையங்கள் அதிகப்படுத்தப்படும்.
- இந்த வலையமைப்பின் மூலம் அரசு சேவைகளை குடிமக்கள் அணுகும்போது அவர்களுக்கு இணைய உபயோகத்திற்காக எவ்வித கட்டணமும் கிடையாது.
- 250 மெகா பைட் என்ற நுகர்விற்குப் பிறகு, பயனாளிகளுக்கு குறைந்த கட்டண மீள்நிரப்புதல் (Top up) திட்டங்களை அரசு கொடுக்கின்றது.

## சவுரா ஜல்நிதி திட்டம்

- ஒடிசா அரசு விவசாயிகளால் நீர்ப்பாசனத்தில் சூரிய சக்தியை பயன்படுத்துவதை

ஊக்குவித்திட சவுரா ஜல்நிதி திட்டம் என்பதை ஆரம்பித்திருக்கின்றது.

- இத்திட்டத்தின் கீழ், விவசாயிகள் 90 சதவிகித மானியமும், 5000 சூரிய ஒளி இயந்திரங்களும் வழங்கப்படுவர்.
- இத்திட்டத்திற்கான பயனாளிகள், சரியான விவசாயி அடையாள அட்டைகளையும் குறைந்தபட்சம் 0.5 ஏக்கர் விவசாய நிலத்தையும் கொண்டிருக்கும் விவசாயிகளாக இருப்பர்.

## அயோத்தியா தீப உத்சவ் - 2018

- தீபாவளி கொண்டாட்டங்களை அயோத்தியா நகரத்தில் அனுசரிப்பதற்காக நடத்தப்பட்ட நிகழ்வான அயோத்தியா தீப உத்சவ் 2018 உலக சாதனைகளுக்கான கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றது.
- இது சரயு நதிக்கரையில் 3,01,152 அகல் விளக்குகளை தீபம் ஏற்றிய சாதனைக்காக கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.
- இதற்கு முந்தைய சாதனையானது 2016 ஆம் ஆண்டு ஹரியானாவின் சிர்சாவில் 1,50,009 விளக்குகளை வெளிப்படுத்தி மிகப்பெரிய நிகழ்ச்சியை நடத்திய தேரா சச் சௌதாவால் நிகழ்த்தப்பட்டது.
- இந்த தீப உத்சவ் நிகழ்ச்சியானது உத்தரப் பிரதேச அரசின் சுற்றுலாத் துறை மற்றும் கலாச்சாரத் துறையின் முயற்சியாகும். இது ராமன் ராவணனை வீழ்த்திய வெற்றிக்காகவும் அதன்பின் தனது அரசான அயோத்தியாவிற்குத் திரும்பியதை நினைவு கூறுவதற்காகவும் கொண்டாடப்படுகிறது.

## CCTNS திட்டத்தின் கீழ் சிறந்த செயல்களுக்கான விருது - அசாம் காவல்துறை

- மின் நிர்வாகத் திட்டமான குற்றம் மற்றும் குற்றவாளிகள் கண்காணிப்பு வலையமைப்பு மற்றும் ஒழுங்குமுறை (Crime and Criminal Tracking Network & Systems - CCTNS) என்ற திட்டத்தின் கீழ் சிறந்த பயிற்சிகளுக்காக மத்திய உள்துறை அமைச்சகம் அசாம் காவல்துறைக்கு விருது ஒன்றை அளித்து இருக்கின்றது.
- இந்த விருது குடிமக்களை மையப்படுத்திய சேவையை வழங்கியமைக்காக வழங்கப்பட்டது. இச்சேவையில் மாநில காவல்துறை
    - கடவுச் சீட்டை சரிபார்த்தல்
    - நிரந்தர குடியிருப்புச் சான்றிதழ்

  ஆகிய சேவைகளை CCTNS என்ற இணைய சேவையைப் பயன்படுத்தி தானியங்கி முறையில் வழங்கிடச் செய்திருக்கின்றது.

## சம்ருத்தி திட்டம்

- கர்நாடக சமூக நலத்துறையானது தனது மாநிலத்தில் சம்ருத்தி என்ற திட்டத்தை

அறிமுகப்படுத்தியுள்ளது.

- இது சிறிய நகரங்களில் உள்ள பொருளாதார மற்றும் சமூக ரீதியிலான அடிமட்ட நிலையிலுள்ள இளைஞர்களுக்கான 800 கோடி ரூபாய் அளவிலான தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டமாகும்.
- தனியார் நிறுவனங்கள் மூலம் சில்லறை வர்த்தக மேலாண்மை மற்றும் கிளைகள் நிறுவுவதற்கான வாய்ப்புகளுக்காக எஸ்.சி (SC – Scheduled Caste – பட்டியலிடப்பட்ட வகுப்பினர்) மற்றும் எஸ்.டி. (ST – Scheduled Tribe – பட்டியலிடப்பட்ட பழங்குடியினர்) சமூகத்தில் உள்ள இளைஞர்களுக்கு பயிற்சியளித்திட இது திட்டமிடுகிறது.
- இதன் பின்னர் பயிற்சி பெற்றவர்களில் தகுதியுள்ளவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு சான்றிதழ் அளித்து அவர்கள் தங்கள் கிளைகளை அமைக்க ஆரம்ப உதவியாக 10 லட்சம் வரை மானியம் அளித்து அரசு உதவிடும்.
- இந்த திட்டத்தின் மூலம் 2021 ஆம் ஆண்டில் 10000 தொழில் முனைவோர்களை உருவாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

## டெல்லி இளஞ்சிவப்பு வரிசை (பிங்க் லைன்) பாதை நீட்டிப்பு

- 17.86 கி.மீ நீளமுடைய ஷிவ் விஹார் – திரிலோக்புரி - சஞ்சய் லேக் பிரிவு தொடக்கத்துடன் டெல்லி மெட்ரோ ரயிலின் பிங்க் லைன் பாதையானது நீட்டிக்கப்பட்டுள்ளது.
- இந்த நீட்டிப்புடன் டெல்லி மெட்ரோவானது, உலகில் 300 கி.மீ. க்கும் அதிக செயல்பாட்டு தூரம் கொண்ட உயர்சிறப்புடைய மிகப்பெரிய மெட்ரோ அமைப்புகளுடன் (லண்டன், நியூயார்க், பிஜீங் மற்றும் ஷாங்காய் போன்ற) இணைந்துள்ளது.

## வடகிழக்கு இந்தியாவின் முதலாவது “தண்ணீரில் மிதக்கும் கைத்தறி குடிசைகள்” - மணிப்பூர்

- வடகிழக்கு மாநிலங்களில் முதலாவதாக மணிப்பூரின் இம்பாலில் உள்ள லோக்டாக் ஏரியில் “தண்ணீரில் மிதக்கும் கைத்தறிக் குடிசைகளை” திரிபுராவின் வனங்கள் மற்றும் பழங்குடியின நல அமைச்சர் மேவல் குமார் ஜமாத்தியா தொடங்கி வைத்துள்ளார்.



- இது பிஷன்பூர் மாவட்டத்தின் லோக்டாக் ஏரியில் உள்ள பும்டிஸின் (மிதக்கும் உயிரித்

திரள்) மேல் தண்ணீரில் மிதக்கும் ஐந்து கைத்தறி குடிசைகள் கட்டமைப்பதின் ஒரு பகுதியாகும்.

- இந்த தண்ணீரில் மிதக்கும் கைத்தறி குடிசைகள் மணிப்பூர் மாநிலத்தின் ஜவுளி, வணிக மற்றும் தொழிற்சாலைத் துறையினால் கட்டப்பட்டுள்ளது.
- இந்தக் குடிசைகள் லோக்டாக் ஏரியில் உள்ள பும்டிஸ்ஸில் வாழும் நெசவாளர்களின் சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்தும். மேலும் இது சுற்றுலாத் துறையையும் மேம்படுத்தும்.

## ரசகுல்லா தினம் (மேற்கு வங்காளம்) - நவம்பர் 14

- மேற்கு வங்காள மாநில அரசானது நவம்பர் 14 அன்று ரசகுல்லா தினத்தை அனுசரிக்க முடிவு செய்துள்ளது.
- இது மாநிலத்தின் பிரபல இனிப்பு பொருளான பெங்கால் ரசகுல்லாவானது புவிசார் குறியீடு பெற்றதன் முதலாம் ஆண்டை நினைவு கூறும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.

## அரசுப் பள்ளிகளுக்கான GPS வரைபடமிடல்

- அரசுப் பள்ளிகளுக்கான GPS வரைபடமிடல் மற்றும் பணியாளர்கள் இருப்பிட அமைப்பு ஆகியவற்றை கொஹிமாவில் நாகாலாந்து முதல்வர் நெய்பியு ரியோ அறிமுகப்படுத்தியுள்ளார்.
- இது அனைத்து அரசுப் பள்ளிகளின் பதிவுகளையும் கணினி மயமாக்குதல் மற்றும் டிஜிட்டல் மயமாக்குதலுக்கு உதவும்.
- நாட்டில் ஒரு மாநிலத்தின் பள்ளிக் கல்வி துறையின் கீழ் எடுக்கப்பட்ட முதல் முயற்சி இதுவேயாகும்.

## நாமசூத்ரா மற்றும் மட்டுவா சமூக நல வாரியம்

- மட்டுவா மற்றும் நாமசூத்ரா சமூகத்தினருக்கான மேம்பாட்டு வாரியத்தினை அமைக்க மேற்கு வங்காள அமைச்சரவை முடிவு செய்துள்ளது.
- இந்த வாரியங்களிள் பெயர்களானது பின்வருமாறு உள்ளதாகும்.
    - மேற்கு வங்காள நாமசூத்ரா நலவாரியம்
    - மேற்கு வங்காள மட்டுவா நலவாரியம்

## சுற்றுலா எளிதாக்கம் மற்றும் தகவல் மையம் துவக்கம்

- புது டெல்லியிலுள்ள இந்திரா காந்தி சர்வதேச (IGI - Indira Gandhi International) விமான நிலையத்தில் சுற்றுலா எளிதாக்கல் மற்றும் தகவல் மையத்தை மத்திய சுற்றுலாத் துறை

இணை அமைச்சர் (தனிப் பொறுப்பு) K.J அல்போன்ஸ் திறந்து வைத்தார்.

- ❖ பார்வையாளர்களுக்கான இந்த எளிதாக்கல் மற்றும் தகவல் வசதி மையமானது இந்த வகையில் அரசின் முதலாவது திட்டமாகும்.
- ❖ IGI விமான நிலையத்திற்கு வருகை தரும் உள்நாட்டு மற்றும் சர்வதேசப் பார்வையாளர்களுக்கு 24 x 7 என்ற கால அளவில் தகவல்களை வழங்கும் நோக்கத்துடன் சுற்றுலா அமைச்சகமானது இதனை அமைத்துள்ளது.
- ❖ மேலும் இந்த மையமானது ஆங்கிலமில்லாத மொழி பேசும் சுற்றுலாப் பயணிகளுக்கு உதவ சுற்றுலா அமைச்சகத்தின் 24 x 7 மணி நேர உதவி எண்ணான 1363 என்ற எண்ணுடன் இணைக்கப்படும்.

## இமயமலைப் பகுதிக்கான பிராந்திய ஆணையம் - உருவாக்கம்

- ❖ இமயமலைப் பகுதியின் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்யும் பொருட்டு சமீபத்தில் நிதி ஆயோக்கானது இமயமலைப் பகுதி பிராந்திய ஆணையத்தை உருவாக்கியுள்ளது.
- ❖ இந்த ஆணையமானது நிதி ஆயோக்கின் உறுப்பினரான டாக்டர் வி.கே. சரஸ்வத் தலைமையில் செயல்படவிருக்கிறது.
- ❖ இந்த ஆணையமானது ஐந்து பணிக் குழுக்களின் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு அடையாளம் காணப்பட்ட பணிகளை ஆராயும் மற்றும் அந்தப் பணிகளை செயல்படுத்தும்.
- ❖ மேலும் ஜம்மு காஷ்மீர், உத்தராகண்ட் மற்றும் இமாச்சலப் பிரதேசம் உள்ளிட்ட 12 மாநிலங்களை உள்ளடக்கிய இமயமலைப் பகுதியின் நீடித்த வளர்ச்சிக்கான செயல்பாட்டு ஆணையமாக இந்த ஆணையம் செயல்படும்.

## கௌ சம்ரிதி பிளஸ் திட்டம்

- ❖ கேரள முதல்வர் சமீபத்தில் கேரளாவில் பால் விவசாயிகளுக்கு காப்பீட்டுப் பாதுகாப்பை அளிப்பதற்காக கௌ சம்ரிதி பிளஸ் அல்லது பசு சம்ரிதி பிளஸ் என்ற திட்டத்தைத் தொடங்கியிருக்கின்றார்.
- ❖ அரசின் மானியத்துடன் கூடிய இத்திட்டமானது பால் விவசாயிகளுக்கு குறைந்த கட்டணத் தொகையில் காப்பீட்டுப் பாதுகாப்பை வழங்கும்.
- ❖ கட்டணத் தொகையின் மீது 50 சதவிகித அளவிற்கு மானியத்தை பொதுப் பிரிவைச் (general category) சேர்ந்த விவசாயிகள் பெறுவர்.
- ❖ கட்டணத் தொகையின் மீது 70 சதவிகித அளவிற்கு மானியத்தை பட்டியலிடப்பட்ட வகுப்பு மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடிப் பிரிவினைச் சார்ந்த மக்கள் பெறுவர்.

## நாங்கிரேம் நடனத் திருவிழா

- ❖ 2018 ஆம் ஆண்டு நவம்பர் 11 மற்றும் 12 தேதிகளில் மேகாலயாவில் உள்ள காசி மலைக்

குன்றுகளில் உள்ள மக்களால் நாங்கிரேம் நடனத் திருவிழா கொண்டாடப்பப்பட்டது.



- ❖ வருடத்திற்கு ஒருமுறை அனுசரிக்கப்படுகின்ற இத்திருவிழாவில் மக்கள் நல்ல அறுவடை, அமைதி மற்றும் சமூகத்தின் வளமை ஆகியவற்றுக்காக வேண்டிக் கொள்கின்றனர்.
- ❖ காசி பகுதியின் பூர்வகுடிப் பழங்குடியினரின் துணைப் பழங்குடி வகையான ஹிமா கையிரிம் என்ற பிரிவின் ஆண் மக்களால் 'கா ஷாத் மஸ்தே' எனப் பெயரிடப்பட்ட ஒரு விந்தையான நடனம் இத்திருவிழாவில் ஆடப்படுகின்றது.

## மாநிலச் சின்னம் அறிமுகம் - ஆந்திரப் பிரதேசம்

- ❖ ஆந்திரப் பிரதேச மாநில அரசானது 2018 ஆம் ஆண்டு நவம்பர் 15 அன்று தனது அலுவலகப் பயன்பாட்டிற்காக புதிய மாநிலச் சின்னத்தை அறிமுகப்படுத்தியது. 2014 ஆம் ஆண்டில் மாநில பிரிப்பிற்குப் பின் 5 வருடம் கழித்து ஆந்திரப் பிரதேச அரசு மாநில சின்னத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ மாநில சின்னமானது அமராவதி கலைப் பள்ளியால் ஈர்க்கப்பட்டு உருவாக்கப்பட்டது.
- ❖ இறகு வடிவ இலைகள் மற்றும் விலை மதிப்பற்ற கல் ஆகியவை மாறி மாறி அமைந்த மூன்று இரத்தினங்களின் வளையத்தினால் அலங்கரிக்கப்பட்ட வட்டத்தின் சக்கரமான "தம்ம சக்காவை" இச்சின்னம் கொண்டுள்ளது.




- மணிகளால் அலங்கரிக்கப்பட்ட மூன்று வட்டங்கள் எண்களின் ஏறு வரிசையில் இதில் அமைந்துள்ளன. இதன் உள்வட்டத்தில் 48 மணிகளும் நடுவில் 118 மணிகளும் வெளிவட்டத்தில் 148 மணிகளும் உள்ளன.
- இது தம்ம சக்காவின் மையத்தில் "புனா கட்கா" அல்லது "தி வேஸ் ஆப் பிளெண்டி" என்ற முத்திரையை கொண்டுள்ளது. இந்த முத்திரையானது குஞ்சங்களுடனும் பதக்கங்களுடனும் அதன் முக்கியப் பகுதியின் மீது 4 பட்டை கொண்ட மாலைகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.
- மேலும் இவற்றின் லேசான கழுத்துப் பகுதி மற்றும் வாய்ப் பகுதியைச் சுற்றி இழை உள்ளது.
- மாநிலச் சின்னத்தின் அடிப்பகுதியில் தேசியச் சின்னம் பொருத்தப்பட்டுள்ளது. தேசிய சின்னத்தின் உயரமானது 24 மில்லி மீட்டருக்கு குறைவில்லாமல் இருக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

## கொன்னிச்சி வா புனே

- இந்திய-ஜப்பான் வர்த்தகக் குழுவின் 2 நாள் அளவிலான முதல் கொன்னிச்சி வா புனே திருவிழா மகாராஷ்டிராவின் புனேவில் நடைபெற்று முடிந்தது.
- இது இந்தோ ஜப்பான் வர்த்தகக் குழுவால் (Indo-Japan Business Council-IJBC) ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.
- இந்தத் திருவிழாவானது இந்தியா-ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையே முதலீட்டை அதிகரித்தல், வர்த்தகங்களை ஊக்குவித்தல் மற்றும் கலாச்சாரங்களைப் பரிமாற்றம் செய்தல் ஆகிய நோக்கங்களைக் கொண்டது.

## மராத்தா இட ஒதுக்கீட்டு மசோதா

- மகாராஷ்டிரா அரசானது சமீபத்தில் மராத்தா இட ஒதுக்கீட்டு மசோதாவை நிறைவேற்றி இருக்கின்றது.

- இந்த மசோதாவின் படி மகாராஷ்டிராவானது மராட்டியர்களுக்கு இடஒதுக்கீட்டை வழங்குவதற்காக சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய வகுப்பு (socially and educationally backward class- SEBC) என்ற புதிய வகுப்பை உருவாக்கும்.
- இந்த இட ஒதுக்கீடானது ஒரு 'அசாதாரண சூழ்நிலையை' மேற்கோள் காட்டி OBC (Other Backward Classes) எனப்படும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பு அல்லது மராத்தியர் ஆகியோரின் உரிமைகள் பாதிக்கப்படாமல் இருக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த நடவடிக்கையானது ஓய்வு பெற்ற நீதிபதி NG கெய்க்வாட் தலைமையிலான மகாராஷ்டிர மாநில பின்தங்கிய வகுப்பினர் ஆணையத்தினால் பரிந்துரைக்கப்பட்டது.

## ஹுக்கா விடுதிகளைத் தடை செய்த 3வது மாநிலம் பஞ்சாப்

- மகாராஷ்டிரா மற்றும் குஜராத்தையடுத்து ஹுக்கா விடுதி அல்லது ஹுக்கா விற்பனை செய்யும் இடங்களைத் தடை செய்த மூன்றாவது மாநிலமாக பஞ்சாப் உருவெடுத்துள்ளது.
- இந்த தடையானது பஞ்சாப் சட்டசபையால் நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஒப்புதல் அளித்த பின்னர் அறிவிக்கப்பட்டது.
- பல்வேறு வடிவங்களில் புகையிலை பயன்படுத்தப்படுவதைத் தடை செய்யவும் புகையிலைப் பொருட்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நோய்களைத் தடுப்பதும் இந்த சட்டத்தின் குறிக்கோள்களாகும்.

*குறிப்பு*

- பஞ்சாப் மாநில சட்டமன்றமானது சிகரெட் மற்றும் மற்ற புகையிலை தயாரிப்புகள் - பஞ்சாப் திருத்த மசோதா 2018 (விளம்பரத்திற்கான தடை, விற்பனை மற்றும் வணிகத்திற்கான ஒழுங்குமுறை, உற்பத்தி, வழங்கல் மற்றும் விநியோகம்) என்ற மசோதாவை இவ்வருடத்தின் மார்ச் மாதத்தில் நிறைவேற்றியது.

## சஷாக்ட் மகிளா திட்டம்

- சஷாக்ட் மகிளா திட்டத்தை தனது மாநிலத்தில் செயல்படுத்த இமாச்சலப் பிரதேச அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இது குழுக்கள் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுக்கு இடையே ஒரு இடைமுகத்தை அளிப்பதன் மூலம் கிராமப்புறப் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.
- மேலும் அந்த அரசு ஒரு குடும்பத்திற்கு 5 லட்சம் ரூபாய் வரை பணமில்லா மருத்துவ சேவையை அளிக்கும் இமாச்சல சுகாதார திட்டத்தை (Himachal Healthcare Scheme - HIMCARE) செயல்படுத்தவும் முடிவு செய்துள்ளது.

## புசேவா திட்டம் மற்றும் புதார் வலைப்பக்கம் துவக்கம்

- மக்களுக்கு நிலப் பதிவுகளை கிடைக்கச் செய்வதற்காக புசேவா திட்டம் மற்றும் புதார் வலைப் பக்கம் ஆகிய திட்டங்களை ஆந்திரப் பிரதேசத்தின் முதல்வர் துவங்கி இருக்கின்றார்.

- புசேவா திட்டத்தின் கீழ் ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு விவசாய நிலங்களுக்கும், கிராமப்புற மற்றும் நகர்ப்புற சொத்துக்களுக்கும் புதார் என்றழைக்கப்படும் 11 இலக்க பிரத்தியேக அடையாள எண் ஒதுக்கப்படும்.
- அனைத்து நில வருவாய் தொடர்பான பரிவர்த்தனைகளான மாற்றுதல், பதிவு செய்தல் போன்ற அனைத்தும் புதார் அட்டையின் மூலமாகவே செயல்படுத்தப்படும்.
- தற்காலிக புதார் எண்ணானது 99 என்ற எண்ணுடனும் நிரந்தர புதார் எண்ணானது 28 என்ற எண்ணுடனும் தொடங்கும். அரசு நிலமெனில் 28 என்ற எண்ணைத் தொடர்ந்து 00 என்ற எண்கள் இடம்பெறும்.
- இரண்டு வகையான புதார் அட்டைகள் உள்ளன. அவையாவன
    - இ-புதார் (e-Bhudaar)
    - எம்-புதார் (M-Bhudaar)

## வடக்கு வங்காளத்தில் அந்நிய நிலப்பகுதியில் வசிப்பவர்களுக்கு நில உரிமை

- வடக்கு வங்காளப் பகுதியின் அந்நிய நிலப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நில உரிமைகளை வழங்குவதன் மூலம் அந்தப் பகுதிகளில் வாழும் மக்களின் நிச்சயமற்ற எதிர்காலத்தின் சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக மேற்கு வங்காள சட்டசபையானது மேற்கு வங்க நிலச் சீர்திருத்த (திருத்தம்) மசோதா 2018 என்ற மசோதாவை ஒருமனதாக நிறைவேற்றியுள்ளது.
- ஆகஸ்ட் 1, 2015-ல் இந்தியா மற்றும் வங்காள தேசம் ஆகியவை மொத்தமாக 162 நிலப்பகுதிகளைப் பரிமாறிக் கொண்டன.
- இந்த பரிமாற்றமானது, சுதந்திரத்திற்குப் பின்னராக 7 தசாப்தங்களாக நீடித்து வந்த உலகின் மிகவும் சிக்கலான எல்லைப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்தது.
- இந்த மசோதாவானது அந்நிய நிலப்பகுதி வாழ்மக்கள் முழுமையான இந்திய குடிமக்கள் என்ற தகுதியைப் பெறவும் அனைத்து குடிமகன்களுக்கான சலுகைகள் மற்றும் உரிமைகளைப் பெறவும் உதவுகிறது.

## இந்தியாவின் இரண்டாவது உயரமான புத்தர் சிலை


- பீகார் முதல்வர் நிதிஷ்குமார் அம்மாநிலத்தின் நாளந்தா மாவட்டத்தில் உள்ள ராஜ்கிரில் 70 அடி உயரமுள்ள புத்தர் சிலையைத் திறந்து வைத்தார்.



- இது இந்தியாவின் இரண்டாவது உயரமான புத்தர் சிலையாகும்.
- இது கோரா கட்டோரா ஏரியின் நடுவில் 16 மீட்டர் ஆரமுள்ள பீடத்தின் மீது நிறுவப்பட்டு இருக்கின்றது.
- கோரா கேட்டோரா ஐந்து மலைகளால் சூழப்பட்ட ஒரு இயற்கையான ஏரியாகும்.

## ஆயுஷ்மான் பாரத்தை அமல்படுத்துவதில் முதலிடம்

- தேசிய சுகாதார நிறுவனத்தின்படி, ஆயுஷ்மான் பாரத் - பிரதம மந்திரி ஜன் ஆரோக்கியத் திட்டம் செயல்படுத்தப்பட்ட இரண்டு மாதங்களில் குஜராத் மாநிலமானது இந்த திட்டத்தை சிறந்த செயலாக்கம் புரிந்த மாநிலமாக உருவெடுத்து இருக்கின்றது.
- ஏற்கனவே 2012 ஆம் ஆண்டிலிருந்து இதனையொத்த முக்கிய மந்திரி அம்ருதம் (MA Yojana) என்ற திட்டத்தை செயல்படுத்தி வந்தது குஜராத்தின் வெற்றிக்கான ஒரு காரணமாகும்.
- தமிழ்நாடு இரண்டாவது இடத்திலும் சத்தீஸ்கர் மூன்றாவது இடத்திலும் அதனைத் தொடர்ந்து கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா ஆகியவையும் உள்ளன.



## ஜம்மு காஷ்மீர் சட்டசபை கலைப்பு

- ஜம்மு காஷ்மீர் மாநில ஆளுநர் சத்யபால் மாலிக் கடந்த நவம்பர் 21, 2018 அன்று எதிர்பாராத விதமாக மாநில சட்டசபையை கலைத்தார்.
- தேசிய மாநாட்டுக் கட்சி மற்றும் காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் புதிய அரசை அமைப்பதாக மக்கள் ஜனநாயகக் கட்சியின் (PDP – People Democratic Party) தலைவர் மெஹபூபா முப்தி கோரிக்கை விடுத்த ஒரு மணிநேரத்தில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது.
- இதற்கு கீழ்க்கண்டவற்றை காரணங்களாக ஆளுநர் கூறியுள்ளார்.
    - மிகப்பெரிய அளவிலான பண பேரம் மற்றும்
    - வெவ்வேறு அரசியல் சித்தாத்தங்களை உடைய அரசியல் கட்சிகள் இணைந்து ஒரு நிலையான அரசை அமைப்பதில் உள்ள சாத்தியமின்மை.

# பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## க்ளெய்ட்ஸ்மேன் விருது 2018

- ஹார்வர்ட் பல்கலைக் கழகமானது, நோபல் பரிசு பெற்றவரான மலாலா யூசாப்ஸாயை (20), அவரின் பெண்கல்வியை மேம்படுத்தும் பணிகளுக்காக, க்ளெய்ட்ஸ்மேன் விருது 2018 என்ற விருதை வழங்குவதற்காக தேர்ந்தெடுத்துள்ளது.



- உலகமெங்கும் உள்ள மனிதர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் செயல்பாட்டுக்காக இந்த விருதானது 125,000 அமெரிக்க டாலர்களை வழங்குகிறது.

***பின்னணி***

- மலாலா 2014-ல் தனது 17வது வயதில் நோபல் அமைதிப் பரிசைப் பெற்று நோபல் பரிசு வரலாற்றில் இளம் வயதில் நோபல் பரிசை பெற்றவர் என்ற பெருமையை பெற்றார்.

- ❖ இவர் இப்பரிசினை குழந்தைகள் நல உரிமை ஆர்வலரான கைலாஷ் சத்யார்த்தியுடன் பகிர்ந்து கொண்டார்.
- ❖ இவரை கௌரவிக்கும் வகையில் ஜூலை 21-ம் தேதியை 'மலாலா தினம்' என ஐ.நா சபை அறிவித்தது.

## ஹால் ஆப் பேம் (வாழ்த்தரங்கம்)

- ❖ திருவனந்தபுரத்தில் இந்தியா மற்றும் மேற்கு இந்தியத் தீவுகளுக்கிடையேயான ஐந்தாவது மற்றும் இறுதி ஒருநாள் போட்டி தொடங்குவதற்கு முன் ஐசிசியின் ஹால் ஆம் பேமில் இந்தியாவின் புகழ்பெற்ற கிரிக்கெட்டரான ராகுல் டிராவிட் அதிகாரப்பூர்வமாக இணைக்கப் பட்டார்.




- ❖ தற்பொழுது டிராவிட் இந்தியாவின் 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் அணி மற்றும் இந்திய 'A' அணி ஆகிய அணிகளுக்குப் பயிற்சியாளராக உள்ளார்.
- ❖ முன்னாள் இந்திய கிரிக்கெட் அணித் தலைவர்களான பிஷன் சிங் பேடி, கவாஸ்கர், கபில் தேவ் மற்றும் அனில் கும்ப்ளே ஆகியோருக்கு அடுத்து ஹால் ஆம் பேமில் இணையும் ஐந்தாவது இந்திய வீரராக ராகுல் டிராவிட் உருவெடுத்துள்ளார்.

## 100 - சிறந்த அயல்நாட்டு மொழித் திரைப்படங்கள்

- ❖ பிபிசியின் 100 சிறந்த அயல்நாட்டு மொழித் திரைப்படங்கள் பட்டியலில் சத்ய ஜித்ரேயின் புகழ்பெற்ற காவியமான 'பதேர் பாஞ்சாலி' என்ற திரைப்படம் சேர்க்கப்பட்டுள்ளது.
- ❖ இந்தப் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் ஒரே இந்தியத் திரைப்படம் 'பதேர் பாஞ்சாலி' ஆகும்.

20. The Mirror (Andrei Tarkovsky, 1974)
19. The Battle of Algiers (Gillo Pontecorvo, 1966)
18. A City of Sadness (Hou Hsiao-hsien, 1989)
17. Aguirre, the Wrath of God (Werner Herzog, 1972)
16. Metropolis (Fritz Lang, 1927)
15. Pather Panchali (Satyajit Ray, 1955)
14. Jeanne Dielman, 23 Commerce Quay, 1080 Brussels (Chantal Akerman, 1975)
13. M (Fritz Lang, 1931)
12. Farewell My Concubine (Chen Kaige, 1993)
11. Breathless (Jean-Luc Godard, 1960)
10. La Dolce Vita (Federico Fellini, 1960)
9. In the Mood for Love (Wong Kar-wai, 2000)
8. The 400 Blows (François Truffaut, 1959)
7. 8 1/2 (Federico Fellini, 1963)
6. Persona (Ingmar Bergman, 1966)
5. The Rules of the Game (Jean Renoir, 1939)
4. Rashomon (Akira Kurosawa, 1950)
3. Tokyo Story (Yasujirō Ozu, 1953)
2. Bicycle Thieves (Vittorio de Sica, 1948)
1. Seven Samurai (Akira Kurosawa, 1954)

- இந்தப் பட்டியலில் 'பதேர் பாஞ்சாலி' திரைப்படமானது 15-வது இடத்தில் உள்ளது.
- இந்தப் பட்டியலில் அகிரா குரோசேவாவின் "செவன் சாமுராய்" முதலிடத்தில் உள்ளது.
- அதிக தரமதிப்பிடப்பட்ட திரைப்படங்களில் 27 திரைப்படங்கள் பிரெஞ்சு மொழியிலும் 12 திரைப்படங்கள் மாண்டரின் மொழியிலும் 11 திரைப்படங்கள் இத்தாலி மொழியிலும் 11 திரைப்படங்கள் ஜப்பானிய மொழியிலும் உள்ளன.

## ராம்தாஸ் எம் பாய்


- புது தில்லியில் இந்திய வர்த்தக மற்றும் தொழிலக சபையின் கூட்டமைப்பினால் (FICCI-Federation of Indian Chambers of Commerce and Industry) 2018 ஆம் ஆண்டிற்கான வாழ்நாள் சாதனையாளர் விருது டாக்டர் ராம்தாஸ் எம் பாய்க்கு வழங்கப்பட்டது.
- ராம்தாஸ் என்பவர் மணிப்பால் கல்வி மற்றும் மருத்துவக் குழுமத்தின் தலைவராக உள்ளார். மேலும் அவர் மணிப்பால் உயர்கல்வி நிறுவனத்தின் தலைவர் மற்றும் வேந்தராகவும் உள்ளார்.
- டாக்டர் ராம்தாஸ் எம் பாய் பத்ம பூஷன் விருது பெற்றுள்ளார்.

## நட்வர்யா பிரபாகர் பன்ஷீகர் வாழ்நாள் சாதனையாளர் விருது

- புகழ்பெற்ற மராத்தி நடிகரான ஜெயந்த் சவார்க்கருக்கு மஹாராஷ்டிர அரசின் நட்வர்யா பிரபாகர் மன்ஷீகர் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவர் திரைத் துறையில் சிறந்து விளங்கியதற்காக இவ்விருது வழங்கப்பட்டது.
- சங்கீதாச்சாரியா அன்னாசாஹீப் கிர்லோஸ்கர் வாழ்நாள் சாதனையாளர் விருது புகழ்பெற்ற தபலாக் கலைஞரான விநாயக் தோரட்டிற்கு வழங்கப்படவிருக்கிறது.

## கனவுகளின் சிறு துணுக்குகள் : அங்கீகரிக்கப்பட்ட சுயசரிதை

- ஏ.ஆர். ரஹ்மானின் சுயசரிதையான “கனவுகளின் சிறு துணுக்குகள் : அங்கீகரிக்கப்பட்ட சுயசரிதை” 2018 ஆம் ஆண்டு நவம்பர் 03 அன்று வெளியிடப்பட்டது.




- இந்த சுயசரிதையானது எழுத்தாளரான கிருஷ்ணா திரிலோக் என்பவரால் எழுதப்பட்டது.

## சர்வதேச கல்வி விருது

- கணிதவியலாளர் மற்றும் சூப்பர் 30 என்பனவற்றின் நிறுவனரான ஆனந்த் குமார் “சர்வதேச கல்வி விருது” வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- கல்வித் துறையில் சிறந்த பங்களிப்பிற்காகவும் பல திறமையான மாணவர்களின் வாழ்வை எழுச்சி பெறச் செய்ததற்காகவும் இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

## லோக் ஆயுக்தாவின் முதல் தலைவர் - மேகாலயா

- மேகாலயாவில் முதல் லோக் ஆயுக்தாவின் தலைவராக கௌஹாத்தி உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி பிரணாய் குமார் முசரி என்பவருக்கு பதவிப் பிரமானம் செய்து வைக்கப்பட்டது.



- லோக் ஆயுக்தா என்பது அரசு அதிகாரிகளையும் சேர்த்ததோடு மட்டுமல்லாமல் முதல்வர், துணை முதல்வர், அமைச்சர்கள், சட்டமன்றத்தின் சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் ஆகிய பொது அலுவலர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான வகையில் அதிகாரமளிக்கப்பட்டிருக்கும் அமைப்பாகும்.

## AIBA - பெண்கள் உலக சாம்பியன்ஷிப்

- AIBA (International Boxing Association) பெண்கள் உலக சாம்பியன்ஷிப்பின் 10-வது பதிப்பின் விளம்பரத் தூதராக ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்ற எம்சி மேரி கோம் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.




- புது தில்லியின் இந்திரா காந்தி அரங்கில் நடைபெறவிருக்கும் 2018 ஆம் ஆண்டிற்கான AIBA பெண்கள் உலக குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணிக்கு மேரி கோம் தலைமை தாங்குகிறார்.

## பன்னாட்டு தொலைத் தொடர்பு ஒன்றிய உறுப்பினர் - இந்தியா

- 2019 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையிலான 4 ஆண்டுகளுக்கு பன்னாட்டு தொலைத் தொடர்பு ஒன்றியத்தின் (ITU- International Telecommunications Union) உறுப்பினராக இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- 1952 ஆம் ஆண்டு முதல் பன்னாட்டு தொலைத் தொடர்பு ஒன்றிய ஆணையத்தில் இந்தியா நிரந்தர உறுப்பினராக இருந்து வருகிறது.
- சமீபத்தில் பன்னாட்டு தொலைத் தொடர்பு ஒன்றிய தெற்கு ஆசிய அலுவலகம் மற்றும் தொழில்நுட்ப புத்தாக்க மையம் ஆகியவற்றை புது தில்லியில் அமைக்க பன்னாட்டு தொலைத் தொடர்பு ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

## கிருஷ்ணா அய்யர் விருது

- நீதியரசர் வி. ஆர். கிருஷ்ணா அய்யர் விருது கேசவானந்தா பாரதிக்கு வழங்கப்படவிருக்கிறது. இவ்விருது சட்ட உதவி மற்றும் நலம் என்ற அறக்கட்டளையால் ஏற்படுத்தப்பட்டது.
- இவர் வரலாற்றுச் சிறப்புமிக்க உச்ச நீதிமன்ற வழக்கான "கேசவானந்தா பாரதி எதிர் கேரள அரசு வழக்கில்" (1973) மனுதாரராக செயல்பட்டார். இந்த வழக்கின் எண் 4A SCC 255 ஆகும். இந்த வழக்கு அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்புக் கொள்கை என்பதை அறிமுகப்படுத்தியது.

## அருணிமா சின்கா – முனைவர் (டாக்டர்) பட்டம்

- 2013 ஆம் ஆண்டில் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய உலகின் முதல் கைகளற்ற பெண் என்ற பெருமையை அடைந்த இந்திய மலையேற்ற வீரரான அருணிமா சின்கா தனது ஊக்கமளிக்கும் சாதனைகளுக்காக பெருமைமிகு ஐக்கியப் பேரரசுப் பல்கலைக்கழகத்தினால் கௌரவ முனைவர் பட்டம் வழங்கப்பட்டிருக்கின்றார்.



- கிளாஸ்கோவில் நடந்த பட்டமளிப்பு விழாவில் ஸ்ட்ராத்கிளைட் பல்கலைக்கழகத்தினால் சின்கா கௌரவ முனைவர் பட்டம் அளிக்கப்பட்டார்.
- உலகின் உயரமான சிகரத்தின் மீது ஏறிய முதல் இந்தியப் பெண்மணியான பச்சேந்திரி பாலால் அருணிமா பயிற்சியளிக்கப்பட்டார்.
- 2013 ஆம் ஆண்டு மே மாதம் 21-ம் தேதியன்று, சின்கா 8848 மீட்டர் உயரமுடைய சிகரத்தில் ஏறிய உலகின் முதல் கைகளற்ற பெண்மணி என்ற சாதனையாளராய் உருவெடுத்தார்.
- ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா மற்றும் தென் அமெரிக்கா ஆகிய கண்டங்களில் உள்ள உயரமான சிகரங்களில் ஏறிய முதல் கைகளற்ற பெண்மணி என்ற

பெருமையை இவர் அடைய இருக்கின்றார்.

- 2015 ஆம் ஆண்டு இவர் இந்தியாவின் குடிமகன்களுக்கான நான்காவது உயரிய விருதான பத்மஸ்ரீ விருதளிக்கப்பட்டார்.

## பத்திரிக்கைத் துறையில் நிபுணத்துவத்திற்கான IPI - இந்தியா விருது 2018

- தி வீக் என்ற பத்திரிக்கையின் ஆசிரியர் நம்ரதா பிஜி அஹீஜா 2018 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் சர்வதேச பத்திரிக்கை நிறுவன (International Press Institute - IPI) விருதை பத்திரிக்கைத் துறையில் சிறந்த நிபுணத்துவத்திற்காக வழங்கப் பட்டிருக்கின்றார்.
- தி வீக் பத்திரிக்கையில் நம்ரதா பிஜி அஹீஜா சிறப்பு மூத்த பத்திரிக்கை நிருபர் ஆவார்.
- இவர் அந்த விருதினை நாகாலாந்தில் உள்ள இரகசிய முகாம்கள் மீதான தனது பிரத்தியேக கட்டுரைத் தொடருக்காக பெற்றார்.
- இந்த விருது 2 லட்ச ரூபாய் பரிசுத் தொகையையும், ஒரு கோப்பையையும், ஒரு பாராட்டுச் சான்றிதழையும் கொண்டதாகும்.
- இதற்கான தேர்வுக் குழு இந்தியாவின் முன்னாள் அட்டர்னி ஜெனரலான சோலி சொராப்ஜியால் தலைமை தாங்கப்பட்டது.

***பத்திரிக்கையில் நிபுணத்துவத்திற்கான IPI இந்தியா விருது***

- 2003 ஆம் ஆண்டு இந்திய சர்வதேச பத்திரிக்கை நிறுவனம் சிறந்த சேவையை வழங்கும் இந்திய ஊடக நிறுவனம் அல்லது பத்திரிக்கையாளர்களுக்கு அவர்களது சேவையை கௌரவப்படுத்தி அங்கீகரிக்கும் வகையில் இந்த வருடாந்திர விருதினை ஏற்படுத்தியது.
- இக்குழுமம் தனது முதல் விருதை 2002 ஆம் ஆண்டு குஜராத்தில் நடந்த கலவரத்தைப் பற்றியும் அதற்குப் பிறகு நடந்த நிகழ்வுகளைப் பற்றியும் செய்தியளித்தமைக்காக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கைக்கு அளித்தது.

## இந்தியப் போட்டி ஆணையம் - புதிய தலைவர்

- நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது (ACC - Appointments Committee of the Cabinet) முன்னாள் இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான அசோக் குமார் குப்தாவை இந்தியப் போட்டி ஆணையத்தின் (CCI - Competition Commission of India) புதிய தலைவராக நியமித்துள்ளது.
- இடைக்காலத் தலைவராகப் பணியாற்றிய சுதிர் மிட்டலுக்கு மாற்றாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்தியப் போட்டி ஆணையமானது போட்டிச் சட்டம், 2002-ன் கீழ் அமைக்கப்பட்ட நீதித் துறையைப் போன்ற (Quasi-judicial) சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- இது 2003 ஆம் ஆண்டு அக்டோபரில் ஏற்படுத்தப்பட்டது. இது 2009 ஆம் ஆண்டு மே மாதம் முழுமையான செயல்பாட்டுக்கு வந்தது.
- இந்த சட்டத்தின் பிரிவு 8(1)-ன் படி இந்தியப் போட்டி ஆணையம் ஒரு தலைவரையும், இரண்டு உறுப்பினர்களுக்கு குறையாமல் ஆறு உறுப்பினர்களுக்கு மிகாமல்

உறுப்பினர்களையும் கொண்டிருக்க வழிவகை செய்கிறது.

- தற்பொழுது தலைவர் மற்றும் 4 உறுப்பினர்கள் இந்த ஆணையத்தில் உள்ளனர்.
- இந்த ஆணையம் தொடங்கப்பட்டதிலிருந்து தேர்வுக் குழு அல்லது கொலிஜியம் போன்று செயல்பட்டு வருகிறது.
- இது மத்திய பெருநிறுவன விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

## டெஸ்லா தலைவர் பதவி - எலான் மஸ்குக்குப் பதிலாக ராபின் டென்ஹோல்ம் பதவியேற்பு

- அமெரிக்கப் பங்கு மற்றும் பரிவர்த்தனை ஆணையத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக மின்சார மகிழுந்து வண்டித் தயாரிப்பாளரான டெஸ்லாவின் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமா செய்திட எலான் மஸ்க் ஒத்துக் கொண்டிருக்கின்றார்.



- ராபின் டென்ஹோல்ம் டெல்ஸ்ட்ரா நிறுவனத்தில் உள்ள தனது தலைமை நிதியியல் அதிகாரி என்ற பதவியைத் துறந்து விட்டு 14 வருடங்களாக பதவியில் உள்ள மஸ்க்கின் பதவியை ஏற்பார்.
- இருந்தாலும் டெஸ்லாவின் தலைமை செயல் அதிகாரியாகவும், இயக்குநராகவும் மஸ்க் அதன் மன்றத்தில் நீடிப்பார்.
- 2004 ஆம் ஆண்டு டெஸ்லாவின் தலைவர் மற்றும் தலைமை செயல் அதிகாரி பதவிக்கு வந்த பின் மஸ்க் தனது நிறுவனத்தின் ஏதேனும் ஒரு பொறுப்பைத் துறப்பது என்பது இதுவே முதன்முறையாகும்.

## ராஜா ராம் மோகன் ராய் விருது

- மூத்த பத்திரிக்கையாளர் மற்றும் தி இந்து பதிப்பக குழுமத்தின் தலைவரான என். இராம், புகழ்பெற்ற ராஜாராம் மோகன் ராய் விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- பத்திரிக்கைத் துறையில் சிறப்பான பங்களிப்பை ஆற்றியதற்காக இந்தியப் பத்திரிக்கைக் கழகத்தால் (Press Council of India - PCI) இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

- மேலும் இந்தியப் பத்திரிக்கைக் கழகமானது 2018 ஆம் ஆண்டில் பத்திரிக்கைத் துறையில் சிறப்புத்துவத்திற்கான தேசிய விருதுகளை வென்றவர்களையும் அறிவித்துள்ளது.

| விருதுப் பிரிவு | பெறுநர் | பத்திரிக்கை / நாளிதழ் |
|---|---|---|
| கிராமப்புற பத்திரிக்கையியல் | ரூபி சர்க்கார் | *தேசபந்து* |
| | ராஜேஷ் பரசுராம் ஜோஷ்டே | *புதரி நாளிதழ்* |
| மேம்பாட்டுச் செய்திகள் | விஎஸ் ராஜேஷ் | *கேரளா கௌமுதி* |
| புகைப்படப் பத்திரிக்கை – ஒற்றைச் செய்திகள் | சுபாஷ் பால் | ராஷ்டிரிய சஹாரா |
| புகைப்படப் பத்திரிக்கை - புகைப்பட சிறப்பம்சங்கள் | மிஹிர் சிங் | பஞ்சாப் கேசரி |
| சிறந்த கலை நாளிதழ்: கருத்துச் சித்திரம், கேலிச் சித்திரம் மற்றும் விளக்கப் படங்கள் | பி நரசிம்மா | *நவ தெலுங்கானா* |

- புதியதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள “விளையாட்டுச் செய்திகள்” என்ற பிரிவில் எந்தவொரு விண்ணப்பமும் விருதுக்குத் தகுதி பெறவில்லை.

## கலாச்சார பாரம்பரியத்திற்கான யுனெஸ்கோவின் ஆசிய பசிபிக் விருது - 2018

- 2018 ஆம் ஆண்டின் கலாச்சார மற்றும் பாரம்பரிய பாதுகாப்பிற்கான யுனெஸ்கோவின் ஆசிய-பசிபிக் விருதுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றியாளர்கள் சமீபத்தில் அறிவிக்கப்பட்டுள்ளனர்.
- ஆஸ்திரேலியா, சீனா, இந்தியா, ஜப்பான் மற்றும் தாய்லாந்து ஆகிய ஐந்து நாடுகளைச் சேர்ந்த 10 திட்டங்களை சர்வதேச பாதுகாப்பு வல்லுநர்கள் குழு அங்கீகரித்துள்ளது.
- இந்த விருதுகள் ஏற்படுத்தப்பட்டதின் 20வது ஆண்டை அனுசரிக்கும் விதமாக 2019 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வெற்றியாளர்களுக்கு மலேசியாவின் பினாங்கில் இவ்விருதுகள் வழங்கப்படவிருக்கின்றன. இந்த விருதுகள் முதன்முதலில் மலேசியாவின் பினாங்கில் 1999ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டன.
- இந்த நிகழ்ச்சியானது மலேசியாவின் நகர புத்தாக்க கொள்கை அமைப்பின் சிந்தனை நகரத்துடன் இணைந்து நடத்தப்படவிருக்கிறது.

| வ.எண் | பிரிவு | வெற்றி பெற்ற அமைப்பு | நாடு |
|---|---|---|---|
| 1. | சிறப்புத்துவத்துக்கான விருது | 20 ஆம் நூற்றாண்டின் தொடக்க கால சிஜோ-சோபூன்-கோகோ புளோட் மச்சியாவைப் புதுப்பித்தல் | ஜப்பான் |
| 2. | தனித்துவத்துக்கான விருது | லாமோ மையம் | லடாக், இந்தியா |
| 3. | சிறப்புத் தகுதிக்கான விருது | 5 மார்டின் இடம் | சிட்னி, ஆஸ்திரேலியா |
| | | அஜிங் ஜூவாங் | புஜியான், சீனா |
| | | ஹோன்ஜோ கிடங்கின் | சய்தாமா, ஜப்பான் |

| | | | |
|---|---|---|---|
| | | வணிக வங்கி | |
| 4. | மாண்புமிகு குறிப்பீடுகள் | ஹெங்டாஹெசி நகரம் | ஹெய்லோன்ஜியாங், சீனா |
| | | ராஜாபாய் கடிகார கோபுரம் மற்றும் மும்பை நூலகப் பல்கலைக்கழக கட்டிடம் | மும்பை, இந்தியா |
| | | ருட்டோன்சீ முல்ஜி ஜேதா பவுண்டேஷன் | மும்பை, இந்தியா |
| 5. | பாரம்பரிய சூழலில் புதிய வடிவமைப்பு | கௌமாய் பண்ணை 1955 | சியாங் மாய், தாய்லாந்து |
| | | ஹார்ட்ஸ் ஆலை | அடிலெய்டு துறைமுகம், ஆஸ்திரேலியா |

## கிலுவி மலையில் ஏறிய முதலாவது இந்தியர்

- பப்புவா நியூ கினியாவில் அமைந்துள்ள இரண்டாவது மிகப்பெரிய மலையான கிலுவி மலையில் ஏறிய முதலாவது இந்தியராக இந்திய மலையேற்ற வீரரான சத்யரூப் சித்தாந்தா உருவெடுத்துள்ளார்.



- இவர் இந்த மலையின் உச்சியான 4327 மீட்டரை அடைந்துள்ளார். பப்புவா நியூகினியாவில் உள்ள முதலாவது மிகப்பெரிய மலையான வில்கெம் மலைக்கு அடுத்த இடத்தில் இது உள்ளது.
- தற்பொழுது வரை இவர் 7 எரிமலைகளில் 5 எரிமலைகளின் உச்சியை அடைந்து உள்ளார்.

## முனின் பார்கோடோகி இலக்கிய விருது - 2018

- அசாமில் 2018 ஆம் ஆண்டிற்கான புகழ்பெற்ற முனின் பார்கோடோகி இலக்கிய விருதின் வெற்றியாளராக இளம் எழுத்தாளர் மற்றும் விமர்சகரான டாக்டர் தேபாபூசன் போரா அறிவிக்கப்பட்டுள்ளார்.
- இவர் எழுதிய இலக்கிய விமர்சனமான “நிர்போசோன்” என்ற புத்தகத்திற்கு இவர் ஆற்றிய

பங்களிப்பிற்காக இவ்விருது வழங்கி அவர் கௌரவிக்கப்பட்டார்.

- அசாமி மொழியில் எழுதும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு முனின் பார்கோடோகி நினைவு அறக்கட்டளையால் இவ்விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- 2017 ஆம் ஆண்டிற்கான முனின் பார்கோடோகி இலக்கிய விருதின் 23-வது பதிப்பின் வெற்றியாளர் தான் எழுதிய "ஹரி ஜடு மது" என்ற சிறுகதைக்காக அதன் எழுத்தாளரான தலிம் தாஸ் ஆவார்.
- இவ்விருது 1995 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. புகழ்பெற்ற எழுத்தாளர், விமர்சகர் மற்றும் பத்திரிக்கையாளரான முனின் பார்கோடோகி என்பவரது பெயரில் இவ்விருது ஏற்படுத்தப்பட்டது.

## கப்பற் படைத் துணைத் தலைவரான எம்பி அவாதி காலமானார்

- இந்தியக் கப்பற் படை வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடித்தவரான கப்பற்படைத் துணைத் தலைவர் மனோகர் பிரகலத் அவாதி, மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள சதாரா மாவட்டத்தில் தனது சொந்த கிராமமான வின்ச்சுருணியில் காலமானார்.
- இவர் இந்தியக் கப்பற்படையின் உலகத்தைச் சுற்றி வரும் சாகசங்களை நிகழ்த்துவதன் தந்தை என்றறியப்படுகிறார்.



- 1971 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையேயான போரில் இந்தியாவின் சார்பாக கிழக்கு பிராந்தியப் கப்பற்படைப் பிரிவை அவர் வழிநடத்தினார். இந்தப் போரில் எதிரி நாட்டின் நீர்மூழ்கிக் கப்பலை வீழ்த்துவதற்கு இவரது நடவடிக்கைகள் உதவிகரமானதாக இருந்தன.
- இவர் 1971 ஆம் ஆண்டின் போரில் ஐஎன்எஸ் கம்மோர்தா கப்பலின் தலைமை அதிகாரியாக சிறப்பாகப் பணியாற்றியதைக் கௌரவிப்பதற்காக 1972 ஆம் ஆண்டில் வீர் சக்ரா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- 2007 ஆம் ஆண்டில் "சாகர் பராக்கிரமம்" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியதில் இவர் முக்கியப் பங்கு வகித்தார். சாகர் பராக்கிரமம் என்பது இந்தியத் தயாரிப்பு பாய்மரப்

படகுகளில் தனியாக உலகம் முழுவதும் பயணம் மேற்கொள்வதாகும்.

## பிரான்சின் உயரிய குடிமகன் கௌரவிப்பு விருது

- பிரான்சின் உயரிய குடிமகன்களுக்கான விருதான "நைட் ஆப் தி லீஜியன் ஆப் ஹானர்" என்ற விருது ஜவஹர்லால் சரீனுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இவ்விருது இந்தியாவிற்கான பிரெஞ்சுத் தூதரான அலெக்ஸாந்தர் செக்லர் என்பவரால் வழங்கப்பட்டது.
- இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கிடையேயான கலாச்சார ஒத்துழைப்பை மேம்படுத்தியதிலும் பிரஞ்சு மொழியை ஊக்குவித்ததிலும் முக்கியப் பங்காற்றியதற்காக இவர் இவ்விருதைப் பெற்றுள்ளார்.
- இவர் தற்பொழுது அலையன்ஸ் பிரான்காய்ஸ் என்ற அமைப்பின் நிர்வாகக் குழுவின் தலைவராக உள்ளார்.

## 2018 ஆம் ஆண்டின் துணிவிற்கான இலண்டன் பத்திரிக்கை சுதந்திர விருது

- இந்தியாவைச் சேர்ந்த பகுதிநேரப் பத்திரிக்கையாளரான சுவாதி சதுர்வேதி 2018 ஆம் ஆண்டின் துணிவிற்கான இலண்டன் பத்திரிக்கை சுதந்திர விருதை வென்றுள்ளார்.
- பாரீசை மையமாகக் கொண்ட Reporters Sans Frontier (RSF) அல்லது எல்லைகளற்ற செய்தியாளர்கள் என்ற அமைப்பின் (ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள) லண்டன் பிரிவினால் நடத்தப்பட்ட முதலாவது விருது வழங்கும் நிகழ்ச்சியின் போது இவர் இவ்விருதைப் பெற்றார்.
- இவ்விருதிற்கு உலகம் முழுவதிலும் இருந்து 4 வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் சுவாதி சதுர்வேதியும் ஒருவராவார்.
- இவர் "I am a Troll: Inside the secret word of the BJP's digital Army" என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.

## இன்போசிஸ் பரிசு 2018

- இன்போசிஸ் அறிவியல் அறக்கட்டளை (ISF - Infosys Science Foundation) தனது 10-வது ஆண்டு விழாவில் இன்போசிஸ் பரிசு 2018-க்கான ஆறு வெற்றியாளர்களை வெவ்வேறு பிரிவுகளில் அறிவித்துள்ளது.
    - நவகாந்தா பட் - பொறியியல் மற்றும் கணினி அறிவியல்
    - கவிதா சிங் – மானுடவியல்
    - ரூப் மாலிக் - வாழ்க்கை அறிவியல்
    - நளினி அனந்த ராமன் - கணித அறிவியல்
    - S.K. சதீஷ் - இயற்பியல் அறிவியல்
    - செந்தில் முல்லைநாதன் - சமூக அறிவியல்




- இன்போசிஸ் பரிசானது இந்தியாவில் ஆராய்ச்சியாளர்கள், அறிவியலாளர்கள், சமூக ஆய்வாளர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு இன்போசிஸ் அறிவியல் அறக்கட்டளையால் வழங்கப்படும் வருடாந்திர விருதாகும்.
- ஒவ்வொரு பிரிவிலும் விருது பெறுவோர் 22 காரட் தங்கப் பதக்கம், பாராட்டுச் சான்றிதழ் மற்றும் ஒரு லட்சம் அமெரிக்க டாலர் பரிசுப் பணம் ஆகியவற்றைப் பெறுவர்.
- இந்தியாவில் அறிவியல் ஆராய்ச்சியை அங்கீகரிக்கும் மிக உயர்ந்த பணப் பரிசுகளில் இதுவும் ஒன்றாகும்.

## ஆண்டின் சிறந்த லா லிகா வீரர் விருது - மெஸ்ஸி

- பார்சிலோனாவில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் பார்சிலோனாவின் முன்னணி கால்பந்தாட்ட வீரர் லியோனல் மெஸ்ஸி, ஸ்பானிஷ் கால்பந்து லீக் போட்டிகளின் 2017-18 காலத்திற்கான சிறந்த வீரராக மேக்ரா என்ற பத்திரிக்கையால் அறிவிக்கப்பட்டார்.
- மேலும் ஒவ்வொரு வருடமும் லா லிகா போட்டியில் அதிக கோல்களை அடித்தவர்களுக்கு வழங்கப்படும் பிசிசி டிராபியையும் மெஸ்ஸி இவ்விழாவில் பெற்றார்.
- தன்னுடைய 36 போட்டிகளில் 34 கோல்களை அடித்து தனது விளையாட்டு வாழ்வில் 5வது முறையாக பிசிசி டிராபியை லியோனல் மெஸ்ஸி பெற்றுள்ளார். டெல்மோ ஜார்ரா என்பவர் மட்டுமே அதிக முறையாக ஆறுமுறை இதைப் பெற்றுள்ளார்.
- அட்லெடிகோ மாட்ரிட்டின் கோல் கீப்பரான ஜான் ஒப்லாக் இந்த ஆண்டின் சிறந்த கோல் கீப்பராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- மேக்ரா என்பது ஸ்பெயின் நாட்டின் தேசிய தினசரி விளையாட்டு செய்தித் தாளாகும்.

## யுனிசெப்பின் முதல் இளைஞர்களுக்கான தூதர்

- இந்தியாவின் புகழ்பெற்ற தடகள வீரர் மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற தடகள வீரருமான ஹிமா தாஸ் ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் - இந்தியாவின் (யுனிசெப்) இளைஞர்களுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டார்.



- இது நவம்பர் 14 அன்று நடைபெற்ற குழந்தைகள் தின நிகழ்ச்சியில் யுனிசெப் அமைப்பால் அறிவிக்கப்பட்டது.
- நாட்டில் பிறந்த ஒவ்வொரு குழந்தையும் தங்கள் வாழ்க்கையில் அவர்கள் சிறந்த தொடக்கத்தினைப் பெறுவதையும் தங்களின் முழுத் திறனையும் பெற்று மேம்படுவதையும் உறுதி செய்ய மத்திய அரசுடன் இணைந்து யுனிசெப் இந்தியா பணிபுரிகிறது.

## வாழ்நாள் சாதனையாளர் விருது - டாக்டர் மார்த்தா பார்ரெல்

- புது டெல்லியில் நடைபெற்ற 6-வது இந்திய சமூக சேவை காங்கிரஸில் மறைந்த டாக்டர் மார்த்தா பார்ரெல் 'வாழ்நாள் சாதனையாளர் விருது'வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.
- பெண் சமத்துவம், பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல் தடுப்பு ஆகியவற்றிற்காக வாழ்நாள் முழுவதும் ஆற்றிய பணிகளுக்காக இவர் கௌரவிக்கப்பட்டுள்ளார்.
- ஆப்கானிஸ்தானின் காபூலில் உள்ள விருந்தினர் மாளிகையில் 2015 மே 13 அன்று நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதலில் கொல்லப்பட்ட 14 பேர்களில் இவரும் ஒருவராவார்.
- தாக்குதலின் போது காபூலில் உள்ள ஆகா கான் அறக்கட்டளையுடனான ஒரு பாலினத்துவப் பயிற்சிப் பயிலரகங்கத்தின் தலைமையை அவர் வகித்துக் கொண்டிருந்தார்.

## ஆண்டின் உலகளாவிய சிறந்த இந்தியர் விருது

- அடோப் சிஸ்டம்ஸ் இன்க் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான சாந்தனு நாராயண் இந்த ஆண்டின் உலகளாவிய சிறந்த இந்தியர் விருதினை வென்றுள்ளார்
- அடோப் சிஸ்டம்ஸ் என்பது புகைப்படத் தொகுப்பினை செய்ய உதவும் மென்பொருளான போட்டோஷாப் மற்றும் டிஜிட்டல் ஆவணங்களை படிக்க உதவும் PDF ஆகிய மென்பொருள்களைத் தயாரிக்கும் நிறுவனமாகும்,
- பார்ச்சூன் என்ற பத்திரிக்கையால் அதன் 2018ம் ஆண்டின் தொழில்துறை நபர்கள் பட்டியலில் சாந்தனுவும் குறிப்பிடப்பட்டிருந்தார்.
- இந்த பட்டியலானது 'கீழ்மட்டத்திலும் அதற்கு அப்பாலும் சேவைகளை வழங்கியோர்" என்ற பிரிவில் 20 தொழில்துறை நிர்வாகிகளை தரவரிசைப்படுத்துகிறது.
- நாராயண் இப்பட்டியலின் 12வது இடத்தில் உள்ளார். இப்பட்டியலின் முதலிடத்தை காப்பீட்டு நிறுவனமான ப்ராக்ரஸிவ் என்ற நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி டிரிசியா கிரிப்பித் என்பவர் பிடித்துள்ளார்.

## அலிக் பதம்சி

- பிரபல விளம்பர ஆசான் மற்றும் நாடக நடிகரான அலிக் பதம்சி மும்பையில் காலமானார்.
- இவர் 1982 ஆம் ஆண்டு வெளிவந்த வரலாற்றுத் திரைப்படமான 'காந்தியில்' முகமது அலி ஜின்னாவின் கதாபாத்திரத்தில் நடித்து பிரபலமானவர் ஆவார்.
- இவர் 2006 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருது அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். மேலும் மும்பையின் விளம்பரக் கழகத்தால் 'நூற்றாண்டின் விளம்பர நாயகன்' எனவும் பெயரிடப்பட்டார்.
- மேலும் இவர் சங்கீத நாடக அகாடமியின் தாகூர் ரத்னா விருதினையும் 2012ஆம் ஆண்டில் பெற்றார்.

## ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான புதிய தலைமைப் பிரதிநிதி - BIS

- சர்வதேச தீர்வுகளுக்கான பன்னாட்டு வங்கியானது (BIS - Bank for International Settlements) சித்தார்த் திவாரியை ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான தலைமைப் பிரதிநிதியாக நியமித்துள்ளது. இதற்குமுன் எலி ரிமோலோனா இப்பதவியை வகித்தார்.
- ஹாங்காங்கின் சிறப்பு நிர்வாகப் பகுதியில் உள்ள BIS-ன் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான அலுவலகத்தில் சித்தார்த் பணியாற்றுகிறார்.
- இவர் ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்தில் உள்ள மத்திய வங்கிகள் மற்றும் சர்வதேச தீர்வுகளுக்கான பன்னாட்டு வங்கி ஆகியவற்றிற்கு இடையே ஒத்துழைப்பை அதிகப்படுத்த பணியாற்றவிருக்கிறார்.



- BIS என்பது சர்வதேச நாணய மற்றும் நிதியியல் ஒத்துழைப்பை ஏற்படுத்த மத்திய வங்கிகளால் நிர்வகிக்கப்படும் சர்வதேச நிதியியல் நிறுவனமாகும். மேலும் BIS ஆனது மத்திய வங்கிகளுக்கு வங்கியாக செயல்படுகிறது.
- இது சுவிட்சர்லாந்தின் பேசல் நகரில் அமைந்துள்ளது.

## மத்திய அமைச்சர் அனந்த குமார் - மறைவு

- 2018 ஆம் ஆண்டு நவம்பர் 12 அன்று பிஜேபியின் மூத்த தலைவரான அனந்த குமார் (59) பெங்களுருவில் காலமானார்.
- இவர்
    - மே 2014 ஆம் ஆண்டு முதல் மத்திய இரசாயன மற்றும் உரங்கள் துறை அமைச்சர் மற்றும்
    - 2016 ஆம் ஆண்டு ஜூலை முதல் என்டிஏ (NDA) அரசின் மத்திய நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சர்

  ஆகிய இரு முக்கிய அமைச்சகத்தின் அமைச்சராகப் பணியாற்றியிருக்கிறார்.
- இவர் 1996 ஆம் ஆண்டு முதல் பெங்களுரு தெற்கு நாடாளுமன்றத் தொகுதியின் மக்களவைப் பிரதிநிதியாக 6 முறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## படைத் தலைவரான குல்தீப் சிங் சந்த்புரி - மறைவு

- 2018 ஆம் ஆண்டு நவம்பர் 18 அன்று படைத் தலைவரான குல்தீப் சிங் சந்த்புரி பஞ்சாபின் மொஹாலியில் காலமானார்.
- 1971 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையே ஏற்பட்ட லங்கேவாலா போரில் “சிறந்த வீரராக” குல்தீப் சிங் சந்த்புரி அறியப்படுகிறார்.
- இவர் லங்கேவாலா போரில் சிறப்பாக செயல்பட்டதற்காக நாட்டின் இரண்டாவது உயரிய வீர விருதான மகா வீர் சக்ரா விருதைப் பெற்றுள்ளார்.



- 1971 ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான போரில் பாகிஸ்தானைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்ட பீரங்கிகளுடன் வந்த 2000 வீரர்களை, இந்தியாவைச் சேர்ந்த படைத் தலைவரான குல்தீப் சிங் சந்த்புரி 120 இந்திய வீரர்களைக் கொண்டு இராஜஸ்தானில் உள்ள எல்லைக் கோட்டைப் பாதுகாத்தார்.

## இந்திய அறுவைச் சிகிச்சை நிபுணர் சங்கத்தின் தலைவர் - ரகுராம்

- புகழ்பெற்ற மார்பகப் புற்றுநோய்க்கான அறுவைச் சிகிச்சை நிபுணரும், KIMS உஷாலட்சுமி மார்பக நோய்களுக்கான மையத்தின் இயக்குநருமான ரகுராம் இந்திய அறுவைச் சிகிச்சை நிபுணர் சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றார்.
- இவர் கொல்கத்தாவைச் சேர்ந்த தாமோனஸ் சௌத்ரி என்பவரைத் தோற்கடித்து தலைவர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றார்.
- இந்திய அறுவைச் சிகிச்சை நிபுணர் சங்கத்தின் தலைமையகமான சென்னையில் இத்தேர்தலுக்கு தலைமை தேர்தல் அதிகாரியாக செயல்பட்ட திரு. அரவிந்த் குமார் என்பவரால் இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.
- ரகுராம் பத்மஸ்ரீ விருது மற்றும் B.C. ராய் தேசிய விருது ஆகியவற்றை வென்றவர் ஆவார்.
- இந்தியாவில் அறுவைச் சிகிச்சைக்கான குரலாக கருதப்படும் இந்திய அறுவைச் சிகிச்சைக்கான நிபுணர்கள் சங்கம், ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் மிகப்பெரிய அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் சங்கமாகும்.
- உலகத்தின் மிகப்பெரிய அறுவைச் சிகிச்சைக்கான நிபுணர் சங்கம் அமெரிக்க அறுவைச் சிகிச்சைக்கான நிபுணர்களின் கல்லூரி ஆகும்.

## ஆசிய சுற்றுச்சூழல் அமலாக்க விருதுகள்

- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் 2018 ஆம் ஆண்டின் ஆசிய சுற்றுச்சூழல் அமலாக்க விருதிற்காக வனவிலங்கு குற்றத் தடுப்பு கழகம் (WCCB – Wildlife Crime Control Bureau) மற்றும் அதன் அமலாக்கத் தலைவர் R.S. ஷரத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- எல்லை கடந்த சுற்றுச்சூழல் குற்றங்களுக்கு எதிராக போராடுவதில் அவர்களின் சிறந்த பங்களிப்பிற்காக முறையே அமைப்பு மற்றும் தனிநபர் என்ற பிரிவுகளில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- இந்த 2018 விருதானது UNEP உடன்
    - ஐ.நா. அபிவிருத்தி திட்டம் (UNDP – United Nations Development Programme)
    - மருந்துகள் மற்றும் குற்றங்களுக்கான ஐ.நா. அலுவலகம் (UNODC – United Nations Office on Drugs and Crime)
    - இன்டர்போல்
    - USAID
    - ஃப்ரீலாண்ட் அறக்கட்டளை மற்றும் ஸ்வீடன் அரசு

  ஆகியவற்றுடன் இணைந்து வழங்கப்படுகிறது.

### *WCCB மற்றும் அதன் பின்னணி*

- WCCB ஆனது நாட்டில் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை மற்றும் காலநிலை மாற்றத்திற்கான அமைச்சகத்தின் கீழமைந்த, வனவிலங்குகள் மீதான முறைப்படுத்தப்பட்ட குற்றங்களுக்கு எதிராக போராடும் சட்டப்பூர்வமான பன்முக அமைப்பாகும்.
- இது வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் 1972 என்பதை திருத்தப்பட்டதன் மூலம் ஜூன் 2007-ல் நிறுவப்பட்டது.
- ஐ.நா. சுற்றுச்சூழலால் இரண்டாவது முறையாக இவ்விருதினை WCCB இவ்வருடம் பெறுகிறது.
- கடந்த வருடம் 'குர்மாவைப் பாதுகாக்கும் நடவடிக்கை' என பெயரிடப்பட்ட குறிப்பிட்ட வகை சார்ந்த வனவுயிரிகளுக்கான பாதுகாப்பு அமலாக்கத்தை ஒருங்கிணைத்தமை மற்றும் நடத்தியமை ஆகிய முயற்சிகளுக்காக இவ்விருது அதற்கு வழங்கப்பட்டது.
- இந்த நடவடிக்கையானது உயிருள்ள ஆமைகள் மற்றும் அதன் உறுப்புகளை சட்ட விரோதமாக வர்த்தகம் மூலம் அதிகப்படுத்துவதற்கு எதிராக செயல்படுவதை நோக்கமாகக் கொண்டது.

## வாழ்நாள் சாதனையாளர் விருது - உஸ்தாத் அம்ஜாத் அலிகான்

- இந்தியாவின் புகழ்மிக்க சாரோட் வல்லுநர்களில் ஒருவரான உஸ்தாத் அம்ஜாத் அலிகானுக்கு வாழ்நாள் சாதனைக்கான சுமித்ரா சாரட் ராம் என்ற விருது புதுடெல்லியின் கமாமினி அரங்கில் வழங்கப்பட்டது.
- இது இந்திய பாரம்பரிய இசை வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக இவரின் மகத்தான

பங்களிப்பிற்காக வழங்கப்பட்டது.

- இவர் ஏற்கனவே கீழ்க்கண்ட விருதுகளைப் பெற்றுள்ளார்.
    - சங்கீத நாடக அகாதமியின் விருது
    - யுனெஸ்கோ விருது
    - யுனிசெப்பின் தேசிய தூதுவருக்கான விருது
    - ஜப்பானின் புகுவோ பெருமைமிகு கலாச்சார பரிசு மற்றும்
    - 'கமாண்டர் ஆப் தி ஆர்டர் ஆப் ஆர்ட்ஸ் அண்ட் லெட்டர்ஸ்' என்ற பிரான்ஸ் நாட்டின் விருது
- 1945-ல் குவாலியரில் பிறந்த இவர் 2001 ஆம் ஆண்டில் பத்ம விபூஷன் விருதினைப் பெற்றார்.
- இந்த விருதானது ஸ்ரீராம பாரதிய கலா கேந்திராவின் நிறுவனரான சுமித்ரா சாரட் ராமின் பெயரால் வழங்கப்படுகிறது.

## உலகளவில் ஏற்புடைய சிந்தனைத் தலைவர் விருது

- உலகளாவிய இணையதள அமைப்பான ICANN என்ற அமைப்பால் ஆதரிக்கப்படும் UASG (Universal Acceptance Steering Group) என்ற அமைப்பானது ராஜஸ்தானின் முதல்வர் வசுந்தரா ராஜேவுக்கு 'உலகளவில் ஏற்புடைய சிந்தனைத் தலைவர்' என்ற விருதை வழங்கியுள்ளது.



- இந்த விருதானது முதல்வர் மற்றும் மாநில தகவல் தொழில்நுட்பத் துறையின் கீழ்க்காணும் சீரிய செயல்களை அங்கீகரிக்கும் பொருட்டு வழங்கப்பட்டது.
    - இவ்விருது ராஜஸ்தானின் குடிமக்களுக்கு உள்நாட்டு 'இண்டிக்' என்ற எழுத்துருவில் மின்னஞ்சல் முகவரியை வழங்கும் 'ராஜ்மெயில்' என்ற மின்னஞ்சல் சேவையைத் தொடங்கியதற்காக வழங்கப்பட்டது.
- இந்த ராஜ்மெயில் தொழில்நுட்பமானது ராஜஸ்தானை அடிப்படையாகக் கொண்ட Data

XGen Technologies என்ற நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது.

- இந்த ஆண்டில் '2018 ஆம் ஆண்டிற்கான சிறந்த முதல்வர்' விருதும் வசுந்தரா ராஜேவிற்கு வழங்கப் பட்டுள்ளது.

## இண்டர்போல் அமைப்பின் புதிய தலைவர்

- தென்கொரியாவின் கிம் ஜோங் யாங் இண்டர்போல் அமைப்பின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- முதல்முறையாக துபாயில் நடைபெற்ற இண்டர்போலின் 87வது பொதுச் சபையில் அதன் உறுப்பினர்களால் இரண்டு ஆண்டு கால அளவிற்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவர் பொதுச்சபையின் வாக்கெடுப்பில் மொத்த வாக்குகளில் குறைந்தது மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று ரஷ்யாவின் அலெக்சான்டர் ப்ரோகோப்சக்கை தோற்கடித்தார்.
- இவருக்கு முன் பதவி வகித்த மன்ங் ஹாங்வெய் ஊழல் குற்றச்சாட்டுகள் காரணமாக சீனாவில் சிறையிலடைக்கப்பட்டதன் பொருட்டு அவருடைய நான்கு ஆண்டு பதவிக் காலத்தை முழுமையாக்கும் வகையில் கிம் ஜோங் யாங் 2020 வரை பதவி வகிப்பார்.

### *இண்டர்போல்*

- இண்டர்போல் என்பது ஒரு உலகளாவிய காவல்துறை கூட்டமைப்பு நிறுவனம் ஆகும்.
- இது 1923ல் சர்வதேச குற்றவியல் காவல்துறை ஆணையம் (International Criminal Police Commission) என்ற பெயரில் நிறுவப்பட்டது.
- இதன் தலைமையகம் பிரான்சின் லியோனில் அமைந்துள்ளது. இந்தியா உட்பட 194 நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட இது உலக அளவில் ஒரு மிகப்பெரிய காவல்துறை அமைப்பாகும்.
- இது சர்வதேச பிரதிநிதித்துவ அடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபைக்கு அடுத்ததாக இரண்டாவது மிகப்பெரிய சர்வதேச அமைப்பாகும்.

## யுனிசெப்பின் நல்லெண்ணத் தூதர்

- சமீபத்தில் யுனிசெப்பின் ( UNICEF - The United Nations International Children's Emergency Fund) நல்லெண்ணத் தூதராக நெட் பிளிக்ஸின் அறிவியல் புனைவு நாடகத்தின் நடிகரான மில்லி போபி ப்ரவுன் நியமிக்கப்பட்டு இருக்கின்றார்.
- எம்மி விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள 14 வயதுடைய இவர் முதன்முறையாக நல்லெண்ணத் தூதர் பதவிக்கு இளம் வயதில் நியமிக்கப்பட்ட நபர் ஆவார்.
- உலக குழந்தைகள் தினமான நவம்பர் 20 அன்று இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.




## வடகிழக்குப் பிராந்தியத்திற்கான முதல் இளைஞர் பரப்புனர்

❖ ஐ.நா. வின் சர்வதேச குழந்தைகளுக்கான அவசர நிதியமானது (UNICEF - United Nations International Children's Emergency Fund) குழந்தைகளின் உரிமைகளுக்காகப் போராட வடகிழக்குப் பிராந்தியத்திற்கான முதல் இளைஞர் பரப்புனராக (Youth Advocate) அஸ்ஸாமின் பிரபல பாடகியான நஹீத் அப்ரின் (17) என்பவரை நியமித்துள்ளது.



❖ சமுதாயத்தில் மாற்றத்தைக் கொண்டு வரும் முகவர்களாக தங்கள் குரலை பயன்படுத்துவதற்காக யுனிசெஃப் இளைஞர் பரப்புனர்களை ஈடுபடுத்துகிறது.

## அணுசக்தி ஒழுங்குமுறை வாரியத்தின் தலைவர்

- புகழ்பெற்ற விஞ்ஞானியான நாகேஸ்வரராவ் குண்டூர் என்பவரை அணுசக்தி ஒழுங்குமுறை வாரியத்தின் (Atomic Energy Regulatory Board-AERB) தலைவராக மத்திய அரசு நியமித்துள்ளது.
- AERB-ன் தலைவராக இவரது நியமனம் மூன்று ஆண்டுகளுக்கு இருக்கும்.

### *அணுசக்தி ஒழுங்குமுறை வாரியம்*

- இது 1983 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மஹாராஷ்டிராவில் மும்பையைத் தலைமையிடமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.
- இது 1962 ஆம் ஆண்டின் அணுசக்தித் சட்டத்தின் பிரிவு 27-ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி இந்திய குடியரசுத் தலைவரால் அமைக்கப்பட்டது.
- இந்தியாவில் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழலுக்குத் தேவையற்ற பாதிப்புகளை ஏற்படுத்தாமல் அயனியாக்கும் கதிர்வீச்சு மற்றும் அணுசக்தியைப் பயன்படுத்துவதை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும்.
- தற்போது இது முழுநேர தலைவர், ஒரு அலுவல்வழி உறுப்பினர், 3 பகுதி நேர உறுப்பினர்கள் மற்றும் ஒரு செயலாளர் ஆகியோரை உள்ளடக்கியது ஆகும்.

## புதிய தலைமை தேர்தல் ஆணையர் (CEC - Chief Election Commissioner)

- மூத்த இந்திய குடிமைப் பணி அலுவலரான சுனில் அரோராவை புதிய தலைமை தேர்தல் ஆணையராக குடியரசுத் தலைவர் நியமித்துள்ளார்.
- இவர் டிசம்பர் 01, 2018-ல் ஓய்வு பெறும் O.P. ராவத்திற்கு அடுத்ததாக 23-வது CEC ஆக பதவியேற்கவுள்ளார்.
- இவர் இரண்டரை வருட காலத்திற்கு CEC ஆக பதவி வகிப்பார். மேலும் 2019 பொதுத் தேர்தலானது இவரது தலைமையின் கீழ் நடைபெறும்.

## பணிக் குழுவின் ஒருங்கிணைப்பாளர்

- மத்திய நேரடி வரிகளுக்கான ஆணையத்தின் உறுப்பினரான அகிலேஷ் ரஞ்சனை புதிய நேரடி வரிச் சட்டத்தை வரைவு செய்யும் பணிக் குழுவின் தலைவராக மத்திய நிதியமைச்சகம் நியமித்துள்ளது.
- இவர் செப்டம்பர் 2018-ல் ஓய்வு பெறும் அர்விந்த் மோடிக்குப் பதிலாக பதவியேற்கிறார்.
- இந்த பணிக் குழுவானது நவம்பர் 2017-ல் அமைக்கப்பட்டது.
- இது 1961-ன் வருமான வரிச் சட்டத்தை மதிப்பாய்வு செய்யவும் நாட்டின் பொருளாதார தேவைகளுடன் ஒத்திசையக் கூடிய புதிய நேர்முக வரிச் சட்டத்தை வரைவு செய்யவும் அமைக்கப்பட்டது.

## CII – EXIM வங்கி வணிக விருது

- பெங்களூருவில் நடைபெற்ற தரநிலை மாநாட்டில் பாரத் மின்னனுவியல் நிறுவனமானது (BEL - Bharat Electronics Limited) ஒரு முன்னுதாரணமான நிறுவனமாக திகழ்வதால் CII-EXIM (EXIM – Export and Import/ ஏற்றுமதி மற்றும் இறக்குமதி) வங்கியின் வணிக விருதினை வென்றுள்ளது.
- இந்த மாநாடானது இந்திய தொழில்துறை கூட்டமைப்பால் (Confederation of Indian Industry - CII) ஏற்பாடு செய்யப்பட்டது.
- BEL நிறுவனத்தின் பெங்களூரு வளாகம் CII-ஆல் முன்னுதாரணமாக திகழும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள முதல் அரசு நிறுவனமாகும்.
- இதன் மற்ற 3 வளாகங்களான காஸியாபாத், சென்னை, மச்சிலிப்பட்டினம் ஆகியவை சிறந்த வர்த்தகத்திற்கான பிளாட்டினம் அங்கீகாரத்தை பெற்றன.

***<u>CII – EXIM வங்கி வணிக விருது</u>***

- வர்த்தக சிறப்புக்காக CII-எக்ஸிம் வங்கியால் வழங்கப்படும் மிக உயர்ந்த விருது இதுவேயாகும்.
- இந்த விருதானது இந்தியாவில் போட்டித் தன்மையை அதிகரிப்பதற்காக CII மற்றும் ஏற்றுமதி - இறக்குமதி வங்கியால் உருவாக்கப்பட்டு வழங்கப்படுகின்றது.
- CII ஆனது நிறுவனங்களை 3 மட்டங்களில் அங்கீகரிக்கிறது. அவையாவன கோல்டு பிளஸ், பிளாட்டினம் மற்றும் மிக உயர்ந்த விருது (Award at the highest).

## மத்திய பணியாளர் தேர்வு ஆணையத்தின் தலைவர்

- மத்திய பணியாளர் தேர்வு ஆணையத்தின் தலைவராக அர்விந்த் சக்ஸேனாவை குடியரசுத் தலைவர் நியமனம் செய்தார்.
- இவர் தனது 65வது வயதை அடையும் வருடமான ஆகஸ்ட் 7, 2020 வரை அப்பதவியை வகிப்பார்.
- ஐ.ஏ.எஸ், ஐ.எப்.எஸ், மற்றும் ஐபிஎஸ் அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக புகழ்பெற்ற குடிமைப் பணி தேர்வினை நடத்தும் இது ஒரு அரசியல் சாசன அமைப்பாகும்.
- இது அரசியலமைப்பின் 315வது விதியின் கீழ் நிறுவப்பட்டுள்ளது. இது குடியரசுத் தலைவரால் நியமனம் மற்றும் நீக்கம் போன்றவை செய்யப்படக் கூடிய ஒரு தலைவர் மற்றும் பத்து உறுப்பினர்களைக் கொண்டது ஆகும்.
- இதன் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆறு ஆண்டுகள் அல்லது 65 வயதினை அடையும் காலம் வரை பதவி வகிப்பர்.

# விளையாட்டுச் செய்திகள்

## வடகிழக்கு ஒலிம்பிக் விளையாட்டுகள் 2018

- வடகிழக்கு ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியின் முதல் பதிப்பு மணிப்பூரின் இம்பாலில் நடைபெற்றது.
- மணிப்பூர் 80 தங்கம், 48 வெள்ளி மற்றும் 31 வெண்கலப் பதக்கங்கள் சேர்த்து மொத்தமாக 159 பதக்கங்களை வென்று ஒட்டுமொத்த சாம்பியனாக மூடிசூட்டப்பட்டது.

**Medal Tally for the 1st North East Olympic Games 2018**

| Rank | Participating State | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | Manipur | 79 | 47 | 31 | 159 |
| 2 | Assam | 45 | 52 | 41 | 140 |
| **3** | **Arunachal Pradesh** | **18** | **20** | **38** | **76** |
| 4 | Mizoram | 08 | 15 | 29 | 52 |
| 5 | Nagaland | 06 | 09 | 26 | 41 |
| 6 | Meghalaya | 03 | 08 | 29 | 40 |
| 7 | Sikkim | 01 | 06 | 18 | 25 |
| 8 | Tripura | 00 | 03 | 17 | 20 |

- அசாம் 140 பதக்கங்களுடன் இரண்டாம் இடத்தையும், அருணாச்சலப் பிரதேசம் 76 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்தையும் கைப்பற்றின.
- வடகிழக்கு ஒலிம்பிக் விளையாட்டுகள் 2018 ஆனது வடகிழக்கு ஒலிம்பிக் கூட்டமைப்பின் நிர்வாகத்தின் கீழ் மணிப்பூர் ஒலிம்பிக் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- வடகிழக்கு ஒலிம்பிக் போட்டிகளின் 2வது பதிப்பு 2019 ஆம் ஆண்டு அருணாச்சலப் பிரதேசத்தில் நடைபெறும்.

## 2018 எகிப்து இளையோர் & சிறுவர் ஓபன்

- 2018-ன் எகிப்து இளையோர் & சிறுவர் ஓபன் மேசை பந்தாட்ட போட்டித் தொடரானது எகிப்தின் ஷார்ம் எல் ஷேக்கில் நடைபெற்றது.
- எகிப்தின் முஸ்தாபாவைத் தோற்கடித்து இந்தியாவின் விஷால் ராஜ்வீர் ஷா மினிகேடட் சிறுவர் ஒற்றையர் பட்டத்தை வென்றார்.
- இளம் சிறுவர் ஒற்றையர் பிரிவில் சீனாவின் டிங் விசியானிடம் தோல்வியுற்று இந்தியாவின் ரேகன் அல்புர்குர்க் வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

## மெக்சிகன் கிராண்ட் பிரிக்ஸ்

- லெவிஸ் ஹெமில்டன் தனது 5வது ஓட்டுநர் உலக சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்று ஜூவான் மானுவேல் ஃபாங்கியோவின் பார்முலா ஒன் சாதனையை சமன் செய்தார்.

- மேக்ஸ் வெர்ஸ்டப்பன் (ரெட்புல்) மெக்ஸிகோவில் நடைபெற்ற மெக்ஸிகன் கிராண்ட் பிரிக்ஸை வென்றார்.
- செபாஸ்டியன் வெட்டல் (ஃபெராரி) மற்றும் கிமி ரைக்கோனன் ஆகியோர் முறையே 2வது மற்றும் 3வது இடத்தைப் பிடித்தனர்.
- லெவிஸ் ஹெமில்டன் மெக்சிகன் கிராண்ட் பிரிக்ஸை நான்காவது இடத்தில் முடித்தார்.
- 3வது முறையாக இவர் பந்தயத் தூரத்தை முழுவதும் முடிக்காமலேயே ஓட்டுநர் உலக சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றார்.
- இவர் ஏற்கனவே 2008, 2014, 2015 மற்றும் 2017 ஆண்டுகளில் ஓட்டுநர் உலக சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றுள்ளார்.

## பெண்கள் டென்னிஸ் கூட்டமைப்பு (WTA) கோப்பையின் இறுதிப் போட்டி

- சிங்கப்பூரில் நடைபெற்ற WTA (Women's Tennis Association) இறுதிப் போட்டியில் எலினா விட்டோலினா தனது விளையாட்டு வாழ்க்கையில் மிகப்பெரிய பட்டத்தைக் கைப்பற்றி WTA பைனல்ஸ் டிராபியில் வெற்றி பெற்ற முதல் உக்ரைனிய ஆட்டக்காரராக உருவெடுத்துள்ளார்.
- இவர் 2017ம் ஆண்டின் அமெரிக்க ஓபன் சாம்பியனான ஸ்லோனே ஸ்டீபன்ஸை வீழ்த்தி இப்பட்டத்தை வென்றார்.
- 2013-ல் செரினா வில்லியம்ஸ்க்குப் பிறகு தோல்வியுறாமல் WTA இறுதிப் போட்டிக்கு சென்ற முதல் ஆட்டக்காரர் இவரேயாவார்.

## ஐல் ஆப் மேன் சர்வதேச சதுரங்க போட்டித் தொடர் 2018

- ஐக்கிய ராச்சியத்தின் ஐல் ஆப் மேன் மாகாணத்தில் உள்ள டக்லஸின் வில்லா மரினாவில் ஐல் ஆப் மேன் சதுரங்கப் போட்டித் தொடர் 2018 நடைபெற்றது.
- இந்தியாவின் கிராண்ட் மாஸ்டர் B. அதிபன் இங்கிலாந்தின் மைக்கேல் ஆடம்ஸை ஒன்பதாவது மற்றும் இறுதிச் சுற்றில் வீழ்த்தி 6.5 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தை சமநிலையில் முடித்தார்.
- இவர் இந்த போட்டித் தொடரின் சிறந்த இந்திய வீரர் ஆவார்.
- போலந்தைச் சேர்ந்த ராடோஸ்லாவ் வோஜ்டாஸ்ஜெக் இந்த போட்டியின் வெற்றியாளர் ஆவார்.

## ஆசிய ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபி (ஆண்கள் ஹாக்கி)

- ஓமனின் மஸ்கட் நகரத்தில் நடந்த ஆசிய ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபி இறுதி ஆட்டத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் கூட்டாக இணைந்து வெற்றி பெற்றுள்ளன.
- கடுமையான மழையின் காரணமாக இந்தியாவும் பாகிஸ்தானும் ஆசிய ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபியின் கூட்டு வெற்றியாளர்களாக அறிவிக்கப்பட்டனர்.

- இந்தியா இந்தப் போட்டி முழுவதும் தோற்கடிக்க முடியாத அணியாக விளங்கியது. பாகிஸ்தான் இந்தியாவால் மட்டுமே தோற்கடிக்கப்பட்டு இருந்தது.
- முன்னதாக இந்தியா 2011 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் ஆசிய ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபியை வென்று இருந்தது.

## ITTF (International Table Tennis Federation) பெல்ஜியம் ஓபன் 2018

- பெல்ஜியத்தின் டீ ஹான் நகரத்தில் சர்வதேச மேசைப் பந்தாட்டக் கூட்டமைப்பின் பெல்ஜியம் ஓபன் 2018 போட்டி நடத்தப்பட்டது.
- ஆண்கள் இரட்டையர் பிரிவின் அரையிறுதி ஆட்டத்தில் கொரிய அணியின் சியுங்மின் சோ மற்றும் ஜேஹையுன் அன் என்ற ஜோடியிடம் இந்தியாவின் ஆண்டனி அமல் ராஜ் மற்றும் சனில் ஷெட்டி ஜோடி தோல்வியடைந்து வெண்கலப் பதக்கத்தை வென்றது.
- இந்தியாவின் அய்ஹிகா முகர்ஜி 21 வயதிற்கு கீழான பெண்கள் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றார். அவர் இறுதிப் போட்டியில் கொரியாவின் யூஜின் கிம் என்பவரிடம் தோல்வி அடைந்தார்.

## 21 வயதிற்குட்பட்டோருக்கான பெல்ஜியம் ஓபன்

- ITTF (International Table Tennis Federation) சேலஞ்ச் பெல்ஜியம் ஓபன் போட்டியின் 21 வயதிற்குட்பட்டோருக்கான பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்திய மேசைப் பந்தாட்ட வீராங்கனையான அய்ஹிகா முகர்ஜி வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- இவர் இறுதிப் போட்டியில் தென் கொரியாவின் யூஜின் கிம்மிடம் தோல்வியடைந்தார்.



## பார்முலா ஒன் பந்தயம் - 2020

- 2020ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பார்முலா ஒன் பந்தயத்தை வியட்நாம் நடத்த இருக்கின்றது.
- பார்முலா ஒன் பந்தயத்தை நடத்த உள்ள மூன்றாவது தென்கிழக்காசிய நாடாக

வியட்நாம் உருவெடுத்துள்ளது.

- ❖ இப்பந்தயம் அதன் தலைநகரான ஹனோயில் நடத்தப்பட இருக்கின்றது.

## உலக பெருநிறுவன விளையாட்டுகள்

- ❖ 2019ம் ஆண்டு நவம்பர் 6 முதல் 9ம் தேதி வரையில் உலக பெருநிறுவன விளையாட்டுகளின் 23வது பதிப்பை கத்தார் நடத்த உள்ளது.
- ❖ மத்திய கிழக்குப் பகுதியில் உலக பெருநிறுவன விளையாட்டுகள் நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- ❖ மேலும் முதல் முறையாக உலக பெருநிறுவன விளையாட்டுகள் மின்னணு விளையாட்டுக்களையும், எண்ணத்தின் அடிப்படையிலான விளையாட்டுக்களையும் சேர்த்துக் கொள்ள இருக்கின்றது.
- ❖ 30 வருடங்களுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட உலக பெருநிறுவன விளையாட்டுகள் உள்ளூர், பிராந்திய மற்றும் சர்வதேச வியாபார விளையாட்டுச் சமூகத்தை ஒன்றோடு ஒன்றாக ஒருங்கிணைக்க எண்ணுகின்றது.

## பாரிஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ்

- ❖ பாரிஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் கரென் கச்சாநோவ், நோவாக் ஜோகோவிக்கை வீழ்த்தி பட்டம் வென்றார்.
- ❖ கரென் கச்சாநோவ் ரஷ்யாவைச் சேர்ந்த 22 வயதான டென்னிஸ் வீரராவார்.
- ❖ 2018 ஆம் ஆண்டு நவம்பர் 04 அன்று பாரிஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் இறுதிப் போட்டியில் கரென் கச்சாநோவிடம் நோவாக் ஜோகோவிக் தோல்வியுற்றார். ஆனால் 2016 ஆம் ஆண்டு அக்டோபர் 31 தேதிக்குப் பிறகு முதன்முறையாக முதல் இடத்தை அவர் மீண்டும் பிடித்துள்ளார்.

**ATP Rankings on November 5:**

1. Novak Djokovic (SRB) 8045 points (+1)
2. Rafael Nadal (ESP) 7480 (-1)
3. Roger Federer (SUI) 6020
4. Juan Martin Del Potro (ARG) 5300
5. Alexander Zverev (GER) 5085
6. Kevin Anderson (RSA) 4310
7. Marin Cilic (CRO) 4050
8. Dominic Thiem (AUT) 3895
9. Kei Nishikori (JPN) 3390 (+2)
10. John Isner (USA) 3155 (-1)
11. Karen Khachanov (RUS) 2835 (+7)
12. Borna Coric (CRO) 2480 (+1)

## லுக்சிகா கும்கும் - WTA

- ❖ மும்பையில் உள்ள இந்திய கிரிக்கெட் மன்ற மைதானத்தில் நடைபெற்ற எல் அண்ட் டி மும்பை ஓபனில் ரஷ்யாவின் இரினா குரோமாசேவாவை தனது சிறப்பான ஆட்டத்தின் மூலம் வீழ்த்தி தாய்லாந்தைச் சேர்ந்த லுக்சிகா கும்கும் தனது முதலாவது WTA (Women's Tennis Association) பட்டத்தை வென்றார்.



## சார்லொர்லக்ஸ் ஓபன்

- இந்தியாவின் சுபன்கர் தே ஐந்தாவது இடத்திலுள்ள ராஜீவ் ஆஸ்செப்பை நேர்செட்டில் வீழ்த்தி சூப்பர் 100 பேட்மின்டன் போட்டியின் சார்லொர்லக்ஸ் ஓபன் பேட்மின்டன் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றார்.
- 2018 ஆம் ஆண்டில் சுபன்கரின் முதலாவது பட்டம் இதுவாகும்.



- செக் குடியரசில் மார்ச்சில் நடைபெற்ற காபல் சர்வதேச போட்டியில் இவர் இரண்டாம் இடத்தைப் பெற்று போட்டியை நிறைவு செய்தார்.

## சைமோன் பைல்ஸ் - 13வது தங்கம்

- கத்தாரின் தோஹாவில் நடைபெற்ற உலக ஜிம்னாஸ்டிக்ஸ் சாம்பியன்ஷிப் (Gymnastics) போட்டியில் தனது வாழ்நாளில் 13-வது தங்கப் பதக்கத்தை வென்றதன் மூலம் சைமோன் பைல்ஸ் வரலாற்று சாதனை படைத்துள்ளார்.
- உடற்பயிற்சி வீரர் கவிகை மாடம், விட்டம், சீரற்ற சட்டகம் மற்றும் தரை ஆகிய நான்கு

இடங்களில் தங்கள் திறமையை வெளிப்படுத்திட வேண்டும்.



- ❖ மேலும் நான்கு தனி நபர் உலகப் பதக்கங்களை வென்ற முதலாவது பெண்மணியாகவும் சைமோன் உருவெடுத்துள்ளார்.
- ❖ 2016 ஆம் ஆண்டில் நடைபெற்ற ரியோ ஒலிம்பிக்கில் சைமோன் 4 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.

## ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்

- ❖ குவைத் நகரில் நடைபெற்ற 11-வது ஆசிய துப்பாக்கி சுடுதல் போட்டியில் 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்தியாவின் இளம் துப்பாக்கி சுடும் வீரர்களான திவ்யான்ஷ் சிங் பன்வார் மற்றும் இளவேனில் வளரிவன் ஆகியோர் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.



## சவ்ரப் நேத்ராவல்கர் - அமெரிக்க கிரிக்கெட் அணித்தலைவர்

- கார்னெல் பல்கலைக்கழகத்தில் கணினி அறிவியல் படிப்பதற்காக 27 வயது நிரம்பிய சவ்ரப் நேத்ராவல்கர் மும்பை மீடியம் அணியிலிருந்து விலகினார். இவர் அமெரிக்க தேசிய கிரிக்கெட் அணியின் தலைவராக உருவெடுத்துள்ளார்.
- இவர் 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் சார்பாக அதிக விக்கெட்டுகளை வீழ்த்தினார். மேலும் இவர் ரஞ்சிக் கோப்பையிலும் ஒரு பருவத்தில் விளையாடியுள்ளார்.

## தெற்காசிய கால்பந்துக் கூட்டமைப்பு - 15 வயதிற்கு உட்பட்டோருக்கான சாம்பியன்ஷிப்

- நேபாளத்தின் லலித்பூரில் நடைபெற்ற தெற்காசிய கால்பந்துக் கூட்டமைப்பின் (South Asian Football Federation - SAFF) 15 வயதிற்கு உட்பட்டோருக்கான சாம்பியன்ஷிப் கோப்பை கால்பந்துப் போட்டியில் வங்கதேசம் பாகிஸ்தான் அணியை 3-2 என்ற கணக்கில் பெனால்டி ஷீட் அவுட் முறையில் வீழ்த்திக் கோப்பையைக் கைப்பற்றியது.
- வங்கதேசம் உள்பட ஆறு அணிகள் விளையாடும் 15 வயதிற்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்துக் கூட்டமைப்பின் சாம்பியன்ஸ் கோப்பையை அனைத்து போட்டிகளிலும் வெற்றி என்ற சாதனையுடன் வங்கதேசம் கைப்பற்றியிருக்கின்றது.



- போட்டியை நடத்தும் நாடான நேபாளத்தை 1-0 என்ற கணக்கில் வீழ்த்தி இந்தியாவானது இந்த SAFF சாம்பியன்ஷிப் போட்டியில் மூன்றாவது இடத்தில் வெண்கலப் பதக்கத்தை வென்றது.
- இந்தியாவிற்கான வெற்றி வீரராக தலச்சு வன்லால் ரூத்பெலா கோல் அடித்தார்.

## ஸ்கீட் போட்டியில் இந்தியாவின் முதலாவது தங்கப்பதக்கம்

- தீபாவளி பண்டிகையன்று குவைத்தில் நடைபெற்ற 8வது ஆசிய துப்பாக்கி சுடுதல்

(ஷாட்கன்/ Shotgun) சாம்பியன்ஷிப் போட்டியில் ஆண்களுக்கான ஸ்கீட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் தங்கப் பதக்கத்தை பெற்று அங்கத் வீர் சிங் பாஜ்வா வரலாறு படைத்துள்ளார்.



- கண்டங்கள் அடிப்படையிலான அல்லது உலகம் முழுவதுமான விளையாட்டுப் போட்டி ஏதேனும் ஒன்றில் தங்கப் பதக்கம் பெற்ற முதல் இந்திய ஸ்கீட் துப்பாக்கி சுடுதல் வீரராக பாஜ்வா உருவெடுத்துள்ளார்.

## எகானா கிரிக்கெட் மைதான பெயர் மாற்றம்

- முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின் மறைவிற்குப் பின்பு உத்தரப் பிரதேசத்தின் தலைநகரான லக்னோவில் புதிதாக கட்டப்பட்டுள்ள எகானா கிரிக்கெட் மைதானத்தின் பெயரை மாற்ற அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.
- இதற்குப் பிறகு இந்த மைதானம் "பாரத ரத்னா அடல் பிகாரி வாஜ்பாய் சர்வதேச கிரிக்கெட் மைதானம்" என்றழைக்கப்படும்.
- இந்த மைதானம் தனது முதல் சர்வதேச போட்டியாக இந்தியா மற்றும் மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையே நடைபெற்ற T-20 கிரிக்கெட் போட்டியை நடத்தியது.

## T20 - 4 சதம் அடித்த முதலாவது கிரிக்கெட் வீரர்

- சமீபத்தில் T-20 சர்வதேசப் போட்டியில் 4 சதம் அடித்த முதலாவது கிரிக்கெட் வீரராக ரோகித் சர்மா உருவடுத்துள்ளார்.
- லக்னோவில் நடைபெற்ற வெஸ்ட் இண்டீசிற்கு எதிரான இரண்டாவது T-20 சர்வதேச போட்டியில் இவர் இச்சாதனையை நிகழ்த்தினார்.




- மேலும் இவர் T-20 போட்டியில் இரண்டு சதம் அடித்த முதலாவது அணித் தலைவராகவும் உருவெடுத்துள்ளார்.
- மேலும் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் 3 முறை 200 ரன்களைக் கடந்த ஒரே கிரிக்கெட் வீரர் ரோகித் சர்மா மட்டுமே ஆவார்.

## ஆசிய ஸ்னூக்கர் பட்டம்

- சீனாவின் ஜினானில் நடைபெற்ற ஆசிய ஸ்னூக்கர் போட்டியின் இறுதி ஆட்டத்தில் சீனாவின் ஜு ரெட்டியை 6-1 என்ற செட் கணக்கில் வீழ்த்தி ஆசிய ஸ்னூக்கர் பட்டத்தை வென்ற முதலாவது இந்திய வீரராக பங்கஜ் அத்வானி உருவெடுத்துள்ளார்.
- பங்கஜ் அத்வானி 19 முறை உலக சாம்பியன் பட்டம் பெற்றுள்ளார்.
- மேலும் இவர் பில்லியர்ட்ஸ் மற்றும் ஸ்நூக்கர் போட்டிகளுக்காக பத்ம பூஷண், பத்ம ஸ்ரீ, இராஜீவ் காந்தி கேல் இரத்னா, அர்ஜுனா விருது ஆகிய விருதுகளை வென்றுள்ளார்.

## பிரேசிலிய கிராண்ட்பிரிக்ஸ்

- பிரேசிலில் நடைபெற்ற பிரேசிலிய கிராண்ட் பிரிக்ஸில் 5 முறை உலக சாம்பியனான லூயிஸ் ஹாமில்டன் வெற்றி பெற்றார்.
- இது லூயிஸிற்கு 2018ம் ஆண்டில் 10-வதும் மற்றும் தனது விளையாட்டு வாழ்க்கையில் 72-வது வெற்றியுமாகும்.



- மெர்சிடிஸ் ஆனது தயாரிப்பாளர்களுக்கான சாம்பியன்ஷிப்பை தொடர்ந்து 5வது முறையாக வென்றுள்ளது.
- மேக்ஸ் வெர்ஸ்டபென் (ரெட்புல்) இரண்டாவதாகவும் அவரைத் தொடர்ந்து கிமி ரைக்கோனன் என்பவரும் (ஃபெராரி) பந்தயத்தை முடித்தனர்.

## புசௌ சீனா ஓபன் 2018

- புசௌ சீனா ஓபன் 2018 பூப்பந்தாட்ட போட்டித் தொடர் நவம்பர் 6 முதல் 11 வரை சீனாவின் புசௌவில் நடைபெற்றது.
- இது உலக பூப்பந்தாட்ட சம்மேளனத்தின் (BWF - Badminton World Federation) 23வது போட்டித் தொடரின் சுற்றுப் பயணமாகும். இது சீன மாஸ்டர்ஸ் சாம்பியன்ஷிப்பின் ஒரு பகுதியாகும்.
- இந்தப் போட்டி BWF ஆல் அனுமதிக்கப்பட்டு சீன பூப்பந்தாட்ட சங்கம் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- சோ டைன் சென்னைத் (சீன தைபே) தோற்கடித்து ஜப்பானின் கெண்டோ மோமோடோ ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வென்றார்.
- ஜப்பானின் நாசோமி ஒகுஹாராவை வீழ்த்தியதன் மூலம் சீனாவின் சென் யூஃபெய் மகளிர் ஒற்றையர் பட்டத்தை வென்றார்.

## 11 வது ஆசிய காற்று துப்பாக்கி சாம்பியன்ஷிப்

- குவைத் நாட்டின் குவைத் நகரில் உள்ள ஷேக் சபா அல் அஹ்மத் ஒலிம்பிக் துப்பாக்கி சுடும் வளாகத்தில் 11வது ஆசிய காற்று துப்பாக்கி சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது.
- இந்தியாவைச் சேர்ந்த இளையோர் துப்பாக்கி சுடும் வீரர்கள் 4 தங்கம், 5 வெள்ளி மற்றும் 2 வெண்கலம் உட்பட 11 பதங்கங்களை வென்றனர்.

- மனு பாஸ்கர் மற்றும் சவுரப் சவுத்ரி ஆகியோர் 10 மீட்டர் ரைபிள் கலப்புக் குழு பிரிவில் தங்கம் வென்றனர்.
- இவர்கள் 485.4 புள்ளிகளைப் பெற்று இளையோர் உலக சாதனையை தகர்த்தனர்.
- இளவேனில் வாளறிவன் & ஹிருதய் ஹஜரிகா – தங்கம் (10 மீ ரைபிள் கலப்பு இளையோர் அணி).
- சவுரப் சவுத்ரி - தங்கம் (10 மீ காற்று துப்பாக்கி ஆடவர் இளையோர்)
- சவுரப் சவுத்ரி, அர்ஜூன் சிங் சீமா & அன்மோல் ஜெயின் - தங்கம் (10 மீ காற்று துப்பாக்கி இளையோர் குழு)

## பெட் கோப்பை 2018

- செக் குடியரசில் நடைபெற்ற போட்டியில் 8 ஆண்டுகளில் 6-வது முறையாக பெட் கோப்பை 2018 என்ற கோப்பையை செக் குடியரசு வென்றுள்ளது.




- பெட் கோப்பையானது ஒரு சர்வதேச பெண்கள் டென்னிஸ் போட்டியாகும்.
- செக் குடியரசானது இறுதிப் போட்டியில் நடப்பு சாம்பியனான அமெரிக்காவை 3-0 என்ற கணக்கில் வீழ்த்தி கோப்பையை வென்றது.
- 1993ம் ஆண்டில் செக்கோஸ்லோவாக்கியாவிலிருந்து பிரிந்து செக் குடியரசு உருவாக்கப்பட்ட நாளிலிருந்து அமெரிக்காவிற்கு எதிரான முதல் வெற்றி இதுவேயாகும்.
- அமெரிக்காவானது இதுவரை 18 பெட் கோப்பைகளை வென்றுள்ளது.
- செக் குடியரசின் லூசி சஃபரோவா மற்றும் ஹெலனா சுகோவா ஆகியோருக்கு பெட் கோப்பை அர்ப்பணிப்பு விருதுகள் வழங்கப்பட்டன.

## உலக காலுதைச் சண்டை (Kick Boxing) சாம்பியன்ஷிப்

- 2018 நவம்பர் 5 முதல் 10 ஆம் தேதி வரை அர்ஜென்டினாவில் நடைபெற்ற உலக காலுதைச் சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் 15 வயதான காஷ்மீர் மாணவரான ஆபித் ஹமீது தங்கப் பதக்கம் வென்றார்.
- ஆபித் ஹமீது 52 கிலோ பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார். இந்தப் போட்டித் தொடரில் இந்தியாவிலிருந்து தங்கம் வென்ற ஒரே வீரர் இவரேயாவார்.
- 3 காஷ்மீர் வீரர்கள் உட்பட மற்ற 8 வீரர்கள் இதில் வெள்ளிப் பதக்கம் வென்றனர்.
- மாஸ்டர் ஹாஷிம், M.S.அப்ரோவ் மற்றும் Mr.இர்ஷாத் அஹமத் கானி ஆகியோர் வெள்ளிப் பதக்கம் பெற்றவர்களில் அடங்குவர்.

## உலக மேசைப் பந்தாட்ட சாம்பியன்ஷிப்

- மியான்மரின் யாங்கோனில் நடைபெற்ற மேசைப் பந்தாட்டத்தின் IBSF சாம்பியன்ஷிப்பில் 150-UP என்ற பிரிவில் இந்திய வீரரான பங்கஜ் அத்வானி வெற்றி பெற்றார்.
- இது 150-UP என்ற பிரிவில் இவரின் மூன்றாவது நேர் IBSF (International Billiards and Snooker Federation) மேசைப் பந்தாட்ட வெற்றியாகும்.
- இவர் இறுதிப் போட்டியில் மியான்மரின் நோய் த்வே ஓவைத் தோற்கடித்து உலக மேசைப் பந்தாட்டத்தின் (150-Up) 2018 ஆம் ஆண்டிற்கான சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றார்.
- இந்த வெற்றியின் மூலமாக இவர் தனது உலக அளவிலான பட்டங்களை 20 ஆக உயர்த்தியுள்ளார்.
- இவர் இதற்கு முன்னதாக 2016 ஆம் ஆண்டில் பெங்களூருவில் நடைபெற்ற போட்டியிலும், 2017 ஆம் ஆண்டில் கத்தாரின் தோகாவில் நடைபெற்ற போட்டியிலும் 150-Up என்ற பிரிவில் இரண்டு பட்டங்களையும் வென்றுள்ளார்.

## உலக மாணவர்களுக்கான சதுரங்க சாம்பியன்ஷிப்

- ஸ்பெயினில் நடைபெற்ற உலக மாணவர்களுக்கான சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டியில் 12 வயதிற்கு உட்பட்டோருக்கான ஓபன் பிரிவில் டி குகேஷ்ஷும் பெண்கள் பிரிவில் பி சவிதா ஸ்ரீயும் தங்கப் பதக்கம் வென்றுள்ளனர். இவர்கள் இருவரும் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் ஆவர்.



- ஏற்கெனவே சவிதா ஸ்ரீ பேங்க்காக்கில் நடைபெற்ற ஆசிய இளையோர் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளி மற்றும் தங்கப் பதக்கம் ஆகியவற்றை வென்றுள்ளார்.
- குகேஷ்ஷிற்கு இது முதலாவது உலகப் பட்டமாகும்.

## இந்திய அதிரடி சதுரங்கப் பந்தயம்

- 5 முறை உலக சாம்பியனான விஸ்வநாதன் ஆனந்த் கொல்கத்தாவில் நடந்த டாடா ஸ்டீலின் இந்திய அதிரடி சதுரங்கப் பந்தயத்தின் முதல் பதக்கத்தை வென்று இருக்கின்றார்.
- விஸ்வநாதன் ஆனந்த் ஹிகாரு நாகமுரா என்ற அமெரிக்க ஜப்பானியரைத் தோற்கடித்தார்.

## பெங்களூரு ஓபன் ATP சேலஞ்சர்

- பெங்களூருவில் நடைபெற்ற பெங்களூரு ஓபன் ATP சேலஞ்சர் பட்டத்தை பிரஜ்னேஷ் குன்னேஸ்வரன் வென்றார்.
- இவர் சாகத் மைனேனியை வீழ்த்தியதன் மூலம் இப்பட்டத்தை வென்றுள்ளார்.

## அக்ரோபாட்டிக் ஜிம்னாஸ்டிக் உலகக் கோப்பை

- அஸ்பேரிஜானின் தலைநகரான பாகுவில் அமைந்துள்ள தேசிய ஜிம்னாஸ்டிக் அரங்கில் முதன்முறையாக இரண்டு நாள் நிகழ்வான FIG அக்ரோபாட்டிக் ஜிம்னாஸ்டிக் உலகக் கோப்பைப் போட்டி நடத்தப் பட்டது.
- ஆண்கள் மற்றும் பெண்கள் குழுவிற்கானப் போட்டிகளில் இந்தியா இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.
- பிரின்ஸ் அரிஸ், சித்தேஷ் போஸ்லே, ருஷிகேஷ் மோர் மற்றும் ரெஜிலேஷ் சூரிபாபு

ஆகியோர் 20.560 புள்ளிகள் பெற்று வெண்கலப் பதக்கம் வென்றனர்.

- ❖ இந்தியாவின் பெண்கள் மூவர் குழுவான ஆயுஷி கோதேஷ்வர், ப்ராச்சி பார்கி மற்றும் மிருண்மயி வால்டே ஆகியோர் 18.200 புள்ளிகள் பெற்று வெண்கலப் பதக்கம் வென்றனர்.

## தைபை OEC ஓபன் டென்னிஸ்

- ❖ தைபை ஓபனில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா மற்றும் கர்மான் கவுர் தண்டி ஆகியோர் இருவரும் முதன்முறையாக ஒன்றாக இணைந்து விளையாடி இரட்டையர் பட்டத்தை வென்றனர்.
- ❖ இறுதி ஆட்டத்தில் இவர்கள் இருவரும் ரஷ்ய ஜோடியான ஓல்கா டோரோஷினா மற்றும் நடெலா டசாலாமிட்ஸ் ஆகியோரை வீழ்த்தினர்.
- ❖ பெண்கள் டென்னிஸ் அமைப்பின் (WTA - Women's Tennis Association) போட்டி மற்றும் கிராண்ட் ஸ்லாம் போட்டி ஆகிய நிலைகளில் சானியா மிர்சா பட்டம் வென்றதற்குப் பின்பு இந்த வெற்றியானது இந்தியர்கள் முதலாவது WTA பட்டத்தை வென்றதைக் குறிக்கிறது.

### *தைபை ஓபன்*

- ❖ தைபை ஓபன் என்பது மகளிர் டென்னிஸ் விளையாட்டு வீரர்களுக்காக உள்ளரங்க தரைவிரிப்பு மைதானங்களில் விளையாடும் போட்டியாகும்.
- ❖ இது தற்பொழுது WTA 125K போட்டியாக வகைப் படுத்தப்பட்டுள்ளது.
- ❖ இது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தில் தைவானின் தைபை நகரத்தில் நடத்தப் படுகின்றது.

## ஹாங்காங் ஓபன் 2018

- ❖ 2018 ஆம் ஆண்டின் யோனெக்ஸ் - சன்ரைஸ் ஹாங்காங் ஓபன் போட்டியானது ஹாங்காங்கின் கோவ்லோன் நகரத்தில் ஹாங்காங் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.




- ❖ தென் கொரியாவைச் சேர்ந்த சன் வன் ஹோ ஜப்பானைச் சேர்ந்த ஹெண்டா நிஹிமோட்டோவை வீழ்த்தி ஆண்களுக்கான ஒற்றையர் பட்டத்தை வென்றார்.

- ஜப்பானைச் சேர்ந்த நோசோமி ஒகுஹாரா தாய்லாந்தைச் சேர்ந்த ரட்சனோக் இண்டானோன்னை வீழ்த்தி பெண்களுக்கான ஒற்றையர் பட்டத்தை வென்றார்.

## உலக இளையோர் பாட்மிண்டன் சாம்பியன்ஷிப்

- கனடாவின் மார்க்ஹாமில் நடைபெற்ற 2018 ஆம் ஆண்டிற்கான லீ நிங் பிடபிள்யூஎப் (BWF) உலக இளையோர் பாட்மின்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் முன்னிலை இளையோர் பாட்மிண்டன் வீரரான லக்ஷயா சென் (17) வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.
- ஒற்றையருக்கான அரை இறுதிப் போட்டியில் இவர் தாய்லாந்தைச் சேர்ந்த உலக முதல்தர வீரரான குன்லவுட் விட்டிட்சார்னிடம் தோல்வியடைந்தார்.
- புகழ்பெற்ற இந்த போட்டியில் சென்னின் முதலாவது பதக்கம் இதுவாகும். இதற்குமுன் இவர் இப்போட்டியில் மூன்று முறை பங்கு பெற்றுள்ளார்.




- பிடபிள்யூஎப் உலக இளையோர் சாம்பியன்ஷிப் போட்டியில் சிறுவர்களுக்கான ஒற்றையர் பிரிவில் ஒட்டுமொத்தமாக இந்தியாவின் 5-வது வெண்கலப் பதக்கம் இதுவாகும். இந்த ஆண்டு சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா ஒரேயொரு வெண்கலப் பதக்கத்தை மட்டும் வென்றுள்ளது.

## UIM FIH20 - இந்திய கிராண்ட் பிரிக்ஸ்

- ஆந்திரப் பிரதேசத்தின் அமராவதியில் நடைபெற்ற UIM (Union Internationale Motonautique) FIH2O கிராண்ட் பிரிக்ஸில் அபுதாபியின் அணியின் ஷான் டோரண்டி அணி வெற்றி பெற்றுள்ளார்.
- இது மோட்டார் படகுப் போட்டியில் 5-வது சுற்றாகும் (Power boat).

- இவ்வெற்றியானது ஷான் டோரண்டியின் 7-வது வாழ்நாள் வெற்றியாகும். அவர் சாம்பியன்ஷிப் போட்டிகளின் தரநிலைகளில் முன்னிலை இடத்தை நோக்கி முன்னேறி இருக்கின்றார்.
- இந்த பந்தயத்தில் பங்கு பெற்ற ஒரேயொரு பெண் பந்தயக் குழுவான அமீரகத்தைச் சேர்ந்த மரீட் ஸ்ட்ரோமோ என்ற அணியால் இரண்டாவது இடம் அடையப் பட்டுள்ளது.
- இப்போட்டியில் அபுதாபியைச் சேர்ந்த எரிக் ஸ்டார்க் அணியால் மூன்றாவது இடம் பிடிக்கப் பட்டுள்ளது.
- இந்தியாவால் நடத்தப்பட்ட முதலாவது FIH2O கிராண்ட் பிரிக்ஸ் இதுவாகும்.

## ATP இறுதிப் போட்டி

- இலண்டனில் நடைபெற்ற ATP (Association of Tennis Professionals) டென்னிஸ் உலக இறுதிப் போட்டியில் ஜெர்மனியைச் சேர்ந்த டென்னிஸ் வீரரான அலெக்ஸாண்டர் ஜேவ்ரேவ் செரிபியாவைச் சேர்ந்த நோவோக் ஜோகோவிக்கை வீழ்த்தினார்.
- 1995 ஆம் ஆண்டு போரிஸ் பெக்கர் ATP ஒற்றையர் பட்டத்தை வென்றதற்குப் பிறகு தற்பொழுது இப்பட்டத்தை வென்ற முதலாவது ஜெர்மன் வீரராக அலெக்ஸாண்டர் ஜேவ்ரேவ் உருவெடுத்துள்ளார்.



- அரையிறுதிப் போட்டியில் அலெக்ஸாண்டர் ஜேவ்ரேவ் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ரோஜர் பெடரரை வீழ்த்தினார்.
- ஆண்களுக்கான இரட்டையர் பிரிவில் அமெரிக்காவைச் சேர்ந்த ஜேக் சோக் மற்றும் மைக் பிரயன் ஆகியோர் பிரான்ஸைச் சேர்ந்த பியரி-ஹுகஸ் ஹெர்பெர்ட் மற்றும் நிக்கோலஸ் மகூத் ஆகியோரை வீழ்த்திப் பட்டம் வென்றுள்ளனர்.
- இப்போட்டியானது 4 கிராண்ட் ஸ்லாம் போட்டிகளுக்கு அடுத்து வருடாந்திர ஆண்கள் டென்னிஸ் போட்டியில் இரண்டாவது உயர்தரப் போட்டியாகும்.

## ஐரோப்பாவைச் சேர்ந்த மிக வயதான சர்வதேச கோல் கீப்பர் - கால்பந்து

- பல்கேரியா மற்றும் சைப்ரஸ் ஆகிய நாடுகளுக்கு இடையே நடைபெற்ற தேசிய லீக் போட்டியில் பல்கேரிய வீரரான ஜார்ஜி பெட்கோவ் பங்கேற்று ஐரோப்பாவைச் சேர்ந்த மூத்த சர்வதேச கோல்கீப்பராக உருவெடுத்துள்ளார்.
- ஜார்ஜ் பெட்கோவின் வயது 42 ஆண்டுகள் 8 மாதங்கள் ஆகும்.
- இவர் முன்னாள் லிவர்பூல் அணியின் கோல்கீப்பரான எலிஷா ஸ்காட்டின் சாதனையை முறியடித்துள்ளார். 1936 ஆம் ஆண்டில் அயர்லாந்து நாட்டுக்காக கடைசியாக விளையாடிய போது எலிஷா ஸ்காட்டின் வயது 42 ஆண்டுகள் மற்றும் 6 மாதங்கள் ஆகும்.
- 1995 ஆம் ஆண்டில் கிரீஸ் நாட்டுக்காக ஐரோப்பிய நாடுகளின் சார்பாக விளையாடிய மிக மூத்த வீரர் கியோர்கோஸ் குடோஸ் ஆவார். அப்போது அவருடைய வயது 48 ஆகும்.

## 2018 ஆம் ஆண்டின் சர் ஹென்றி காட்டன் ரூக்கியை (புதியவர்) வென்ற முதலாவது இந்தியர்

- துபாயில் நடைபெற்ற இந்த ஆண்டிற்கான டிபி உலக சாம்பியன்ஷிப் போட்டியில் சர் ஹென்றி காட்டன் ரூக்கியை வென்ற முதலாவது இந்தியராக சண்டிகரைச் சேர்ந்த இளம் இந்திய குழிப் பந்தாட்டக்காரரான சுபன்கர் சர்மா உருவெடுத்துள்ளார்.



- ஐரோப்பாவில் நடைபெற்ற போட்டியில் இந்த விருதை வென்ற முதலாவது இந்தியர் இவராவார்.
- ஆசியாவில் நடைபெற்ற போட்டிகளில் ஆண்டின் ரூக்கி விருதை அர்ஜுன் அட்வால் (1995), சிவ் கபூர் (2005) மற்றும் சி. முனியப்பன் (2009) ஆகியோர் வென்று உள்ளனர்.

## லாரஸ் உலக விளையாட்டு விருதுகள்

- வரும் 2019 பிப்ரவரி 18 அன்று மொனாக்கோவில் சிறப்புமிக்க லாரஸ் விளையாட்டு விருதுகளின் 19-வது பதிப்பு நடைபெறவுள்ளது.
- விளையாட்டிற்கான ஆஸ்கர் என கருதப்படும் இவ்விருதானது அந்தந்த நாள்காட்டி

வருடத்தில் உலகளாவிய விளையாட்டுகளில் நடைபெற்ற சாதனைகளைக் கொண்டாடுகின்றது.

- கடந்த முறை (2018), ஆண்களுக்கானப் பிரிவில் டென்னிஸ் வீரரான ரோஜர் பெடரர் சாதனை அளவில் 5-வது முறையாக ஆண்டிற்கான லாரஸ் விளையாட்டு வீரர் விருதினை வென்றார்.
- அதே சமயம் பெண்களுக்கானப் பிரிவில் டென்னிஸ் வீரரான செரீனா வில்லியம்ஸ் நான்காவது முறையாக ஆண்டிற்கான லாரஸ் விளையாட்டு வீரர் விருதினைப் பெற்றார்.
- முன்னாள் இந்திய கிரிக்கெட் அணித் தலைவர்களான கபில்தேவ், ராகுல் டிராவிட் மற்றும் சச்சின் டெண்டுல்கர் ஆகியோர் லாரஸ் அகாடமியின் புகழ்மிக்க உறுப்பினர்கள் ஆவர்.

## காமன்வெல்த் வாள்சண்டை சாம்பியன்ஷிப்

- ஆஸ்திரேலியாவின் கான்பெராவில் நடைபெற்று வரும் மூத்தோருக்கான காமன்வெல்த் வாள்சண்டை சாம்பியன்ஷிப்பில் தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்திய வீரர் என்ற முறையில் C.A. பவானி தேவி வரலாறு படைத்தார்.



- 25 வயதான சென்னையைச் சேர்ந்த பெண்ணான இவர் இங்கிலாந்தின் எமிலி ரூவாக்ஸ் என்பவரை இறுதிப் போட்டியில் தோற்கடித்தார்.
- இவர் முன்னதாக இவ்வருடம் ஐஸ்லாந்தில் நடைபெற்ற டூர்னாய் சேட்டிலைட் வாள்சண்டை சாம்பியன்ஷிப்பில் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

## ஆர்டிஸ்டிக் ஜிம்னாஸ்டிக் உலகக் கோப்பை

- ஜெர்மனியின் காட்பஸ் நகரில் நடைபெற்ற ஆர்ட்ஸ்டிக் ஜிம்னாஸ்டிக் உலக கோப்பைப் போட்டியில் வால்ட் பிரிவில் தீபர் கர்மாகர் வெண்கலப் பதக்கம் வென்றார்.

- துபாயில் உள்ள மெர்சினில் நடைபெற்ற FIG ஆர்டிஸ்டிக் உலக சேலஞ்ச் கோப்பைப் போட்டியில் இந்த ஆண்டின் துவக்கத்தில் தீபா தங்கப்பதக்கம் வென்றார்.
- உலக அளவிலான சேலஞ்ச் கோப்பைப் போட்டியில் தங்கம் வென்ற முதல் இந்திய ஜிம்னாஸ்டிக் வீரராக இவர் உருவெடுத்துள்ளார்.

## AIBA மகளிர் உலகக்குத்துச்சண்டை சாம்பின்ஷிப்

- AIBA (International Boxing Association) மகளிர் உலக சாம்பியன்ஷிப்பின் 10-வது பதிப்பு புது டெல்லியில் நடைபெற்றது.
- இந்த உலக சாம்பியன்ஷிப் போட்டியின் 48 கிலோப் பிரிவில் உக்ரைனின் ஹன்னா ஒகோடாவை வீழ்த்தி 6-வது முறையாக தங்கப் பதக்கம் வென்று M.C. மேரி கோம் புதிய சாதனையைப் படைத்துள்ளார்.



- இவருக்கு முன்னர் 5 முறை பட்டம் வென்றிருந்த அயர்லாந்து குத்துச் சண்டை வீரரான காட்டி டெய்லரின் சாதனையை மேரி முறியடித்துள்ளார்.
- மேரி கோம் இதற்கு முன்னதாக 2002, 2005, 2006, 2008 மற்றும் 2010 ஆகிய வருடப் போட்டிகளில் பட்டம் வென்றார்.
- 57 கிலோ பிரிவின் இறுதிப் போட்டியில் சோனியா சாஹல் ஜெர்மனியின் வாஹ்னர் ஓர்னெல்லா கேபிரில்லாவிடம் தோற்று வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- இந்த உலக சாம்பியன்ஷிப் போட்டியில் 21 வயதான ஹரியானாவைச் சேர்ந்த குத்துச் சண்டை வீரர் தனது முதல் வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.
- இந்தியா இந்தப் போட்டித் தொடரை 2006 ஆம் ஆண்டிற்குப் பிறகு இரண்டாவது முறையாக நடத்துகிறது. அப்போது 4 தங்கம், 1 வெள்ளி, 3 வெண்கலம் என மொத்தம் 8 பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் இருந்தது.

## சையது மோடி சர்வதேசப் போட்டி 2018

- உலக பூப்பந்தாட்டக் கூட்டமைப்பானது (Badminton World Federation-BWF) சையது மோடி சர்வதேச பூப்பந்தாட்ட சாம்பியன்ஷிப்பை சமீபத்தில் இந்தியாவின் லக்னோவில் நடத்தியது.

- சையது மோடி சர்வதேசப் போட்டி என்பது 1982 காமன்வெல்த் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு சாம்பியனான சையத் மோடியின் நினைவாக பெயரிடப்பட்ட HSBC BWF உலக சுற்றுப்பயண சூப்பர் 300 என்ற ஒரு போட்டித் தொடர் ஆகும்.
- சாம்பியன் பட்டத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கான முனைப்பில், இந்தியாவின் 24 வயதான சமீர் வர்மா சீனாவின் லூ குவான்ங்சூவை இறுதிப் போட்டியில் தோற்கடித்து ஆடவர் ஒற்றையர் பிரிவுப் போட்டியில் வென்றார்.
- சாய்னா நெஹ்வால் மகளிர் ஒற்றையர் பிரிவில் சீனாவின் ஹான் யூயிடம் தோல்வியடைந்து வெள்ளிப் பதக்கம் வென்றார்.

*இந்தியாவின் பிற வெற்றியாளர்கள்*

- சாத்விக்சாய்ராஜ் ரங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி - ஆடவர் இரட்டையர் பிரிவில் வெள்ளிப் பதக்கம்.
- அஸ்வினி பொன்னப்பா மற்றும் ரெட்டி N. சிக்கி - மகளிர் இரட்டையர் பிரிவில் வெள்ளிப் பதக்கம்.
- சாத்விக்சாய்ராஜ் ரங்கிரெட்டி மற்றும் அஸ்வினி பொன்னப்பா - இரட்டையர் பிரிவில் வெண்கலப் பதக்கம்.

## ICC மகளிர் டி20 உலக கோப்பை

- மேற்கிந்திய தீவுகளின் ஆன்டிகுவாவில் நடந்த இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்தைத் தோற்கடித்து ஆஸ்திரேலியாவானது ICC மகளிர் டி20 உலக கோப்பையின் 6-வது பதிப்பை வென்றது.



- இது ஆஸ்திரேலியாவின் 2010, 2012, 2014 ஆகிய வெற்றிகளைத் தொடந்த 4-வது உலகக் கோப்பை வெற்றியாகும்.
- இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலிய விக்கெட் காப்பாளர் அலிஸா ஹேலி சிறந்த ஆட்டக்காரராக தேர்வு செய்யப்பட்டார்.
- 2016ல் நடைபெற்ற கடந்த உலகக் கோப்பை போட்டியில் ஆஸ்திரேலியா மேற்கிந்திய

அணிகளால் தோற்கடிக்கப்பட்டது.

- இந்த உலகக் கோப்பையில் இந்தியா இங்கிலாந்து அணியிடம் அரையிறுதியில் தோல்வியுற்றது.
- இந்திய அணித் தலைவர் ஹர்மன் ப்ரீத் கௌர், நியூசிலாந்திற்கு எதிரான போட்டியில் சதம் அடித்து சர்வதேச T20 போட்டிகளில் இந்தியாவிற்காக சதம் அடித்த முதல் இந்தியப் பெண் வீரராகவும் ஐசிசி மகளிர் T20 உலக கோப்பைப் போட்டிகளில் எந்த ஒரு நாட்டைச் சேர்ந்தவராகவும் உள்ள வகையில் சதம் அடித்த மூன்றாவது நபராகவும் உருவெடுத்துள்ளார்.
- இந்த சுற்றுப் பயணத்தில் 5 ஆட்டங்களில் 183 ரன்களுடன் இந்திய அணிக்காக அதிகம் ரன் அடித்தவர் இவராவார்.

## அபுதாபி கிரான்ட் பிரிக்ஸ்

- ஐந்து முறை உலகம் சாம்பியன் பட்டம் வென்ற லெவிஸ் ஹாமில்டன் சாதனை அளவாக 4-வது முறையாக எதிஹாட் ஏர்வேஸ் அபுதாபி கிராண்ட் பிரிக்ஸ் பட்டத்தை வென்றார்.
- இவர் அபுதாபியின் யாஸ் மரினா சுற்றுப் பாதையில், 2018 FI நாள்காட்டியின் 21-வது மற்றும் கடைசிப் போட்டியில் வெற்றி பெற்று இந்த அபுதாபி கிராண்ட் பிரிக்ஸை வென்றார்.
- இந்த வெற்றியானது இவ்வருடத்தில் அவரது 11-வது வெற்றியாகும். மேலும் ஒட்டுமொத்தமான அளவில் இது அவரது பந்தய வாழ்க்கையின் 73-வது வெற்றியாகும். இவர் தற்போது மைக்கேல் ஷீமேக்கரின் மொத்த வெற்றியை விட 18 வெற்றிகள் மட்டுமே குறைவாக பெற்று உள்ளார்.
- பெராரியின் செபாஸ்டின் வெட்டேல் மற்றும் ரெட் புல்லின் மேக்ஸ் வெர்ஸ்டப்பன் ஆகியோர் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப் பிடித்தனர்.
- இறுதிச் சுற்றில் 408 புள்ளிகளுடன் சமன் செய்த பிரிட்டன் வீரரான இவர் ஒரு பருவத்தில் 400 புள்ளிகளுக்கும் மேலாக பெற்ற முதல் ஓட்டுநராக உருவெடுத்துள்ளார்.


# முக்கிய தினங்கள்

## ராஷ்ட்ரிய ஏக்தா திவாஸ் - அக்டோபர் 31

- சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்த நாளான அக்டோபர் 31 ஆனது ஆண்டுதோறும் ராஷ்ட்ரிய ஏக்தா திவாஸ் (தேசிய ஒற்றுமை தினம்) என்று கொண்டாடப்படுகிறது.
- இந்த நாளானது நமது நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்பிற்கு எதிரான உண்மையான மற்றும் மறைந்திருக்கும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கு நமது நாட்டின் உள்ளார்ந்த வலிமை மற்றும் நிலைத் தன்மையை மீண்டும் உறுதிப்படுத்த ஒரு வாய்ப்பை வழங்குகிறது.
- இவர் நாட்டில் இருந்த 565 சுதேச அரசுகளை சுதந்திர இந்தியாவுடன் இணைப்பதற்கான

முக்கிய காரணமாக இருந்தார்.

- இவரின் மறைவிற்குப் பிறகு 'பாரத ரத்னா' விருது 1991-ல் இவருக்கு வழங்கப்பட்டது.




## உலக சைவ உணவுப்பழக்க தினம் - நவம்பர் 1

- ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 1 அன்று சைவ உணவிற்கு மாறுவதன் மூலம் அடையும் பயன்களை நினைவு கூறும் விதமாக உலக சைவ உணவுப் பழக்க தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினம் 1994 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. உலக சைவ உணவுப் பழக்க தினமானது கண்காட்சிகள், கருத்தரங்கங்கள், பொது விவாதங்கள், செயல் விளக்கங்கள் ஆகியவற்றின் மூலம் அனுசரிக்கப்படுகிறது.




- இத்தினமானது தனி நபர்களுக்கு சைவ உணவுப் பழக்க வாழ்க்கைமுறை பற்றியும், சைவ உணவுப் பழக்கத்தின் மதிப்பு மற்றும் அதன் பயன்கள் குறித்து நண்பர்களிடம்

விவாதித்து, எடுத்துரைத்து கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளவும் ஒரு வாய்ப்பாக அமைகிறது.

## பத்திரிக்கையாளர்களுக்கு எதிரான குற்றங்களில் வழங்கப்படும் தண்டனைகளில் இருந்து பெறப்படும் விலக்குகளைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் - நவம்பர் - 2

- பத்திரிக்கையாளர்களுக்கு எதிரான குற்றங்களில் வழங்கப்படும் தண்டனைகளில் இருந்து பெறப்படும் விலக்குகளைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் ஆண்டுதோறும் நவம்பர் 2ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்டு அனுசரிக்கப்படும் ஒரு தினமாகும்.
- முக்கிய சமூக விவகாரங்கள் பற்றி பொதுமக்களுக்கு தகவல் தெரிவித்து அவர்களை முடிவெடுக்கச் செய்வதில் முக்கியப் பங்கு வகிக்கும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான கடுமையான குற்றங்களில் அளிக்கப்படும் உலகளாவிய குறைவான தண்டனைகள் பற்றிய கவனத்தை இத்தினம் ஈர்க்கின்றது.
- இவ்வருட சர்வதேச தினத்தையொட்டி ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பானது, பணியில் கொல்லப்படும் பத்திரிக்கையாளர்கள் விவகாரத்தின் மீதான விழிப்புணர்வைப் பெரிதாக்க “உண்மை எப்பொழுதும் சாகாது” என்ற பரப்புரையைத் துவக்கியுள்ளது.

## உலக சுனாமி விழிப்புணர்வு தினம் - நவம்பர் 05

- 2015 ஆம் ஆண்டு டிசம்பரில் ஐ.நா. பொதுச் சபையானது நவம்பர் 5 ஆம் தேதியை உலக சுனாமி விழிப்புணர்வு தினமாக அறிவித்தது.
- “அரிசி ஏடுகள் பற்றி எரிதல்” என்ற பொருள் கொண்ட ஜப்பானிய கதையான “இனமுரா-நோ-ஹி”யை கௌரவிப்பதற்கான வருடாந்திர அனுசரிப்பிற்காக இத்தினம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.




- 2018 ஆம் ஆண்டில் உலக சுனாமி விழிப்புணர்வு தினமானது சர்வதேச பேரிடர் குறைப்பு தினம் மற்றும் ‘சென்டாய் ஏழு பிரச்சாரம்’ ஆகியவற்றுடன் ஒன்றிப் பொருந்துகிறது.
- மேலும் பேரிடர் அபாய குறைப்பிற்கான சென்டாய் செயல்திட்டத்தின் இலக்கு ’C’யின் மீதும் இத்தினம் கவனத்தை செலுத்துகிறது.
- பேரிடர் அபாய குறைப்பிற்கான செயல்திட்டத்தின் நோக்கம் மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான நேரடி பேரிடர் பொருளாதார இழப்பைக் குறைப்பதாகும்.

## தேசிய ஆயுர்வேத தினம் - நவம்பர் 05


- ❖ தேசிய ஆயுர்வேத தினமானது நாடு முழுவதும் தன்வந்திரி ஜெயந்தியான நவம்பர் 05 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- ❖ ஆயுர்வேதத்தின் தெய்வீக பரப்புநராக தன்வந்திரி கருதப்படுகிறார்.
- ❖ ஆயுஷ் அமைச்சகத்தால் ஒவ்வொரு வருடமும் தேசிய ஆயுர்வேத தினத்தன்று தேசிய தன்வந்திரி ஆயுர்வேதா விருது வழங்கப்படுகிறது.
- ❖ மேலும் ஆயுஷ் அமைச்சகமானது 2018 நவம்பர் 4 அன்று ஆயுஷில் முதலீடு சம்பந்தமான தேசிய அளவிலான முதல் உச்சிமாநாட்டை புது டெல்லியில் நடத்தியது.
- ❖ நிதி ஆயோக் மற்றும் தொழில் கொள்கை மற்றும் ஊக்குவிப்புத் துறை ஆகியோர் இந்த முதல் உச்சி மாநாட்டின் பங்குதாரர்கள் ஆவர்.

## தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம் - நவம்பர் 7

- ❖ புற்று நோயை முன்பாகவே கண்டறிந்து குணப்படுத்துவதை வலியுறுத்தும் நோக்கில் ஒவ்வொரு வருடமும் நவம்பர் 7ம் தேதி நாடு முழுவதும் தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- ❖ இது முன்னாள் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் ஹம்சவர்தனால் முதலில் அறிவிக்கப்பட்டு 2014ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
- ❖ உலக அளவில் ஒவ்வொரு ஆண்டும் உலக புற்றுநோய் தினம் பிப்ரவரி 4ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகின்றது.

## உலக தரத்திற்கான தினம் - நவம்பர் 08

- ❖ உலக தரத்திற்கான தினம் என்பது நவம்பர் மாதத்தின் இரண்டாவது வியாழன் அன்று அனுசரிக்கப்படும் வருடாந்திர நிகழ்வு ஆகும். இந்த வருடம் நவம்பர் 8-ம் தேதியன்று இத்தினம் அனுசரிக்கப்பட்டது.
- ❖ தரம் என்பது ஒரு அமைப்பிற்கும் தேசத்திற்கும் முன்னேற்றத்தையும் வளத்தையும் அளிக்கின்றது என்பதனைப் பற்றிய முக்கிய பங்களிப்பின் மீதான உலகளாவிய விழிப்புணர்வை அதிகப்படுத்த இத்தினம் வடிவமைக்கப்பட்டது.




- 2018 ஆம் ஆண்டின் தரத்திற்கான தினத்தின் கருத்துரு "தரம்: நம்பிக்கைக்கான ஒரு கேள்வி" என்பதாகும்.

## உலக கதிர் வரைபட தினம் - நவம்பர் 08

- நவம்பர் 8-ம் தேதியன்று, மனித உடற்கூறியலை படமாக்குவதில் தனித்துறை வல்லுநர்களாக உள்ள மருத்துவ தொழில்நுட்பவியலாளர்களை ஊக்குவிப்பதற்காக உலகம் சர்வதேச கதிர்வரைபட தினத்தை அனுசரிக்கின்றது.
- இந்த வருடாந்திர நிகழ்வு மருத்துவ வரைபடத் துறையில் உள்ள சாதனைகளை அங்கீகரிக்கின்றது.
- இந்த வருடம் வில்ஹெல்ம் கான்ராட் ரோன்ட்ஜென் என்பவர் எக்ஸ்ரே கதிர்களை கண்டுபிடித்ததன் 123வது ஆண்டு தினமாகும். இக்கண்டுபிடிப்பு முதல் கதிர்வரைபடங்களை உருவாக்கிட உதவியது.

## உத்தரகாண்டின் 19வது மாநில தினம் - நவம்பர் 09

- 2018 நவம்பர் 9ஆம் நாள் உத்தரகாண்ட் மாநிலமானது தனது 19வது மாநில தினத்தினை கொண்டாடியது.
- நவம்பர் 9, 2000 அன்று உத்தரகாண்ட் மாநிலமானது உத்திரப் பிரதேசத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு இந்தியாவின் 27வது தனி மாநிலமாக உருவாக்கப்பட்டது.

## தேசிய சட்ட சேவைகள் தினம் - நவம்பர் 09


- அனைத்து குடிமக்களுக்கும் நியாயமான நீதி நடைமுறைகளை உறுதி செய்வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 09 அன்று தேசிய சட்ட சேவைகள் தினம் (NLSD - National Legal Services Day) அனுசரிக்கப்படுகிறது.
- சமூகத்தில் பின்தங்கிய பிரிவுகளைச் சார்ந்த மக்களுக்கு திறமையான சட்ட வல்லுநர்கள்

மூலம் இலவச சட்ட உதவிகள் அளிப்பதை நோக்கமாகக் கொண்டு இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.

- இந்த நாளில் நாடு முழுவதும் லோக் அதாலத்துகள் நடத்தப்படுகின்றன.
- இந்த தினம் 1995 ஆம் ஆண்டில் இந்திய உச்ச நீதிமன்றத்தால் தொடங்கப்பட்டது.

## அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் தினம் - நவம்பர் 10


- உலகம் முழுவதும் அறிவியலின் பயன்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 10 அன்று அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் தினம் (The World Science Day for Peace and Development - WSDPD) அனுசரிக்கப்படுகிறது.
- நமது சமூகத்தில் அறிவியலின் முக்கியப் பங்கை இத்தினம் சுட்டிக் காட்டுகிறது.
- 2018 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு: "அறிவியல் ஒரு மனித உரிமை" என்பதாகும்.




- 2001 ஆம் ஆண்டில் ஐ.நா.வின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பினால் (United Nations Educational, Scientific and Cultural Organization - UNESCO) இத்தினம் ஏற்படுத்தப்பட்டது. இத்தினம் முதன்முறையாக 2002 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.

## தேசிய கல்வி தினம் - நவம்பர் 11

- 2018 ஆம் ஆண்டு நவம்பர் 11 அன்று நாடு முழுவதும் தேசிய கல்வி தினம் அனுசரிக்கப்பட்டது.




- விடுதலைப் போராட்ட வீரர், கல்வியாளர் மற்றும் சுதந்திர இந்தியாவின் முதலாவது கல்வி அமைச்சரான (1947-1958) மௌலானா அபுல் கலாம் ஆசாத்தின் நினைவாக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்தியாவில் கல்விக்கு மௌலானா அபுல் கலாம் ஆசாத் ஆற்றிய பங்களிப்பை இத்தினம் நினைவு கொள்கிறது.
- 2008 ஆம் ஆண்டில் மத்திய அரசாங்கமானது நவம்பர் 11 ஆம் தேதியை தேசிய கல்வி தினமாக அறிவித்துள்ளது.

## பொதுச்சேவை ஒளிபரப்பு நாள் நவம்பர் - 12

- நவம்பர் 12 அன்று இந்தியா முழுவதும் பொதுச்சேவை ஒளிபரப்பு நாள் அனுசரிக்கப்பட்டது.
- 1947ல் டெல்லி அகில இந்திய வானாலி நிலையத்திற்கு மகாத்மா காந்தி மேற்கொண்ட ஒரே பயணத்தை நினைவு கூறும் வகையில் பொதுச்சேவை ஒளிபரப்பு தினம் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.

- தேசப்பிரிவினையின் போது ஹரியானாவிலுள்ள குருஷேத்ராவில் தற்காலிகமாக குடியேறிய புலம்பெயர் மக்களிடையே காந்தியடிகள் வானொலியில் உரையாற்றினார்.

## உலக நிமோனியா தினம் - நவம்பர் 12

- உலகமெங்கிலும் நவம்பர் 12 அன்று உலக நிமோனியா தினம் வருடந்தோறும் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த தினமானது நிமோனியாவைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கவும், நிமோனியாவைத் தடுக்கவும் அவற்றிலிருந்து பாதுகாக்கவும் சிகிச்சையளிக்கவும் தேவையான முயற்சிகளில் கவனம் செலுத்துகிறது.




- 2009 ஆம் ஆண்டில் முதல் உலக நிமோனியா தினம் பல்வேறு அமைப்புகளின் முயற்சிகளினால் அனுசரிக்கப்பட்டது.
- நிமோனியாவானது 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் ஏற்படும் மரணங்களுக்கு மிக முக்கிய காரணமாகும். இது பாக்டீரியா, வைரஸ், பூஞ்சை அல்லது ஒட்டுண்ணிகளால் நுரையீரலில் ஏற்படும் தொற்று ஆகும்.

## உலக கருணை நாள் - நவம்பர் 13

- உலக கருணை நாளானது உலகம் முழுவதும் நவம்பர் 13 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினமானது சமுதாயத்தில் நல்ல செயல்களை சிறப்பித்துக் காட்டுகிறது. மேலும் சமூகத்தின் உறுப்பினர்களிடையே கருணையே ஒரு பிணைப்புக் காரணி என கருணையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.
- 1998 ஆம் ஆண்டில் பல்வேறு வகையான NGO-க்களின் கூட்டான உலக கருணை இயக்கத்தால் இத்தினம் உருவாக்கப்பட்டது.
- உலக கருணை இயக்கமானது ஜப்பானின் டோக்கியோவில் 1997ல் நடைபெற்ற மாநாட்டில் உருவாக்கப்பட்டது. 28க்கும் மேற்பட்ட நாடுகள் இதில் உறுப்பினராக உள்ளன.

## உலக நீரிழிவு தினம் 2018 - நவம்பர் 14

❖ உலக நீரிழிவு தினம் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.

❖ 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான கருத்துரு - “குடும்பம் மற்றும் நீரிழிவு” என்பதாகும்.

❖ இது முதன் முதலில் 1991 ஆம் ஆண்டு சர்வதேச நீரிழிவு கூட்டமைப்பு (IDF - International Diabetes Federation) மற்றும் உலக சுகாதார நிறுவனம் ஆகியவற்றால் கடைபிடிக்கப்பட்டது.




❖ உலக நீரிழிவு தினமானது 2006ல் ஐக்கிய நாடுகளின் அதிகாரப்பூர்வ நாளாக மாற்றப்பட்டது.

❖ இது 1922 ஆண்டில் சார்லஸ் பெஸ்ட் உடன் இணைந்து இன்சுலினைக் கண்டறிந்த ஃப்ரெடெரிக் பாண்டிங்கின் பிறந்த நாளை நினைவு கூறுவதற்காக நவம்பர் 14 அன்று அனுசரிக்கப்படுகிறது.

❖ நீரிழிவு பற்றிய தீர்மானம் ஐநாவில் நிறைவேற்றப்பட்ட பிறகு இந்த நாளின் பிரச்சாரமானது ஒரு நீலநிற வட்ட இலட்சினையால் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிறது. மேலும் இது நீரிழிவு விழிப்புணர்வுக்கான உலகளாவிய சின்னமாகவும் குறிப்பிடப்படுகிறது.

## குழந்தைகள் தினம் - நவம்பர் 14

❖ சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான பண்டித ஜவஹர்லால் நேருவின் பிறந்த நாளின் நினைவாக நவம்பர் 14 அன்று இந்தியாவில் குழந்தைகள் தினம் கொண்டாடப்படுகிறது.

❖ இவ்வருடம் நேருவின் 129 வது பிறந்தநாள் ஆகும்.

❖ நேரு 1889, நவம்பர் 14ல் உத்திரப் பிரதேசத்தின் அலகாபாத்தில் பிறந்தார்.

❖ 1964-க்கு முன்பு நவம்பர் 20 அன்று ஐக்கிய நாடுகளால் பிரகடனப்படுத்தப்பட்ட உலகளாவிய குழந்தைகள் தினமானது இந்தியாவில் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்பட்டது.

❖ 1964 மே 27 அன்று நேர்ந்த நேருவின் மரணத்திற்குப் பிறகு அவரை கௌரவப்படுத்திட

அவரது பிறந்த நாளை குழந்தைகள் தினமாக (பால் திவாஸ்) கொண்டாட இந்தியா முடிவு செய்தது.

## உலக தத்துவ தினம் - நவம்பர் 15 (3வது வியாழக்கிழமை)

- உலகம் முழுவதும் தத்துவ ரீதியான பிரதிபலிப்புகளை கௌரவிக்கும் பொருட்டு வருடந்தோறும் நவம்பர் மாதத்தின் 3-வது வியாழக்கிழமை உலக தத்துவ தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டின் உலக தத்துவ தினமானது நவம்பர் 15 அன்று கடைபிடிக்கப்பட்டது.
- இந்நாளானது மனிதர்களின் கண்ணியம் மற்றும் பன்முகத் தன்மையை மதிக்கும் தத்துவார்த்தமான விவாதத்தின் மீது சர்வதேச கலாச்சாரத்தை ஊக்குவிப்பதற்காக முயல்கிறது.
- 2005 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ உலக தத்துவ நாளை நிறுவியது.

## தேசியப் பத்திரிக்கை தினம் - நவம்பர் 16

- தேசியப் பத்திரிக்கை தினமானது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 16ம் நாள் அனுசரிக்கப்படுகிறது.
- இந்தியப் பத்திரிக்கை மன்றம் (Press Council of India - PCI) செயல்படத் தொடங்கிய நாளை நினைவு கூறும் வகையில் தேசியப் பத்திரிக்கை தினம் உருவாக்கப்பட்டது.
- PCI ஆனது ஜீலை 4, 1966ல் உருவாக்கப்பட்டு 1966 நவம்பர் 16 அன்று செயல்படத் துவங்கியது.
- இந்த நாள் இந்தியாவில் சுதந்திரமான மற்றும் பொறுப்புணர்வுள்ள பத்திரிக்கைகளுக்கான அடையாளமாகும்.

## சகிப்புத் தன்மைக்கான சர்வதேச நாள் - நவம்பர் 16

- ஒவ்வொரு வருடமும் நவம்பர் 16 அன்று சகிப்புத் தன்மைக்கான சர்வதேச நாள் அனுசரிக்கப்படுகிறது.
- இந்நாளானது சகிப்புத் தன்மையின்மையின் எதிர்மறை விளைவுகளைப் பற்றி மக்களுக்கு அறிவூட்டுவதையும் சமுதாயத்தில் சகிப்புத் தன்மையின் தேவைகள் பற்றி மக்களுக்கு உணர்த்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 1995ல் யுனெஸ்கோவால் பிரகடனப்படுத்தப்பட்ட வருடாந்திர அனுசரிப்பு தினம் ஆகும்.
- முதல் உலக சகிப்புத் தன்மை மாநாடானது துபாயில் நவம்பர் 15-16 தேதிகளில் நடைபெற்றது. இது சர்வதேச சகிப்புத் தன்மை நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- இம்மாநாட்டின் கருத்துரு “பன்மைத்துவத்திலிருந்து வளமையுறுதல்: கூட்டு முயற்சி


மற்றும் புத்தாக்கம் வழியே பன்முகத் தன்மையை தழுவல்" என்பதாகும்.

## சர்வதேச மாணவர்கள் தினம் - நவம்பர் 17

- சர்வதேச மாணவர்கள் தினமானது மாணவ சமுதாயத்தின் சர்வதேச அனுசரிப்பாகும். இத்தினம் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 17 ஆம் தேதி ஏற்படுகிறது.
- செக்கோஸ்லோவேக்கியாவின் பிரேக் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நாசி (Nazi) தாக்குதலின் நினைவாக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது. நவம்பர் 17 ஆம் தேதி நடைபெற்ற அத்தாக்குதலில் 9 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கொல்லப்பட்டனர்.
- செக்கோஸ்லோவேக்கியாவின் ஆக்கிரமிப்பை எதிர்த்து மாணவர்கள் அப்போது போராடினர்.
- இத்தினம் முதன்முறையாக 1941 ஆம் ஆண்டில் இலண்டனில் சர்வதேச மாணவர்கள் மன்றத்தினால் அனுசரிக்கப்பட்டது.

## தேசிய வலிப்பு தினம் - நவம்பர் 17

- வலிப்பு நோய் (epilepsy) குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் நவம்பர் 17 ஆம் தேதி தேசிய வலிப்பு தினம் அனுசரிக்கப்படுகிறது.
- வலிப்பு என்பது அடிக்கடி ஏற்படும் வலிப்புத் தாக்கங்களின் தன்மையைக் கொண்ட மூளையின் நாள்பட்ட சீர்குலைவாகும்.




- நியூரானில் (மூளையின் செல்கள்) திடீரென்று ஏற்படும் மிகையான மின்கசிவின் விளைவாக வலிப்புகள் ஏற்படுகின்றன.
- உலகெங்கிலும் உலக வலிப்பு தினம் அல்லது ஊதா தினமானது ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 26 ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது.

## உலக நுண்ணுயிர் எதிர்பொருள் விழிப்புணர்வு வாரம் - நவம்பர் 18

- உலக நுண்ணுயிர் எதிர்பொருள் வாரமானது நவம்பர் 12ல் தொடங்கி நவம்பர் 18ல் முடிவடைகிறது.

- ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதத்தின் இந்த வாரம் நுண்ணுயிர் எதிர்பொருள்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.




- இது நுண்ணுயிர் எதிர்பொருட்களின் எதிர்ப்பு பற்றி உலகளாவிய விழிப்புணர்வை அதிகரிக்கவும் பொது மக்களிடையே சிறந்த நடைமுறைகளை ஊக்குவிக்கவும் அனுசரிக்கப்படுகிறது.
- நுண்ணுயிர் எதிர்பொருட்கள் விழிப்புணர்வு வாரத்தின் கருத்துருவானது தனிப்பட்ட முன்னுரிமைகளை பிரதிபலிக்கும் வகையில் நாடுகளுக்கு அதிக நெகிழ்வுத் தன்மையை வழங்குவதாகும்.

## இயற்கை மருத்துவ தினம் - நவம்பர் 18

- 2018 ஆம் ஆண்டு நவம்பர் 18 அன்று மத்திய ஆயுஷ் அமைச்சகமானது (ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி) முதலாவது இயற்கை மருத்துவ தினத்தை இந்தியா முழுவதும் அனுசரித்தது.




- இத்தினமானது உணவுமுறை மற்றும் வாழ்க்கை முறையை மாற்றியமைப்பதன் மூலம் நோய்களைத் தடுப்பதற்காக மருந்தில்லா மருத்துவ அமைப்பை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் உள்ள தன்னாட்சி அமைப்பான யோகா மற்றும் இயற்கை

மருத்துவ ஆராய்ச்சிக்கான மத்திய மன்றமானது நவம்பர் 14 முதல் நவம்பர் 18 வரை மருத்துவ முகாம்கள், பயிலரங்கம் மற்றும் கண்காட்சிகள் ஆகியவற்றை நடத்தியது.

- ❖ புதுதில்லியின் பாலாஜி நிரோக்தாமில் சமூக மண் குளியல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இங்கு ஒரே நேரத்தில் 700 நபர்கள் மண் குளியலை மேற்கொண்டனர்.
- ❖ இந்த நிகழ்ச்சி ஒரு உலக சாதனையாகும். தற்பொழுது இந்நிகழ்ச்சியானது ஆசிய சாதனைகள் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ❖ இயற்கை மருத்துவ சிகிச்சையின் 5 இயற்கை முறைகளில் மண் குளியலும் ஒன்றாகும்.

## குவாமி ஏக்தா வாரம் (தேசிய ஒருமைப்பாட்டு வாரம்) நவம்பர் 19 முதல் 25 வரை

- ❖ நவம்பர் 19 முதல் 25 வரை நாடு முழுவதும் குவாமி ஏக்தா வாரம் அல்லது தேசிய ஒருமைப்பாட்டு வாரம் அனுசரிக்கப்பட இருக்கின்றது.
- ❖ இது தேசிய ஒருமைப்பாட்டையும், மத நல்லிணக்க உணர்வையும் பலப்படுத்தி ஊக்குவிக்க அனுசரிக்கப்படுகின்றது.
- ❖ ஒரு வாரகால அளவிலான இந்நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக நவம்பர் 19-ம் தேதியானது தேசிய ஒருமைப்பாட்டு தினமாக அனுசரிக்கப்படும்.
- ❖ குவாமி ஏக்தா வாரத்துடன் ஒன்றிணைந்துப் போகும் வகையில் மத நல்லிணக்கப் பிரச்சாரத்தை மத்திய உள்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தன்னாட்சி அமைப்பான மதநல்லிணக்கத்திற்கான தேசிய அமைப்பு நடத்துகின்றது.
- ❖ இக்கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக நவம்பர் 25-ம் தேதியன்று மத நல்லிணக்க கொடி நாள் அனுசரிக்கப்படுகின்றது.

## சர்வதேச ஆண்கள் தினம் - நவம்பர் 19

- ❖ சர்வதேச ஆண்கள் தினம் ஒவ்வொரு வருடமும் நவம்பர் 19-ம் தேதியன்று அனுசரிக்கப்படும் ஒரு வருடாந்திர சர்வதேச நிகழ்வாகும்.
- ❖ இது நேர்மறையான முன்மாதிரிகளை அடையாளங் காட்டவும் ஆண்களின் நலன் பற்றிய விழிப்புணர்வை அதிகப்படுத்தவும் எண்ணுகின்றது.
- ❖ 2018-ம் ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு : "நேர்மறையான ஆண் முன் மாதிரிகள்" என்பதாகும்.
- ❖ 1992-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் தாமஸ் ஒஸ்டர் என்பவரால் இத்தினத்தின் அனுசரிப்பு துவங்கப்பட்டது.
- ❖ 1999-ம் ஆண்டு டிரினிடாட் மற்றும் டொபாகோவைச் சேர்ந்த ஜெரோம் தீலக்சிங் என்பவரால் இத்தினத்திற்கான அனுசரிப்பு மறுமுறை துவங்கப்பட்டது.
- ❖ அவர் தனது தந்தையின் பிறந்த தினத்தை கௌரவப்படுத்தவும் கால்பந்து உலகக் கோப்பையில் டிரினிடாட் மற்றும் டொபாகோ 1989 ஆம் ஆண்டு தகுதி பெற்றதை நினைவு கொள்ளவும் அத்தினத்தை தேர்ந்தெடுத்தார்.
- ❖ சர்வதேச ஆண்கள் தினம், நவம்பர் 20-ம் தேதியன்று உலகளாவிய குழந்தைகள்

தினத்தால் பின்தொடரப்படுகின்றது.

## சர்வதேச சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டோருக்கான நினைவு தினம் – நவம்பர் 18

- ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமை சர்வதேச சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டோருக்கான நினைவு தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டு (2018) நவம்பர் 18 ஆம் தேதி இத்தினம் அனுசரிக்கப் பட்டது.
- 2018 ஆம் ஆண்டிற்கான சர்வதேச சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டோருக்கான நினைவு தினத்தின் கருத்துருவானது "சாலைகள் கதைகளைக் கொண்டுள்ளன" என்பதாகும்.
- உலகெங்கிலும் சாலை விபத்துகளால் இறந்து போன அல்லது காயமடைந்தவர்களை அவர்களது குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டோர் ஆகியோருடன் இணைந்து இத்தினம் நினைவு கூறுகிறது.
- மேலும் இத்தினம் அவசரச் சேவைகளுக்கு நன்றி கூறுகிறது.
- இத்தினம் 1993 ஆம் ஆண்டில் சாலை அமைதி நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டது. 2005 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையானது இத்தினத்தை சர்வதேச அளவில் அனுசரிக்க வலியுறுத்தியது.




## உலக கழிப்பறை தினம் - நவம்பர் 19

- சர்வதேச சுகாதார பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிப்பதற்காக அலுவல்பூர்வ ஐ.நா. சர்வதேச அனுசரிப்பு தினமான உலக

கழிப்பறை தினம் நவம்பர் 19 ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது.

- 2001 ஆம் ஆண்டில் உலக கழிப்பறை அமைப்பால் உலக கழிப்பறை தினம் தொடங்கப்பட்டது.
- 2013 ஆம் ஆண்டில் ஐ.நா. பொதுச் சபையானது உலக கழிப்பறை தினத்தை அலுவல்பூர்வ ஐ.நா. தினமாக அறிவித்தது.
- ஐ.நா. - நீர் ஆணையமானது உலக கழிப்பறை தினத்தை அனுசரிக்கும் அதிகாரப்பூர்வ நிறுவனமாகும். இந்நிறுவனம் உலக கழிப்பறை தினத்திற்கான அதிகாரப்பூர்வ இணைய தளத்தை பராமரிக்கிறது. மேலும் இந்நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் இத்தினத்திற்கான சிறப்புக் கருத்துருவைத் தேர்ந்தெடுக்கிறது.




- 2018 ஆம் ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துருவானது “இயற்கையை அடிப்படையாகக் கொண்ட தீர்வுகள்” என்பதாகும்.
- 2018 ஆம் ஆண்டின் இத்தினத்திற்கான முழக்கமானது “இயற்கை அழைக்கும்போது, நமக்கு கழிப்பறை தேவைப்படுகிறது” என்பதாகும்.
- 2016 ஆம் ஆண்டு முதல் ஒட்டுமொத்த வருடாந்திரக் கருத்துருவானது உலக கழிப்பறை தினம் மற்றும் உலக நீர் தினம் (மார்ச் 22) ஆகிய இரண்டிற்கும் பயன்படுத்தப்படுகிறது.
- ஐ.நா. நீடித்த வளர்ச்சி இலக்கு 6 ஆனது 2030 ஆம் ஆண்டில் சுகாதார மேலாண்மை மற்றும் நீர் தேவையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலக குழந்தைகள் தினம் - நவம்பர் 20

- ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 20 அன்று உலக குழந்தைகள் தினமானது உலகெங்கிலும் அனுசரிக்கப்படுகிறது.
- சர்வதேச ஒற்றுமை, உலகெங்கிலும் குழந்தைகளுக்கிடையேயான விழிப்புணர்வு மற்றும் குழந்தைகளின் நலனை மேம்படுத்துவது ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- 2018 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துருவானது, “குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் மாற்றி அமைப்பது” என்பதாகும்.

- 1959 ஆம் ஆண்டில் ஐ.நா. பொதுச் சபையினால் குழந்தை உரிமைகள் மீதான பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்டதை இத்தினம் குறிக்கிறது. மேலும் 1984 ஆம் ஆண்டில் குழந்தை உரிமைகள் மீதான ஒப்பந்தம் ஐ.நா. பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## ஆப்பிரிக்கா தொழில்மயமாக்கல் தினம் (AID) - நவம்பர் 20

- ஆப்பிரிக்கா தொழில்மயமாக்கல் தினமானது நவம்பர் 20 அன்று ஒவ்வொரு வருடமும் ஐ.நா. பொதுச்சபையால் கொண்டாடப்படுகிறது.
- இந்த வருடத்தின் பதிப்புக்கான கருத்துரு: "ஆப்பிரிக்காவில் பிராந்திய மதிப்பு இணைப்புகளை ஊக்குவித்தல் : ஆப்பிரிக்காவின் கட்டமைப்பு உருமாற்றம், தொழில்மயமாக்கல் மற்றும் மருந்துகள் உற்பத்திகளை ஊக்குவித்தலுக்கான பாதை".
- இது ஆப்ரிக்க கண்டத்தில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (Africa Continental Free Trade Agreement-AFCFTA) மற்றும் ஆப்பிரிக்காவிற்கான 3-வது தொழில்துறை மேம்பாடுக்கான பத்தாண்டு காலம் (IDDA III) ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தியது.
- இந்தத் தினமானது ஆப்பிரிக்காவின் தொழில்மயமாக்கல் மற்றும் அக்கண்டத்தில் எதிர்கொள்ளும் சவால்களின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக 1959 ஆம் ஆண்டில் ஐ.நா. பொதுச் சபையால் முதன்முதலாக உருவாக்கப்பட்டது ஆகும்.

## உலக தொலைக்காட்சித் தினம் - நவம்பர் 21

- ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 21 ஆம் தேதி உலகமெங்கிலும் உலக தொலைக்காட்சித் தினம் கொண்டாடப்படுகிறது.
- இந்த வருடமானது (2018) 23-வது வருடாந்திர உலக தொலைக்காட்சித் தினமாகும்.
- 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐ.நா. பொதுச் சபையானது நவம்பர் 21 அன்று முதல் உலக தொலைக்காட்சி மாநாடு நடைபெற்றதை நினைவு கூறும் வகையில் இத்தினத்தை உலக தொலைக்காட்சித் தினமாக பிரகடனப்படுத்தியது.

## உலக மீன்பிடி தினம் - நவம்பர் 21

- உலக மீன் பிடி தினமானது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 21 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.
- இது ஆரோக்கியமான கடல் சூழலியலின் முக்கியத்துவத்தை முன்னிலைப் படுத்துவதையும், உலகின் மீன்பிடித் துறையில் நீடித்த வளங்கள் இருப்பதை உறுதி செய்வதையும் நோக்கமாக கொண்டுள்ளது.




- மீன்பிடித் தொழிலானது நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கினை வகிக்கிறது. இதன் செயல்பாடுகள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 1.07 சதவீத பங்களிப்பை அளிக்கின்றது.

## உலக ஹலோ தினம் - நவம்பர் 21

- உலக ஹலோ தினமானது ஆண்டுதோறும் நவம்பர் 21 அன்று கடைபிடிக்கப்படும் ஒரு மதச் சார்பற்ற விடுமுறையாகும். இந்த வருடம் (நவம்பர் 21, 2018) 46-வது உலக ஹலோ தினத்தைக் குறிக்கின்றது.
- இது படைபலத்தைப் பயன்படுத்தி முரண்பாடுகளானது தீர்க்கப் படுவதற்குப் பதிலாக தகவல் தொடர்புகள் மூலமாக அவை தீர்க்கப்பட வேண்டும் என்பதை வெளிப்படுத்தும் நோக்கத்தினைக் கொண்டுள்ளது.
- இந்த தினமானது 1973ன் இறுதியில் இஸ்ரேலுக்கும் எகிப்திற்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களின் விளைவாக தொடங்கப்பட்டது ஆகும்.
- அன்றிலிருந்து இந்த தினமானது 180 நாடுகளில் உள்ள மக்களால் அனுசரிக்கப்படுகிறது.
- அரிசோனா அரசு பல்கலைக் கழகத்தின் முனைவர் பட்டதாரியான பிரையன் மெக்கார்மாக் மற்றும் ஹார்வர்டு பல்கலைக்கழக பட்டதாரியான மைக்கேல் மெக்கார்மாக் ஆகியோரால் இந்த கருத்து உருவாக்கப்பட்டது.

## உலக COPD தினம் - நவம்பர் 21

- உலக நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் தினமானது (COPD - Chronic Obstructive Pulmonary Disease) ஒவ்வொரு வருடமும் நவம்பர் 21 அன்று உலகமெங்கிலும் கொண்டாடப்படுகிறது.
- இவ்வருட COPD தினத்தின் கருத்துரு "NEVER TOO EARLY, NEVER TOO LATE" என்பதாகும்.
- இது மக்களிடையே நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் COPD பராமரிப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பெண்களுக்கெதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - நவம்பர் 25

- ❖ பெண்களுக்கெதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினமானது உலகமெங்கிலும் நவம்பர் 25 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- ❖ இவ்வருடத்தின் கருத்துரு "Orange the World: #HearMeToo" என்பதாகும்.
- ❖ ஒவ்வொரு மாதத்தின் 25-ம் தேதியும் 2009-ல் தொடங்கப்பட்ட 'Say NO – UNiTE to End Violence against Women' என்ற ஐ.நா. மகளிர் அமைப்பின் பிரச்சாரத்தினால் ஆரஞ்சு தினமாக அத்தினம் நியமிக்கப்பட்டது.
- ❖ இந்த தினமானது 1960 ஆம் ஆண்டில் ரஃபேல் துருஜில்லோவின் சர்வாதிகார ஆட்சியின் போது டொமினிகன் குடியரசில் கொடூரமாக கொல்லப்பட்ட அரசியல் ஆர்வலர்களான 3 மிராபல் சகோதரிகளின் நினைவாக அனுசரிக்கப்படுகிறது.




- ❖ ஐ.நா. பொதுச் சபையானது 2008 பிப்ரவரி 7 அன்று இதன் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு அதிகாரப் பூர்வமாக நவம்பர் 25-ம் தேதியை அத்தினமாக நியமித்தது.

## 70-வது NCC உருவாக்க தினம்

- ❖ உலகின் மிகப்பெரிய சீருடை இளைஞர் அமைப்பான தேசிய மாணவர் படையானது (NCC) தனது உருவாக்க தினத்தை 2018 ஆம் ஆண்டு நவம்பர் 25 அன்று இந்தியா முழுவதும் கொண்டாடியது.

## இந்திய நதிகள் வாரம் 2018

- 2018 ஆம் ஆண்டு நவம்பர் 24 முதல் 26 வரை இந்தியாவில் உள்ள நதிகளின் மீதான தனித்துவ கூடுகையான இந்தியாவின் நதிகள் வாரமானது புதுடெல்லியில் உள்ள இயற்கைக்கான உலகளாவிய நிதியத்தின் இந்திய அலுவலகத்தில் (World-Wide Fund for Nature India- WWF India) நடைபெற்றது.
- இந்த ஆண்டிற்கான 3 நாள் கூடுகையின் முக்கிய நோக்கமானது: "இந்தியாவால் கங்கையை புத்துயிராக்கம் செய்ய இயலுமா?" என்பது குறித்ததாகும்.
- இந்த ஆண்டிற்கான நிகழ்வானது சமீபத்தில் மறைந்த ஸ்வாமி கியான்ஸ்வார்ப் சனாந்த் என அறியப்படும் Dr. G.D. அகர்வால் அவர்களுக்கு சமர்பிக்கப்பட்டது.

## தேசிய பால் தினம் - நவம்பர் 26

- தேசிய பால் தினம் (NMD - National Milk Day) ஆனது நவம்பர் 26 அன்று இந்தியாவின் வெண்மைப் புரட்சியின் தந்தையான டாக்டர் வர்கீஸ் குரியனின் பிறந்த நாளை குறிப்பதற்காக அனுசரிக்கப்படுகிறது. அவர் கோழிக்கோட்டில் 1921ஆம் ஆண்டு பிறந்தார்.




- முதல் பால் தினமானது 26 நவம்பர் 2014 அன்று அனுசரிக்கப்பட்டது.
- 1970-ல் தேசிய பால் பண்ணை மேம்பாட்டு வாரியத்தால் (NDDB - National Dairy Development Board) தொடங்கப்பட்ட "வெண்மைப் புரட்சியின்" வடிவமைப்பாளர் டாக்டர் குரியன் ஆவார்.
- இந்த திட்டமானது இந்தியாவை மிகப்பெரிய பால் உற்பத்தி செய்யும் நாடாக மாற்றுவதற்கு வழி வகுத்தது. தற்போது இந்தியா தனது பால் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தன்னிறைவு பெற்றுள்ளது.

## அரசியலமைப்பு தினம் - நவம்பர் 26

- சம்விதன் திவாஸ் என்றழைக்கப்படும் இந்திய அரசியலமைப்பு தினமானது ஒவ்வொரு

ஆண்டும் நாடு முழுவதிலும் நவம்பர் 26 அன்று கொண்டாடப்படுகிறது.

- இது இந்தியாவின் அரசியலமைப்பு சட்டமானது ஏற்றுக் கொள்ளப்பட்ட தினத்தைக் குறிப்பதற்காக அனுசரிக்கப் படுகிறது.
- இந்திய அரசியலமைப்புச் சட்டமானது நவம்பர் 26, 1949 அன்று ஏற்றுக் கொள்ளப்பட்டு 26 ஜனவரி 1950 அன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.
- இந்திய அரசானது 2015 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் தேதி ஒரு அரசு அறிவிக்கை மூலம் நவம்பர் 26ம் தேதியை அரசியலமைப்பு தினமாக அறிவித்தது.
- 2015ம் ஆண்டு அம்பேத்கரின் 125வது பிறந்த தின ஆண்டாகும்.

### இந்திய உடலுறுப்பு தான தினம் - நவம்பர் 27

- தேசிய உடல் உறுப்பு மற்றும் திசு மாற்று நிறுவனமானது (National Organ and Tissue Transplant Organization-NOTTO) 2018 நவம்பர் 27 அன்று 9-வது உடலுறுப்பு தான தினத்தை டெல்லியில் கொண்டாடியது.
- இவ்விழாவில் உடலுறுப்பு தானம் மற்றும் உறுப்பு மாற்று சிகிச்சை ஆகிய துறைகளில் பல்வேறு விருதுகள் வழங்கப்பட்டன.

## இதரச் செய்திகள்

### அனுபம் கெர் FTII இன் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமா

- பிரபல நடிகர் அனுபம் கெர் இந்திய திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தின் (FTII - Film and Television Institute of India) தலைவர் பதவியிலிருந்து விலகினார்.
- 2017 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் FTII இன் தலைவர் பதவியில் நியமிக்கப்பட்ட இவர் கஜேந்திர சௌஹானையடுத்து இப்பதவிக்கு வந்தார்.
- இதன் மூலம், பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னதாகவே ராஜினாமா செய்த FTII இன் முதல் தலைவராக கெர் ஆகியுள்ளார்.
- FTII தொடங்கப்பட்டதிலிருந்து முதல்முறையாக குறைந்தபட்ச பதவிக் காலமாக 11 மாதங்கள் மட்டுமே FTII-ன் தலைவராக இவர் பணியாற்றியுள்ளார்.



## உலக கடவுச்சீட்டு குறியீடு - 2018

- ❖ வருடாந்திர கடவுச் சீட்டு குறியீட்டின்படி, சிங்கப்பூர் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் 165 நாடுகளை அணுகக் கூடிய வசதியோடு உலகின் மிகச் சக்தி வாய்ந்த கடவுச் சீட்டைப் பெற்றுள்ளன.
- ❖ இந்த முடிவுகள் குடிமக்களுக்கென்று திட்டமிடும் நிறுவனமான ஹென்லி அண்ட் பார்ட்னர்ஸ் என்ற நிறுவனத்தின் வருடாந்திர கடவுச் சீட்டின் ஒரு பகுதியாகும்.
- ❖ சமீபத்திய உலக கடவுச் சீட்டு குறியீட்டில் உலக அளவில் இந்திய கடவுச் சீட்டானது 66வது இடத்தில் உள்ளது.




- ❖ இந்தக் குறியீடானது கடவுச்சீட்டின் நுழைவு இசைவு இல்லா மதிப்பீட்டின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்தியா தனது கடவுச்சீட்டினைக் கொண்டோருக்கு 66 நாடுகளுக்கு நுழைவு இசைவு

இல்லா அணுகலைத் தருகின்றது.

- இந்தப் பட்டியலில் ஆப்கானிஸ்தான் கடைசி இடத்தில் உள்ளது. இப்பட்டியலில் பாகிஸ்தான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகள் கடைசி இடத்திற்கு முந்தைய இடங்களில் உள்ளன.

## மேரே பயாரே பிரைம் மினிஸ்டர்

- ரோம் திரைப்படத் திருவிழாவில் படத் தயாரிப்பாளரான ராக்கேஷ் ஓம்பிரகாஷ் மெஹ்ராவின் திரைப்படமான "மேரே பயாரே பிரைம் மினிஸ்டர்" திரையிடப்பட்டது. ஆசியாவிலிருந்து திரையிடப்பட்ட ஒரே திரைப்படம் இதுவாகும்.
- ரோம் திரைப்படத் திருவிழாவின் தேர்வுக் குழுவானது 3 வெவ்வேறு கண்டங்களில் இருந்து 3 படங்களைத் திரையிடத் தேர்வு செய்துள்ளது.
- மும்பை சேரிப் பகுதியில் வாழும் நான்கு குழந்தைகளைப் பற்றி இத்திரைப்படம் விவரிக்கிறது. அந்த நான்கு குழந்தைகளில் ஒரு சிறுவன் தனது தாய்க்காக ஒரு கழிவறை அமைக்க எண்ணுகிறான். அதற்காக பிரதமருக்கு அச்சிறுவன் மனு கொடுக்கின்றான்.

## ஆண்கள் ஹாக்கி உலகக் கோப்பை 2018 - டாடா ஸ்டீல் (அதிகாரப்பூர்வ பங்குதாரர்)

- 2018 ஆம் ஆண்டின் ஆண்களுக்கான ஹாக்கி உலகக் கோப்பைப் போட்டியின் அதிகாரப்பூர்வ பங்குதாரராக 'டாடா ஸ்டீல்' அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஒடிசாவில் உள்ள கலிங்கா மைதானத்தில் நடைபெறவுள்ளது.
- நடக்கவிருக்கும் சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின் உலகக் கோப்பைப் போட்டியின் 14வது பதிப்பானது 3வது முறையாக இந்தியாவில் நடைபெறுகிறது.
- இதற்கு முன்னதாக இந்தியாவானது இப்போட்டியினை 1982ல் மும்பையிலும் 2010ல் புதுடெல்லியிலும் நடத்தியது.
- இந்தியாவில் ஹாக்கி அகாடமி (பயிற்சி நிறுவனம்) தொடங்கியிருக்கின்ற முதல் தனியார் துறை நிறுவனமாக டாடா ஸ்டீல் உள்ளது.

## டைட்டானிக் II

- 1912-ம் ஆண்டின் RMS டைட்டானிக் கப்பலின் நவீன பிரதியான டைட்டானிக் II ஆனது 2022ல் தனது பயணத்தைத் தொடங்கவுள்ளது.



- இந்த கப்பல் பயணத்திற்கான திட்டமானது முதலில் ஏப்ரல் 2012ல் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த மில்லியனரான கிளீவ் பால்மர் மற்றும் அவரது கப்பல் நிறுவனமான புளு ஸ்டார் லைன் குரூஸ் நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டது.
- இது சீனாவில் அமைந்துள்ள அரசுக்குச் சொந்தமான கப்பல் கட்டும் நிறுவனமான CSC ஜின்லிங்க் ஷிப்யார்ட் என்ற நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு கொண்டு இருக்கிறது.
- இந்தக் கப்பலானது முதலில் துபாயில் இருந்து சவுத்தாம்ப்டன் (இங்கிலாந்து) வரையில் தனது முதல் பயணத்தை இரண்டுவார கால அளவிற்கு மேற்கொள்ளும். அதன் பிறகு தனது உண்மையான இலக்கான நியூயார்க்கை நோக்கி பயணம் மேற்கொள்ளும்.
- முதல் RMS டைட்டானிக் கப்பலானது 1912ம் ஆண்டு ஏப்ரலில் வட அட்லாண்டிக் பெருங்கடலில் தனது முதல் பயணத்தின் போது பனிப்பாறையில் மோதி மூழ்கியது.

## Children for land ஊக்கத் திட்டம் - இத்தாலி

- இத்தாலியின் அரசாங்கமானது மூன்றாவது குழந்தைகளை பெற்றுக் கொள்ளும் பெற்றோர்களுக்கு இலவச பண்ணை நிலத்தை வழங்கப் போவதாக அறிவித்துள்ளது.
- 2019 முதல் 2021 வரை மூன்றாவது குழந்தைகளை பெற்றெடுக்கும் பெற்றோர்களுக்கு அரசாங்க விவசாய நிலத்தை 20 ஆண்டுகளுக்கு வழங்குவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த புதிய திட்டமானது நாட்டில் குறைந்துள்ள பிறப்பு விகிதத்தை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த சலுகையில் ஆர்வமுள்ள வெளிநாட்டவர்கள் குறைந்தபட்சமாக 10 ஆண்டுகளுக்கு இத்தாலியில் குடியிருப்பவராக இருக்க வேண்டும்.

## சிறப்பு விருந்தினர் - 2019 ஆம் ஆண்டின் இந்திய குடியரசுத் தின அணிவகுப்பு

- 2019 ஆம் ஆண்டின் இந்திய குடியரசுத் தின அணிவகுப்பில் தென் ஆப்பிரிக்க அதிபர் சைரில் ரமபோசா சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவிருக்கிறார்.

- இதன் மூலம், இந்திய குடியரசுத் தின விழாவில் கலந்து கொள்ளும் 2வது தென்னாப்பிரிக்க அதிபர் இவராவார்.
- தென் ஆப்பிரிக்காவின் முன்னாள் அதிபரான நெல்சன் மண்டேலா 1995 ஆம் ஆண்டு இந்திய குடியரசுத் தின விழா அணிவகுப்பில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

## தேசிய மத நல்லிணக்க ஆய்வு நிறுவனம்

- பஞ்சாபின் அமிர்தசரஸில் முதலாவது மத நல்லிணக்க ஆய்வு நிறுவனத்தை உருவாக்க மத்திய அரசு பரிந்துரை செய்து இருக்கின்றது.
- 2019 ஆம் ஆண்டில் குருநானக்கின் 550-வது பிறந்த தினத்தை நிகழ்ச்சிகள் மூலம் ஆண்டு முழுவதும் கடைபிடிப்பதின் ஒரு பகுதியாக மத்திய அரசு இப்பரிந்துரையை செய்து இருக்கின்றது.
- மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் தலைமையில் நடைபெற்ற தேசிய செயல்படுத்துதல் குழுவின் (NIC - National Implementation Committee) சந்திப்பின் போது இம்முடிவு எடுக்கப்பட்டது.
- தேசிய செயல்படுத்துதல் குழுவானது குரு நானக்கின் 550-வது பிறந்த தினத்தை அனுசரிப்பதற்காக பிரதம அமைச்சரால் உருவாக்கப்பட்டது.

## மும்பை பயங்கரவாத தாக்குதலின் (26/11) 10-ம் ஆண்டு நிறைவு

- இந்தியா நவம்பர் 26, 2018 அன்று 26/11 மும்பை பயங்கரவாத தாக்குதலின் 10-வது ஆண்டு நிறைவை அனுசரித்தது.
- இந்த தாக்குதலில் ஈடுபட்டவர்களை கண்டுபிடிக்க உதவுபவர்களுக்கு 5 மில்லியன் டாலர் பரிசை அமெரிக்கா அறிவித்துள்ளது.
- பத்து ஆண்டுகளுக்கு முன்னர் 2008-ல் லஷ்கர்-இ-தொய்பாவைச் சேர்ந்த 10 தீவிரவாதிகள் மும்பையில் கடல் வழியாக வந்து மூன்று நாட்களுக்கு நீடித்த ஒருங்கிணைந்த தாக்குதலை நடத்தினர்.
- இந்த தீவிரவாத நடவடிக்கைக்குப் பதிலடியாக தாக்குதல் நடத்தியவர்களை பிடிப்பதற்காக தேசிய பாதுகாப்புப் படையினரால் தாஜ் ஓட்டலில் "பிளாக் டொர்னாடோ நடவடிக்கை" நடத்தப்பட்டது.
- தாக்குதல் நடத்தியவர்களில் உயிருடன் பிடிக்கப்பட்ட தீவிரவாதி அஜ்மல் கசாப் மட்டுமே ஆவான். நவம்பர் 21, 2012 அன்று புனேயின் எரவாடா சிறைச்சாலையில் அஜ்மல் தூக்கிலிடப்பட்டான்.

## ரூபிக் கன சதுரத்தில் கின்னஸ் உலக சாதனை

- சீனாவின் 13 வயதுடைய க்யூ ஜீயான்யு தனது கைகள் மற்றும் கால்களைப் பயன்படுத்தி 1 நிமிடம் 36.39 வினாடிகளில் 3 ரூபிக் கன சதுரங்களை ஒரே நேரத்தில் சேர்த்து புதிய கின்னஸ் உலக சாதனையைப் படைத்துள்ளார்.




- இவர் ஏற்கனவே ஒரு ரூபிக் கன சதுரத்தை மேலிருந்து கீழாக (15.84 வினாடிகளில்) சேர்த்து தனது முந்தைய சாதனையை விட 1.6 வினாடிகளுக்கு முன்னரே முடித்து மிக விரைவில் சேர்த்தவர் என்ற கின்னஸ் உலக சாதனையைப் படைத்தார்.
- இவர் ஏற்கனவே மூன்று ரூபிக் கன சதுரங்களை ஜாக்லிங் (ஒரே நேரத்தில் தூக்கி எறிதல் மற்றும் பிடித்தல்) செய்யும் போதே மிக விரைவில் சேர்த்த (5 நிமிடம் 6.61 வினாடி) சாதனையையும் படைத்துள்ளார்.

- - - - - - - - - - - - - - -